4762

உ.

# பதிக்கொரு பாடல்

தெய்வங்களையும்

திருத் தலங்களையும்

பற்றிய பாடல் நூல்



**சமர்ப்பணம்**

முத்தமிழ்ப் பாவலர்

**கவிஞர் ஞானமணியம்**

JPL
C4762

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.


KOHA
JPL

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

உ.

பதிக்கொரு பாடல் நூலைப்
படைத்திட வரம் இரந்தேன் !
அடைக்கலம் ஆனேன் !

123510



கொடுத்தருள் ஆண்டாய் சரணம் !
குஞ்சர முகனே சரணம் !

4762
123510
C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பதிக்கொரு பாடல்"

இந்நூல் என் தாயூர்ப் பதியான
திருப்பழுகாமம் மாவேற்கடவைப்
பெருமானின் பாதங்களில்
நான் சமர்ப்பணம் செய்யும்

## திருக் காணிக்கை

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக சே
யாழ்ப்பாணம்.

*முத்தமிழ்ப் பாவலர்*
**கவிஞர் ஞானமணியம்**
" திருப்பதி " குருக்கள்மடம், இலங்கை.
*தலைவர் / ஸ்தாபகர்*
பண்டைத் தமிழ்க்
**கிராமியக் கலை அரங்கம்**
**Tamil Traditional**
Folk Art Stage
**London - UnitedKingdom**

**நூலமைப்பு**
**ஐயனார் அச்சகம்**
இலண்டன் – பிரித்தானியா
1997
வைகாசித் திங்கள் – விசாகத் திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிக்கொரு பாடல்

*பயில்வோர் கவனத்திற்கு.....!*

இலங்கையில் உள்ள சைவத் தலங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், விபரங்களையும் பெற்றுக்கொள்வதற்காக நான் எடுத்துக்கொண்ட விடா முயற்சிகள் பூரண வெற்றியைத் தரவில்லை.

நமது நாட்டில் இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளே காரணம் போலும்!

அதனால், நான் நேரிலே கண்டறிந்த சில விபரங்களும், தெரிந்தவர்கள் மூலம் கேட்டறிந்த சில விபரங்களுமே நூலில் இடம்பெற்றுள்ளன.

குறைவெல்லாம் நிறைவுசெய்து
குணமடைந்து, நலமுணர்ந்து
குறையாத அருள்வளம் நுகர்ந்து
கொள்ளும் வண்ணம்
பணிவோடு வேண்டுகின்றேன்!

*கவிஞர் ஞானமணியம்*

"திருப்பதி" குருக்கள்மடம் – இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலடக்கம்


| | |
|---|---|
| பலிதமான கனவுகள் – என்னுரை | 001 |
| கலைக் கோயில் | 008 |
| சிறப்புரை | 009 |
| மாமாங்கப் பிள்ளையார் 108 போற்றிகள் | 010 |
| திருப்பழுகாமம் திரௌபதி அம்மன் 108 போற்றிகள் | 017 |
| தான்தோன்றீஸ்வரன் 108 போற்றிகள் | 026 |
| மானிப்பாய் மருதடி விநாயகர் | 034 |
| மடத்தடி மீனாட்ஷி | 036 |
| யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி | 038 |
| பெரியபோரதீவு பத்திரகாளி அம்மன் | 039 |
| திருப்பழுகாமம் மாவேற்குடாப் பெருமான் | 043 |
| மண்டூர் முருகன் | 054 |
| கொழும்பு மாநகர் பொன்னம்பலவாணேசர் | 057 |
| வெல்லாவெளிக் கல்லுப் பிள்ளையார் | 058 |
| உகந்தைமலைக் கந்தன் | 059 |
| மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் | 060 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கஞூதாவளைப் பிள்ளையார் | 061 |
| யாழ்ப்பாணம் கண்ண பெருமாள் | 063 |
| சிவனொளி பாதம் | 064 |
| கோயிற்போரதீவு சித்திர வேலாயுத சுவாமி | 065 |
| காளிகாமடுப் பிள்ளையார் | 067 |
| திருக்கோயில் முருகையன் | 070 |
| நாச்சிமார் கோயில் | 071 |
| சங்கமான்கண்டிப் பிள்ளையார் | 072 |
| சித்தாண்டி முருகையன் | 073 |
| பண்டாரியாவெளி நாகதம்பிரான் 108 போற்றிகள் | 074 |
| அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் | 080 |
| தாந்தாமலை முருகையன் | 082 |
| வெருகலம்பதி வேலன் | 083 |
| நயினை நாகபூஷணி அம்மை | 084 |
| மாவிட்டபுரம் கந்தசுவாமி | 086 |
| குருக்கள்மடம் ஐயனார் | 087 |
| தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் | 089 |
| கொழும்பு மாநகர் ஆடிவேல் முருகன் | 091 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுத்து மாரி 092

இலங்கையிற் பிரசித்திபெற்ற சிவன் தலங்கள் 094

திருக்கோணேஸ்வரம்
திருக்கேதீஸ்வரம்
முன்னீஸ்வரம்
தான்தோன்றீஸ்வரம்
நகுலேஸ்வரம்
தேவந்துறை

செல்வச் சன்னதி 096

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் 097

கழுவாஞ்சிகுடி கண்ணபிரான் 101

முருகண்டிப் பிள்ளையார் 102

வல்லிபுரம் மாதவன் 103

திருநீற்றுக்கேணி முருகையன் 104

இலண்டன் – விம்பிள்டன் பிள்ளையார் 105

திருப்பழுகாமம் ஊராளும் தெய்வங்கள் 107

கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் 114

கதிரைக் கும்மி 116

ஜேர்மன் நாட்டுப் பேர்ளின்நகர் முருகன் 108போற்றிகள் 117

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள்மடம் முருகையன் 108 போற்றிகள் 123

நேர்த்தி வழிபாடு
தமிழர் குலதெய்வம்
முருகன் கோவில் மணியோசை
அணுவும் அசையாது
திருப்பதி

காகிதாலை விநாயகர் தலவரலாறும் 108போற்றிகளும் 144

ஆலைக்கோர் ஆலயம்
நன்றியுடன் நாலு வார்த்தைகள்
கமலத்தீவுக் கடவுள்

மட்டுநகர் ஆனைப்பந்திப் பிள்ளையார் 173

இலண்டன் உயர்வாசற்குன்றம் முருகன் 108போற்றிகள் 175

கொழும்பு கப்பிதாவத்தைப் பிள்ளையார் 180

கொத்துக்குளம் மாரியம்மன் 181

வில்லூன்றிக் கந்தசுவாமி 182

குருக்கள்மடம் கண்ணபிரான் 108 போற்றிகள் 183

மணி ஓசை
காவல் நிலையம்
கண்ணன் லீலைகள்
திருப்பதி மதுரை ஸ்ரீரங்கம்
கோகுலநந்தன்
பாற்கடல் இறைவன் (பொன்விழாப் பாடல்)

களுதாவளை வீதிக்கரைப் பிள்ளையார் 194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள்மடம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி
தலவரலாறும் 108 போற்றிகளும் 195

தெய்வத்தின் தெய்வம்
பொன்னூஞ்சல் பாட்டு
கும்பாபிஷேகப் பாடல்கள்

இலண்டன் கண்ணன் கோயில் 233

மட்டுமாநகர் திருப்பெருந்துறை முருகன் 234

இந்திய நாட்டுத் தலங்கள் 235

இந்திய நாட்டுச் சிவதலங்கள் 248

தமிழ் நாட்டு முருகன் தலங்கள் 251

சபரி மலையிற் சமரசம் 253

அன்னை வேளாங்கண்ணி 254

ஆறுபடை ஆனந்தம் 256

முருகையன் காவடிப் பாடல்கள் 257

வாணி வழிபாடு – பஜனை பாடல்கள் 258

இலக்குமித் தெய்வம் 267

ஆதிபராசக்தி அருட் காவியம் 268

மாரியம்மன் கரகப் பாடல் 269

கதிரைப் பெருமான் 271

ஆறுபடை நாதன் 272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனி வேலன் 273

திருநவ கோட்டம் 274

காவடிப் பாட்டுக்கள் 276

கலசம் – மஞ்சரிப் பாடல்கள் 282

வாழ்த்துப் பாடல்
நாயன்மார் சேவைகள் நாம் தொடர்ந்தோம்
இலண்டன் முருகன்
குமரன் கும்மி
வாரியார் பாரிவள்ளல்
பொங்கல் திருநாள் மணியோசை
வாரண வடிவன்

பக்தியும் விரக்தியும் 292

விக்னேஸ்வரனே
வாணித் தாயே
ஸ்ரீதேவி அம்மா
துர்க்கை அம்மா
சங்கரா சிவனே
அழகு மீனாட்சித் தாயே
கண்ணா
காளித் தாயே
ஐயனாரே
செந்நாக தம்பிரானே
வயிரவனாரே
மாரித் தாயே
நவக்கிரகத் தெய்வங்களே
ஆஞ்சநேயா
கந்தா முருகா
பேராசை பிறக்கவில்லை
சங்கரா பரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சித்திரைப் பிறப்பு | 301 |
| நவராத்திரிப் பாடல்கள் | 302 |
| தீபாவளி | 304 |
| கார்த்திகைத் தீபம் | 305 |
| தைப் பொங்கல் | 306 |
| சிவராத்திரி | 307 |
| சிவராத்திரி வசந்தன் பாடல் | 308 |
| ஆயிரத்தெட்டுச் சிவநாமங்களும் 1008 போற்றிகளும் | 309 |
| வினைமீட்சி | 337 |
| திருப்பதி வெங்கடேசன் | 338 |
| ஓடிவா வேலவா | 339 |
| சபரிமலை யாத்திரைக் கும்மி | 340 |
| ஆனந்த யோகம் | 341 |
| கந்தா நின் கருணை வாழியவே! | 342 |
| தலவிளக்கம் தந்தவர்க்கு நன்றி | 343 |
| சிறப்புரை கொடுதவர்க்கு | 344 |
| வெளியீட்டு விழாக் குழுவினருக்கு நன்றி | 345 |


KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# பலிதமான கனவுகள்

## -என்னுரை-

இராமாயணக் காலத்துக்கும் முந்திய காலந்தொட்டே இறைவன் சிவனுடைய திருநாமம் போற்றிவரும் இந்துசமய வழிபாடு இலங்கைவள நாட்டில் என்றென்றும் நீடித்துநிலைத்து வருவதைப் பல வரலாற்றுச் சான்றுகள் மூலமாக நாம் அறிகின்றோம்.

அதனால் இந்த நாட்டிலும், இந்திய நாட்டிலும் மட்டுமல்ல, உலகின் பலகோணங்களிலும் வாழுகின்ற சைவத்தமிழருக்கும், சைவமதத்தைச் சார்ந்த ஏனைய இனத்தவர்களுக்கும் இது வோர் பெருமையும், பெருமகிழ்ச்சியும் ஆகும்.

நாயன்மார் காலத்திலேயும் இங்கு சிவதலங்கள் சிறப்புற்று விளங்கியிருந்த வரலாறுகளையும் நாம் பெரியபுராணம் மூலமாக அறிகின்றோம். அவ்வாறே சைவநெறிப் பண்புகளும், பக்தியின் மேம்பாடுகளும் இங்கே ஆசார முறைகளோடு தழைத்துவளர்ந்து நிலைத்து நீடிக்கும் மாண்புகளையும் புராணங்கள் வாயிலாக மட்டுமல்லாமற் பலவாறான நமது சமயவரலாறுகள் மூலமாகவும் நாம் புரிந்துகொண்டோம்.

பாரதபூமியின் வடக்கு எல்லையாக விளங்கும் இமயமலை தொடக்கம் திருப்புகழ் இறைவன் திருமுருகனின் அருட்புகழ் விளங்கும் தென்னிலங்கைப் பதியாம் கதிரைமலை வரைக்கும் சைவத்தின் அருள்மணங் கமழ்ந்துகொண்டே பிரகாசிப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.
இந்தப் புனிதமான சைவநெறி உலகம் எங்கணுமே வீரிவடைந்து, வியாபித்து விளங்குவதையும் இன்று நாம் காணுகின்றோம்!

இமயமலை ஈசன் வதியும்மலை வேலன்
இருக்கும் மலை ஞானக் கதிரைமலை!
இரண்டு மலைத்தூரம் இடையில் நிலையாகும்
இந்து நெறிக்கோலம், திருக்கோலம்!

*என்று பாடி இதயம் பூரிக்கின்றேன்.....!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனடி சார்ந்தவர் அவனடி சேருவார்.

கோடிப் பொன் செலவிட்டுக் கோபுரம் எழுப்பிக் கோயில் கட்டும் மாமன்னன் திருப்பணிக்கு ஆலய நந்தவனத்தில் ஒரே யொரு பூஞ்செடியை நட்டுத் துணைபுரியும் ஏழைக் குடிமகனுக்கும் இறைவன் கருணைகூர்ந்து கொடுக்கின்ற முத்திப்பேறு நிச்சயம் உண்டாம் என்பது வேதக் கூற்று. அந்த ஏழைக் குடிமகனால் இயற்ற முடிந்த திருப்பணி அவ்வளவுதான் என் பதை அறிந்தவரே எல்லாம் உணர்ந்த இறைவனன்றோ..!

அந்தப் புனிதமான செயலை மேலான திருப்பணியாக எண்ணி முழுமையான மனவிருப்புடன் நிறைவேற்றுகின்றான் அந்த ஏழைப் பங்காளன். அதனாலேதான் முத்திப் பேறு பெறுகின்ற நற்பாக்கியத்தை அடைகின்றான்.

பூஞ்செடி ஒன்றை நட்டுப் புண்ணியவரம்பெறும் அந்த ஏழைத் தொண்டனைப் போன்று நாமும் நம்மால் முடிந்த திருத் தொண்டைப் புரிந்து இறைவன் திருவருளைக் காணமுடியும் அல்லவா...!

இவ்வாறான இந்த நம்பிக்கை நம் எல்லோருக்கும் உண் டாகுமானால் இந்த மானிலமே ஒரு புனிதமலர்ப் பூஞ்சோ லையாகத் தோன்றிவிடும் என்பதில் ஐயமே இல்லை. ஆன்மிக ஞானவளம் என்னும் தெய்வீகப் புதுமணம் எங்கணுமே வீசும் ஒரு புது யுகமாகவே இந்தப் பூவுலகம் மாறிவிடும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

ஆகவேதான் நானும் என்னால் முடிந்தவரை பல ஆன்மீகப் பதிப்புக்களை இதுவரை வெளியிட்டுள்ளேன். ஆத்ம திருப்தியும் பெற்றுள்ளேன்.

பலநாட்களாக நான் கண்டுகொண்டிருந்த கனவுகளின்படி, நமது நாட்டின் தமிழ் மானிலங்களிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள அனேகமான சைவத்தலங்களைப் பற்றிப் போற்றிப் பாடல்களை யாத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நான் நின்றுவிடவில்லை. இன்று மேலை நாடுகளிலும் தலங்கொண்டு காட்சிதரும் நமது தெய்வங்களின் தலங்களைப் பற்றியும் அஞ்சலிப் பாடல்கள் இயற்றினேன்.

வாழ்க்கையில் முதல் நூலாக 1963ம் ஆண்டு "வாணிவழிபாடு" என்னும் பஜனைப் பாடற் கைந்நூலை இளவயதிலேயே வெளி யிட்டேன்.

பின்னர் மேலும் பன்னிரண்டு தலங்களைப் பற்றிய, பன்னிரண்டு 108 போற்றிப் பாடல் நூல்களைச் சென்ற பன்னிரண்டு ஆண்டு காலமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.

யாழிசை நூல் படைத்த, கிழக்கு மானிலப் பேரிசை வள்ளல் தவத்திரு விபுலானந்த அடிகளாரின் 100ற்றாண்டுப் பாமலர் என்னும் இசைப்பாடல் நூலை 1992டில் வெளியிட்டேன்.

சொந்த மானிலத்திற்கும், சொந்த இனத்துக்கும் ஆற்றும் சுதேசியச் சேவையெனக் கருத்திற்கொண்டு, வாழைச்சேனைத் தேசிய காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தில் சில ஆண்டுகள் கனிஷ்ட பதவியிலும் பல ஆண்டுகாலம் சிரேஷ்ட பதவிகளிலும் கடமையாற்றினேன். அதற்கு நல்லருள் பாலித்த இறைவன் காகித ஆலை ஸ்ரீ சித்திவிநாயக் பெருமான். ஆகவே எனது காகித ஆலைச் சரித்திரம் புலப்படும் வகையில் அருளீட்டிய மூல முதற் கடவுளைப் பற்றி.....,

வாழைச்சேனை காகித ஆலை
ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான்
"தலவரலாறும் 108 போற்றிகளும்"

என்னும் ஆன்மிக நூலை 1996ம் ஆண்டில் வெளியிட்டேன்.

குருக்கள்மடம்
ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி
தலவரலாறும் –108 போற்றிகளும்

என்னும் நூலை இதே ஆண்டில், மாசி மாதம் – மாசிமகத் திருநாளில், குருக்கள்மடம் ஊர்மக்கள் சார்பில் வெளியிட்டேன்.

ஆறாயிரம் மைல்களுக்கும் அப்பால் வாழ்ந்தாலும் ஆறு மைல் தூரத்தில் வாழும் தேசிய உணர்விலேயே என் சேவைகளை ஆற்றியவண்ணம் ஆத்மதிருப்தி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை வெளியிட்ட பக்திப் பாடல்களையும் புதிதாக யாத்தெடுத்த பக்திப் பாடல்களையும் தொகுத்தெடுத்துப்...,

"பதிக்கொரு பாடல்"

என்ற பெயரில் இதோ...! இந்த நூலை வெளியிட்டுள்ளேன்.

நான் இன்றுவரை வெளியிட்டுள்ளனவும், யாத்துள்ளனவுமான இசையின்பம், இலக்கியம், தத்துவம், சிறுவர் இலக்கியம், பண்டைத் தமிழ்க் கிராமியம், சிறுவர் இலக்கியம், சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கை அனுபவம் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் பொதுவான கருத்துடைய தனிப்பாடல்களை வேறாகத் திரட்டியெடுத்த தொகுப்புக்கு..,

"மரபு நாதம்"

என்று பெயரிட்டு ஒரு தனிப் பாடல் நூலாக வெளியிட்டுள்ளேன்.

இரண்டு நூல்களையும் ஏக காலத்திலேயே வெளியீட்டுள்ளேன்.

1960 தொடக்கம் 1982வரை இலங்கை தமிழ்–வானொலி நிகழ்ச்சிகளிலும், 1983றுக்குப் பின்னர் பிரான்ஸ் நாட்டிலும், இலண்டன் மாநகரிலும் நிகழ்ந்த தமிழ்–வானொலி நிகழ்ச்சிகளிலும், வெளியான இருநூறுக்கும் மேலான தனிப்பாடல்கள் யாவும் "மரபு நாதம்" நூலில் அடங்கியுள்ளன.

பதிக்கொரு பாடல்–நூலைச் சிறப்புறச் செய்யலாமென நம் நாட்டிலிருந்து அனேகமான தலங்களின் வரலாற்றுச் சான்றுகளை எதிர்பார்த்தேன். பலவாறாக முயன்றேன். நாட்டின் இன்றையப் பிரச்சனை மேலீட்டாலோ என்னவோ அந்த முயற்சி எனக்கு முழுமையாகக் கைகூடவில்லை.

அதனால் நானே நேரிற் கண்டறிந்த விபரங்களும், கண்டவர் சொல்லக் கேட்டறிந்த விபரங்களுமே தலங்களைப் பற்றிய பாடல்களிற் பிரதிபலிக்கின்றன.
ஆகவே பாடல்களிலும் உரைகளிலும் வரலாற்று விபரங்களை முழுமையாகப் புலப்படுத்தும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை என்பது எனது மனக்குறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் வெளியான எனது சமயக் கைந்நூற் பாடல்களிலும், விடயங்களிலும் அனேகமானவை பதிக்கொரு பாடல் நூலில் இடம்பெற்றுள்ளன.

ஆகவே —பலிதமான கனவுகள்— என்னும் என் முன்னுரையில் அதிகமான கருத்துரைகளை நான் வெளியிடவேண்டியது அவ சியமில்லை என நினைக்கின்றேன்.

எனது நீண்டநாட் கனவுகள் பலிதமான சுபீட்சத்தை என் உரையில் இரத்தினச் சுருக்கமாக வெளிப்படுத்தியுள்ளேன்.

கலைவாணித் தெய்வம் இடங்கொண்டு எனக்குக் கல்விஞானம் கொடுத்தருளிய பள்ளித் தலங்களைப்பற்றி ஒருசில விபரங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.
இந்த விபரங்களைப் பதிக்கொருபாடல் நூலில் நான் கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியமாகின்றது. ஏனென்றால்.....,
தவத்திரு விபுலானந்த அடிகளாரின் 100ற்றாண்டுப் பாமலர் வெளியான பொழுது அவகாசமில்லாத காரணத்தால் இந்த விப ரங்கள் தெளிவாக வரிசைக் கிரமப்படி அச்சிடப் படவில்லை. எனக்கும் அச்சுக்கூடத்துக்கும் இடைத் தூரம் சுமார் ஆறாயிரம் மைல்களுக்கும் மேலாகிவிட்டமைதான் அதற்குக் காரணமாகும்.
"பள்ளித்தலம் அனைத்தும் கோயில்கள் செய்வோம்"
என்று பாடிய பாரதியின் ஆன்மீகப் போதனையை அனுசரிப் பவர்கள் நாம். அதனால் கல்விச் செல்வத்தை எனக்கு அள்ளிக் கொடுத்த கலைவாணியின் தலங்களைக் குறிப்பிடுகின்றேன்.

அரிச்சுவடி பயிலும் பாலர் வகுப்பு முதல் இரண்டாம் வகுப்பு வரை, கல்வி பயின்ற பள்ளித்தலம்—திருப்பழுகாமம் மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலை. இப்பொழுது கண்டுமணி வித்தியா லயம் என்ற பெயருடன் இயங்கிவருகின்றது.
மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை, பயின்ற தலம் திருப்பழுகாமம் இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலை.
இப்பொழுது (விபுலானந்த வித்தியாலயம்) என்ற பெயருடன் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை, பயின்ற பள்ளிக் கூடம் திருப்பழுகாமம் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை. ஆங்கில மொழியின் ஆரம்பக்கல்வி அங்கேதான் எனக்கு ஆரம்பமானது.

இப்பொழுது அந்தப் பாடசாலை வட்டாரத்திலேயே மிகவும் புகழ்வாய்ந்த ஒரு கல்லூரிக்குச் சமமாகத் (திருப்பழுகாமம் மஹா வித்தியாலயம்) என்ற புகழ்ப் பெயரோடு விளங்குகின்றது .

இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் அது. அதனாற் காடுவெட்டி, வேர் பிடுங்கிப் பள்ளம்மேடு திருத்திச் சமப்படுத் திப் பாடசாலைக்குரிய நிலத்தை அழகுபடுத்தும் தொண்டுகள் அத்தனையும் செய்துகொண்டே ஆங்கிலமும் தமிழும் பயின்று முன்னேறிய பள்ளித்தலம் இதுவாகும். பிறந்த இடம், வளர்ந்த இடம், என்ற தாயூர்ப் பற்றுடன் கல்வி பயின்று மேன்மைகண்ட பள்ளித்தலம் இதுவாகும்.

ஒன்பதாம் வகுப்பு முதல்வருடம் (ஜி.ஸி.ஈ.ஆங்கில மொழிமூலம்) பொதுத் தராதரப் பரீட்சை வகுப்புவரை பயின்ற கல்வித் தலம் மட்டுமாநகரில் உள்ள அரசினர் கல்லூரி. இன்று கோட்டைமுனை இந்துக்கல்லூரி என்ற பெயரோடு விளங்குகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினரால் நிகழ்த்தப்படும் இளம்புலவர் பரீட்சைக்கென வெளிவாரி மாணவனாகப் பயின்று ஆயத்தம் செய்துகொண்ட நிலையங்கள் மதுரை தமிழ்ச்சங்க நூல் நிலை யம், மதுரை மீனாட்ஷியம்மன் கோயில் தேவஸ்தான நூல் நிலையம்.

அத்துடன் பள்ளியிற் கல்வி பயிலும் முயற்சிகள் நின்றுவிட்ட போதிலும் பாட்டியல், நாட்டியல், பண்பியல், பக்திப் பாங்கியல், பண்ணிசைப் பேரியல் போன்ற இன்னருங் கலையின்பங்கள் அனைத்தையும் பாலிக்கும் கலைவாணித் தெய்வத்தின் அருளும் அரவணைப்பும் எனக்கு என்றென்றும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதிலிருந்தே இசைக்கலையில் நாட்டமுடைய நான் அமர கவியாம் எங்கள் மகாகவி பாரதி, கவிமணி தேசிக விநாயகம் – பிள்ளை ஆகியோரின் இசைக் கவிதைகளையும், திருமுறை, திருப் புகழ்ப் பாடல்களையுமே பற்றுமிகுதியுடன் பாடிப்பயின்று மனனம் செய்து வந்தேன். அதனால் இயல்பாகவே நூற்றுக்குத் தொண் ணூறு வீதமான என் கவிதைகள் இசைப் பாடல்களாகவே இருப்பதையும் வாசகர்கள் காணலாம்.

நான் கொழும்பில் வாழ்ந்திருந்த இருபத்தைந்து ஆண்டு கால த்திலேயே அனேகமான என் கலைப்படைப்புக்களும் கவிதைப் படைப்புக்களும் பத்திரிகைகள் வாயிலாகவும், வானொலி மூல மாகவும், மேடை நாடக நிகழ்ச்சிகள் மூலமாகவும் வெளியாகிக் கொண்டிருந்தன. குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தமிழ் ஒலிபரப்பும், நான் இணைக் காரியதரிசியாகக் கடைமையாற்றிக்கொண்டு இயலிசை நாடகத் தொண்டுகள் ஆற்றிய, விமலா உதயணன் கலைக்குழுவும், மனோரஞ்சித கானசபாவும், தினகரன், வீரகேசரி, சுதந்திரன் போன்ற பத்திரி கைகளும், தென்னகத்தில் அப்பொழுது வெளிவந்துகொண்டிரு ந்த தினச்செய்தி என்னும் பத்திரிகையுமே எனது கலைப் படை ப்புக்களின் வெளியீடுகளுக்குக் காரணமான சாசனங்கள் என்ப தைப் பெருமையோடு இங்கே குறிப்பிடுகின்றேன்.
அத்தோடு கொழும்பில் நான் ஆற்றிய ஆசிரியர் பணியும் என் வெளியீடுகளுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தமையும் இன்றி யமையாத காரணமாகும்।

எனது கலைப் படைப்புக்களிலும், கவிதைப் படைப்புக்களிலும் அனேகமானவை.....,*-கவிஞர் ஞானமணியம்-* என்ற பெயரிலேயே விளங்கிவருகின்றன. இப்பொழுதும் அந்தப் பெயரே தொடர்ந்து நிலைத்துள்ளது। ஆயினும் ஆரம்பநாட்கள் தொட்டு.....,

*இளங்கவிஞர் ஜி எஸ் மணியம் - இளங்கவிஞர் ஞானமணியம்*

*பழுகாமம் ஞானமணியம் - முத்தமிழ்ப் பாவலர்*

*நீல வானம்பாடி - பாவலர் நாவேலன்*

என்ற புனைப் பெயர்களிலும் என் கலைப் படைப்புக்கள் காலத் துக்குக் காலம் அறிமுகமாகி வந்துள்ளன.

முத்தமிழ்ப் பாவலர் –கவிஞர் ஞானமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக் கோயில்

கலைக் கோயில் – அது
கல்விக் கூடம்
திருக் கோயில் – அது
பள்ளிக் கூடம் கலை

வெள்ளை மலர் ஆசனத்தில்
வீற்றிருக்கும் வாணி
வேதங்களை மானிலத்தில்
விளம்பிடும் வாணி கலை

எண்ணறிவு கொடுத்திடும்
ஏகவல்லி தேவி
எழுத்தினை அறிவிக்கும்
எங்கள் தமிழ்த் தேவி கலை

இயலிசைக் கலைகளின்
இருப்பிடம் ஆவாள்
தயவுடன் கருணையும்
தங்குமிடம் ஆவாள் கலை

தாமரையின் பீடத்திலே
தரித்திடும் அன்னை
பாமரரை ஞானத்திலே
பயிற்றிடும் அன்னை கலை

பாவலரைப் பரிவுடன்
படைத்திடும் இறைவி
நாவலரை நலமுடன்
நயந்திடும் இறைவி கலை

ஞானக்கதிர் ஒளிதரும்
நாமகளின் கோயில்
நாதச்சுரம் ஏழிசைக்கும்
பாமகளின் கோயில் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

## உப அதிபர்– திருமதி கமலா ஞானதாஸ்

**விபுலானந்த இசை நடனக் கல்லூரி மட்டுநகர் – கிழக்கிலங்கை**

கிழக்கிலங்கையின் விடிவெள்ளியாகத் தோன்றிக் கிடைக்க முடியாத புகழின்பங்களை அள்ளி வழங்கிய இசைஞான வள்ளலாம் எங்கள் தவத்திரு விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டுப் பாமலரைப் படைத்துத் தனக்குமே நூற்றாண்டுகளாக நிலைக்க வல்ல பெரும்புகழைத் தேடிக்கொண்டவர் அடிகளாரின் புனிதப் பணிகளைப் பாடிமகிழும் கவிஞர் ஞானமணியம் அவர்கள்। சிறியவர் முதல் பெரிவர் வரை அனைவருமே பாடிப் பயின்று இசையும் பொருளும் நாடி மகிழும் பைந்தமிழ்ப் பாக்களை அடிகளாரின் பாமலரிலே தொடுத்தவர் கவிஞர் ஞானமணியம்.

அடிகளாரின் நாமம் தத்துவம், வித்துவம், ஞானத்துவம், சமத் துவம் அனைத்தும் இந்த உலகத்தில் நீடித்து நிலைக்கும் வரைக்கும் கவிஞருடைய இசைத் தமிழ்க் கவித்துவமும் நீண்டு நிலைத்திருக்கும் என்பதில் ஐயமே இல்லை!

நாட்டிலும் பாரிலும் உள்ள சைவத் தலங்களையும் ஆங்காங்கே எழுந்தருளி ஆண்டு அருள்பாலிக்கின்ற தெய்வங்களையும் பற்றி எண்ணற்ற துதிப் பாடல்களையும், 108 போற்றிகளையும் இயற்றிப் படைத்திருக்கின்றார் முத்தமிழ்ப் பாவலர் கவிஞர் ஞானமணியம் அவர்கள்। எவராய் இருப்பினும் அடிகளாரின் நாமம் நிலைக்கும் இசைநடனக் கல்லூரியில் இசைக்கலை போதிக்கின்ற சங்கீத ஞானஸ்தர் ஒருத்தரே "பதிக்கொரு பாடல்" என்னும் தமது நூலுக்குச் சிறப்புரை வழங்கவேண்டும் என்பது கவிஞரின் ஆவலாகும்। எனவே, கல்லூரியின் சார்பில் அவரது நூலுக்குச் சிறப்புரை வழங்கும் அரிய வாய்ப்பு என்னைச் சேர்ந்தமை ஓர் தெய்வச் செயலென்றே பேரானந்தம் அடைகின்றேன்।

பதிக்கொரு பாடல் சைவத்தமிழ்ப் பாருக்கே ஒரு ஆத்மீகப் பனுவலாகத் திகழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# மட்டுநகர் மாமாங்கப் பிள்ளையார் 108 போற்றிகள்

மட்டுமா நகரின் வடக்கு எல்லையில், மாநகர மண்டபத்திலி ருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் அமிர்தகழி என்னும் இனிய தமிழ்க் கிராமம் இருக்கின்றது.

தென்னஞ்சோலை வண்ணமாய்த் தொடரும் தோப்புவளமும், பண்டையிலிருந்து பயன்பட்டுவரும் துறைமுகம் சார்ந்த கடல் வளமும் ஒன்றாய் இணைந்து விளங்கும் இந்தப் பதியிலேதான் மாமாங்கப் பெருமானார், வெண்டாமரையும், செந்தாமரையும் மிக்கத் தழைத்து வளர்ந்து நறுமணம் பரப்பும் மாமாங்கத் தீர்த் தக்குளத்தின் கரையில் ஆலயங்கொண்டு வீற்றிருக்கின்றார்.

பிள்ளையார் பெருமானின் பேரான புகழையும், பேரானந்தம் விளங்கும் அருளாட்சியின் பெருமைகளையும் உலகத்தில் எங்குவாழ்பவராயினும் இந்துசமய மக்கள் எல்லோரும் இனிதே அறிவார்கள்.

இராமாயணக் காலந்தொட்டே மாமாங்கேஸ்வரம் இருந்துவருவ தாகவும் சிறந்துவருவதாகவும் இராமாயணக் காவியத்தின் மூல மாக மட்டுமல்லாமல் வேறுசில இதிகாசங்கள் மூலமாகவும் நாம் தெரிந்துகொள்ளுகின்றோம்.
மாமாங்கப் பதியில் உள்ள புண்ணிய தீர்த்தக்கேணி பாரத நாட் டிலுள்ள ஒன்பது மகா புண்ணிய கங்கைகளில் எடுத்துக் கொண்டுவந்த புனிதநீரால் உருவாக்கப்பட்டது என்பது ஓர் தெய்வீக வரலாறாகும்.

மிகப்பெரும் பரமரிஷியான மாமுனிவர் ஒருத்தரே அவ்வாறு நவகங்கைகளின் தீர்த்தங்களை எடுத்து ஒன்றுசேர்த்து ஒரே கமண்டலத்திற் கொண்டுவந்து மாமாங்கக் கங்கையென இந்த மகா புண்ணிய தடாகத்தை உண்டாக்கிச் சென்றார் என்பதே அந்த வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டும் அல்லாமல் அந்தப் புனிதநீரை அமிர்தமெனக் கருதி அடியார்கள் பருகியும் அதிலே மூழ்கியும் களிப்பதால் பெருமானுடைய தீர்த்தம் அமிர்தகளி என்று அழைக்கப் படுகின்றது என்று ஒருசிலர் கருத்துக்கொள்ளும் அதே வேளை யில் அமிர்தத்தின் தன்மையுடைய சந்தனச் சேறு மலிந்த கேணியாகையால் அமிர்தகழி என்றும் அழைக்கப்படுகின்றது என்று இன்னுமொரு சாரார் கருத்துக் கொள்வதையும் நாம் அறிகின்றோம்.

இப்பொழுது பெருமானுடைய தலத்திலே இராஜ கோபுரம் அமைக்கும் மகோன்னதத் திருப்பணிகள் விமரிசையாக நடைபெறுகின்றன.

உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் பலகோடிச் சைவ மாந்தர்களிடமும் இருந்து பெருமானுடைய இராஜ கோபுரத் திருப்பணிக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவம் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!

என்னும், அமரகவி பாரதியின் பைந்தமிழ்ப் பாட்டை நினைவூட் டிய வண்ணம் எல்லோரிடமும் இனிய வேண்டுகோள் விடுக்கின் றனர் பெருமானுடைய பேராலயப் பரிபாலன சபையினர்.

ஆண்டுதோறும் ஆடி அமாவாசைத் தினத்திலேயே எம்பெருமா னுடைய மாமாங்கத் தீர்த்தோற்சவம் நடைபெறும். அப்பொழுது மட்டுமா நகரம் பக்திபரவசம் மிக்கவொரு புனித நகரமாகவே காட்சியளிக்கும். கோலாகலமான ஒளிமயம் பூண்டு விளங்கும்.

மாமாங்கப் பிள்ளையார் பெருமானின் பேரின்பப் பேறும் அருளும் பெற்று ஆனந்தம் அடையாதவரும் உளரோ.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தம் ஆடவா

பல்லவி

வாவா ஓடிவா – மட்டுநகர் நாடிவா
வாவா பாடிவா – வாஞ்சையுடன் ஆடிவா
வாவா

சரணங்கள்

மாமாங்கம் செல்லவா மன்றாடிக் கொள்ளவா
மாதீர்த்தம் ஆடவா மாவரங்கள் நாடவா
வாவா

வாரணனைப் பாடவா வாழும்வழி தேடவா
பூரணனைப் போற்றவா பூசைத்தீபம் ஏற்றவா
வாவா

வீதிவலம் செய்யவா வேதகீதம் ஓதவா
வேழமுகன் ஆளவா வேதனைகள் மாளவா
வாவா

பொய்கையிலே மூழ்கவா புண்ணியங்கள் நேரவா
உய்யும்வழி காணவா உள்ளகுறை தீரவா
வாவா

ஐந்துகரன் அடியில்வா ஆனந்தமே அடையவா
பந்தமுடன் பணியவா பாவங்களைக் களையவா
வாவா

எண்ணமெல்லாம் கூடவா ஏற்றமெல்லாம் நீடவா
வெண்ணீறை நீ அணியவா விக்கினங்கள் அகலவா
வாவா

பிள்ளையாரைப் பேணவா பின்னங்களால் மீளவா
வள்ளலாரை வணங்கவா வாதையெல்லாம் நீங்கவா
வாவா

அமாவாசை நாளில்வா அமிர்தகழிப் பதியில்வா
உமாமகனை நம்பிவா உலகினிலே வாழவா!
வாவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# மாமாங்கப் பிள்ளையார்
## 108 போற்றிகள்

திருச்சிற்றம்பலம்

ஆதிசிவன் ஆதி மகனே போற்றி
அமிர்தகழி ஊரின் அரசே போற்றி
சோதி மயமான சுடரே போற்றி
சுந்தர வாரண வடிவே போற்றி

மாநவ கங்கைக் கோனே போற்றி
மாமாங்கத்தின் வள்ளலே போற்றி
ஆனவரங்கள் அருள்வாய் போற்றி
அன்பரி னுள்ளம் உறைவாய் போற்றி

மட்டுநகர் மா மன்னா போற்றி
மானிலம் ஆளும் ஐயா போற்றி
எட்டுத் திசையும் நிறைவாய் போற்றி
எங்குந் தங்கும் இறைவா போற்றி

தாமரை கமழும் புனலாய் போற்றி
தண்டமிழ் ஆரும் ஊராய் போற்றி
கோமள வதனப் பதியாய் போற்றி
குஞ்சர வடிவங் கொண்டாய் போற்றி

தென்னை வளரும் தோப்பாய் போற்றி
திருவருள் தந்தே காப்பாய் போற்றி
அன்னை உமையின் பாலா போற்றி
அழகன் முருகன் முதல்வா போற்றி

பாடும் மீனைப் படைத்தாய் போற்றி
பாருல கெல்லாங் கவர்ந்தாய் போற்றி
நாடும் புகழை வளர்த்தாய் போற்றி
நாளுங் கண்டே மகிழ்ந்தாய் போற்றி

123510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய மழகாய்க் கொண்டாய் போற்றி
ஆனந்த வளமே கண்டாய் போற்றி
சாலவும் ஞானம் விண்டாய் போற்றி
சந்ததம் அருளே தந்தாய் போற்றி

பாவலர் பாட்டே கேட்டாய் போற்றி
பண்டைக் கலைகள் பார்த்தாய் போற்றி
நாவலர் புகழும் நாதா போற்றி
நல்லவை யாவும் தாதா போற்றி

யாழிசை முனியைக் கொடுத்தாய் போற்றி
நாடிக் கிழக்கை வளர்த்தாய் போற்றி
ஏழிசை இன்பம் அளித்தாய் போற்றி
இறைவா மேன்மைகள் ஈந்தாய் போற்றி

புலவர்கள் மாண்பைத் தந்தாய் போற்றி
பொன்னிகர் பாடல் கேட்டாய் போற்றி
பலகலை அறிஞர் பெற்றாய் போற்றி
பண்ணிசை இன்பம் உற்றாய் போற்றி

பண்டித மேதைகள் தந்தாய் போற்றி
பைந்தமிழ் மாரி பொழிந்தாய் போற்றி
கண்டவர் உள்ளங் கவர்ந்தாய் போற்றி
கவிஞர்கள் ஆயிரம் ஈந்தாய் போற்றி

இராகவன் காதையில் உறுவாய் போற்றி
இதிகாசப் புகழ் பெறுவாய் போற்றி
திராவிட மண்ணிற் திகழ்வாய் போற்றி
தேசம் இலங்கை ஆள்வாய் போற்றி

புண்ணிய தீர்த்தம் உடையாய் போற்றி
பூரண வளமே பொழிவாய் போற்றி
எண்ணிய வரமே தருவாய் போற்றி
ஈஸ்வரி உமையாள் மகனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரினத் தாமரைக் குளத்தாய் போற்றி
இயற்கையின் அழகாம் இடத்தாய் போற்றி
சீரிய மேன்மைகள் உடைத்தாய் போற்றி
சிறந்தன யாவும் படைத்தாய் போற்றி

திருச்சியின் மலையிற் திகழ்ந்தாய் போற்றி
தேசங்கள் ஓதிட மகிழ்ந்தாய் போற்றி
திருச்சங்க மான்கண்டி இறைவா போற்றி
தினந்தினம் பணிந்தோம் அருள்வாய் போற்றி

மானிப்பாய் மரு தடியனே போற்றி
வழிமுரு கண்டித் தேவா போற்றி
வானிற் கணங்கள் பதியே போற்றி
வணங்கிடுவோம் வரம் தருவாய் போற்றி

திருக்களு தாவளைப் பதியே போற்றி
சிங்கார வெள்ளி மலையாய் போற்றி
தெருக்களின் ஓரம் இருப்பாய் போற்றி
திருவடி தொழுதோம் அருள்வாய் போற்றி

தாந்தா முடியிற் தரித்தாய் போற்றி
தங்கியம் பாறையில் அமர்ந்தாய் போற்றி
ஈந்தாய் வரங்களை இறைவா போற்றி
ஏற்றிடுவோம் துணை புரிவாய் போற்றி

ஆலமரத் தடி அடைவாய் போற்றி
ஆனந்த நிழலில் அமர்வாய் போற்றி
சீலவழிக்கே சேர்ப்பாய் போற்றி
சேவடி வந்தே சேர்ந்தோம் போற்றி

நாடிடும் துயரம் மாய்ப்பாய் போற்றி
நாம்முறை செய்வது கேட்பாய் போற்றி
பாடிடும் எங்களைக் காப்பாய் போற்றி
பாங்குடன் அபயம் அளிப்பாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணங்கள் எங்கும் நிறைவாய் போற்றி
கோயில்கள் தோறும் உறைவாய் போற்றி
காணும் ஒளியிலே காண்பாய் போற்றி
கருத்தினில் வந்தே கலப்பாய் போற்றி

மட்டுநகர் வலம் வருவாய் போற்றி
மங்கள வடிவினில் மலர்வாய் போற்றி
பட்ட துயர்கள் மறைப்பாய் போற்றி
பாவங்கள் யாவும் களைவாய் போற்றி

தருணத்தில் அபயந் தருவாய் போற்றி
தாய்மனத் தயவே புரிவாய் போற்றி
கருணை விளங்குங் கடலே போற்றி
காத்திடுந் தந்தை நிழலே போற்றி

மண்டலத் தமைதியைத் தருவாய் போற்றி
வளரும் பழிகளை மாய்ப்பாய் போற்றி
கொண்டன வாதைகள் தீர்ப்பாய் போற்றி
குற்றங் குறைகளைப் பொறுப்பாய் போற்றி

ஆடியிற் தீர்த்தங் குளிப்பாய் போற்றி
ஆனந்த யோகம் அடைவாய் போற்றி
கோடி வரங்கள் தருவாய் போற்றி
கும்பிடும் எங்களை ஆள்வாய் போற்றி

ஏரிக் கரைகள் சேர்வாய் போற்றி
இன்பக் காட்சி காண்பாய் போற்றி
வாரிச் செல்வம் தருவாய் போற்றி
வருமிடர் மாறச் செய்வாய் போற்றி

மங்கள நேசா சரணம் போற்றி
மாமாங் கேசா சரணம் போற்றி
எங்களை ஆள்வாய் சரணம் போற்றி
எல்லாம் நீயே சரணம் போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழுகாமம் திரௌபதி அம்மன் 108 போற்றிகள்

## அம்மனைப் பற்றிய பக்தியுரைகள்.....!

நான் பிறந்து வளர்ந்த பரம்பரை இனத்தின் தாய்க் கிராமம் திருப்பழுகாமம். ஆங்கே ஆனைமுகப் பெருமான் கிராமத்தின் வடகிழக்குப் பாங்கிலே, ஆலமரத்து நிழலிலே, கேணிக்கரையிலே வீற்றிருக்கின்றார். வடமேற்குத் திசையிலே வேம்படித் துறையிலே, பெரியகுளக்கரையில் ஆலமரத்தடியிலே அமர்ந்திருக்கின்றார். தென்மேற்குக் கோணத்திலே, கிண்ணையடித் துறையின் மருங்கில், ஆலமரத்தடியிலே வெள்ளிமலைப் பிள்ளையார் என்ற பெயரிலே கோயில் கொண்டிருக்கின்றார். கிராமத்தின் மத்தியிலே பேராலவிருட்ஷத்தின் பெரியநிழற் குடையின்கீழ், கேணிக்கரையிலேயே வீற்றிருக்கின்றார்.

கிராமத்தின் மேற்கிலே சுமார் அறுபது சங்கிலி தூரத்திலே, மாவேற்குடாப் பதியிலே இளைய பெருமான் முருகவேளையும் இணைத்தவாறு தலங்கொண்டுள்ளார் விநாயகப்பெருமான். இவ்வாறாகத் திருப்பழுகாமத்தின் திக்கெல்லாம் காட்சிதந்து ஆங்கேவாழும் குடிகள் யாவையும் ஆண்டு அருள்வளம் பாலிக்கின்றார். மாவேற்குடாப்பதியிலே விநாயகப் பெருமானுடன், மாவேல் இறைவன், சிவன்சக்தி, காளித்தாயார், வயிரவர், நாகதம்பிரான், நவக்கிரகங்கள் ஆகிய தெய்வங்கள் அனைத்துமே கோயில் கொண்டிருக்கின்றன. பக்தர்களின் தீவினைகளை அகற்றி, அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி விளங்குகின்றன.
ஊரின் மத்தியிலே பேரால மரத்தடிப் பிள்ளையார் தலத்தின் மருங்கிலே, சித்திரவேலாயுத சுவாமி ஆலயங்கொண்டு அருளாட்சி புரிகின்றார். ஊரின் வடமேற்குப் பாங்கிலே மாரிபொழிந்து, வயல்வளம், கனிவளம், முதலாம் இயற்கைவளங்கள் யாவையும் வாடாது செழித்தோங்கி நிலைக்கச்செய்யும் தாயாரான எங்கள் முத்துமாரி அம்மனின் அழகிய தேவாலயம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் கடவுளான மகாவிஷ்ணுமூர்த்தி ஊரின் தென்கிழக்கு எல்லையிலே திருக்கோயில் கொண்டு கும்பிடும் மாந்தருக்குக் குறையாத வரங்கொடுத்து நிறைவான திருப்புகழோடு விளங்கு கின்றார்.

கிராமத்தின் கிழக்கிலேதான், அன்றாடம் முன்னே தோன்றிக் கதிரொளிபரப்பி எழுந்துவரும் சூரியோதயம் கண்டு மகிழ்ந்தவாறு ஆலயங்கொண்டு அலங்காரமாக வீற்றிருக்கின்றாள், பத்தினித் தெய்வமான பாஞ்சாலித் தேவியாம் எங்கள் திரௌபதி அம்மாள்.

ஆண்டு தோறும் ஆடி மாதத்திலேயே திரௌபதி அம்மனின் மகோற்சவமான தீக்குளிப்புத் திருப்பள்ளையம் நடைபெறும்.

அம்மனுடைய திருப்பள்ளயத்திற்கான திருச்சடங்குகள் ஆரம் பமாகும் இனியசெய்தி ஊர்மக்களுக்குச் சிலநாட்களின் முன் னதாகவே ஆலய வண்ணக்கு சபையினரின் ஆணையினால் அறிவிக்கப்படும். ஒருவார காலமாகக் காலையிலும், மாலையி லும் ஆராதனைத் திருச்சடங்கு வைபவங்கள் தொடர்ந்து நிகழும். ஆலயத்தின் உள்வீதியிலும், வெளிவீதியிலும் இருக்கி ன்ற ஏனைய எல்லாத் தெய்வங்களின் அஞ்சலி பீடங்களிலும் நைவேத்தியத் தீபாராதனைப் பூசைகள் தினமும் நடைபெறும். வெள்ளிக் கிழமையிலேயே தீப்பள்ளையம் நடைபெறுவது பண்டுதொடர்ந்த பாரம்பரிய வழக்கமாகும். பள்ளையத்துக்கு முந்திய புதன்கிழமை பகல்வேளையில் கிராமத்தின் வீதிகள் தோறும் அன்னையின் ஊர்வலத் திருவிழா அலங்காரமான ஆனந்தப் பவனியாக நடைபெறும். வியாழக்கிழமை இரவு அருச்சுனப் பெருமாள் தவத்துக்குச் சென்று சிவனிடம் பாசுபதம் பெற்றுவரும் மகோன்னதக் காட்சி கூடியிருந்து கும்பிடும் பக்தகோடிகளுக்குப் பக்திமிகும் ஓர் பரவசக் காட்சியாக விளங்கும்.
அம்மனுடைய திருவிழாக்களின்பொழுது ஒவ்வொரு இராத்திரி வேளையிலும் திருச்சடங்கு வைபவம் முடிந்ததும் கோயில் முன்றிலில் அமைந்திருக்கும் வட்டக்களரிகளில் நாட்டுக் கூத்துக்களும், கும்மி கோலாட்டம் போன்ற கிராமிய நடனங் களும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே அழகான கலையரங்குகளில் முத்தமிழ்க் கலைநிக ழ்ச்சிகளும் நடைபெறும். பாரதம், இராமாயணம் போன்ற இதி காசங்களில் உள்ள முக்கியமான கட்டங்கள் வழிபாட்டுக்கு உகந்தனவாகவே நடித்துக் காட்டப்படும்.

ஏனைய புராணக் கதைகளும் அவ்வாறே அரங்கேற்றப்படும். தலத்திலே வீழ்த்திருக்கும் பக்தர்களுக்கு மிகவும் பொருத்த மான பக்திக் காட்சிகளாகவே கலைநிகழ்ச்சிகள் யாவும் அமைந்திருக்கும்.

வெள்ளிக்கிழமை காலை பக்தர்கள் சோலைமலைக் காடுகளில் வீரமரக் கட்டைகளைப் பச்சைமரக் கட்டைகளாகவே வெட்டி அணிவகுத்து நிரையாக வரும் நூற்றுக்கணக்கான வண்டிகளில் ஏற்றிக்கொண்டுவந்து ஆலயத்தின்முன்னே மலை போலக் குவி க்கும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

பின்னர் தீக்குழியிலே ஏழெட்டு அடி உயரத்திற் கட்டைகளை அடுக்கித் தீமூட்டிப் பெருங்கனல் வளர்த்துச் சுவாலைவிட்டு எரியும் நெருப்பினால் உண்டான வெந்தணல் குவிக்கும் அகோரமான அக்கினிக்காட்சி நிகழும்.

அந்த வேளையிலே குமுறியெழும்பும் கரும்புகை மண்டலம் ஆகாயவெளியை மறைத்துக் கார்மேகக் கூட்டங்கள் ஊர்மீது படிவதுபோற் காட்சியளிக்கும். பின்னர் ஆயிரக்கணக்கான பக்தர் கள் மத்தியில் ஆண்களின் அரகரகோசமும், பெண்களின் குரவை நாதமும் ஒருங்கே இணைந்தொலிக்கப் பத்தினித்தாயாரின் பர வசமான தீக்குளிப்புத் திருப்பள்ளையம் ஆனந்தமாகவும், ஆசார மாகவும் நடைபெறும்.

அதனால் திரௌபதித் தாயாரை நம்பியே வாழும் மாந்தரின் தீவினைகள் யாவும் நீங்கி மறைந்தோடும். நிம்மதியும் இன்பமும் நிலைத்திருக்கும்.
அம்மை நோய், வாந்திபேதி போன்று வரட்சியால் ஏற்படும் கொடிய நோய்கள் அத்தனையும் அம்மனுடைய அனுக்கிரகத் தால் மறைந்து ஒழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையின்றி ஏற்படுகின்ற வரட்சிகளும், பயிர் வாட்டங்களும் ஆங்கே தோன்றாது நீங்கிவிடும்.

திருச்சடங்குகளும், ஊர்வலங்களும், திருப்பள்ளையமும் நடைபெறும் வேளைகளில் ஒவ்வொரு தீபாராதனை நிகழ்ச்சிகளும் அரஹர கோசங்களும், குரவை ஓசைகளும், மேழ வாத்தியங்களும் ஆலய வீதியெங்கும் திரண்டு செறிந்துநிற்கும் ஆயிரக் கணக்கான மக்கள் எல்லோருக்குமே மனமும் உடலும் குலுங்கி அதிரும் பக்திப் பரவசத்தை ஊட்டும்.

வேறொரு சிந்தனை எண்ணத்திற் கொள்ளாவண்ணம் பத்தினித் தாயாரின் பக்தி ஒன்றே நமக்கு ஆங்கே தோன்றும்.

மேலிடும் பக்தியின் தெய்வீக உணர்ச்சியில் வசப்படும் சில பக்தர்கள் ஆவேசங்கொண்டு ஆலயவீதிகள் எங்கும் ஓடோடி ஆர்ப்பரித்து மகிழ்ந்தாடும் திருக்கூத்தாட்டங்கள் கூடியிருக்கும் பக்தர்களுக்கும் பக்திப் பரவசத்தை உண்டாக்கும்.

கௌரவர் சபையிலே கௌரவரால் அவமதிக்கப்பட்டபொழுது கொந்தளித்துக் குமுறியெழுந்து நெஞ்சம் கொதிப்படைந்தாள் பாஞ்சாலித்தாய். ஆவேசங்கொண்டு கூச்சலிட்டுப் புலம்பினாள். கூந்தலை அவிழ்த்து விரித்தாள். பூகம்பமாக ஆர்ப்பரித்தாள்.

தனது அண்ணனும், தருணத்தில் அபயங்கொடுத்தாளும் தெய்வமுமாகிய கண்ணன்மீதும், தனது தூய கற்பின் மீதும், ஆணையிட்டுச் சபதம்செய்தாள். கற்பின் தெய்வமாகக் காட்சி கொடுத்தாள்.

அன்னை பாஞ்சாலி அன்று தோன்றிய அகோரத் தோற்றத்தையே இன்று பக்தியுணர்ச்சியால் உந்தப்பட்டு நின்றாடும் இந்தப் பக்தர்களின் களியாட்டம் கூடியிருக்கும் பக்தகோடிகளுக்கு நினைவூட்டும் என்றால் அது ஒருபொழுதும் மிகையாகாது. அதுவே அனுபவத் தத்துவமும் ஆகும் என்றாலும் அதையும் எவராலும் மறுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரௌபதி அம்மன் துதிப் பாடல்

## பல்லவி

பாஞ்சாலித் தாயிருப்பாள் பழுகாமத்தில் – இன்பம்
பாலித்தே வீற்றிருப்பாள் திருக்கோலத்தில் பாஞ்

## அநுபல்லவி

பூஞ்சோலை பார்த்திருப்பாள் பத்தினியாள் – எங்கள்
பூசையெல்லாம் ஏற்றிடுவாள் உத்தமியாள் பாஞ்

## சரணங்கள்

ஆடியிலே ஓடிவந்து தீக்குளிப்பாள் – மனம்
ஆறியே தணிந்து நல்ல வாக்களிப்பாள்
கோடிவரம் தாய் கொடுத்து வாழவைப்பாள் – மஞ்சள்
குங்குமமும் சந்தனமும் பூசிநிற்பாள் பாஞ்

தேசமக்கள் நாடிவந்து கூடிடுவார் – அன்புத்
தேவிதன்னைக் கண்டுநம்பிக் கும்பிடுவார்
மாசில்லாத நேசமுடன் வலமிடுவார் – கோயில்
வாசலிலே மந்திரங்கள் ஓதிடுவார் பாஞ்

ஆங்குபாண்டி ருப்பினிலும் ஆலயமாம் – எங்கள்
அம்மனாம் திரௌபதிக்குப் பள்ளையமாம்!
தீங்குகளை மாளவைக்கும் தாயிவள்தான் – இந்தத்
தேசமெங்கும் ஆடுகிறாள் பள்ளையமாம்! பாஞ்

ஊரதாம் உடப்பினிலும் கோயில் கொண்டாள் – அங்கே
ஓடிவந்து தீமிதிப்பாள் ஓங்காரமாய்!
சீரதாம் உயர்ந்த தெய்வப் பத்தினியாள் – அவள்
சீரடிகள் நாமடைவோம் நித்தியமாய்! பாஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரௌபதி அம்மன் 108 போற்றிகள்

## திருச்சிற்றம்பலம்

மாமாங்கப் பிள்ளையாரின் மாதாவே தாயே போற்றி
மாவேலன் தன்னை ஈன்றாய் மலரடிகள் தாமே போற்றி
நாமோங்க வரமளிக்கும் மாயன்சோ தரியே போற்றி
நல்லமணி கண்டன் சபரி நாயகனின் தாயே போற்றி

ஆதியாய்த் தோன்றியிங்கே ஆலயங் கொண்டாய் போற்றி
ஆளுங்கோள் யாவுங்கூடி அஞ்சலிக்கும் தாயே போற்றி
சோதிமய மாகத் தோன்றும் சுந்தரியும் நீயே போற்றி
தூயதிரௌபதியே எங்கள் துணையாகும் ஒளியே போற்றி

திருப்பழுகாமம் தன்னிற் திருத்தலம் கொண்டாய் போற்றி
திக்கெலாம் வாழும் மாந்தர் தெண்டனிட்டாரே போற்றி
திருப்பாண்டி யூரில் திகழும் திரௌபதித் தாயே போற்றி
தேசத்தில் எங்கும் மக்கள் பூசிக்கும் இறைவி போற்றி

பாரதம் வென்றாய் நீதி பாருக்கு விண்டாய் போற்றி
பாண்டவர் புகழைக் காக்கும் பத்தினி ஆனாய் போற்றி
நேரதம் எதுவானாலும் நீமறைத் திட்டாய் போற்றி
நீசர்தம் வாதுஞ்சூதும் நிலைகெடச் செய்தாய் போற்றி

கௌரவர் சபையிலேநீ கண்ணனை அழைத்தாய் போற்றி
கடலலை போலே நின்றன் துயில்வரக் கண்டாய் போற்றி
கௌரவம் மானம் காத்துக் கற்பால் உயர்ந்தாய் போற்றி
கண்டவர் கும்பிடத்தான் அன்றே மலர்ந்தாய் போற்றி

சத்தியம் காத்தாய் மானம் தளராது காத்தாய் போற்றி
சபதத்தினாலே பெண்மை தன்னைநீ காத்தாய் போற்றி
நித்தியம் விரதம் காத்தாய் நீஅறம் காத்தாய் போற்றி
நிலையான கற்பின் மாண்பை நீடூழி காத்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியவர் துயிலுரிந்தார் கூந்தலை விரித்தாய் போற்றி
கோவிந்தன் அருளால்ஆடை குலையாது பெற்றாய் போற்றி
முடிவிலே சபதம் வென்றாய் மூர்க்கரை அழித்தாய் போற்றி
முப்பெருந் தாயாய் மூன்று உலகையும் ஆள்வாய் போற்றி

வில்லாளி விஜயன் பாணம் தன்னாலே வென்றாய் போற்றி
வீமனார் வீரத்தாலே வெற்றிநீ கண்டாய் போற்றி
வல்லவர் பாண்டவர்க்கே மனைவியாய் வந்தாய் போற்றி
மாற்றாரின் ஆணவங்கள் தோற்றிடச் செய்தாய் போற்றி

ஆதிமா சக்தியானாய் ஆண்டருள் செய்தாய் போற்றி
ஆயநற் கலைகள் யாவும் தாயேநீ தந்தாய் போற்றி
சோதியும் ஆனாய் செல்வச் சுந்தரி ஆனாய் போற்றி
சூலிமா காளி சூரி யாவுமே ஆனாய் போற்றி

பஞ்சமா சீலம் பேணும் பாண்டவர் பாரி போற்றி
பார்த்திபன் வீரம் போற்றும் பாங்கான தேவி போற்றி
வெஞ்சமர் வீமன் வீரம் மெச்சிடும் மச்சி போற்றி
வேண்டிய சபதம் தீர்த்தாய் வீரபத்தினியே போற்றி

பத்தினித் தாயே நித்தம் பாராள வந்தாய் போற்றி
பாவங்கள் மாளத்தானே சீராய் மலர்ந்தாய் போற்றி
எத்தனித் தின்னல் புரியும் ஈனரை ஒழித்தாய் போற்றி
எங்களை வருத்தும் வாதை எல்லாம் மறைத்தாய் போற்றி

ஆடியிற் பழுகாமத்தில் ஆனந்தம் ஆனாய் போற்றி
ஆரத்தி அணிவிளக்கின் தீபங்கள் பெற்றாய் போற்றி
கூடியூர் மக்கள்கூட்டம் கும்பிடக் கண்டாய் போற்றி
குங்குமம் மஞ்சள் கமழும் கோமளத் தாயே போற்றி

பள்ளையத் தீயில் ஆடும் பத்தினித் தாயே போற்றி
பாவங்கள் தம்மைச் சாடும் பாரதத் தாயே போற்றி
கொள்ளைகொண் டுள்ளந்தன்னிற் குடியிருந்தாயே போற்றி
குலதெய்வமானாய் எங்கள் குடிகளைக்காத்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியூர்ப் பதியில்வாழும் பாஞ்சாலி எந்தாய் போற்றி
பாங்காய் உடப்பூர் ஆங்கும் நீங்கா திருந்தாய் போற்றி
வேண்டியூர் ஊராய் மக்கள் வேண்டப் பரிந்தாய் போற்றி
மேன்மைகள் யாவும்நல்ல வேளையிற் தந்தாய் போற்றி

ஆடியிற் பள்ளையத்தீ ஆடிக் குளிப்பாய் போற்றி
ஆனந்த மயமாய்த் தோன்றும் ஆலயம் தானே போற்றி
தேடிவந் துன்னை அடியார் தெண்டனிட்டாரே போற்றி
திருப்பழு காமத்தூரில் திகழ்ந்திடும் தாயே போற்றி

தமயனார் மாலுங்கோயில் தாமிங்கு கொண்டார் போற்றி
தனையர்கள் இருவர்தாழும் தரிசனம் தந்தார் போற்றி
அபயமென் றுன்னை நாடி அடியார் அடைந்தார் போற்றி
அக்கினித் தணலில் ஆடி விக்கினம் தீர்ப்பாய் போற்றி

மாவேலம் பதியிலுன்றன் மக்களைத் தொழுதோம் போற்றி
மாகாளி சக்திஈசன் மலரடி தொழுதோம் போற்றி
மாவேலன் வள்ளிதெய்வ யானையைத் தொழுதோம் போற்றி
மாநவக் கிரகம்யாவும் வழுவாது தொழுதோம் போற்றி

கேணியின் கரைகள் தோறும் வாரணன் தலமே போற்றி
கேடெலாம் ஓடித் தீரும் நாடாது தாயே போற்றி
பேணிடும் மாரித்தாயும் ஊரில் அமர்ந்தாள் போற்றி
பின்னங்கள் அதனால் இல்லை என்னாளும் அம்மா போற்றி

அருச்சுனப் பெருமாள்பாசு பதம்பெறக் காண்பாய் போற்றி
அன்னையே நின்றன் கோயில் அழகுநீ காண்பாய் போற்றி
தெருக்களிற் தோரணங்கள் திகழநீ காண்பாய் போற்றி
திக்கெலாம் ஒளிவிளங்கும் தீபங்கள் காண்பாய் போற்றி

வாழைகள் நட்டுவாசல் நிறைகுடம் வைத்தோம் போற்றி
மாதாநீ பவனிஊரில் வருமந்த வேளை போற்றி
ஏழைகள் செல்வர் இல்லை எல்லோரும் ஒன்றே போற்றி
ஏதான போதும் தொல்லை நீடாது தாயே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லையில் வீரக்கட்டை வெட்டிவந்தோமே போற்றி
மூட்டிவெந் தணலாய்க் குவியும் தீவளர்த்தோமே போற்றி
தொல்லைகள் மாளத்தானே தீக்குளிப்பாயே போற்றி
தூய்மைகள் வாழத்தானே காப்பளிப்பாயே போற்றி

நம்பிடும் அடியவர்க்கு நல்லருள் புரிவாய் போற்றி
நாடிய வினையகற்றும் நற்கதி தருவாய் போற்றி
கும்பிடுங் குடிகளுக்குக் குலதெய்வம் ஆவாய் போற்றி
கொக்கொட்டிச் சோலைஈசன் பக்கம் இருப்பாய் போற்றி

தொல்லைகள் மாளவேண்டும் துரௌபதி அம்மா போற்றி
தோற்றிநீ ஆளவேண்டும் சுந்தரேஸ்வரியே போற்றி
தில்லையில் ஆடும் சிவனார் தேவியும் நீயே போற்றி
தேசத்தை ஆளும் வீரக் காளியும் நீயே போற்றி

தென்னங் குருத்துப் பாளை இளநீர் எடுத்தோம் போற்றி
சீரான கமுகம்பூக்கள் தேடிக் கொணர்ந்தோம் போற்றி
கன்னல்பால் வெண்ணெய்வெல்லம் கற்கண்டுவைத்தோம் போற்றி
கனிகளும் தேனும்பொங்கல் அமுதும்படைத்தோம் போற்றி

வேப்பிலைத் தோரணங்கள் வீதியில் இட்டோம் போற்றி
வெட்டிய வாழை கொண்டு வாசலில் நட்டோம் போற்றி
கூப்பிய கைகளோடு கும்பிட்டு நின்றோம் போற்றி
கொண்டாடினோமே உன்னை மன்றாடினோமே போற்றி

அம்மாநின் அருளே தஞ்சம் அனுதினம் தஞ்சம் போற்றி
ஆளுமுன் நிழலே தஞ்சம் அன்னையே தஞ்சம் போற்றி
செம்மனத் தயவே தஞ்சம் திருவடி தஞ்சம் போற்றி
தேவிநீ தஞ்சம் அன்புத் தெய்வமே தஞ்சம் போற்றி

பத்தினித் தாயே எங்கள் பாஞ்சாலி। சரணம் போற்றி
பழுகாமத் தாயே காஞ்சி காமாட்சி। சரணம் போற்றி
முத்தமிழ்த் தாயே மதுரை மீனாட்சி। சரணம் போற்றி
மூலமா சக்தி। காசி விசாலாட்சி சரணம் போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கொட்டிச் சோலை
# தான்தோன்றி ஈஸ்வரன்
# 108 போற்றிகள்

கொக்கொட்டிச் சோலை எங்கே இருக்கிறது...? அங்கே என்ன விசேடம் இருக்கிறது...? அந்த ஊர் எவ்வாறு புகழ் பெற்றது...? ஏன் இவ்வளவு சிறப்படைந்தது...?

என்று இலங்கைவாழ் சைவத் தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் ஏனைய சமயத்து மக்களுமே வினாவெழுப்பி விடைகாண வேண்டியது அவசியமே இல்லை. சிலகாலம் இலங்கையை ஆண்டிருந்து தமது நாடுதிரும்பிய மேலைநாட்டு வெள்ளையரும் அவ்வாறான கேள்விகளைக் கேட்கவே மாட்டார்கள்.

அந்த அளவுக்கு இறைவன் சிவனுடைய தான்தோன்றீஸ்வரம் கொக்கொட்டிச்சோலைப் பதியிலே சிறப்பான சரித்திரப்புகழ் பூண்டு விளங்குகின்றது.

பன்னூறு வருடங்களுக்கு முன்னாலே கொக்கொட்டி மரங்கள் மிக்கச் செறிந்து செழித்து வளர்ந்தோங்கிய அடர்ந்த சோலையின் மத்தியிலே எம் பெருமான் ஆதிசங்கரனார் தாமாகவே வந்து சிவலிங்க வடிவத்தில் ஓர் கொக்கொட்டி மரத்தின் அடியிலே அவதரித்து அமர்ந்துகொண்டார்.

கிழக்கு மானிலத்தை ஆட்சிபுரிந்து எம்மையெல்லாம் காத்து அருள்பாலிக்கப் பரிவுகொண்டு தானேவந்து சிவலிங்கமாகத் தோன்றியதால் பெருமானைத் தான்தோன்றி ஈஸ்வரன் என்று அழைக்கின்றோம்.

தான்தோன்றி ஈஸ்வரன் எழுந்தருளிய தலம் ஆகையால் அத்தலத்தைத் தான்தோன்றீஸ்வரம் என்று பெயரிட்டுப் பக்தி மிகுதியுடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றி அப்பனின் தேரோட்ட மகோற்சவம் ஆண்டு தோறும் ஆவணிமாதம் இறுதி ஞாயிற்றுக் கிழமையிலேயே நடைபெறும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரோட்டங் கண்டு சிவனை வழிபடத் திரண்டு வருவார்கள்.

ஆலய வீதிகள் அலங்காரமாக விளங்கும். ஊரின் வீதிகள் யாவும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுச் சோபனமாக விளங்கும். கொக்கொட்டிச்சோலையூர் திக்கெட்டும் தெய்வீக மயமாகக் காட்சியளிக்கும்.

ஆதி மகனான ஆனைமுகப் பிள்ளையார் தமது தேரிலே அமர் ந்து முன்னே செல்ல, ஆதி பகவனாம் சிவபிரான் சித்திரத் தேரிலே அமர்ந்து பின்னே செல்லத் தேரோட்டத் திருவிழா கண்கொளாக் காட்சியாக நடைபெறும்.

தேர்களிற் பூட்டிய வடங்களைப் பக்தர்கள் இருமருங்கிலும் அணிவகுத்து நின்று இழுப்பார்கள். மக்களின் அரஹர கோசமும், ஆனந்தக் குரவை ஓசையும், சங்கொலி, சல்லரியுடன் மேளவாத் தியங்களும் ஒருங்காய் இணைந்தொலிக்கத் தேரோட்டப் பவனி சிங்கார மாக நடைபெறும்.

தேரோட்டம் நிகழும்பொழுது பக்தர்களின் பரவசமான காவடி ஆட்டம், கும்மியாட்டம், கோலாட்டம் போன்ற பக்தி நடனங்கள் தேர்ப் பவனியின் முன்னாலே திருக்காட்சியாக நிகழ்வதைக் காணலாம்.

நேர்த்திக்கடன்களைப் பூர்த்திசெய்யும் பக்தர்கள் நெய் விளக்கு களும், கர்ப்பூரத் தீபங்களும் ஏந்தியபடி தேரின் முன்னே தெண்டனிட்டுச் செல்லும் காட்சி மிகவும் அற்புதமாகவே தோன்றும்.

தேரோட்டம் நிகழும் திகதிக்கு மறுநாளான திங்கட்கிழமை காலை ஈஸ்வரனுடைய திருவேட்டைத்திருவிழா நடைபெறும். ஊரின் எல்லைக்காட்டு வெளியிலேயே திருவேட்டை நிகழும். அத்துடன் தான்தோன்றி ஈஸ்வரனின் ஆண்டுமகோற்சவம் இனிதே நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமதுநாடு முன்னர் வெள்ளையரால் ஆளப்பட்டதை நாம் அறிவோம். அப்பன் தான்தோன்றி ஈஸ்வரனின் மேன்மைகளை ஆரம்பத்தில் உணராத வெள்ளையினச் சிப்பாய்கள் பெருமானைச் சிறிதேனும் மதிக்காமல், தமது காலணிகளைக் கழற்றாமலே ஆலயத்துக்குள் பிரவேசித்தனராம். அதுமட்டுமல்லாமல் முன்னேயிருக்கும் நந்தி பெருமானுக்குப் பக்கத்திலே சென்று..., காளையும் கடவுளாமோ...?

அப்படியானால் காளைக்கடவுள் புல்லும் உண்பாரோ...?
என்று அலட்சியம் பேசியவாறு....., புல்லைக் கொணர்ந்து
நந்திக்கு முன்னே போட்டனராம்.

என்னே அதிசயம்...!
என்னே அற்புதம்.! இட்டபுல் யாவும் எங்கே மறைந்தனவோ! நந்தியே தின்றது என்பதை நன்றாய்ப் புரிந்துகொண்டனர் வெள்ளையர். உடனேயே இறைவனை மண்டியிட்டு வணங்கிக் கொண்டு அரண்மனை திரும்பினராம்.

அன்றுதொட்டு எம்பெருமான் மீது வெள்ளையருக்கு உண்டான பயமும்பக்தியும் என்றுமே இருந்துவந்தது. இன்றும் நிலைத்திருப்பதை நாம் அறிகின்றோம்.
இவ்வாறு அற்புதமான சரித்திரப் பெருமையும் புகழும்பூண்டு சந்ததம் விளங்குவதே எம்பெருமான் தான்தோன்றீஸ்வரனின் தலவரலாறாகும்.
மட்டுநகரிலிருந்து தெற்கு நோக்கிக் கல்முனை நெடுஞ்சாலை யாற் செல்லுகின்றபொழுது, சுமார் ஐந்து மைல் தூரத்திற் தாழங்குடாச் சந்தி வருகின்றது. சந்தியிலிருந்து வலப்புறமாகத் திரும்பி ஏறக்குறைய இரண்டு மைல் தூரம் மேற்கு நோக்கிச் சென்றால் மண்முனைத்துறை வருகின்றது. அங்கே குறுக்கிட்டுச் செல்லும் மட்டக்களப்பு வாவியைப் படகுகள் மூலமாகக் கடந்து சென்றால், ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்தில் எம்பெருமான் தான்தோன்றி ஈஸ்வரனின் கொக்கொட்டிச்சோலைப் பேராலையம் பேரெழில் விளங்கும் திருக்கோபுரத்துடன் அருட்காட்சியளிக்கின்றது. இப்பொழுது சுற்றுப் பாதைகளால் எம்பெருமானுடைய தலத்துக்கு பஸ் போக்குவரத்தும் உண்டு.
தான்தோன்றி அப்பனின் நாமம் போற்றி வாழாதாரும் உளரோ.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தான்தோன்றி ஈஸ்வரனே சங்கரனே

பல்லவி

தான்தோன்றி ஈஸ்வரனே சங்கரனே – அருள்
தந்தாளும் மகேசனே சதாசிவனே தான்

சரணங்கள்

கொக்கொட்டிச் சோலையிலே
கோயில்கொண்டாய் – தினம்
கோடிமக்கள் நாடிவரும்
காட்சி கண்டாய்
இக்கட்டில் இருந்தெம்மை
ஈடேற்றுவாய் – உன்னை
எக்காலும் கூடிவண்ணத்
தேரேற்றுவோம் தான்

ஆவணியில் தேரோடும்
அழகு கண்டோம் – எங்கள்
ஆண்டவனே நீமகிழும்
பவனி கண்டோம்
மாவணிகர் வெள்ளையரும்
வாழ்த்திடக் கண்டோம் – இந்த
மானிலத்து மக்களுன்னைப்
போற்றிடக் கண்டோம் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றி ஈஸ்வரன்
# 108 போற்றிகள்

## திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் ஐயனைப் பெற்றவா போற்றி
பிரபஞ்ச மாண்டிடும் தெய்வமே போற்றி
வள்ளலே வானவர் தலைவனே போற்றி
மன்னுயிர் யாவுக்கும் இறைவனே போற்றி

தான்தோன்றி ஈஸ்வரன் ஆனவா போற்றி
தந்தையும் தாயும்நீ அல்லவோ போற்றி
வான்தோன்றி ஈஸ்வரி பாகனே போற்றி
வந்தாளுவாய் சோம நாதனே போற்றி

இமயமா மலைவாளும் ஈசனே போற்றி
ஈருலகும் மன்றாடும் நாதனே போற்றி
சமயமாய் வந்தாளும் இறைவனே போற்றி
தஞ்சமாய் வாழ்விக்கும் அன்பனே போற்றி

அட்டமா திக்கும் நிறைந்தவா போற்றி
ஐந்தீஸ்வரங்களைக் கொண்டவா போற்றி
மட்டுமா நிலமாளும் மன்னவா போற்றி
வந்திங்கு தான்தோன்றி ஆனவா போற்றி

கொக்கொட்டிச்சோலையின் தெய்வமே போற்றி
குவலயம் காத்திடுங் கடவுளே போற்றி
திக்கெட்டும் ஏற்றிடும் இறைவனே போற்றி
தேரோடும் ஆனந்த வள்ளலே போற்றி

சங்கரா நேசம் மிகுந்திடாய் போற்றி
சஞ்சலம் யாவுங் களைந்திடாய் போற்றி
எங்கணும் இன்பமே தந்திடாய் போற்றி
என்றென்று மெங்களைக் காத்திடாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தாவில் மைந்தரை வைத்தாயே போற்றி
தாங்கியெம்மை ஆள வைத்தாயே போற்றி
வேந்தாநீ மேன்மைகள் தந்தாயே போற்றி
வேதத்தின் உண்மையை விண்டாயே போற்றி

தேரோடும் மன்னவா ஓடிவா போற்றி
சிக்கலைச் சீக்கிரம் தீர்க்கவா போற்றி
போராடும் வினைகளைப் போக்கவா போற்றி
பொல்லாத பாவங்கள் செல்லவா போற்றி

ஆவணியிலே தேரில் ஓடுவாய் போற்றி
ஆனந்தமாய் மக்கள் கூடுவார் போற்றி
மாவணியிலே வடம் நாடுவார் போற்றி
மன்றாடி நின்றிழுத் தோடுவார் போற்றி

முக்கனிகள் மலியுமூர் வந்தாயே போற்றி
முப்போக வயல்களைத் தந்தாயே போற்றி
கொக்கினம் படிசோலை கொண்டாயே போற்றி
கோலவளம் எங்கணும் கண்டாயே போற்றி

பஞ்சமிலை என்றநிலை ஈட்டுவாய் போற்றி
பாங்கான நெல்வளம் தோற்றுவாய் போற்றி
நெஞ்சமதில் நல்லமைதி ஊட்டுவாய் போற்றி
நிறைவான அருளையே காட்டுவாய் போற்றி

வாவிசூழ் வட்டாரம் வந்தாயே போற்றி
மாதுமைத் தாயுடன் நின்றாயே போற்றி
ஓவியக் கோபுரம் கொண்டாயே போற்றி
உன்கோயில் ஓங்கிடக் கண்டாயே போற்றி

பொங்குமருள் எங்கும் புரிந்தாயே போற்றி
பூரிக்கும் இன்பங் கொடுத்தாயே போற்றி
தங்குமுயிர் யாவும் படைத்தாயே போற்றி
தமிழோடு சைவம் வளர்த்தாயே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதீஸ்வரத் தலம் மேவினாய் போற்றி
கீர்த்திமா தோட்டத்தை நாடினாய் போற்றி
சோதீஸ்வரா சோம சுந்தரா போற்றி
தூயபா லாவியின் தோன்றலே போற்றி

கோணேஸ்வரப் பதி கொண்டாயே போற்றி
குவலயத் துறையில் அமர்ந்தாயே போற்றி
காணேஸ்வரங்களில் நின்றாயே போற்றி
காலங்கள் தோறும் சிறந்தாயே போற்றி

முன்னீஸ்வரம் புகழ் மன்னவா போற்றி
முத்தான தீர்த்தங் குளிப்பவா போற்றி
தென்னாடு தன்னையே உடையவா போற்றி
தேசத்தில் எங்கும் திகழ்ந்தவா போற்றி

நகுலேஸ்வரம் தனில் வாழ்கிறாய் போற்றி
நல்லதேவாந் துறை ஆள்கிறாய் போற்றி
புகழான யாழருந் தெய்வமே போற்றி
பொங்குமா மண்முனைக் கடவுளே போற்றி

தான்தோன்றி ஈஸ்வரம் தோற்றினாய் போற்றி
தந்துபே ரானந்தம் ஈட்டினாய் போற்றி
மான்தோன்றி விளையாடும் சோலையாய் போற்றி
மண்முனைத் தேசத்து மாண்பினாய் போற்றி

இன்பத் தமிழ்மதுரை இறைவனே போற்றி
இராமேஸ்வரத்தின் மகேசனே போற்றி
அன்புத்தலம் காசி அப்பனே போற்றி
ஆனந்த மாதில்லை நாதனே போற்றி

திருவானைக் காவிலே திகழுவாய் போற்றி
சீர்காழிப் பதியிலே தோன்றுவாய் போற்றி
திருவாவடு துறைத் தெய்வமே போற்றி
திருப்புன்கூர் ஆலய வள்ளலே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோக சொர்க்கச் சிதம்பரா போற்றி
போற்றுவார் தென்காசி நாயகா போற்றி
மாலோக விண்ணுக்கு மன்னவா போற்றி
மன்றாடும் உலகைப் படைத்தவா போற்றி

திருவெண்ணெய் நல்லூரில் உள்ளவா போற்றி
தெய்வமே எங்கள் மகேஸ்வரா போற்றி
உருவான தான்தோன்றி ஈஸ்வரா போற்றி
உதயமா மண்ணாள வந்தவா போற்றி

காளைபுல் உண்ணவே ஊட்டினாய் போற்றி
காணமேல் வெள்ளையர் காட்டினாய் போற்றி
வேளையில் ஆணவம் ஓட்டினாய் போற்றி
மேவுசைவம் நிலை நாட்டினாய் போற்றி

கூடிவரும் தேசமே சங்கரா போற்றி
கொக்கொட்டிச்சோலையின் சுந்தரா போற்றி
கோடிமனம் ஈர்க்குமுன் கோலமே போற்றி
கொண்டாடி மகிழுமே ஞாலமே போற்றி

காவடிகள் ஆடிவரும் ஈசனே போற்றி
கண்டுதொழ நாடிவரும் கடவுளே போற்றி
சேவடிகள் தேடிவரும் ஐயனே போற்றி
தேரோட்டங் காணவரும் தெய்வமே போற்றி

துன்பங்கள் யாவுமே மாற்றுவாய் போற்றி
தொல்லைகள் சூழாமற் தேற்றுவாய் போற்றி
இன்பங்கள் காணவே ஈட்டுவாய் போற்றி
இங்குநீ விண்ணையே காட்டுவாய் போற்றி

வாழ்கவே நின்னருள் வாழ்கவே போற்றி
வாழ்கவே நின்புகழ் வாழ்கவே போற்றி
வாழ்கவே நின்கோயில் வாழ்கவே போற்றி
வாழ்கவே நின் நாமம் வாழ்கவே போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் மருதடி விநாயகர்
## சித்திரைச் சித்திரத் தேரோட்டம்

பல்லவி

மானிப்பாயில் மருதடியில்
வாரணேஷன் சன்னிதியில்
தேனிப்பாகுப் பொங்கலிட்டு
மன்றாடுவோம் – அங்கே
சித்திரைத்தேர் ஓட்டத்திலே
கொண்டாடுவோம்...! மானி

சரணங்கள்

ஞானப் பிள்ளையார் –நம்மை
ஆளும் பிள்ளையார்
நம்பி வாழலாம் –இன்பம்
நாடி வாழலாம்
வானத்தோர்களும் –தினம்
வாழ்த்தும் பிள்ளையார்
வந்தனை செய்வார் –நெஞ்சில்
வாழும் பிள்ளையார்! மானி

தில்லை நாயகன் –பிள்ளை
சித்தி ஆண்டவன்
சித்திரப்பொன் தேர் –ஓடும்
தீமையும் ஓடும்
தொல்லைகள் ஓடும் –கொண்ட
துன்பங்கள் ஓடும்
துட்ட வஞ்சகம் –மாயை
விட்டகன் றோடும் மானி

புத்துடை ஆரம் –அழகு
பூண்டிடும் நாளாம்
பூரண யோகம் –என்றே
பூரிக்கும் நாளாம்
புத்தமிழ் ஆண்டின் –மேன்மை
பொங்கிடும் நாளாம்
போற்றும் ஐங்கரன் –பூசை
ஆற்றிடும் நாளாம் மானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளம் முழங்கும் —சங்கின்
நாதம் முழங்கும்
வேண்டி வணங்கும் —அடியார்
கோசம் முழங்கும்
தாளம் ஒலிக்கும் — மணிகள்
தாமும் ஒலிக்கும்
சங்கீத கானம் —பஜனை
சார்ந்து ஒலிக்கும் மானி

காவடி ஆட்டம் —வீதி
தோறு மிருக்கும்
காட்சி மாந்தரின் —கூட்டம்
கண்டு களிக்கும்
மாவடி வேலன் —நாடும்
வாரண தேவன்
மங்கள நாமம் —கோணம்
எங்கும் ஒலிக்கும் மானி

வண்ண மோதகம் —பழங்கள்
கொண்டு படைப்போம்
மந்திர கீதம் —இசைத்து
நின்று துதிப்போம்
எண்ணம் யாவுமே —பலிக்கும்
இன்பங் கிடைக்கும்
எங்கள் வாழ்விலே —வரங்கள்
என்றும் நிலைக்கும் மானி

சித்திரை நாளில் —ஓடும்
சித்திரத் தேராம்
செல்வ நாயகன் —பவனி
சென்றிடும் தேராம்
சித்தி கொடுக்கும் —இறைவன்
அற்புதத் தேராம்
தேவரும் அங்கே —மகிழும்
சிங்காரத் தேராம்। மானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிந்தவூர் – ஒலிவில் (மருதநிலப் பகுதி அம்மன்)
# மடத்தடி மீனாட்சி

பல்லவி

மடத்தடி மீனாட்சி –மதுரை
மாநகர் ஆளும் மீனாட்சி மடத்தடி

அநுபல்லவி

இடத்தினை நாடிடுவாய் –நெஞ்சே
ஈஸ்வரி அன்பை நீ பெறுவாய் மடத்தடி

சரணங்கள்

மனங்கவரும் இன்பம் –எங்கும்
மாவயல் சூழும் ஆனந்தம்
தினம்வரும் அடியாரின் –கூட்டம்
திரளுவ தங்கே பேரின்பம் மடத்தடி

ஆலமரச் சோலை –நிழல்
ஆங்கு விளங்கும் அன்னையிடம்
காலமெல்லாந் தாயார் –நம்மை
காத்திடும் அன்பின் நாதிமடம் மடத்தடி

சங்கர நாயகனார் –தேவி
தங்கிய செல்வத் திருமன்றம்
எங்களை மாதுமையாள் –அன்பால்
ஏற்றிடும் அருளின் மாமன்றம் மடத்தடி

மருதநிலப் பண்ணை –தன்னை
மருவி யிருந்தாள் நம் அன்னை
கருதி வணங்கிடுவார் –தம்மைக்
காத்தருள் செய்யும் பேரன்னை மடத்தடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் புரிந்திடுவோம் –என்றும்
பூசைகள் செய்தே கும்பிடுவோம்
பொங்குமருட் தாயின் –புகழைப்
போற்றி மகிழ்ந்தே சாற்றிடுவோம் மடத்தடி

படமெடுத்தே ஆடும் –நாகம்
பால்பழ முண்டே கொண்டாடும்
வீடமது நாடாமல் –அங்கே
வீதியில் நம்மை வந்தாளும் மடத்தடி

தென்னைமரத் தோப்பாம் –வண்ணத்
தேவியின் கோயில் வீதியிலே
மன்னிடும் ஆனந்தமாம் –பூக்கள்
வாசம் மணக்கும் சோலையிலே மடத்தடி

முக்கனி மரங்களிலே –நாளும்
முற்றிய வாசம் பழங்களிலே
எக்கனி யானாலும் –தேனாய்
இனிக்கும் தாயின் இடந்தனிலே மடத்தடி

விளையும் போகமெலாம் –தாயின்
மேன்மைச் செல்வம் திருயோகம்
வளையும் நீர் வளமோ –செந்நெல்
வயலை வாழ்த்தும் மாயோகம் மடத்தடி

மகமதியர் தாமும் –தாயின்
மாண்பைச் சொல்லி வாழ்த்திடுவார்
இகமதிலே தெய்வம் –ஒன்றாம்
என்றே வேதம் சாற்றிடுவார் மடத்தடி

ஏர்முனைத் தொழிலாளர் –பேதம்
ஏதும் இதயங் கொள்ளாமல்
கார்மழை பெய்திடவே –தாயின்
கருணையை நாடும் தலமீதாம் மடத்தடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி

தில்லையூர் இறைவன் சிவநாதன்
திருவேல் அழகன் திருக்குமரன்
நல்லையூர் இறைவன் செல்வநாதன்
நம்பினார் துணைவன் குருநாதன் தில்லை

யாழரும் புகழாம் மானிலத்தில்
நாவலர் போற்றிய நல்லிடத்தில்
சூழரும் பதியாம் ஆலயத்தில்
சுந்தரன் அமர்ந்தார் தேரகத்தில் தில்லை

சித்திரம் மலரும் தேரோடும்
சிங்கார முருகன் பவனிவரும்
முத்தொளி வடிவேல் நின்றாடும்
முன்னாலே காவடி கொண்டாடும் தில்லை

ஆயிர மாயிரம் அடியார்கள்
அஞ்சலி செய்வதில் ஆனந்தம்
பாயிரம் பாடிடும் பதியானைப்
பணிவது நமக்கோ பேரின்பம் தில்லை

வள்ளிதெய் வானையின் மணவாளன்
வாழ்ந்திடுங் கோட்டம் வாரீரோ
புள்ளியம் மயிலில் வேலவனார்
பூரித்து வருவார் காணீரோ। தில்லை

ஆவணி தோறும் அலங்காரம்
ஆங்குறும் ஆனந்தச் சிங்காரம்
பாவணிப் பாவலர் பண்பாடும்
பரவசம் முருகையன் திருக்கோலம் தில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபோரதீவு பத்திரகாளி அம்மன்

# ஆலயச் சூழலும் – அருட்பாடலும்

உதய மானிலத்தில் மட்டு மாநகரிலிருந்து தெற்கே சுமார் பதினெட்டு மைல் தூரம்.

பட்டிருப்பு வட்டாரத்திற் களுவாஞ்சிகுடிச் சந்தியலிருந்து சுமார் மூன்று மைல் தூரம். பட்டிருப்புப் பாலத்தைக் கடந்தால் இரண்டு மைல் தூரம்.

மூன்று திக்கில் வாவியும், நான்குதிக்கில் வயலும் சூழ்ந்திருக்கும் இரம்மியமான சூழலில்.

திருப்பழுகாமத்தின் தெற்குப்பாங்கில் ஒருமைல் தூரம். மேற்கில் முனைத்தீவு. தென்மேற்கில் கோயிற்போரதீவு.

ஆமாம்......! திருவளம் நிலைத்து விளங்கும் பெரியபோரதீவுக் கிராமத்தின் இரம்மியமான இயற்கை அமைப்பைத்தான் இதுவரை அறிந்துகொண்டீர்கள்!

பெரியபோரதீவின் வடக்கு எல்லையில் வளமான செந்நெல் வயல்சூழும் திருப்பதியிலேயே அகிலாண்ட நாயகி, ஆதிபரா சக்தி, காளித்தாயார் அழகான சித்திரக் கோபுரங்களுடன் சிங்காரக் கோயில்கொண்டு அலங்காரமாக வீற்றிருந்து நம்மை யெல்லாம் ஆண்டு அருள்பாலிக்கும் காவற் தெய்மாக விளங்கு கின்றாள்.

ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்திலேயே காளிஅம்மன் மஞ்சளும், குங்குமமும், சந்தனமும் சங்மித்திலங்கும் மங்கல நீராடிக் களிக் கும் குளித்தற்சடங்கு என்னும் தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

சிங்கவாகனத்தில் மங்களப் பவனிவரும் மாகாளியின் மங்கலக் காட்சி ஓர் கண்கொளாக் காட்சியாகத் தோன்றும் தெய்வீகம் பக்தர்களின் நெஞ்சங்களிற் பக்திப் பரவசத்தை ஊட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் வழிபாட்டில் ஓயாமல் ஈடுபட்டு வாழுகின்ற பக்தர்கள் நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் ஆயிரக்கணக்கிலே குளித்தல் திருநாளைக் கொண்டாடி, அம்மனை மன்றாடிச் செல்லத் திரண்டுவருவார்கள். தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வழிபடுவார்கள்.

நோய்நொடிகள் தீரவேண்டும், தீவினைகள் அகலவேண்டும், வருத்துகின்ற துயரும், வாட்டுகின்ற தொல்லையும் வீட்டுத் தொலையவேண்டும், பாவங்கள் அனைத்தும் பறந்தோடி ஒழிய வேண்டும், அதற்குப் பத்திரகாளி அம்மன் கருணைகாட்ட வேண்டும் என்று நேர்த்திகள் நினைத்து மன்றாடுவார்கள்.

"தாயே! நாம் எண்ணிய எண்ணங்களை நிறைவேற்றினால் உன் காலடியில் எமது அன்புக் காணிக்கைகளை நாம் கொண்டு வந்து சமர்ப்பணம் செய்வோம்" என்று நேர்த்திகள் செய்து கொள்ளுவார்கள்.

அவ்வாறு எண்ணிவழிபட்ட பக்தர்கள் தமது வேண்டுதல்கள் நிறைவேறியதும், தாம் நினைத்தபடி தமது நேர்த்திகளைக் கொண்டுவந்து இந்தக் குளித்தல் உற்சவத் தினத்திலேயே அம்மனுடைய ஆலயத்தில் ஒப்படைப்பார்கள். விசேட பூசை ஆராதனைகளும் நிறைவேற்றுவார்கள்.

வெள்ளி பொன் தங்கம் போன்றவற்றில் நேர்த்திகள் கொண்டு கொடுப்பார்கள் சிலர். அதே வேளையில் ஆடு மாடு கோழி போன்ற உயிரினங்களையே நேர்த்தியாகக் கொண்டு கொடுப் பார்கள் இன்னும் சிலர். நெல்லுடையார் நெல்லும், நிதியுடை யார் நிதியும், சிறந்த பொருளுடையார் பொருளும் கொண்டு கொடுப்பாரும் உளர்.

எவர் எதைக் கொடுத்தாலும் ஏற்றத்தாழ்வு எதுவுமே இல்லாமல் ஏற்றுக்கொண்டு எல்லோரையும் இரட்சிப்பவளே எங்கள் அன்னை காளித்தாயார்.

உற்சவநாளிலே நீர்க்குளித்தாடும் பத்திரகாளித் தாயார் மறு நாட்காலை தீக்குளித்தாடும் தெய்வீகக் காட்சியையும் பக்தர் கள் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பெயரிட்டு அம்மனுடைய குளித்தற் திருவிழாவை நாம் அழைத்தாலும் "அம்மன் குளித்தல்" என்று அன்பாய் அழைப் பதிற்தான் அன்பும் பக்தியும் இன்பமாய்த் தோன்றும் என்று ஆனந்தமாகச் சொல்வதே அம்மனுடைய வட்டாரத்து மக்களுடைய பாரம்பரிய வழக்கமாகும்.

அம்மனுடைய மகோற்சவத்தை ஒட்டிய திருச்சடங்குத் தினங்க ளில் இரவு தோறும் ஆலயவீதியில் உள்ள அலங்கார மேடைக ளில் முத்தமிழ்க் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். நாட்டில் மிகச்சிறந்து விளங்கும் கலைஞர்கள் அழைக்கப்படு வார்கள்.

பணச்செலவையோ பொருட் செலவையோ பொருட்படுத்தாமல் அன்னையின் திருவருட் சிறப்பையும், தெய்வீகப் புகழையும் பாராட்டும் முகமாகவே கலைநிகழ்ச்சிகள் காண்பிக்கப்படும்.

பெரியபோரதீவில் பெருவிழாக் கொண்டாடுவது போன்று ஏறாவூரிலும் காளித்தாயார் ஆண்டுதோறும் ஆனந்தமான திரு விழாக் கொண்டாடுகின்றாள். அம்மனுடையதலம் மட்டுநகர் மானிலத்தில் எட்டுத்திக்கும் இருப்பதை நாம் காணலாம்.

சிலப்பதிகாரக் காதை நிகழ்ந்த காலத்திலே, வாழ்ந்திருந்த மக்கள் அன்றாடம் காட்டிலும் நாட்டிலும் வழிபாடு செய்துவந்த தெய்வங்கள் அனைத்தையும் மிகப் பழங் காலத்திலிருந்தே மட்டக்களப்பு மக்கள் தொடர்ந்து வழிபட்டுவரும் பண்பாட் டையும் பழக்கவழக்கத்தையும் நாம் கண்கூடாகக் காணலாம்!

கண்ணபிரான் வழிபாடு, காளியம்மன் வழிபாடு, காவற் தெய்வ மான காட்டுவயிரவன் வழிபாடு போன்ற வழிபாடுகள் இங்கே பண்ணை வயற் புறங்கள் முதல் பட்டணங்கள் வரை அழியாது பேணப்பட்டு வருவதை நாம் என்றென்றும் காணலாம்!
அத்தோடு சிலம்புக்காதையின் காரணத்தேவியான கற்புக்கரசி யாம் கண்ணகித் தாயாரின் வழிபாடுகளும், திருவிழாக்களும் தொடர்ந்து நிகழ்ந்துவருகின்ற ஆலயங்கள் எல்லாக் கோணங்க ளிலும் பண்டுதொட்டே சிறப்போடு விளங்குவதையும் நாம் இங்கே காணலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரகாளி அம்மன் அருட்பாடல்

**பல்லவி**

பத்திரகாளி பெரிய போரதீவிலே – அவள்
பாங்குற வந்தாள் கிழக்கு மானிலத்திலே பத்தி

**அநுபல்லவி**

சித்திரக்கோலம் மலரும் ஆலயத்திலே – வந்து
தேவியிருந்தாள் சிங்க வாகனத்திலே பத்தி

**சரணங்கள்**

ஐப்பசிமாதம் குளித்தல் ஆடிக்களிப்பாள் – மஞ்சள்
ஆனந்தயோகம் அழகாய் நாடிக்களிப்பாள்
எப்பொழுதும் பொன் அணிகள் சூடிக் களிப்பாள் – எங்கள்
ஈசன் நாயகி தமிழே பாடிக்களிப்பாள் பத்தி

மட்டுநகர் மாநிலத்தில் மாண்பு நிறைந்தாள் – அன்னை
மக்கள்நெஞ்சில் அன்புகொண்டு வந்து புகுந்தாள்
எட்டிரண்டு கோணத்திலும் எங்கும் நிறைந்தாள் – நாட்டில்
ஈஸ்வரியாள் ஊர்கள்தோறும் ஆட்சிபுரிந்தாள் பத்தி

காளியம்மனாம் நமக்குக் காவல் அம்மனாம் – இந்தக்
காசினியெங்கும் மலரும் காட்சி அம்மனாம்
யாளிமீதிலே விளங்கும் வீரசக்தியாம் – தேடி
நாடிவரும் மாந்தருக்கு மூலசக்தியாம் பக்தி

அக்கினிவேகம் அடைவாள் ஆணவங் கொள்வாள் – பொங்கும்
அட்டகாசமாய்க் கொடுமை யாவும் அழிப்பாள்
சிக்கலறுப்பாள் தீண்டும் தீமை ஒழிப்பாள் – காளித்
தேவி நம்மைக் கைவிடாமற் தாவி அணைப்பாள் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழுகாமம் மாவேற்கடவைப் பெருமான் 108 போற்றிகளும் துதிப் பாடல்களும்.

மாவேற்குடாப் பெருமானின் பேராலயம் உருவாகும் முன்னர் மிகப்பழங் காலத்திலிருந்தே பெருமானுடைய வழிபாடு அடர்ந்து வளர்ந்த ஒரு சோலைக் காட்டிலேயே தொடர்ந்து நடைபெற்று வந்தது.

ஆங்கே ஒரு கறையாக்கை விருட்ஷம் பரந்து விரிந்த கிளைக ளைப் பரப்பி நின்றது.

கறையாக்கை மரமென்றால் கருங்காலிமரத்தின் உறுதியான உடற் தன்மையை உடைய மரம் என்பதாகும். இந்த மரத்தின் பெயர் மருவிக் கொச்சைவழிப்பட்டு இப்பொழுது கரையாக்கை எனப் பேசப்படுவதை நாம் காணலாம்.

"கறை" என்றால் – கருங்காலி
"யாக்கை" என்றால் மேனி அல்லது உடல்.

கறையாக்கை மரத்தின் அடியிலோர் நாகதம்பிரான் புற்றும் இருந்தது. புற்றின் பக்கத்திலே வில்வமரத்தடியில் ஒரு வயிரவர் பீடமும் இருந்தது. பிள்ளையாருக்குப் பொங்கலென்றால் நாக தம்பிரானுக்கும் பொங்கலாகும். வயிரவருக்கும் ஆங்கே இளனீர் உறட்டி வாழைப்பழம் கரும்பு கனிவகை அனைத்தும் படைக்கப் படும்.
இந்த விதிப்படியே பூசைகள் தொடர்ந்தன.

யானை கரடி புலி காட்டெருமை போன்ற பயங்கரமான வன விலங்குகளும், கொடிய விடநாகங்களும், மலைப்பாம்புகளும், புடையன் விரியன் போன்ற பொல்லாத சர்ப்பங்களும் சஞ்சரிக் கும் காட்டின் மத்தியிலேயே பிள்ளையார் பெருமான் பிரியமாய் அமர்ந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சூழலில் வேளாண்மைத் தொழில் புரியும் விவசாயிக ளுக்கும், சேனைத் தொழில் செய்யும் மக்களுக்கும் நமது பிள்ளையாரின் வழிபாடு மிகவும் இன்றியமையாத ஒரு மன்றாட் டமாகவே இருந்துவந்தது. நம்பி வழிபடும் கள்ளங்கபடமற்ற பக்தருக்குப் பிள்ளையார் பெருமான் குறையாத செல்வங்களை யும், நிறைவான வரப்பேறுகளையும், சுகமான வாழ்வையும் கொடுத்து அவர்களை அன்றாடம் காத்துவந்தார்.
நீண்ட காலமாகக் கருங்கல்லாலேயே எம்பெருமானுடைய அஞ்சலிபீடம் அமைக்கப்பட்டிருந்தது.

பின்னர் பெருமானுடைய வழிபாட்டுச் சூழலில் இருந்த காடுகள் அழித்து வெளியாக்கப்பட்டன. பெருமானுக்கு ஆங்கே ஒரு சிற்றாலயம் உருவாக்கப்பட்டது. இந்தச் சிற்றாலய வழிபாடு பல வருடங்களாகத் தொடர்ந்தது.

அதன் பின்னர் ஏறக்குறையக் கால்நூற்றாண்டு காலத்துக்கு முன்னனர் வேலன் முருகவேள், சிவசக்தி, காளியம்மன், நவக்கிரகங்கள் ஆகிய எல்லாத் தெய்வங்களையும் மன்றாடும் வழிபாடுகள் ஆங்கே தொடங்கின.

அதற்குப் பின்னர் பெருமானுடைய ஆலயம் பேராலயமாகக் கட்டியெழுப்பப்பட்டது. 1986ம் ஆண்டு, ஆடிமாதம், பதிநான்காம் திகதி, அத்த நட்சத்திரத்திற் பெருமானுடைய ஆலயத்திற் குடி யமர்ந்த எல்லாத் தெய்வங்களுக்கும் மாகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

பேராலயமாக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டபொழுது ஆங்கே நின்ற மூலவிருட்ஷமான கறையாக்கை மரத்தை வெட்டிவிட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது. மரம் வெட்டி அழிக் கப்பட்டால் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றுச் சாசனமும் அழிந்து ஒழிந்துவிடுமே என்று நான் கருதினேன். அதனால் அந்த மரத் தின் அடிப்பகுதியைப் பயன்படுத்தி மூலஸ்தானத்தில் அமைந் துள்ள தெங்வங்களின் உருவங்களை நல்லதொரு சிற்பியின்மூலம் அதிலே செதுக்கி ஆலயத்தில் வைத்தேன். தலவரலாற்றுச் சாசனங்கள் பாதுகாக்கப்பட்டதால் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவான ஆலய வரலாறுகளையும் நாம் அறிகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுடைய ஆலயத்தில் ஆண்டுதோறும் மகோற்சவமும், தினப்பூசை ஆராதனைகளும், விரத அனுட்டானப் பூசைகளும் வழுவாது சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பெருமானுடைய திருவருளும், திகழும் புகழும் இன்று நாட்டில் எங்கணுமே பரந்து விளங்குகின்றது. உலகின் பல பாகங்களிலும் எட்டிப் பரந்து இனிதே விளங்குகின்றது.
எம் பெருமானுடைய அன்புத் திருவடிகளை நம்பினார் என்றுமே கெடுவதில்லை.

ஆதிகாலத்திலிருந்தே மாவேற்குடாப் பிள்ளயார் கோயில் என்ற பெயரோடுதான் இந்தத் தலம் மிகநீண்ட காலமாக விளங்கி வந்தமை வரலாற்று உண்மையாகும்.

பெருமானுக்குச் சிற்றாலயம் உருவாக்கப்பட்ட காலத்தில் ஆன் மிகத் தொண்டர்கள் வரையிறுத்துள்ள ஓர் ஆராய்ச்சியின் பயனால் ஆலயத்தின் நாமத்தில் ஒரு பொருத்தமான மாற்றம் ஏற்பட்டது.

(மா + வேல் + குடா) என்ற பதங்கள் மருவிய காரணத்தினாலும் மாவேற்குடா என்று பெயர் வந்திருக்கலாம்...। என்றும்,

ஆகவே முருகப் பெருமானுடைய திருநாமமும் அங்கே மிகப்பழங் காலத்தில் நிலைபெற்று விளங்கியிருக்கலாம்...। என்றும் ஆராய்ச்சி அடியார்கள் நிர்ணயம் செய்தனர்.

இந்தக்கருத்து ஓர் இனிய கருத்தாக எல்லோராலும் ஏகமன தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்தோடு மாவேற்குடா என்பதி லும் பார்க்க மாவேற்கடவை என்ற பெயரே மிகப்பொருந்தும் என்ற திருத்தமும் பல சான்றுகளை முன்னிட்டு நன்றாக வரவே ற்கப்பட்டது.

மூத்த பெருமான் என்றால் என்ன, இளைய பெருமான் என்றால் என்ன, இரு தெய்வங்களும் நம்மை என்றென்றும் ஆண்டுவரும் இனிய தெய்வங்கள்தாமே என்ற புனிதமான நோக்குடன் அடியார் கள் வழிபாடு செய்துவரும் மகிமையை நாங்கள் இப்பொழுது அங்கே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவேற்குடா - மாவேற்கடவை*
ஆனதாலோ – அன்றி
*மாவேற்குடாப் பெருமான்*
*மாவேற்கடவைப் பெருமான்*
ஆனதாலோ – அன்றி,

மூத்த பெருமானாகிய பிள்ளையார் பெருமானையும்
இளைய பெருமானாகிய முருகப் பெருமானையும்
சிலேடைப் பொருள் நாமத்தால் (இரு நாமங்களும் புலப்படும் வகையில்)
*மாவேற்குடாப் பெருமான்*
என்று அழைப்பதாலோ

மன்றாடும் பக்தர்தம் பக்தியிலும் அன்றி அவர்கள் கொண்டுள்ள திடமான நம்பிக்கையிலும் எந்த விதமான மாற்றமோ, தாக்கமோ ஏற்பட்டது கிடையாது.

அடியார்கள் அன்றாடம் தமது மன்றாட்டங்கள் மூலம் பெற்றுப் பேரின்பம் அடைகின்ற வரப்பேறுகளிலும் எந்தவிதமான தடையுமே கிடையாது.

மூத்த பெருமானையும் இளைய பெருமானையும் ஒரேவேளையில் எண்ணி அழைத்து மன்றாடும் அபூர்வமான பாக்கியம் இந்தத் தலம் ஒன்றிலேயே நாம் பெறுகின்றோம்! புனிதப் பெருமையும், புகழ் வாய்ந்த திவ்விய சரித்திரப் பெருமையும் அடைகின்றோம்!

மாவேற்குடாப் பெருமான் என்றதும் இப்பொழுது நமது மனக்கண் திரையில் கணேஷப் பெருமானும், கந்தப் பெருமானும் ஒன்றாய் மலரும் ஒப்பற்ற பேரின்பக் காட்சி தோன்றுவதை நாம் உணரமுடிகின்றது!

இது மானிடரான நமது செயல் அன்று. தெய்வங்கள் இரண்டும் தாமே கொண்ட திருவருள் நாட்டமே ஆகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வயதிலேயே இந்தத் தலத்தின் புனிதமான மண்ணிலே ஓடி விளையாடிய பாலப் பருவத்து ஆனந்தம் இன்றும் எனது நெஞ்சிலே பசுமரத்தாணியாய்ப் பதிந்திருந்து என் மனத்திரையில் மங்களக் காட்சியாக மலர்ந்துகொண்டிருப்பதுவும் என் ஆருயிர்ப் பெற்றாரின் ஊடாக அந்த மாவேற்குடாப் பெருமானார் எனக்குக் கொடுத்தருளிய அழியாத வரப்பேறே அன்றி வேறு என்னவென்று வருணிப்பேன்!

திருப்பழுகாமம் மாவேற்கடவைப் பெருமான் நம் எல்லோரையும் என்றென்றும் காத்து இரட்சிப்பார் என்பதில் ஐயமே இல்லை.

## பாரில் ஓர் பாக்கியம்.....!

மாவேற்கடவை என்றால் என்னே!
மாவேற்குடாவே என்றால் என்னே!
காவற் கருணை யோகப் பதியாய்க்
காட்சி கொடுக்கும் தலமன்றோ!

மூத்தபெருமான் என்றால் என்னே!
இளையபெருமான் என்றால் என்னே!
காத்தே நிற்கும் தெய்வமிரண்டும்
கருதும் உணர்வில் வருமன்றோ!

பாரில் இதுவோர் பாக்கியமன்றோ!
பழுகாமத்தின் திருமயமன்றோ!
நேரில் வந்தவர் அடியவர் காணும்
நித்திய திவ்விய நிலையன்றோ!

அண்ணன் தம்பி ஆட்சியிலிங்கே
ஆனந்தம் அடைவோம் நாமன்றோ!
எண்ணும் வரமே பெறுவோமன்றோ!
இனிதாய் என்றும் தானன்றோ!

மாவயல் சூழும் மாவேற்கடவை
வாரீர்! வாரீர்! வணங்கிட வாரீர்!
கோவிலை நாடும் மாந்தர்கள் கூடும்
கோலம் காணீர்! கும்பிட வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவேற்கடவைப் பெருமான் 108 போற்றிகள்

## திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் பெருமானாரே பேரின்ப மயமே போற்றி
வள்ளலே மூலப் பொருளே வாழ்விக்கும் அருளே போற்றி
கொள்ளைகொண் டுள்ளந்தன்னில் ஒளிவீடுஞ் சுடரே போற்றி
கும்பிடும் அடியார் என்றும் நம்பிடுந் துணையே போற்றி

திருப் பழுகாமம் தன்னிற் திருத்தலங் கொண்டாய் போற்றி
தேசத்து மக்கள் நாடும் திருவிழாக் கண்டாய் போற்றி
விருப்புடன் தம்பி வேலன் தன்னையுங் கொண்டாய் போற்றி
வேழமா முகனே எம்மை ஆளவே வந்தாய் போற்றி

மாவேற்கடவை தன்னில் வாழ்ந்திடும் தேவா போற்றி
வல்லதோர் நெஞ்சத்துறுதி வந்துநீ தாதா போற்றி
காவேற் குமாரன் மருவுங் கடவுளே வாவா போற்றி
காத்திடும் இறைவா காவல் வந்துநீ தாதா போற்றி

கறையாக்கை நிழலில் அன்று காட்சிதந் தாயே போற்றி
காவலாய் எங்களுக்கு நீயமர்ந் தாயே போற்றி
குறையார்க்கும் இல்லா வண்ணங் கோளறுப் பாயே போற்றி
கும்பிட்டு நாங்கள் வாழத் தானிருந் தாயே போற்றி

விலங்கினம் வாழுங் காட்டில் வீற்றிருந்தாயே போற்றி
விவசாய மக்கள் தம்மைக் காத்திருந்தாயே போற்றி
தலம்பெருங் கோட்டமாகும் தன்மைகண்டாயே போற்றி
தரிசிக்கும் அடியார் மீது பரிவுகொண்டாயே போற்றி

கந்தனுன் தம்பியாரும் காட்சிதந்தாரே போற்றி
கதிரைவேல் முருகன் இங்கே மகிழவந்தாரே போற்றி
சுந்தரன் தங்கவேலன் தோற்றிநின்றாரே போற்றி
தோகையில் ஏறிப்பவனி தொடருகின்றாரே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவன் தானுமிங்கே வந்தமர்ந்தாரே போற்றி
வாராது மாயம் மருமம் தீரவந்தாரே போற்றி
உயிரதை வாட்டும் அச்சம் ஒழியவந்தாரே போற்றி
ஊரெங்கும் உலவுங் காவல் புரியவந்தாரே போற்றி

படநாக தம்பிரானும் பதியில்வந்தாரே போற்றி
பாதகம் நேரா வண்ணம் குடியமர்ந்தாரே போற்றி
விடமேறி மீறா தெம்மை மீட்கவந் தாரே போற்றி
வெம்பாம் பினத்தின் ஆலம் தீர்க்கவந்தாரே போற்றி

சிவலிங்க நாதன் இன்று சேர்ந்திருந்தாரே போற்றி
சிங்கார லோகேஸ்வரியும் சார்ந்திருந்தாளே போற்றி
அவலங்கள் தோன்றாதெம்மை ஆண்டிருந்தாரே போற்றி
ஆனந்த வள்ளலாரே ஆனைமா முகனே போற்றி

துர்க்கைமா காளி அன்னை கோயில்கொண்டாளே போற்றி
சுந்தரத் தேவி சோகம் வந்தொழித்தாளே போற்றி
நிர்க்கதி ஆனபோது சக்திதந்தாளே போற்றி
நித்தமும் பாவம் பழிகள் வெட்டிநின்றாளே போற்றி

காளியெந் தாயாள் பாதம் நாமடைந்தோமே போற்றி
கங்குலாய்த் தோனும் பகையைச் சங்கரிப்பாளே போற்றி
நாளிகள் தோறும் தேவி ஆளுகின்றாளே போற்றி
நாடிடுங் காலக்கோளும் தானறுப்பாளே போற்றி

தாமரை முதலாம் பூக்கள் தாம்சொரிந்தோமே போற்றி
தங்கவேலனையும் இங்கே தரிசித்தோம் ஐயா போற்றி
சாமரை வீசித் தீபம் நாமேற்றினோமே போற்றி
சங்கரன் உமையாள் தமையும் தெண்டனிட்டோமே போற்றி

பொங்குமாப் போகம் இங்கே பொலியுமே தேவா போற்றி
பூமியில் ஆண்டுதோறும் விளையுமே தேவா போற்றி
தங்கமாய் நெல்லின் மணிகள் குவியுமே தேவா போற்றி
தாழாமல் ஏரின் யோகம் வளருமே தேவா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழனிகள் எங்கும் பயிர்கள் காணுமே இறைவா போற்றி
காலத்து மழையும் உன்னாற் பொழியுமே இறைவா போற்றி
பழமுதிர் சோலை யாவுங் கனியுமே இறைவா போற்றி
பாங்குறுந் தொழில்கள் யாவும் நீடுமே இறைவா போற்றி

நீர்வளங் குறையா தெங்கும் நிறையுமுன்னாலே போற்றி
நீங்காத பசுமைத் தோற்றம் நிலைக்குமுன்னாலே போற்றி
சீர்வளம் ஓங்கும் வாழ்வு சிறக்குமுன்னாலே போற்றி
தேசத்தில் எங்கும் இன்பம் பெருகுமுன்னாலே போற்றி

நோயென்று நாடிவந்தால் நோய்தவிர்ப்பாயே போற்றி
நொந்துநாம் வாடிவந்தால் ஆதரிப்பாயே போற்றி
தாய்தந்தை போலே எம்மைத் தானணைப்பாயே போற்றி
தஞ்சமென் றோடிவந்தால் அன்புகொள்வாயே போற்றி

கதியற்ற பேர்கள் நாடுங் கடவுளே காப்பாய் போற்றி
கவலைகள் தம்மைப் போக்கும் தெய்வமே காப்பாய் போற்றி
விதியெனுந் துயரை மாற்றும் இறைவனே காப்பாய் போற்றி
மீறிடும் வினைகள் தீர்க்கும் காவலா காப்பாய் போற்றி

தயவுநாம் கேட்டுவந்தாற் தருணத்தில் ஆள்வாய் போற்றி
தாங்கொணாப் பிணிகள் யாவும் நீங்கவே ஆள்வாய் போற்றி
பயமிலாத் துணிவுஞ் சுகமும் பாலித்து ஆள்வாய் போற்றி
பாசத்தினாலே எம்மை நேசித்து ஆள்வாய் போற்றி

வஞ்சகஞ் சூது மாயம் வாட்டா தொழிப்பாய் போற்றி
வளரும் பொறாமை வீணே தொடரா தொழிப்பாய் போற்றி
பஞ்சமும் பசியும் வாழ்வில் நேரா தொழிப்பாய் போற்றி
பாவங்கள் சூழும் நேரம் பரிவோ டொழிப்பாய் போற்றி

பொங்கலிட் டுன்னைவந்து போற்றுகின்றோமே போற்றி
பூசைகள் மூன்று நேரம் ஆற்றுகின்றோமே போற்றி
குங்குமஞ் சந்தனத்தைப் பூசுகின்றோமே போற்றி
கொண்டுவெண் நீறுமஞ்சள் பூணுகின் றோமே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகள் செல்வரென்னும் பேதமே இல்லைப் போற்றி
எண்ணாத நாளோ உன்னை என்றுமே இல்லைப் போற்றி
கோழைகள் போலே வாழும் சோகமே இல்லைப் போற்றி
குஞ்சரா நின்றன் அருளோ குறைவதே இல்லைப் போற்றி

ஆனைமுகன் என்றழைத்தால் ஆறுமுகன் அருள்வான் போற்றி
ஆறுமுகன் என்றழைத்தால் அப்பா நீ அருள்வாய் போற்றி
வானவரும் ஈதைக் கண்டு வாழ்த்திமகிழ்வாரே போற்றி
மானிலந் தன்னில் ஈதோர் மகிமையாம் இங்கே போற்றி

நாமெங்கும் அறியோமீதோ நலமான யோகம் போற்றி
நாடிடும் அண்ணன் தம்பி நாமத்து யோகம் போற்றி
நாமங்கள் ஏதெறென்றாலும் நாட்டமொன்றாமே போற்றி
நாட்டிலே மாந்தர் போற்றும் பேரின்பமாமே போற்றி

ஐங்கரத்தானே தேவா! ஆளம் நின் தாள்கள் போற்றி
ஆறுமா முகனும் வாழும் ஆலயங்கொண்டாய் போற்றி
பைந்தமிழ்க் கவிஞர்பாடிப் பாராட்டும் இறைவா போற்றி
பழுகாமத்தூரின் நிதியே பாராளும் பதியே போற்றி

ஆண்டாண்டு தோறும் தீர்த்தம் ஆடிக் களிப்பாய் போற்றி
அழகான திருவிழாக்கள் நிகழக் களிப்பாய் போற்றி
வேண்டுவார் மகிழுங்காட்சி கண்டே களிப்பாய் போற்றி
விக்கினேஸ்வரனே யோகம் தந்தே களிப்பாய் போற்றி

தேசமே கூடுங் காட்சி தோன்றுமே தேவா போற்றி
திக்கெலாம் வாழும் மாந்தர் கூடுவார் தேவா போற்றி
நேசமே கொள்ளும் அடியார் பாடுவார் இறைவா போற்றி
நின்றுபே ரானந்தத்தால் ஆடுவார் ஐயா! போற்றி

ஆனைமுகன் ஆறுமுகன் ஆதிசிவன் வாழ்க போற்றி
அன்னைபராசக்தி கோள்கள் அத்தனையும் வாழ்க போற்றி
சேனைகள் நடுங்கும் நாகம் காளித்தாய் வாழ்க போற்றி
திருவயிர நாதன் வாழ்க தெய்வங்கள் வாழ்க போற்றி

– திருச்சிற்றம்பலம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவேற்கடவைப் பெருமான் துதிப் பாடல்

1986ம் ஆண்டு, ஆடிமாதம் 14ம் திகதி, அத்த நட்சத்திரத்தில், பெருமானுடைய ஆலயத்தின் கும்பாபிஷேக வைபவம் நிகழ்ந்தேறியபொழுது நான் வெளீடு செய்த பாடல் இது!

பல்லவி

வெண்ணிறக் கறையாக்கை, விருட்ஷநிழல் நாடி
வீற்றிருந் தாளவந்தாய், விக்கினப் பெருமானே! வெண்

அநுபல்லவி

பண்ணுறப் பாடவந்தேன் பாட்டினில் உன்பெருமை
பாலித்து நீயெனக்கே பைந்தமிழ் அருள்வாயே! வெண்

சரணங்கள்

உன்திரு வரலாறு உன்னத மானதையா
ஓதிடும் அடியவர்க்கே உள்ளமே உருகுமையா
முன்திருப் பழுகாமம் முல்லையிலே வணங்கி
முயன்ற தவத்தாலே தொடர்ந்த சரிதமையா! வெண்

முன்னருங் கானகத்தில் மூடிய சோலையிலே
மூஷிக வாகனனே மோகன வாரணனே
என்னருங் குலம் வணங்கும் ஈசனே நீயமர்ந்தாய்
ஏர்வளம் சூழுமிடம் என்றுள்ளமே மகிழ்ந்தாய்! வெண்

காட்டினில் யானைபுலி கரடி விடப்பாம்பு
காட்டெருமை ஓடும் கேட்டதும் மணிநாதம்
கூட்டினிற் குயில்பாடும் கோலமயில் ஆடும்
கோவிலிலே பூசை ஓசையெழும் நேரம்! வெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானினங் கூத்தாடும் மந்திகள் மரந்தாவும்
மாங்குயில் இசைபாடும் மாடப்புறாக் கூவும்
தேனொலி வண்டூதும் சிட்டினங்கள் பாடும்
தேவரும் மனம்நாடும் திருப்பதி உனதாகும்! வெண்

வீதியிற் பழம்மணக்கும் வெண்ணெய்யின் பால்மணக்கும்
ஆதியி லிருந்திறைவா ஆனந்தத் தேன்மணக்கும்
மாதிருப் பதியிலெங்கும் மங்களப் பூமணக்கும்
ஓதிமந்திரம் பூசும் திருநீறே தான்மணக்கும் வெண்

மாவேற் கடவையிலே வந்துனை நாம் பணிந்தால்
மாறிடும் வினையோடும் வஞ்சகம் பழியோடும்
மாவேற்குமாரனையும் வள்ளி தெய்வானையையும்
வாழ்த்திமன் றாடிநின்றால் மங்களப் பேறடையும்! வெண்

செந்நெல் அரிசிப் பொங்கல் செய்துனக்கே நாளும்
செவ்விள நீர்பயறு தேனுடன் பால் வெண்ணெய்
கன்னலருங் கனிகள் கற்கண்டு வெல்லமெல்லாம்
என்னிறைவா படைத்தே இங்குனைநாம் பணிவோம்! வெண்

சக்திமா காளியம்மன் சங்கரன் சிவலிங்கம்
சண்முகன் வயிரவனார் சர்ப்பம் நவக்கிரகம்
அத்தனை தெய்வங்களும் சித்தமுடன் பணிந்தோம்
ஆண்டவன் நீவிளங்கும் ஆனந்தப் பதியினிலே! வெண்

மாவேற்கடவை தன்னில் மன்னருள் ஆலயத்தில்
மானிலம் ஆளவந்தாய் வாரணப் பெருமானே
பாவேற்க வேண்டுமையா பாடுகின்றேன் ஐயா
பாப்பிழை நீபொறுத்தே பாடல் விநாயகனே! வெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் முருகன்

கிழக்கலங்கையின் தலைச்சிறந்த மிகப் பழங்காலத்து முருகன் தலங்களில் ஒன்றாகத் திகழும் கோவிலே மண்டூர் முருகன் சன்னிதானம்.

முருகப் பெருமானுடைய ஆட்சியின் மாட்சியால் சகலவிதமான செல்வங்களும் பெற்று விளங்கும் ஊரே மண்டூர்க் கிராமம்.

வடக்கிலும் கிழக்கிலும் வாவியாற் சூழப்பட்டு, வளங்கள் அனைத்தையும் ஒருங்கே உடைய வயற்காணிகளாலும், கழனிப் பகுதிகளாலும் இணைக்கப்பட்டுப் போகங்களாற் பொலிவுற்று விளங்கும் புனிதப் பதியே தங்கவடி வேலவன் குடிகொண்டிருக்கும் மண்டூர்க் கிராமம்.

கிழக்கு மானிலத்துக்கு அழியாத புகழீட்டியதால் வானகம் புகுந்தபின்னும் மண்ணகத்தோர் நெஞ்சங்களிற் புகுந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதமேதைகளைத் தோற்றிவித்துப் பைந்தமிழ் இனத்துக்குப் பயனீட்டும் பாக்கியம் தந்தருளிய செந்தமிழ் இறைவன் திருமுருகன் – ஞானபண்டிதன் குடிகொண்டு விளங்கும் திருப்பதியே மண்டூர்க் கிராமம்।

கதிரையில் வாழும் கந்தப்பெருமான் எவ்வாறு மூலஸ்தானத்திற் காட்சிகொடுக்கின்றாரோ, அவ்வாறே மண்டூர்ப் பதியிலும் மூலஸ்தானத்திற் காட்சிகொடுத்து விளங்குவது தெய்வீகச் சரித்தர மாகும்.

அதுமட்டுமல்லாமல் பூசையாராதனைகளும் கதிரையில் நிகழ்வது போலவே இங்கும் நடைபெறுவது பண்டைய நாட்தொட்டே பேணப்பட்டுவரும் பாரம்பரியமாகும்।

மண்டூருக்கு வந்து அங்கே வள்ளி தெய்வயானையுடன் தோணும் திருமுருகனைக் கண்டுதொழும் ஒவ்வொரு பக்தருக்கும் தென் கதிரையில் மன்றாடும் நிம்மதியும் பக்தியுணர்வும் தென்படுவது இன்றியமையாத ஒரு இன்பநிகழ்சியானமை என்னே மகிமை।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரின்பமோ மண்ணில் ஓரின்பமாமோ!

பல்லவி

ஓரின்பமோ – மண்ணில்
ஓரின்பமாமோ! ஓரின்

சரணங்கள்

பண்டூரின் தலந் தோறும்
மன்றாடும் ஆட்டம், நின்றாடும் ஆட்டம்
பாங்கான புகழோடு
பயின்றாடும் ஆட்டம், பணிந்தாடும் ஆட்டம்

கொண்டாடுங் கோலாட்டம்
கொம்புமுறி ஆட்டம், கொலுமோதும் ஆட்டம்
கூத்தழகு மிகநாடும்
குலப்பெருமை ஆட்டம், கும்மி கரகாட்டம்

தெண்டனிடுங் காவடிகள்
சுமந்தாடும் ஆட்டம், தொழுதாடும் ஆட்டம்
திருவிளக்கு மணவிளக்கு
எடுத்தாடும் ஆட்டம், ஏந்தி வரும் ஆட்டம்

மண்டூரில் மயிலேறும்
வடிவேலன் நாளும், வாஞ்சையுடன் நாளும்,
வள்ளியுடன் தெய்வானை
மகிழுமொரு கோலம், வண்ணமுறுங் கோலம்

கண்டுமனங் களிப்பாகும்
ஆனந்தப் போகம், அருளான யோகம்
காணாது நாமிங்கு – காணும் வேறின்பம்

ஓரின்பமோ –மண்ணில்
ஓரின்பமாமோ! ஓரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுமூங்கில் நதிபாயும்
நெல்லாரும் போகம், பண்ணைமா யோகம்
நிலையாகி வளம்பொங்கி
நிறைவாகும் ஊராம், கலைவாழும் ஊராம்

நடுவூரின் தலம்நாடி
நம்பிவரும் அடியார், நாடிவரும் அடியார்
நாடும் அருள் பாலிக்கும்
ஆறுபடை வீரன், அழகுவடி வேலன்

படுமீனம் தனைச்சாடும்
குமரேசன் நாதன், குன்றுமலை வாசன்
பாதத்தில் முறைசொல்லி
யாசிக்கும் யோகம், நாமடையும் யோகம்

முடுகாமல் மூளும்வினை
அணுகாமல் என்றும், தனகாமல் என்றும்
மூடுபனி போலகற்றும்
முருகன் திருமண்டூர்ப் பதிவாழுங் கோலம்

கண்டுமனங் களிப்பாகும்
ஆனந்தப் போகம், அருளான யோகம்
காணாது நாமிங்கு – காணும் வேறின்பம்

ஓரின்பமோ –மண்ணில்
ஓரின்பமாமோ!

ஓரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு மாநகர் – பொன்னம்பலவாணேசர்

பல்லவி
திருப்பொன்னம்பல வாணேசர் –திருத்
தேரோட்டம் வண்ணத் தேரோட்டம் திரு

அநுபல்லவி
தெருக்களின் ஊடே ஆனந்தப் பவனித்
தேரோட்டம் வண்ணத் தேரோட்டம் திரு

சரணங்கள்
நாட்டணி மாதுறை மேற்கட லோரம்
நாடிய சிவனார் தேரோட்டம்
பாட்டணி மாலை பாவலர் சூடும்
பார்வதி நாதன் தேரோட்டம் திரு

கண்கவர் சிற்பம் காட்சி யளிக்கும்
கல்லருங் கோயிற் தேரோட்டம்
எண்திசை அடியார் வந்துவணங்கும்
இறைவன் சித்திரத் தேரோட்டம் திரு

வேதியர் ஓதும் மந்திர கீதம்
வேதம் பாடும் தேரோட்டம்
சாதி மதங்கள் தம்மை மறந்தே
சங்கமம் ஆகும் தேரோட்டம் திரு

சங்கரன் வாழும் ஈஸ்வரம் எல்லாம்
தாமே தோன்றும் தேரோட்டம்
ஐங்கரன் முருகன் மாமணி கண்டன்
ஆனந்த மடையும் தேரோட்டம் திரு

வந்து மகேசன் மன்னு கொழும்பில்
மாவலம் ஏகும் தேரோட்டம்
செந்தமிழ் நாட்டுச் சிதம்பர னிங்கே
திகழும் மகிழும் தேரோட்டம் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளிக் கல்லுப் பிள்ளையார்

பண்ணை வைத்து மாடு கட்டிப்
பால் கறந்து வாழுவார்
பாதை யோரங் கல்லின் மீது
பணியுங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

காடுவெட்டிக் கழனி செய்து
காலந் தோறும் வாழுவார்
பாடு தீரப் பொங்கற் பூசை
பண்ணுங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

கல்லும் முள்ளுங் காடும் மேடும்
கண்டு நொந்து வாழுவார்
வல்ல காவல் வேண்டி வந்து
வணங்குங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

பகலும் இரவுங் கருதிடாமல்
பாடுபட்டு வாழுவார்
அகல நிந்தை அவலம் என்று
அடையுங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

ஏரை நம்பி வானை நம்பி
என்றும் ஒன்றி வாழுவார்
பாரை ஆள வேண்டி நாடிப்
பாடுங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

காற்றும் மழையும் பனியுந் தாங்கிக்
காலந் தோறும் வாழுவார்
போற்றும் மேழிச் செல்வம் ஓங்கப்
போற்றுங் கல்லுப் பிள்ளையார் பண்ணை

வெல்லாவெளியின் பதியில் மாரி
விளங்கும் மருதப் பாங்கிலே
கல்லாம் அழகுத் தலத்தில் வாழும்
கடவுள் எங்கள் பிள்ளையார் பண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்தை மலைக் கந்தன்

உகந்தை மலை – கந்தனுக்கு
உகந்த மலை
அகந் தன்னிலே – எங்களுக்கு
அமைந்த மலை உகந்தை

அகந்தை யெல்லாம் – நெஞ்சிலே
அகலும் மலை
இகந் தன்னிலே – புகழாய்
இலங்கும் மலை உகந்தை

கதிரை மலை – செல்லுவோர்
காணும் மலை
முதிரை வனம் – அழகாய்
மூடும் மலை உகந்தை

சோலை மலை – வடிவேல்
தோன்றும் மலை
தோகை மயில் – நடனம்
தொடரும் மலை உகந்தை

காக்கும் மலை – இன்பமே
களிக்கும் மலை
நோக்கும் மலை – சுகமே
நுகரும் மலை உகந்தை

பூக்கும் மலை – மலர்கள்
பொலியும் மலை
தேக்கும் மலை – வரங்கள்
தேடும் மலை உகந்தை

மகிழும் மலை – அடியார்
வணங்கும் மலை
திகழும் மலை – முருகன்
சிறக்கும் மலை உகந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்

மாசி மகத்திலே தேரோட்டம் –முத்து
மாரி தலத்திலே தேரோட்டம்
மாத்தளை ஊரிலே தேரோட்டம் –மலை
மானிலம் தன்னிலே தேரோட்டம் மாசி

கூடிவணங்கிடும் மக்களுக்கு –மனக்
குறைகள் விலகும் நொடியிலே
நாடிவணங்கிடும் மக்களுக்கு –வரம்
நாலுமுண்டாம் அன்னை மடியிலே மாசி

நாளுந் திருவிழாக் கோலங்களாம் –திசை
நான்கிலுமே அலங்காரங்களாம்
ஆளும் மகேஸ்வரி மாரியம்மன் –தலம்
ஆனந்த மாகுஞ் சிங்காரங்களாம் மாசி

காவியம் ஓதிடும் பூசைகளாம் –தமிழ்க்
காட்சிகளாங் கலை மாட்சிகளாம்
தேவியின் கர்ப்பூரத் தீபங்களாம் –வண்ணத்
தேர்சைப் பஜனை நாதங்களாம் மாசி

வேப்பிலை மாவிலைக் கும்பங்களாம் –எங்கும்
வெண்கல வெள்ளி நிறைகுடமாம்
கூப்பிநின் றாடிடுங் காவடியாம் –திருக்
கோவிலின் வீதியிற் சோபனமாம்! மாசி

குங்குமஞ் சந்தனங் குங்கிலியம் –உடன்
கோமள மஞ்சளின் வாசங்களாம்
எங்கணும் பேரொளித் தம்பங்களாம் –மக்கள்
எய்திடும் சங்கரி இன்பங்களாம்! மாசி

சங்கொலி மேழங்கள் நாதஸ்வரம் –மணி
சல்லரி சதங்கை நாதங்களாம்
மங்கை உமையவள் மாரியம்மாள்–இந்த
மண்டலம் காத்திடும் மங்களமாம் மாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞைதாவளைப் பிள்ளையார்

## பல்லவி

வாவியி னோரங் கஞைதாவளையில்
மருதஞ் சோலை மன்றினிலே
மாவயல் சூழும் மங்கலப் பதியில்
வாழும் இறைவன் யாரையா வாவி

## அநுபல்லவி

காவிய மாகும் பாரத நூலின்
காரண மூலக் கணபதியாம்
பாவியல் ஓதிய பஞ்ச கரத்தான்
பாட்டிறைவன் பிள்ளையாரையா வாவி

## சரணங்கள்

தங்கத் தாமரை எங்கும் மணக்கும்
தண்புனல் கண்டே முன்னாலே
பொங்கற் பூசை பொலிந்திட நாளும்
பூரிக்கும் இறைவன் யாரையா

வங்கக் கடலின் மேலைக் கரையில்
வளருந் தென்னை வளங்கண்டே
சங்கத் தமிழின் புகழைப் பரவும்
தந்தமுகன் பிள்ளையாரையா வாவி

நாட்டின் கோணம் யாவும் மாந்தர்
நம்பித் தொழவே நாளெல்லாம்
வாட்டுங் குறையும் வினையுந் தீர்க்கும்
வாரண இறைவன் யாரையா

பாட்டின் கவிஞர் பாடிப் போற்றும்
பதி கஞைதாவளை ஊரினிலே
ஈட்டுங் கருணை இன்பம் பொழியும்
எங்கள்துணைப் பிள்ளையாரையா வாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனியிலாயிரம் ஆயிரம் அடியார்
அஞ்சலி செய்யுங் கோலவிழா
ஆவது கண்டே ஆனந்த யோகம்
அடையும் இறைவன் யாரையா

மானில மெங்கணும் ஆசி வழங்கும்
மங்கள ஞானக் கணபதியாம்
வாரண தேவன் ஏரம்ப நாதன்
வண்ணமுகன் பிள்ளையாரையா வாவி

தம்பிக் கென்றே வங்கத் தோரம்
தாழஞ் சோலைத் தலமாங்கே
நம்பித் தொழவே காட்டி விளங்கும்
நல்லருள் இறைவன் யாரையா

தும்பிக் கையன் துணையாம் ஐயன்
சுந்தர வேலன் முன்னையன்
வெம்பித் துயரும் எங்களை ஆளும்
வேழமுகன் பிள்ளையாரையா வாவி

மாநெடுஞ் சாலை ஓரத்திலேயும்
வழிபடும் அடியார் பயணங்கள்
ஈனமுறாமல் இன்னல் வராமல்
இயக்கு மிறைவன் யாரையா

வானிடும் மழையும் மன்னிடும் அருளும்
வளருந் திருவுங் குறையாமல்
கானமெழுந் தமிழ் ஓசை ஒலிக்குங்
களுதாவளைப் பிள்ளையாரையா வாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கண்ண பெருமாள்

மாநகராம் யாழ்ப்பாணம்
மத்தியிலோர் கோயில் –அது
மாலவனின் கோயில்
மாநகராம் தென்மதுரைப்
பெருமாளின் கோயில் –கண்ண
பெருமாளின் கோயில் மா

கீதையிலே வேதம் சொல்லுங்
கீதைநாதன் கூடம் –திருக்
கேசவனின் கூடம்
பாதையிலே சோதி காட்டும்
பகவானின் கூடம் – ஆளும்
பகவானின் கூடம் மா

தீவினைகள் தாமகலும்
திருமாலின் கோட்டம் –அன்புத்
திருமாலின் கோட்டம்
நாவிதமாய் நேரும்பகை
யாவுந் தீருங் கோட்டம் – நமோ
நாராயணன் கோட்டம் மா

கொல்லவருங் கூற்றத்தையும்
வெல்லுமிந்த மாடம் –எங்கள்
கோவிந்தனார் மாடம்
வல்ல நவ கோளையுமே
மாற்றுமிந்த மாடம் – நம்மை
வாழவைக்கும் மாடம் மா

வேதனையும் சோதனையும்
விளையாடும் போதில் –வந்து
வெற்றி தரும் வீரன்
சாதனைகள் தந்திடவே
சங்கெடுக்கும் மாயன் –சுழல்
சக்கரத்தின் நாதன் மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி பாதம்

சிகரத்தில் ஏறி வாருங்கள்
சிவனொளி பாதம் சேருங்கள்
மகரத்தின் ஜோதி பாருங்கள்
மாகடல் உதயம் காணுங்கள் சிகரத்தில்

வேதங்கள் ஒன்றாய்க் கூடுங்கள்
வேற்றுமை யாவுஞ் சாடுங்கள்
பேதங்கள் இல்லை நாடுங்கள்
பிறவிப் பயனைத் தேடுங்கள் சிகரத்தில்

தாண்டவனாரின் தாளென்பார்
சங்கர நாமம் சாற்றிடுவார்
வேண்டி வணக்கம் செய்கின்றார்
மேன்மைகள் அங்கே பெறுகின்றார் சிகரத்தில்

ஏசுவின் நாமம் ஏற்றிடுவார்
எங்களின் ஆதாம் சுவடென்பார்
ஆசிகள் ஈட்டும் ஆண்டவனார்
ஆனந்த நிலையம் தானென்பார் சிகரத்தில்

நாடி வணங்கும் மகமதியர்
நபி பெருமானின் தலமென்பார்
கோடிவரங்கள் தாமடைவோம்
குன்றின் சிகரம் மீதென்பார் சிகரத்தில்

புத்த பிரானின் போதனைகள்
போற்றுஞ் சமணர் சமுதாயம்
உத்தமன் ஞானி பதமென்பார்
ஒன்றாய் இணையும் தலமென்பார் சிகரத்தில்

எத்தனை உண்டோ மார்க்கங்கள்
எல்லாம் இறைவன் சங்கமமாம்
அத்தனை மதமும் சம்மதமாம்
ஆங்கே மலையிற் சமரசமாம் சிகரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிற்போரதீவு சித்திரவேலாயுத சுவாமி

காளியம்மன் கோயில் விளங்கும் பெரியபோரதீவின் தென்மேற்கு த்திசையிலே வெல்லாவெளி, மண்டூர், பாலையடிவட்டை, மத்தியவாடி, போன்ற இடங்களை நோக்கிச்செல்லும் பாதையில், பட்டிருப்புப் பாலத்தடியிலிருந்து ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலேயே கோயிற்போரதீவு உள்ளது.

ஆங்கேதான் எம்மை ஆண்டட்டு அருள்பாலிக்கும் ஆறுமுகப் பெருமான் சித்திரவேலாயுத சுவாமியின் கோயில் இருக்கின்றது.

மிகபழங்காலத்துப் புகழ்ப்பெருமை பூண்டுவிளங்கும் சித்திர வேலாயுதப் பெருமானுடைய இந்தப் பேராலயத்தைப் பட்டிருப்பு வட்டாரத்து மக்கள் தவறாமல் நாள்தோறும் நாடிவந்து பெரு மானை மன்றாடி நல்லருள் பெறுவார்கள்.

ஆண்டுதோறும் திரு வேலாயுதப் பெருமானுடைய மகோற்சவத் திருவிழாக்கள் மிகவுங் கோலாகலமாகவும் வீமரிசையாகவும் நடைபெறும்.

பட்டிருப்பு வட்டாரத்திலும், அடுத்துள்ள வட்டாரங்களிலும், மட்டக்களப்பு மானிலத்தின் ஏனைய பாகங்களிலும் வாழும் சைவத்தமிழ் மக்கள் எல்லோரும் கோயிற்போரதீவில் விளங் கும் வேலாயுத சுவாமியின் புகழும் பெருமையும் நன்றே அறிவார் கள்.

பட்டிருப்புப் பாலத்தைக் கடந்து படுவான்கரை நோக்கிச் செல்லும்பொழுது நாம் இரண்டு தலங்களின் கோபுரங்களையே முதன்முதலாகக் கண்டு ஆனந்தமடைகின்றோம்!

அவைகளில் ஒன்று பெரியபோரதீவுப் பதியில் வாழும் காளித் தாயாரின் கோவீற் கோபுரம்!

மற்றொன்று கோயிற்போரதீவு சித்திர வேலாயுத சுவாமியின் திருக்கோயிற் கோபுரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலாயுதப் பெருமான் துதிப் பாடல்

கோயிற்போரதீவினிலே – கோயில்கொண்ட வேலாயுதர்
கும்பிடுவார் தங்களுக்குக் – குலதெய்வமாம் – தேவி
அம்பிகையின் பாலனவன் – அன்புத் தெய்வமாம்।
–கோயிற்

வீறுகொண்டு வேலெடுத்து – மாறுகொண்ட தீயவரைக்
கூறு செய்ததால் விளங்கும் – வீரத் தெய்வமாம் – மலை
ஆறுபடை வீடுகொண்ட – அன்புத் தெய்வமாம்!
–கோயிற்

காளியம்மன் ஆட்சியிலே – கந்தசாமிப் பிள்ளை வந்து
காலந்தோறும் வாழுவதால் – எங்கள்தெய்வமாம் – நம்மைக்
காவல்செய்யுங் கருணையினால்–அன்புத்தெய்வமாம்।
–கோயிற்

மாளிகை போல் ஆலயத்தில் – மன்னவனாய் வீற்றிருந்து
வாழ்த்தி நம்மை ஆளுவதால் – வாழ்வுத் தெய்வமாம் – எந்த
நாளும் இன்பம் ஈட்டுவதால் – அன்புத் தெய்வமாம்।
–கோயிற்

சித்திரவேல் ஏந்திவந்து – சிக்கல் இன்னல் வேதனைகள்
அத்தனையும் போக்குவதால் – ஆளும் வேலனாம் – அருள்
அற்புதங்கள் ஆற்றுவதால் –அன்புத் தெய்வமாம்।
–கோயிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளிகாமடு பிள்ளையார்

*மரபு தழுவிய புதுக் கவிதை*
*(இது ஒரு வழிகாட்டிக் கவிதை)*

மட்டு மாநர்ப் பக்கமிருந்தே
வந்தனைப்பயணம் தொடருங்கள்
வடதிசை நோக்கிச் செல்லுங்கள்.
திருமலை வழியாற் செல்லுங்கள்.
செங்கலடிவரைச் செல்லுங்கள்,

சந்தியில் ஆங்கே நில்லுங்கள்.
நின்றிடக் கரமாய்த் திரும்புங்கள்.
பதுளை வீதியாற் செல்லுங்கள்.

வாழைச்சேனையின் பக்கமிருந்தே
வந்தனைப்பயணம் தொடருங்கள்
தென்திசை நோக்கிச் செல்லுங்கள்.
வந்து செங்கலடி சேருங்கள்
சந்தியில் அங்கே நில்லுங்கள்.
வலது கரமாய்த் திரும்புங்கள்.
பதுளை வீதியிற் செல்லுங்கள்.

இருசாராரும் பதுளை வழியாலே
இனித்திசை மாறாது செல்லுங்கள்!

வாவியின் ஓடை குறுக்கிடுமாங்கே
பாலத்தைக் கடந்து செல்லுங்கள்.

இரு மருங்குமே இயற்கை பாருங்கள்!
இரண்டு மைற்தூரம் செல்லுங்கள்.

அத்துடன் ஆங்கே நில்லுங்கள்.
அதிக தூரமில்லை நில்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது புறமாகப் பாருங்கள்
இருநூறு யாரும் இருக்காது!

இனிய தலமொன்று தெரியும்! – அது
இறைவன் தலமென்று புரியும்!

ஆர்வம் மிகவாகும் செல்லுங்கள்
ஆசை உந்திவரும் செல்லுங்கள்
வேகவேகமாய்ச் செல்லுங்கள்
விரைந்து நடைபோட்டுச் செல்லுங்கள்!

ஓடை நீரோடும் பாருங்கள்
உள்ளம் மிகநாடும் பாருங்கள்!
நீரைக் கடந்துகரை ஏறுங்கள்
நிமிர்ந்து ஆலயத்தைப் பாருங்கள்!

நெஞ்சங் கவரும் அதன் கோபுரமாம்!
நீண்ட சரிதை சொல்லும் ஆலயமாம்!

ஆனை முகன் எங்கள் ஆண்டவனார்
ஆதி முதல் இறைவன் நாயகனார்
காளிகாமடுக் கடவுளெங்கள்
காக்குங் கணநாதன் ஆலயமாம்!

காட்சி தரும் கோலம் அதுவன்றோ!
காவல் தரும் கோட்டம் அதுவன்றோ!
காளிகாமடுப் பிள்ளையார் – அருள்
காணும் ஆனந்தம் அதுவன்றோ!

கவலைகள் யாவும் தீருங்கள்!
காத்திடும் இறைவனைப் போற்றுங்கள்!
கொண்ட வினைதீரும் கும்பிட்டால்
குறைகள் மறைந்தோடும் முறையிட்டால்

நம்பியவர் துன்பங் கண்டதில்லை
நாடியவர் துயர் கொண்டதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்லவர் ஏரம்ப நாதர்
எல்லாக் குறையும் இல்லா தோடும்
பொல்லா வினையும் தொல்லைகளும்
எங்கோ மறையும் பாருங்கள்!
இன்பம் நிறையும் வாழுங்கள்!

கொடுவாமடு என்னும் மருத வளத்தூர்
குவியும் செல்வம் பெருகுமிடத்தூர்
ஆங்கே திகழும் ஆனந்த நிலையம்
காளிகாமடுத் திருப்பதியாம்!
கணேஷப் பெருமான் அருட்பதியாம்!

தீராத நோயும் நொடிகளுமே
தீர்க்கும் இறைவன் கோவிலிதாம்!
நேராத வரமும் நிம்மதியும்
நேரும் அங்கே துதியுங்கள்!

தேவைகள் யாவும் கைகூடும்!
பாவம் பழிகள் பறந்தோடும்
பகையுங் கரவும் மறைந்தோடும்
பற்றிய தோஷங்கள் அற்றுவிடும்!

காளிகாமடுக் கடவுளின் கிருபை
கண்டவர்க்கில்லை மண்டலத் தொல்லை!

ஆண்டு மகோற்சவமோ! – அங்கே – ஆனந்தமானந்தம் ஆனந்தம்!
திருவிழாப் பவனிகள் – அங்கே – திகழுங் காட்சிப் பேரின்பம்!
அனுதினமும் பூசை – அங்கே – அற்புதம், அற்புதம், அற்புதமே!
சிங்காரத் தீபங்கள் – அங்கே – தினமுந் தோணும் ஆராதனை!
செல்ல விநாயகனார் – அங்கே – திருமயமாவது தெய்வீகம்!
சேர்ந்து மன்றாடுவோம் – அங்கே – திருவருள்பெற்றே வாழ்வோம்!

காளிகாமடுப் பிள்ளையார்! கைவிடமாட்டார் கும்பிடுவோம்!
காவலிருக்கும் பிள்ளையார்! காத்தருள்செய்வார் கும்பிடுவோம்!
காளிகாமடுப் பிள்ளையார்! கவலைகள் தீர்ப்பார் கும்பிடுவோம்!
காலந்தோறும் பிள்ளையார்! ஞாலங்காப்பார் கும்பிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் முருகையன்

**பல்லவி**

கோவிலடி திருக் கோவிலடி
குமரன் அழகன் கோவிலடி கோவிலடி

**அநுபல்லவி**

காவலடி கந்தன் காவலடி
கருணை முருகன் காவலடி கோவிலடி

**சரணங்கள்**

திருச்செந் தூரின் கடலிலே
திரைகள் மோதுங் கரையிலே
இருக்கும் அழகைப் போலவே
இலங்கும் இறைவன் கோவிலடி கோவிலடி

தென்னை வளரும் பதியிலே
திகழுங் கருணை வடிவிலே
அன்னை இருவர் ஆடவன்
ஆறு முகனின் கோவிலடி கோவிலடி

ஆழி அலையில் ஆதவன்
அழகு தோன்றும் ஆனந்தம்
காழி இறைவன் திருமகன்
கண்டு மகிழுங் கோவிலடி கோவிலடி

நாட்டின் கிழக்குத் திசையிலே
நாடும் இயற்கை வளத்திலே
பாட்டின் தலைவன் சரவணன்
பாரை ஆளுங் கோவிலடி கோவிலடி

சங்கப் புலமைத் தாயவள்
தமிழை வென்ற நாயகன்
தங்கி வாழுங் கோவிலடி
தஞ்சம் அருளுங் கோவிலடி கோவிலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சிமார் கோயில்

நாச்சிமார் கோவிலுக்கு
நாளுமிங்கே வாருங்கள்
நாராயணன் தேவியர்கள்
பாதங்களில் வீழுங்கள் நாச்சி

ஏழுவண்ணத் தலைவிகள்
ஆளுந்தலம் நாடுங்கள்
ஏற்றிநிதம் போற்றிநின்று
இன்பங்களைக் காணுங்கள்
சூழுந்துயர் அத்தனையும்
தூரச்செல்லும் பாருங்கள்
சூதனனின் துணைவியர்
யாவரையும் பாடுங்கள் நாச்சி

காத்தருளும் கடவுளைக்
கண்ணன் பரந்தாமனைக்
காதலிக்கும் பேரழகு
மங்கையரின் மாடமாம்
பூத்தலரும் தாமரையிற்
பொலிந்திடுந் அன்னைமார்
பூதலத்தில் விளங்கிடும்
புத்தழகு மாடமாம் நாச்சி

சித்திரமுஞ் சிற்பங்களும்
சிறந்திடும் கோவிலாம்
தேசமக்கள் கூடிவந்து
வணங்கிடும் கோவிலாம்
நித்தமருள் அற்புதங்கள்
நிகழ்ந்திடும் கோவிலாம்
நேர்த்திகளும் கீர்த்திகளும்
நிறைந்திடும் கோவிலாம் நாச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமான்கண்டிப் பிள்ளையார்

சங்கமான் கண்டிப்பிள்ளையார் – தினந்தினம்
சங்கடங்கள் தீர்க்கும் பிள்ளையார் –பெருமான் சங்கமான்

எங்கணும் இருப்பவர்கள் – வந்துவந்து
ஏற்றும்புகழ் ஞானப் பிள்ளையார் –பெருமான் சங்கமான்

நம்பி நாம் தொழுதுவந்தால் – வந்துவந்து
நாடும் ஒளி எதிர்காலம் –பெருமான் சங்கமான்

தஞ்சமென்று நாடி வருவார் – தங்கித்தங்கித்
தரிசிக்கும் அன்புப் பிள்ளையார் –பெருமான் சங்கமான்

தென்கதிரை யாத்திரையில் நாம் – நின்றுநின்று
தெண்டனிட்டுச் செல்லும் பிள்ளையார் –பெருமான் சங்கமான்

பூக்கொணர்ந்து தூவிப் பணிவோம் – சுற்றிச்சுற்றிப்
பூரிப்புடன் வலம் வருவோம் –பெருமான் சங்கமான்

கொழுக்கட்டை மோதகங்களே –பண்ணிப்பண்ணிக்
கொண்டுநிதம் படைத்திடுவோம் –பெருமான் சங்கமான்

பொங்கலிட்டு வணங்கிடுவோம் – கூடிக்கூடிப்
பூசைபல புரிந்திடுவோம் –பெருமான் சங்கமான்

முக்கனியும் பாலுங் கரும்பும் – தேடித்தேடி
முன்னிறைவன் உண்ணக் கொடுப்போம் –பெருமான் சங்கமான்

எங்குலகில் வாழ்ந்திருப்பினும் –எண்ணியெண்ணி
இறைஞ்சிடும் எங்கள் பிள்ளையார் –பெருமான் சங்கமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாண்டி முருகையன்

முத்துமணி வேலிறைவன் கோவிலுக்கு வாரீர்
மூவிரண்டு முகத்தவன் காலடிக்கு வாரீர்
சித்திரப்பொன் சித்தாண்டிக் கோவிலுக்கு வாரீர்
செந்தமிழர் ஆண்டவனைக் கண்டுதொழ வாரீர் முத்து

கோலமயில் மீதுவரும் நாயகனைப் பாரீர்
கூடிவரும் பேரழகுத் தேவியரைப் பாரீர்
மூலமயம் ஆனகலை மாமணியைப் பாரீர்
மூன்றுதமிழ் ஞானந்தரும் முருகனைப் பாரீர் முத்து

வேலவனின் வீதிவலங் காணத்தினம் வாரீர்
விளங்கிடும் அற்புதங்கள் மகிழ்ந்திட வாரீர்
மாலவனின் மருகனின் மாளிகைக்கு வாரீர்
வள்ளிதெய்வ யானைதன்னை வணங்கிட வாரீர் முத்து

ஆறுமுகன் ஆண்டிருக்கும் ஆலயத்தைப் பாரீர்
ஆனதிருக் கோபுரத்தின் ஓவியத்தைப் பாரீர்
வீறுகொள்ளும் வேலதிரும் வீரியத்தைப் பாரீர்
வென்றசுரர் படைகளை நின்றவனைப் பாரீர் முத்து

கொண்டவினை தானகலுங் கோளகலும் வாரீர்
குஞ்சரனின் தம்பிதன்னைக் கும்பிடவே வாரீர்
கண்டுதொழும் எங்களுக்குத் துன்பமில்லை வாரீர்
காத்தருளும் முத்தழகன் காவலுண்டு வாரீர் முத்து

ஆடும்மணிச் சேவற்கொடி ஆடுவதும் பாரீர்
ஆடும்மயிற் தோகைநடம் ஆடுவதும் பாரீர்
ஆடும்பட நாகம் உடன் ஆடுவதும் பாரீர்
ஆனந்தமாய்க் காவடிகள் ஆடுவதும் பாரீர் முத்து

பத்தனைய துயரங்கள் விட்டகலும் வாரீர்
பாவங்களும் சாபங்களும் பறந்திடும் வாரீர்
சித்தாண்டி முருகையன் திருத்தலம் வாரீர்
தீமைகள் மறைந்துவிடும் திரண்டிங்கு வாரீர் முத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரியாவெளி நாகதம்பிரான் 108 போற்றிகள்

மட்டுநகர் மானிலத்தில் மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையிலே அணியணியாகக் காட்சியளிக்கின்றது செந்நெல் வயல்கள் செழித்து வளர்ந்து செல்வங் கொழிக்கும் மருதநிலப் பகுதி।

இயற்கையெழில் வனப்புக்களும், ஆங்காங்கே வளமாக வளர்ந்து காட்சியளிக்கும் தென்னஞ் சோலைகளும் மிகுந்துகாணச் சிறந்துவிளங்கும் செழுமையான தமிழ்க் கிராமங்கள் அமைந்துள்ளன।

தொடர்ச்சியாகவே பல கிராமங்களைக் கொண்ட தனித்தமிழ் வட்டாரம் இதுவாகும்।

இதுவே மண்முனைப்பகுதி என்னும் குறு மானிலமாகும்.

ஆங்கே பண்டாரியாவெளி என்னும் சிங்காரக் கிராமத்திலேயே எம்பிரான் நாகதம்பிரான் கோயில்கொண்டு கிழக்குவள நாட்டு அடியார்கள் எல்லோரையும் ஆண்டு அருள்பாலித்து வருகின்றார்.

தச அவதாரம் எடுத்து விண்ணுலகம் மண்ணுலகம் இரண்டையும் காத்தருளிய காக்குங்கடவுளானவரே நமது திருமால் இறைவன். பாற்கடலில் திருமாலுக்குத் துயிலும் அணையாகவும், தூய துணையாகவும் திகழும் திருப்பட நாகமே நமது நாகதம்பிரான்.

ஆகவே திருமாலைப் போலவே தாமும் ஒரு மானிட அவதாரம் எடுத்தருளவேண்டும் என்று நாகபிரானும் விருப்பங் கொண்டார் போலும்.

மானிடத் தாயின் வயிற்றிலே உற்பத்தியாகி வினோதப் பிறவி அவதாரம் எடுத்துக் கிழக்கிலங்கை மானிலத்தை ஆளவேண்டும் என்று நாகருக்கு ஒரு ஆவல் உண்டானது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் பண்டாரியாவெளி ஊரிலே நாகதம்பிரானை மிகுந்த பக்தியுடன் வழிபட்டுவந்த ஒரு பரம்பரையிலே ஒரு தாயின் வயிற்றிலே கருவாகி, உருவாகி ஓர் பிள்ளையாகப் பிறந்தார். பிறந்தபிள்ளை பாம்பாய் இருப்பினும் பிள்ளை பிள்ளைதானே என்று பெற்ற தாயார் அன்புடன் பேணி வளர்த்தாள்.

வளர்ந்துவரும் நாளில் அங்குமிங்கும் இன்பமாக ஓடி விளையாடி உலவித்திரிந்த பொழுதில் நாகப்பிள்ளை தனது அன்னையின் இல்லத்துக்கு அருகாமையில் உள்ள புற்று ஒன்றிலே புகுந்து வளைந்து இருந்துகொண்டார்.

புற்றில் புகுந்து அமர்ந்துகொண்ட நாகப் பிள்ளையின்மீது அளவி ல்லாத பாசமும், நாகதம்பிரான் மீது சிறந்த பக்தியும் கொண்ட தாயார் அன்றுமுதல் பிள்ளை என்ற சொந்தம் வீட்டுப் பெருமான் என்ற பந்தமுற்றுப் புற்றடியிலே பூசை ஆராதனைகளைச் செய்து வழிபட்டுவந்தார்.

பின்னர் நாகரின் தாயாரின் பரம்பரையினரும், ஊர்மக்களும், வட் டாரத்து மாந்தரும் ஆங்கே வந்து நாகதம்பிரானை வழிபட்டு வந்தனர்.

அதன்பின்னர் பெருமானுக்கு ஆங்கே ஓர் ஆலயம் தோன்றியது. இன்று தேசமக்கள் அனைவருமே கூடிப் பொங்கலிட்டு மன்றாடி வருகின்றனர். பெருமானுடைய தலம் இப்பொழுது ஒரு மகோன் னதமான தலமாகக் காட்சியளிக்கின்றது।

இவ்வாறாக நாகதம்பிரானுடைய தலவரலாறு கூறப்பட்டுவரு வதை வழிபாட்டுக்குச் செல்லும் நாம் ஆங்கே அறியலாம்.
ஆண்டுதோறும் ஆனிமாதத்தில் நாகபிரானுடைய ஆனந்தமய மான பொங்கற்திருவிழாப் பூசையாராதனைகள் மங்களகரமா கவும், கோலாகலமாகவும் நடைபெறும்.

கண்கண்ட தெய்வமாகிய நாக நாயகரின் திருவருள் அவனியில் என்றென்றும் இனிதே நிலைத்து வளரும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் 108 போற்றிகள்

## திருச்சிற்றம்பலம்

ஐங்கரன் அன்புகாட்டும் அரவுநா யகமே போற்றி
ஆனந்த வேலன் மயிலின் அழகுமித் திரனே போற்றி
சங்கரன் முடியில் வாழும் தம்பிரான் நீயே போற்றி
தங்கியே மார்பிலாடும் பொங்கர வோனே போற்றி

பண்டாரியாவூர் நாடி வந்தாளும் இறைவா போற்றி
பண்ணைகள் வயல்கள் சூழும் பதியில் அமர்ந்தாய் போற்றி
கொண்டாடி அடியார் கூட்டம் மன்றாடும் அழகா போற்றி
கோணங்கள் தோறும்புற்றில் குடியிருந்தாயே போற்றி

காட்டிலும் மேட்டிலேயும் தோற்றிநிற் பாயே போற்றி
காவலும் துணையுமாகிக் காத்தருள் வாயே போற்றி
வீட்டினுள் வாராதோடி விலகிச்செல் வாயே போற்றி
விளையாடிப் படம்விரித்தே நடமாடு வாயே போற்றி

பல்லாயிரம் இனத்துப் பாம்புகள் தலைவா போற்றி
படைகளும் உன்னைக் கண்டால் பயமுறும் ஐயா போற்றி
நெல்லாரும் வயல்கள்தோறும் நீவாழுகின்றாய் போற்றி
நீரோடும் இடமெல்லாமே நீராடி மகிழ்வாய் போற்றி

தான்தோன்றியப்பன் மார்பிற் தவழ்ந்தாடுகின்றாய் போற்றி
சங்கரி கருமாரித்தாய் தம்மோடிருந்தாய் போற்றி
வான்தோன்றி ஆங்கேதேவர் மத்தியிலிருந்தாய் போற்றி
மன்னுமோர் தெய்வமாகி மண்ணுலகில் வந்தாய் போற்றி

பஞ்சதலையோடு நீபால் ஆழியில் இருந்தாய் போற்றி
பாராளும் மாலைத்தாங்கிப் பாங்காய் இருந்தாய் போற்றி
தஞ்சமென வருவோர்நெஞ்சில் தங்கி இருந்தாய் போற்றி
தாமாக வந்தேகோயில் கொண்டே இருந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமுண்ட போதிலையா மீட்டுயிர் தருவாய் போற்றி
வேண்டாத பேருக்கும் நீ மேன்மைகள் செய்வாய் போற்றி
திடமுண்டு நாளுங்கருணைத் திருவருள் புரிவாய் போற்றி
தேசத்தில் எங்கும் நின்றன் திருப்புகழ் பெறுவாய் போற்றி

வெள்ளைமா நாகமாவாய் மின்னலாய் வருவாய் போற்றி
விந்தைகள் செய்வாய்மாந்தர் சிந்தையில் நிறைவாய் போற்றி
கொள்ளைகொண் டுள்ளந்தன்னிற் குடிபுகுந்திடுவாய் போற்றி
கும்பிடும் அடியார்தங்கள் குறைதீர்க்க வருவாய் போற்றி

செந்நிற நாகமாவாய் தீவினை ஒளிப்பாய் போற்றி
தீயவர் சினமொழிப்பாய் தீங்கினை மாய்ப்பாய் போற்றி
பன்னிற வேடங்கொள்வாய் பழிமறைத் திடுவாய் போற்றி
பாதகம் புரியும் வஞ்சம் மாறிடச் செய்வாய் போற்றி

கருநாக மாவாய் எங்கள் கவலைகள் தீர்ப்பாய் போற்றி
காலங்கள் தோறும் நேரும் மாயங்கள் தீர்ப்பாய் போற்றி
திருநாக தம்பிரானே தீவிடம் தீர்ப்பாய் போற்றி
திண்டாடி மாயும்நேரம் வந்தூறு தீர்ப்பாய் போற்றி

ஆனியிற் பொங்கலின்பம் ஆனதே இறைவா போற்றி
ஆயிரம் பொங்கற்பூசை பொலியுமே இறைவா போற்றி
வானிலும் முழுமா நிலவு மலருமே இறைவா போற்றி
வருடங்கள் தவறாமேன்மை வளருமே இறைவா போற்றி

வெண்பொங்கல் நீவிரும்பி என்னாளும் ஏற்பாய் போற்றி
மிக்கவே கோழிமுட்டை அப்பாநீ ஏற்பாய் போற்றி
விண்பொங்கு நிலவில்மாந்தர் வேண்டுதல் ஏற்பாய் போற்றி
வெள்ளிபொன் நேர்த்திச்சின்னம் ஏராளம் ஏற்பாய் போற்றி

காரிருட் பயணம்செய்யும் போதிலே காப்பாய் போற்றி
கண்ணிலா மாந்தர்தம்மை முன்னின்று காப்பாய் போற்றி
மாரிமா மழையிற் செல்லும் வழியிலே காப்பாய் போற்றி
மணிவைரம் அணியும் வடிவாய் வந்தேநீ காப்பாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கொட்டிச் சோலைஈசன் கோவிலில் நிற்பாய் போற்றி
கொத்துக்குளத்து மாரி கோவிலில் நிற்பாய் போற்றி
இக்கட்டில் ஆளத்தானே எங்குமே நிற்பாய் போற்றி
எங்கள்வேல் முருகன்கோவில் எங்குமே நிற்பாய் போற்றி

பிள்ளையார் கோயில்தோறும் பிரியமாய் வாழ்வாய் போற்றி
பேரான சக்திகோயில் யாவிலும் வாழ்வாய் போற்றி
வள்ளலார் கண்ணன்கோயிற் பதியெலாம் வாழ்வாய் போற்றி
வயிரவர் கோயில்நாடி வசதியாய் வாழ்வாய் போற்றி

ஆடிவந் தன்பினாலே ஆண்டருள் தாதா போற்றி
ஆனதோ ரவலம் மாற்றி நீதுணை தாதா போற்றி
நாடிவந் தமைதிகாணும் நல்லருள் தாதா போற்றி
நாகநாயகனே வாழும் நல்லருள் தாதா போற்றி

பாலொடு தேனும்பழமும் பருகிட வருவாய் போற்றி
பண்டாரி வெளியில் இன்பம் கொண்டாட வருவாய் போற்றி
மாலொடு மருவிநிற்கும் நாகமே வருவாய் போற்றி
மங்களப் பொங்கல் உண்டே மகிழநீ வருவாய் போற்றி

பொங்கலில் உப்பிட்டாலே பூரித்து உண்பாய் போற்றி
பூசையில் வைக்கும் பாலும் பழங்களும் உண்பாய் போற்றி
தெங்கிள நீரைத்தாகம் தீரவே உண்பாய் போற்றி
தேனுடன் கோழிமுட்டை தித்திக்க உண்பாய் போற்றி

நீவாழும் மானிலத்திற் பாங்காய் நிறைந்தாய் போற்றி
நிலையான தெய்வமாகி நித்தம் நிறைந்தாய் போற்றி
தாயான தேசந்தன்னிற் தமிழாகி நின்றாய் போற்றி
தாரணித் திசைகளெங்கும் தங்கியே நின்றாய் போற்றி

நெல்வயல் வேலைசெய்யும் நேரத்தில் ஆள்வாய் போற்றி
நித்தமுஞ் செய்யும் தூரப் பயணத்தில் ஆள்வாய் போற்றி
புல்வெளி மேட்டிலேகும் போதிலும் ஆள்வாய் போற்றி
பொல்லாத ராகுகேதுக் காலத்தில் ஆள்வாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியது விடமானாலும் திடமது தீர்ப்பாய் போற்றி
கொண்டது நெடுநோயானால் நின்றது தீர்ப்பாய் போற்றி
கடியது காலமானாற் கவலைகள் தீர்ப்பாய் போற்றி
காலனும் அணுகிடாமற் கோளது தீர்ப்பாய் போற்றி

பாலாழி மாலுறங்கும் சீரணை அழகா போற்றி
பார்வதி நாதன் மார்பிற் படமிடும் அழகா போற்றி
வேலாளி மயிலுங்கூடி விளையாடும் அழகா போற்றி
வெளியேறிப் புற்றில்நின்று நடமாடும் அழகா போற்றி

தீண்டிடும் பாம்பினங்கள் தம்மைத் தடுப்பாய் போற்றி
தேளினம் கொட்டிடாது சாலத் தடுப்பாய் போற்றி
வேண்டிநாம் அலறும்போது விடமே தடுப்பாய் போற்றி
வேதனை ஊட்டும் வாதை யாவும் தடுப்பாய் போற்றி

வில்லுக்குளத்து நீரால் விளைவுகள் தந்தாய் போற்றி
வேளாண்மை வளரும்போகம் நீடவே தந்தாய் போற்றி
நெல்லுக் களங்கள்செல்வம் நிறையவே தந்தாய் போற்றி
நேர்த்திகள் பூர்த்தியாகும் கீர்த்திகள் தந்தாய் போற்றி

மண்முனைத் தேசம்போற்றும் குலதெய்வம் ஆனாய் போற்றி
மட்டுமா நிலமே வாழ்த்தும் மாநாகம் ஆனாய் போற்றி
எண்முனைத் திசைகளேற்றும் எம் தெய்வம் ஆனாய் போற்றி
எல்லோரும் எண்ணிப்பணியும் இறைவனே ஆனாய் போற்றி

நாகரே தம்பிரானே நாளுமே சரணம் போற்றி
நம்பியே தெண்டனிட்டோம் உன்பதம் சரணம் போற்றி
யோகரே தஞ்சமென்று நாடினோம் சரணம் போற்றி
நூறாழி ஆனபோதும் நீவாழ்க சரணம் போற்றி

வாழிய நின்றன் நாமம் வாழ்கவே வாழ்க போற்றி
வாழிய நின்றன் கோயில் வாழ்கவே வாழ்க போற்றி
வாழிய பொங்கலின்பம் வாழ்கவே வாழ்க போற்றி
வாழிய நின்வணக்கம் வாழ்கவே வாழ்க போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார்

தமிழ்நாட்டிலிருந்து அதிவீரராகவ பாண்டியனுடைய புத்திரியான மாருதப்புரவீதவல்லி யாழ்ப்பாணத்துக்கு வந்து கீரிமலையிலே தீர்த்தம் ஆடியமையும், அதனால் அவளுடைய மாமுகம் (குதிரை முகம்) வீட்டகன்றதையும், கவர்ச்சியான அழகிய முகத்தை அவள் பேரானந்த வரமாகப்பெற்று மகிழ்ச்சியடைந்தமையும்,அவ் வாறு அவள் எய்திய வரத்தை முன்னிட்டு ஒரு நேர்த்திச் சின்ன மாகவே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை அவளுடைய தந் தையான பாண்டிய மன்னனே இங்குவந்து கட்டியெழுப்பினான் என்ற புனித வரலாற்றையும் நாம் அறிவோம்.

மாவிட்ட (குதிரை முகம் வீட்ட) புராதன நகரம் என்பதாலேயே மாவிட்டபுரம் என்ற பெயரும் உண்டானது என்பதையும் நாம் அறிவோம்! தந்தையின் திருத்தலத்தொண்டினை மகள் மாருத ப்புரவீதவல்லி இங்கே தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருந்த வர லாற்றையும் முன்னரே அறிந்துகொண்டவர்கள் நாம்.

திருத்தலத் தொண்டுகளில் மிக்க ஆர்வம் காட்டிய மாருதப்புர வீதவல்லியார் அளவெட்டியைச் சார்ந்த எல்லைப் பகுதியில் ஏழு விநாயகர் தலங்களையும் கட்டியமைத்த சரித்திரத்தை அளவெட்டியூர் வட்டாரத்து மக்கள் இன்று பெருமையுடன் எடுத்துச் சொல்வதால் நாம் அறிகின்றோம்.

ஆனால் அந்த ஏழு விநாயகர் தலங்களும் இவைதாம் என்று குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு இன்று சாசனங்கள் இல்லாத குறையைப் பற்றியும் அவ்வூர் மக்கள் கவலையுடன் தெரிவிக் கின்றனர். ஆயினும் வயது மிகவும் முதிர்ந்தவர்களிடம் கேட்டு அறியலாம் என்று கூறும் அதேவேளையில், இன்றையச் சூழ் நிலை அவ்வாறான ஆராய்ச்சிக்கு ஏற்றதாக இல்லையென்று அவர்கள் குறிப்பிடுவதும் ஆமோதிக்கக்கூடிய காரணமாகின்றது.

பாண்டியன் மகள் கட்டிய ஏழு விநாயகர் கோயில்களில் மூன்று கோயில்கள் இன்றும் தமது ஊர் எல்லைக்குள்ளே இருப்பதை அவர்கள் உறுதிப்படுத்திப் பெருமைப்படுகின்றனர்.

கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில், குருக்கள்கிணற்றுப் பிள் ளையார் கோயில், பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில் ஆகிய மூன்றுமே இன்றும் புகழுடன் விளங்கிவரும் கோயில் களாகும். அளவெட்டி–கும்பிழாவளைப் பிள்ளையார் கோயிலைப் பற்றிய பாடலே பதிக்கொரு பாடல் நூலில் இடம்பெற்றுள்ளது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பிழாவளைப் பிள்ளையார்

பல்லவி

அளவெட்டி ஊரிலிங்கு கும்பிழாவளை தன்னிலே
ஆண்டருளும் ஆண்டவனே பிள்ளையாரே -அருள்
ஆனந்தம் அடைந்தோமையா பிள்ளையாரே அளவெட்டி

அநுபல்லவி

களவற்ற நெஞ்சமுடன் கண்டுதொழும் எங்களுக்குக்
கவலைகள் மறைத்திடும் பிள்ளையாரே -தினம்
காத்தருளும் நாயகனே பிள்ளையாரே அளவெட்டி

சரணங்கள்

பஞ்சகரத் திறைவனே பார்வதியின் குமரனே
பாருலகம் வணங்கிடுந் தந்தமுகனே -உந்தன்
பாதங்களே தஞ்சமையா தும்பிக்கரனே।
பஞ்சமுகந் தன்னிலுன்னைப் பார்க்குமொரு காட்சியிங்கு
பாங்குடன் நிகழுமையா தினந்தினமே -உந்தன்
பாதநிழல் வேண்டுமையா வேழமுகனே அளவெட்டி

எக்கதியும் இல்லையென்று காலடியில் ஓடிவந்து
சிக்கெனப் பிடித்தவர்க்குத் தஞ்சமருள்வாய் -கொண்ட
விக்கினங்கள் யாவையுமே விலக்கிடுவாய்
பக்கத்துணை அத்தனையும் பற்றுடன் கொடுத்துநிதம்
பட்டதுயர் துன்பங்களைத் துடைப்பாயே -பழி
பாவங்களைப் பாசமுடன் மறைப்பாயே அளவெட்டி

ஏழுதலங் கொண்டவரே எங்கும்புகழ் ஆனவரே
ஏழிணையும் ஊர்களிலே இருப்பவரே - மக்கள்
எல்லோருக்கும் ஆனந்தங்கள் கொடுப்பவரே।
வாழுமினம் வாழவழி வகுத்திடும் இறைவனே
வாதைகளுந் தீவினையும் தொலைப்பாயே -வரும்
மாயங்களைத் தடுத்தருள் கொடுப்பாயே அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாந்தாமலை முருகன்

தாந்தாமலை மீதினிலே தங்கவடி வேலையா
தங்க – வடி – வேலையா
தாவித் தாவி ஏறிவந்தோம் தஞ்சமையா வேலையா
தஞ்சம் – ஐயா – வேலையா
மாந்தருக்கு வரமருளும் முருகையா – நீல
வண்ணமயில் வாகனனே முருகையா தாந்தா

மானாடும் மயிலாடும் மகிழ்ந்தாடுமாம்
மாங்குயில்கள் சேர்ந்து பாடும் வண்டுபாடுமாம்
தேனாரும் சோலையிலே தேனீ பாடுமாம் – உந்தன்
தெய்வீக மலையோரம் அருவி பாயுமாம் தாந்தா

காட்டினிலே யானைபுலி கரடி நாகமாம்
கந்தனுன்றன் ஆலயத்தை விலகி ஓடுமாம்
பாட்டினிலே தேசம்புகழ் பாடி நாடுமாம் – இங்கே
பண்ணைவளம் சூழுவதால் எங்கும் இன்பமாம் தாந்தா

தாமரைகள் தாம்மலரும் தீர்த்த மானதாம்
சஞ்சலங்கள் தாம் மறையும் தஞ்ச மானதாம்
காமலர்கள் தாம் மலியும் வாச மானதாம் – வண்ணக்
காவடிகள் ஆடிவரும் காட்சி யானதாம் தாந்தா

மட்டுநகர் மானிலத்தில் வந்து சிறந்தாய்
வள்ளிதெய்வ யானையுடன் கூடி மகிழ்ந்தாய்
மட்டில்லாத செல்வயோகம் எங்கும் நிறைந்தாய் – பச்சை
மாவெளியில் மந்தையினம் வாழ்வதுங் கண்டாய் தாந்தா

உச்சிமலை மீதினிலே விக்கினேஸ்வரன்
உன்னருளைக் கண்டுதினம் உள்ளம் மகிழ்ந்தார்
மெச்சிவேழ நாயகனை வேண்டி நாடினோம் –படி
மீதிலேறி நின்று தமிழ் மாலை பாடினோம். தாந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி வேலன்

பல்லவி

ஓடுங் கங்கை மாவலி – ஓரம் வேலன் கோவிலாம்
கூடும் வள்ளி காதலன் – கொண்ட வண்ணக் கோவிலாம் – ஓடும்

அநுபல்லவி

நாடும் இந்த ஞாலமே – நாடுங் கந்தன் கோவிலாம்
ஆடும் நீல மாமயில் – ஆடுந் தேவன் கோவிலாம் – ஓடும்

சரணங்கள்

செந்தில் வீரன் சுந்தரன் – தேடிவந்த கோவிலாம்
தெய்வயானை வள்ளியும் – நாடிவந்த கோவிலாம்
கந்தகோட்டம் மன்னவன் – வந்துவாழுங் கோவிலாம்
காலந்தோறும் ஆனந்தம் – காணும் அன்புக் கோவிலாம் – ஓடும்

வீதியெங்குங் காவடி – கூடியாடுங் கோவிலாம்
வேட்டையாடும் வேலனார் – காட்டிலேகுங் கோவிலாம்
சோதியெங்கும் வீசிடும் – வேல்வீளங்குங் கோவிலாம்
சுற்றிநாலு திக்கிலும் – சோலைவாழுங் கோவிலாம் – ஓடும்

வேண்டிவாழும் மாந்தர்கள் – மேன்மை காணுங் கோவிலாம்
வேதனைகள் மாற்றிடும் – வெற்றிவேலன் கோவிலாம்
பாண்டிநாட்டுப் பார்வதி – பாலகனார் கோவிலாம்
பாவங்களும் நோய்களும் – பறந்தோடும் கோவிலாம் – ஓடும்

தீர்த்தமாடிப் புண்ணியம் – தேடுகின்ற கோவிலாம்
தேசமக்கள் யாவரும் – கூடுகின்ற கோவிலாம்
நேர்த்தி செய்து தோத்திரம் – பாடுகின்ற கோவிலாம்
நிம்மதியும் இன்பமும் – நீடுகின்ற கோவிலாம் – ஓடும்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை நாகபூஷணி அம்மை

ஆழக் கடல் நடுவிலே
அலைகள் மோதும் பதியிலே
வாழத் தரணி வாழ்த்திடும்
வண்ண நாக பூஷணி!
வேழத் திறைவன் ஐங்கரன்
வேலன் முருகன் சரவணன்
சூழச் சபரி மலையகம்
தோன்றும் அழகுச் சுந்தரன்

கூடி மகிழும் ஆலயம்
கொண்ட தாயின் பாதமே
நாடி வணங்கும் மாந்தர்கள்
நாளும் அடையும் ஆனந்தம்
கோடிக் கோடி இன்பமாம்
குறைவில்லாத யோகமாம்
ஈடில்லாத மோட்சமாம்
ஈஸ்வரியாள் கோட்டமாம்! ஆழக் கடல்

நாகதேவி அன்னையின்
நல்லபாதங் காணுவார்
நாட்டுமக்கள் யாவரும்
கேட்டு வரங் கொள்ளுவார்
யோகதேவி அன்பினால்
நோக்கி எம்மை ஆளுவாள்
நூறு வாதை தம்மையும்
நோய்களையும் மாற்றுவாள்

பாடல் ஓதும் பாவலர்
பாயிரங்கள் ஆயிரம்
பாடிப் பாடிப் போற்றிடும்
பார்புகழுந் தாயவள்!
கூடல் மதுரை நாயகி
கோல நயினை ஊரிலே
கோயில் கொண்டு வாழ்கிறாள்
குவலயத்தை ஆள்கிறாள்! ஆழக் கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடமேறிச் செல்லுவோம்
ஒன்று கூடிச் செல்லுவோம்
ஓங்கும் ஆழி தன்னையே
தாண்டி ஓடிச் செல்லுவோம்
வேடமென்னும் பேரலை
வீசிக் காலன் தோன்றினால்
வென்று கரை ஏற்றுவாள்
எங்கள் அருள் அன்னையாள்।

கொல்லும் விடம் யாவுமே
கொன்றிடாமல் ஏகுமே
கொண்ட நஞ்சு தீருமே
கோளகன்று மாறுமே
வெல்லும் வீர சங்கரி
வெற்றி நாக பூசணி
விண்ணவர்தம் நாயகி
மண்ணையாளும் போதிலே। ஆழக் கடல்

நாக வண்ண மாடமாம்
ஞாலத் தாயின் கூடமாம்
நாடிவாழும் மன்றமாம்
நாம் இறைஞ்சுங் கோவிலாம்
ஆகும் இன்பம் யாவுமே
ஆவதற்கு மூலமாம்
அத்தனையுஞ் சித்தியாய்
நாடுதற்கு மையமாம்।

தஞ்சமென்று போற்றுவோம்
தாயை நம்பி வாழுவோம்
தங்கத் தேரில் ஏறிடும்
அம்பிகையை நாடுவோம்
அஞ்சும் நிலை மாற்றுவாள்
அல்லல் ஓடத் தேற்றுவாள்
அன்னை நாக பூசணி
ஆனந்தமே தோற்றுவாள்। ஆழக் கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் கந்தசுவாமி

மாவிட்டபுரத்திலே கந்தசுவாமி –உன்னை
வலம்வந்து வணங்கினோம் கந்தசுவாமி
நாவிட்ட பிழைகளைக் கந்தசுவாமி –தினம்
நலம்பொறுத் தாளுமையா கந்தசுவாமி மாவிட்ட

தேரினில் வருமுன்றன் திருக் காட்சி –எங்கள்
சிந்தையிலே நிறைந்திடும் அருட் காட்சி
பாரினில் வேல்வரும் பக்திக்காட்சி –மக்கள்
பரவசம் அடைந்திடும் வண்ணக் காட்சி மாவிட்ட

ஆடி அமாவாசைத் தேரோட்டம் –உந்தன்
அருளின்பத் தீர்த்தம் நீராட்டம்
ஆடிவருங் காவடிக் களியாட்டம் –எங்கும்
ஆனந்தம் பரவிடும் வேலாட்டம் மாவிட்ட

கந்தசட்டி கவசத்தின் இன்பநாதம் –மனங்
கவருந் திருப்புகழின் இசைநாதம்
பந்தமுடன் பஜனைகள் செய்யும் நாதம் –திருப்
பதியெங்கும் ஒலித்திடுங் கலைநாதம் மாவிட்ட

வேல்வேல் வேலென்று ஆடிடுவோம் –வடி
வேலையும் மயிலையும் பாடிடுவோம்
காலிணை துணையென்று சூடிடுவோம் –எங்கள்
காவலனாம் உன்னை நாடிடுவோம் மாவிட்ட

மாமுகம் விடுத்தாள் பாண்டிமகள் –இங்கு
மாதலம் அமைத்தான் பாண்டிமன்னன்
நான்முகன் முதலாய் வானவரும் –தெய்வ
நாயகி வள்ளியும் தாம் மகிழ்ந்தார்। மாவிட்ட

சன்னதி நல்லூர் எங்கணுமே – நாம்
தரிசிக்கிறோம் உன்னைச் சண்முகனே
உன்னதி காரமும் வடிவேலும் –இந்த
உலகத்தை ஆண்டிடும் சரவணனே மாவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள்மடம் ஐயனார்

## பாடல் 1

எல்லைக் காவல்செய்யும் இறைவனாம் – நம்மை
இருந்து ஆளவந்த தலைவனாம்
தொல்லை மாளப் புனல் அருகிலே – வந்து
தோன்றினர் குருக்கள்மடத்திலே எல்லை

தருண மழை போலுந் தஞ்சமாம் – ஐயன்
தந்து நமையாளும் இன்பமாம்
கருணை மயம் மேவுங் காட்சியாம் – வரும்
காலன் எதிர்த்தாலும் மீட்சியாம் எல்லை

பொங்கல் பொலிந்தாகுங் கோலமாம் – தினம்
பூசை நிகழ்ந்தாகும் யோகமும்
தங்கும் ஆலமர நீழலாம் – எங்கள்
தவத்தின் பயனாகும் பதியிதாம். எல்லை

மலருந் தாமரையின் வாசமாம் –எங்கும்
வந்துலாவுந் திருக் கூடமாம்
புலருங் கதிர் ஐயன் தரிசனம் – கண்டு
போற்றி அலை மீது தோற்றுமாம். எல்லை

தூர வழி போகும் பயணமே – வருந்
தொல்லை தடுக்காமற் தொடருமே
ஊரை வலம்வந்து காத்திடும் – புகழ்
ஓங்கும் ஐயனார் அன்புதான் எல்லை

ஐயனார் பதங்கள் நாடுவோம் – நாம்
அடையுந் துயரங்கள் சாடுவோம்
உய்யும் வழியுண்டு காணுவோம் – மனம்
உருகி மன்றாடிப் பாடுவோம் எல்லை

123510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 2

### சரணம் சரணம் எங்கள் ஐயனாரே!

பல்லவி
ஐயனாரே எங்கள் ஐயனாரே
ஆலமரக் கோயில் கொண்ட ஐயனாரே ஐயனாரே

சரணங்கள்
குருக்கள்மடம் புகுந்தாய் ஐயனாரே
கோயில்கொண்டு வீற்றிருந்தாய் ஐயனாரே
இருக்குமுன் காவலிலே ஐயனாரே
எல்லோருக்கும் இன்பமையா ஐயனாரே ஐயனாரே

ஏழுவகை நாதத்திலும் ஐயனாரே
எங்குமே நிறைந்திருப்பாய் ஐயனாரே
வாழுகின்ற மாந்தர்களை ஐயனாரே
வாழவைக்கும் ஆண்டவனே ஐயனாரே ஐயனாரே

நாங்கள் செல்லும் பயணத்தில் ஐயனாரே
நாடுந் தடை நீங்கவேண்டும் ஐயனாரே
தாங்கி எம்மை ஆளவேண்டும் ஐயனாரே
தஞ்சமென்று கும்பிடுவோம் ஐயனாரே ஐயனாரே

சமரசம் உன்தலத்தில் ஐயனாரே
சந்ததம் விளங்குமையா ஐயனாரே
உமதரும் பாதத்திலே ஐயனாரே
ஓடிவந்து நின்றோமையா ஐயா ஐயனாரே

சரணம் சரணம் அப்பா ஐயனாரே –உன்னைத்
தானே நம்பி வாழுகின்றோம் ஐயனாரே
சரணம் சரணம் அப்பா ஐயனாரே – அன்புத்
தாளிணைகள் தஞ்சமையா ஐயனாரே! ஐயனாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளைத் துர்க்கை அம்மன்

தெல்லிப்பளைக்கும் மல்லாகத்துக்கும் இடையில் இருக்கின்றது கலட்டி என்னும் சிற்றூர். ஆங்கேதான் அன்னை துர்க்கை யம்மன் ஆலயங்கொண்டு அருளாட்சி புரிந்து வருகின்றாள். அன்னையின் பெருங்கருணை இன்று நாட்டின் எல்லையுங் கடந்து பாரின் எட்டுத் திக்கிலும் வியாபித்துப் பிரகாசிக்கின்றது. அன்னையின் அடிபணிந்து பன்னலம் பெற்றுவாழும் பக்தர்கள் ஆயிரமாயிரம்.

சுமார் அரைநூற்றாண்டு காலத்துக்கும் முன்னர் அம்மனுடைய சன்னிதானம் முட்கள் நிறைந்த செடிகொடிகளும், நெருக்கமான புதர்களும் அடர்ந்து வளர்ந்தவோர் சிறு சோலைக்குள்ளேயே அமைந்திருந்தது. ஆங்கே பாம்பினங்கள் ஆனந்தமாகச் சஞ்சரித்தனவாம். துர்க்கை, மாரி, காளி போன்ற வீரியத் தெய்வங்கள் விளங்கும் இடங்கள் தோறும் குறிப்பாகச் செந்நாகம், கருநாகம் போன்ற சர்ப்பங்கள் வாழ்ந்திருப்பதை நாம் நன்றாக அறிவோம். மழைகொடுக்கும் கருமாரி அம்மனுடைய அங்கமெல்லாம் நாக பாம்புகள் ஓடிவளைந்து விளையாடுங் காட்சியை அன்னையின் தலங்களிலே நாம் காணலாம்!

ஆகவே பாம்பினம் வாழும் புற்றுக்களும் அம்மன் தலத்தை அணுகியவாறு அங்குமிங்குமாகக் காணப்பட்டன.

அதனால் மக்கள் அச்சமுங் கூச்சமும் கொண்டனர். மிகவும் பய பக்தியுடன் அம்மனைச் சென்று தரிசித்து வந்தனர். புனிதமும், பரிசுத்தமும் மிக்க முறையிலே விரதம் அனுட்டித்துக்கொண்டே ஆசாரத்துடன் சென்றே அம்மனைத் தரிசனம் செய்துவந்தனர்.

பின்னர் அம்மனுடைய அனுக்கிரகத்தினால் தூயமனங்கொண்ட சில பக்தர்கள் கூடிக் காட்டைவெட்டித் திறந்த வெளிமயமாகச் செய்து அம்மனுடைய ஆலய வட்டாரத்தைத் திருத்தி அமைத்தனர்.
அதன் பின்னரே அனைவரும் சலனமின்றி அன்றாடம் சென்று அன்னை துர்க்கையை மன்றாடத் தொடங்கினர். இன்று தாயாரின் தலத்திற்குச் சென்று வழிபடும் பக்தர்கள் அனந்தகோடி. அன்பர்கள் அடைகின்ற வரங்களோ பலப்பல கோடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை அம்மாள்

பல்லவி
துர்க்கை அம்மாள் வீரம் தந்திடுவாள் –உடல்
தோற்றிடும் பலவீனம் மாற்றிடுவாள்......எங்கள் துர்க்கை

அநுபல்லவி
நிர்க்கதி ஆனவரைக் காத்திடுவாள் – எந்த
நேரத்திலும் துணையாய் நின்றிடுவாள் .....எங்கள் துர்க்கை

சரணங்கள்
வெற்றியின் தாயவளாய் ஆண்டிருப்பாள் –நம்மை
மீறிவரும் பகைதான் வென்றிருப்பாள்
நெற்றியின் கண் பொறிகள் காட்டிடுவார் –சிவன்
நேர்த்தியைப் போலிவளும் கேடறுப்பாள்.....எங்கள் துர்க்கை

தெல்லிப்பளைப் பதியில் வீற்றிருந்தாள் –அன்னை
தேசத்தை எங்கணுமே ஆளுகின்றாள்
சொல்லிப் புகழ்ந்து துதி பாடிடுவார் –நெஞ்சில்
தோற்றி நிறைந்திருப்பாள் துணையாவாள்.....எங்கள் துர்க்கை

முன்னர் அடர்ந்த வனம் நாடிவந்தாள் – அன்று
மூடிய சோலையிலே கோயில்கொண்டாள்
பின்னர் தலஞ்சிறக்கும் மேன்மை கண்டாள் –இன்று
பேரின்பமாகும் நிலை தானடைந்தாள்.....எங்கள் துர்க்கை

ஊரிலும் ஓங்கி நின்றாள் உத்தமியாள் –இந்தப்
பாரிலும் பேரடைந்தாள் பாங்குடையாள்
சீரிலும் மாந்தரினம் தேற்றுகின்றாள் –பெய்யும்
காரிலும் கருணை மனம் காட்டுகின்றாள்.....எங்கள் துர்க்கை

எப்பொழுதும் உதிரம் பாய்ச்சிடுவாள் –ஊனில்
ஈஸ்வரியாள் உறுதி ஊட்டிடுவாள்
முப்பொழுதும் புகழை ஏற்றிடுவோம் –அன்னை
மூலசக்தி பதங்கள் போற்றிடுவோம்......எங்கள் துர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர் ஆடிவேல் முருகன்

ஆடி வேல் ஆடுங் காட்சி – எங்கள்
ஆறு முகன் வேலன் மாட்சி
கூடி மகிழ்ந் தாடுங் காட்சி – வளர்
கொழும்பில் நாம் காணுங் காட்சி ஆடி

நாட்டின் பல கோணம் வாழும் – திரு
நான்கு மறை சாரும் மாந்தர்
காட்டி நலம் அன்பு கூடும் – திருக்
கந்தன் விளையாடுங் கோலம் ஆடி

ஆறு படை வீட்டின் நாதன் – கலை
அழகு முரு கேசன் பாதம்
ஏறு மயில் மீது காணும் – ஓர்
இனிய புகழ் ஆடி மாதம் ஆடி

கதிரை மலைக் கார்த்தி கேயன் – வந்து
காத்து நமை ஆளும் நேயன்
மதுரை உமைத் தாயின் மைந்தன் – மனம்
வாஞ்சை கொள்ளும் ஆடி யோகம் ஆடி

கலைகள் அரங் கேறும் கூடம் – நம்மைக்
காக்கும் அருள் வேலன் மாடம்
மலைகள் தமை நீங்கி வந்தே – இங்கு
மகிழும் விளையாட்டு மன்றம் ஆடி

மேள வாத்தி யங்கள் யாவும் – தலம்
மீதிலே முழங்கும் நாதம்
கோளை வெல்லும் ஒலி முரசம் – வெற்றி
கொட்டும் அழகேசன் கீதம் ஆடி

கொழும்பு நகர் நாலு திசையும் – இடம்
கொண்டு புவி ஆளுந் தேவன்
எழுந்து வலம் மேவும் நாட்டம் – அருள்
இன்பம் நிறை வாகும் தோற்றம் ஆடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேச முத்து மாரி

## பல்லவி

வானங் குளிரும் மேகம் இருளும்
மாதம் மூன்று மழையும் பொழியும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

## சரணங்கள்

தேனும் பாலும் பழமும் நிறையும்
தேங்கி நாளுங் கழனி விளையும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

ஆறுங் குளமும் நீரை வழங்கும்
அழகு மலர்கள் பூத்துக் குலுங்கும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

நோயும் நொடியுந் தீரும் மறையும்
நூறு வினையும் மாறி விலகும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

அன்பும் அறமும் அருளும் நாடும்
ஆய கலையும் அறிவுங் கூடும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

பாவம் பழிகள் ஓடி ஒழியும்
பாரை வாட்டுங் கோளும் அகலும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந் தோறுங் கருணை ஆளுங்
காக்கும் இறைவன் ஆட்சி நீடும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

காடும் மலையுங் கடலும் சூழுங்
காணும் உயிர்கள் யாவும் வாழும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

நாட்டில் எங்கும் நாலு திசையும்
நாடும் இன்பம் ஓடும் துன்பம்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

ஆவதெல்லாம் யோகமாகும்
ஆனந்தமே போகமாகும்
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

காவல் உண்டு நாளும் உண்டு
காரணியாம் தேசமுத்து
மாரி அம்மனால் – எங்கள்முத்து
மாரி அம்மனால் வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பிரசித்திபெற்ற சிவன் தலங்கள்

## திருக்கோணேஸ்வரம்

திருமலை விளங்கும் அலைகடல் மருவும்
சிவனை நீதினந் தினம் நாடு
கருமலை உருவாய்க் கலங்கிட மோதும்
கவலை மாறிடும் அணுகாமல்
பெருமலை இமயம் நிலைபெறுந் தலைவன்
பெருமை பாடிடுந் தலமீதாம்
அருமலைக் கோணம் ஆங்குறும் ஈசன்
ஆடிய பாதம் அடைவோமே!

## திருக்கேதீஸ்வரம்

பற்றால் மிகும் பரிவால் தினம்
பாடிப் பணிந் திடுவார்
வற்றா நிறைப் பாலாவியின்
மாநீர் குளித் திடுவார்
குற்றம் மறை கேதீச்சரன்
கோயில் புகுந் திடுவார்
சற்றும் வினை சாரா வரம்
தானே பெறு வாரே!

## முன்னீஸ்வரம்

தன்னால் மனம் எண்ணும் சிவன்
தாளே துணை ஆகும்
முன்னால் வழி மூடும் பழி
மூளும் வினை மாளும்
மன்னா திருள் ஏகுஞ் சுகம்
மாறா நிலை நீடும்
முன்னீஸ் வரன் முன்னே திரு
முறை ஓதிடத் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கொட்டிச்சோலை

## *தான்தோன்றீஸ்வரம்*

கன்நந்தி புல்லுண்ணும் ஆலயத்தில்
கர்வத்தினால் ஆளும் ஆணவத்தார்
அன்னியர் வெள்ளையர் மேலைநாட்டார்
அற்புதங் கண்டதால் அஞ்சலித்தார்।
தான்தோன்றி ஈஸ்வரன் கொக்கொட்டியூர்
தன்னிலே முன்னையோர் தருணத்திலே
மான்தோன்றி விளையாடுஞ் சோலையூராம்।
மாந்தர்க்கு வினைதீருங் கோயிலூராம்।

## *நகுலேஸ்வரம்*

ஆழிமுனை ஆங்குதலங் கொண்டசிவன் பாதம்
ஆனபழி பாவங்களைச் சாடிவரும் பாதம்
கீரிமலை மாதுறையில் நாமடையும் பாதம்
கேடகல நாடிவரங் கேட்குமரும் பாதம்
யாழின் நகர் மானிலத்தை ஆளுமருட் பாதம்
நம்பியவர் தங்குறைகள் அந்தமுறும் பாதம்
மாநகுலம் நாமமது நலமோங்கும் பாதம்
மன்னுமருள் ஈஸ்வரனின் வண்ணமலர்ப் பாதம்।

## *தேவந்துறைச் சிவன் கோயில்*

நாடி வணங்கும் தேவந் துறையில்
நாளும் நாளும் மன்றாட்டம்
தேடிவணங்கும் சிவனார் பதியிற்
திரளும் அடியார் தங்கூட்டம்
பாடிவணங்கும் ஈசன் துறையிற்
பாவந் தீரும் பழியோடும்
கூடிவணங்கும் கோட்டந் தன்னிற்
கோடிவரங்கள் கைகூடும்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சன்னதி

## பல்லவி

தொண்டை மானாறு சென்றாறு
தோகை மயிலாடும் கண்டாறு
கொண்ட கோள் மாயும் மனமாறு
குமரன் தலம்மீது களையாறு தொண்டை

## சரணங்கள்

தென்றல் மணம்வீசும் தீபக் கதிராடும்
செல்வக் கதிரேசன் பதிநாடு
மன்றல் மலராலும் சந்தம் அகிலாலும்
மலியும் அருளாலே புகழ்பாடு தொண்டை

தில்லையரன் மைந்தன் தேசந் தனையாளும்
திருமணிக் கோட்டம் முன்னாலே
வெல்லவரும் வல்ல வினையை மிகவோட்டும்
வேலை மன்றாடு பண்பாடு தொண்டை

தீண்டும் இருள்மாயந் தீரும் ஒளிகாணும்
தீய பழிபாவம் நேராது
மாண்டு பகையாவும் மறையும் நிலைக்காது
வாஞ்சையுடன் தீர்த்தம் நீயாடு தொண்டை

யாழின் திருநாடு கூடி வரந்தேடி
நாடும் அருளின்பம் பலகோடி
ஊழி வரைநீடும் உலகத் தமிழ்நாதன்
ஓங்கும் உயர்தீர்த்தங் கொண்டாடு தொண்டை

தோழிற் காவடிகள் சுமந்து வீதிகளைச்
சுற்றி ஆடிவரும் ஒயிலாட்டம்
ஆழிக் கரைமேவுந் தொண்டைப் புனலாடும்
ஆறுமுகன் காணுங் களியாட்டம் தொண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிபாளையம் கண்ணகி அம்மன்

மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிச் செல்லுகையில் குருக்கள்மடம் தாண்டியவுடன் வருவதே செட்டிபாளையம்.

செட்டிபாளையம் மஹாவித்தியாலயச் சந்தியிலிருந்து மேற்கே திரும்பிச் செல்லும் பாதை கண்ணகை அம்மன் சன்னிதானத் துக்கே செல்லுகின்றது. அரைமைல் தூரத்திற்கும் அண்மையா னதாகவே அம்மனுடைய ஆலயம் இருக்கின்றது.

மட்டக்களப்பு மானிலத்தில் கண்ணகி வழிபாடு மிகமிகப் பழங் காலத்திலிருந்தே நீடித்து நிலைத்துவருவதற்குச் செட்டிபாளை யம் கண்ணகியம்மன் தலமே ஒரு முக்கியமான சரித்திரச் சான் றாக விளங்குகின்றது.

ஆண்டுதோறும் வைகாசிப் பூரணை நாளிலேயே அம்மனுடைய ஆண்டு மகோற்சவமான திருக்குளித்தற் திருவிழா நடைபெறும்.

ஆனந்த பரவசமும் பக்தி மேம்பாடும் விளங்கும் அம்மனுடைய குளித்தல் விழாவின்பொழுது அடியார்களின் நேர்த்தி வழிபாடு களும், கர்ப்பூரத் தீபாராதனைகளும் நிகழ்ந்தவண்ணமிருக்கும்.

ஆலயப் பூசகர்கள் மஞ்சள் குங்குமம் சந்தனம் குளித்து, வேப் பிலைக் கரகத்தைத் தலையில் ஏந்தியவாறு, கமுகம்பூப் பாளை, தென்னம்பூப் பாளைகளைக் கைகளில் எடுத்த வண்ணம் தெய் வீக உணர்ச்சி மேலீட்டால் ஆலயவீதியெங்கும் ஆர்ப்பரித்து நின்றாடி மன்றாடி அடியார்களுக்கு அம்மனுடைய அருள்வாக்குச் சொல்லும் ஆனந்தக் காட்சிகள் அற்புத நிகழ்ச்சிகளாகவே தோன்றும். கிழக்கிலங்கையில் – காரைதீவு, பெரியநீலாவணை, களுவாஞ்சிகுடி, புதுக்குடியிருப்பு, ஈச்சந்தீவு போன்ற ஊர்களி லும் இன்னும் பல இடங்களிலும் கண்ணகியம்மன் ஆலயங்கள் உள்ளன. வடமானிலத்தில் வற்றாப்பளையில் கண்ணகியம்மன் கோயில் மிகப் பிரசித்திபெற்று விளங்குகின்றது.

தமது வாழ்க்கையில் அன்னையின் அருளைப் பெற்று ஆனந்தம் அடையும் பக்தர்கள் கோடானு கோடி மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி அம்மன் பாடல்கள்

*பாடல் 1*

பல்லவி

கண்ணகி நமக்குத் தாயார் – வழி
காட்டும் மதுரைத் தாயார் கண்ணகி

அநுபல்லவி

விண்ணவர் தமக்குந் தாயார் – எங்கள்
வீரிய பத்தினித் தாயார் கண்ணகி

சரணங்கள்

செட்டிபாளையத்து மாதா – எட்டுத்
திக்கிலும் விளங்கும் மாதா
மட்டுநகர்த் திரு நாட்டில் – அருள்
வாரி வழங்கிடும் மாதா! கண்ணகி

கோவலன் குற்றமில்லாதான் – அவன்
குணத்தை அறியும் மாதா
காவலன் சபையில் நின்றாள் – முறை
காணும் வழக்கிலே வென்றாள் கண்ணகி

கானல் அடங்கிடத் தானே – வை
காசியில் நிலவிற் குளிப்பாள்
ஊனம் மறைந்திடத் தானே – பேர்
உவகை அடைந்து களிப்பாள் கண்ணகி

ஆடுங் குளித்தலின் இன்பம் – தாய்
அன்பில் நிறைந்திடும் இன்பம்
நாடு நகரங்கள் எங்கும் – இந்த
நாளில் அருள்மயம் பொங்கும் கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் குங்கும வரமே – நம்
மாதர் மகிழத் தருவாள்
தஞ்சம் அடையும் நேரம் – நம்மைத்
தாங்கி அணைக்க வருவாள் கண்ணகி

நாட்டில் அம்மாள் வாழும் – தலம்
நாலு திசையும் உண்டாம்
ஏட்டில் பாடும் தாயை – நம்
இனிய சிலம்புக் காதை கண்ணகி

மாதர் குலத்தை வாழ்த்தும் – தன்
மானம் வளர்க்கும் மாதா
பாதம் பணிய வாரீர் – அவள்
பாலிக்கும் அருள் காணீர் கண்ணகி

நோயை நொடியை மறைப்பாள் –பகை
நூறும் அகற்றி முடிப்பாள்
தாயின் கருணை கிடைக்கும் – இங்கு
தானந் தருமம் நிலைக்கும் கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் இருக்கிறாள் கண்ணகித் தாய்

*பாடல் 2*

காரைதீவில் கண்ணகி அம்மாள்
காட்சி கொடுக்கிறாள் –நம்மைக்
காத்து அணைக்கிறாள் காரை

ஈச்சந்தீவில் கண்ணகி அம்மாள்
இன்பம் அளிக்கிறாள் –நம்மை
ஏந்தி அணைக்கிறாள் காரை

வற்றாப்பளையிற் கண்ணகி அம்மாள்
மன்னுந்தலங் கொண்டாள் –நம்மை
வாரி அணைக்கிறாள் காரை

களுவாஞ்சி குடியில் அம்மாள்
காவல் புரிகிறாள் –கருணை
காட்டி அணைக்கிறாள் காரை

ஆரையம்பதிக் கண்ணகி அம்மாள்
அபயம் அளிக்கிறாள் –தினம்
அன்புடன் அணைக்கிறாள் காரை

புதுக்குடியிருப் பாங்கும் அன்னை
புகுந்து இருக்கிறாள் – அருள்
புரிந்து அணைக்கிறாள்। காரை

ஊர்கள் தோறும் கண்ணகி அம்மாள்
உருவெடுக்கிறாள் – நம்மை
ஒன்றாய் அணைக்கிறாள்। காரை

நாட்டி லெங்குங் கண்ணகி அம்மாள்
நாடி இருக்கிறாள் –நம்மை
நாளும் அணைக்கின்றாள் காரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுவாஞ்சிகுடி கண்ணபிரான்

கண்ணன் பேரைச் சொல்லுங்கள்
காலந் தோறும் வெல்லுங்கள்
களுவாஞ்சி குடியினிலே
கண்டு போற்றி நில்லுங்கள் கண்ணன்

பாடிக் கீதை ஓதுங்கள்
பாவங்களைத் தீருங்கள்
பகவானின் திருப்பாதம்
பரிவோடே சேருங்கள் கண்ணன்

துன்பஞ் சூழும் போதிலும்
தொல்லை நேரும் போதிலும்
துணையாகும் திருமாலைத்
துதிபாடி நாடுங்கள் கண்ணன்

ஊதும் குழல் ஓசையால்
உள்ளங்களை நாடுவான்
ஏதும் இடர் தோன்றினால்
இன்பகீதம் பாடுவான் கண்ணன்

கண்ணகித் தாய் மேற்கிலே
காட்சி தரும் ஊரிலே
காத்திருக்கும் நாயகன்
கண்ணன் கோவில் காணுங்கள் கண்ணன்

காலப் பூசை மூன்றிலும்
காணுந் தீபம் ஆனந்தம்
காலந்தோறும் வாழ்விலே
காண்பதெல்லாம் பேரின்பம் கண்ணன்

பாதை ஓரம் தன்னிலே
பாரை ஆளும் கோவிந்தன்
கீதை சொல்லுங் காவலன்
கீர்த்தி காணுங் கோவிலாம் கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகண்டிப் பிள்ளையார்

பல்லவி

முருகண்டிப் பிள்ளையார் முன்னே நீ நில்லையா
முறையிடுங் குறைகளை அவரிடம் சொல்லையா

அநுபல்லவி

கருமங்கள் உனக்கே கைகூடும் வெல்லையா
கருதிய பயணம் தொடர்ந்துநீ செல்லையா முருகண்டி

சரணங்கள்

தாமதம் எதுவும் தோன்றுவதில்லைத்
தடைகள் வழியிலே தடுப்பதுமில்லை
நாமெதிர் கொள்ளும் மாயங்களில்லை
நாயகன் ஆள்வார் பயமொன்றுமில்லை முருகண்டி

காற்றுடன் புயலாய் மாறிய போதும்
கடும் மழை வெள்ளம் மீறிய போதும்
தோற்றிடும் மின்னல் இடிவரும் போதும்
துணையிருப்பார் எங்கள் தும்பிக்கை நாதன் முருகண்டி

பாதையில் நோயின் பாதகம் ஏது
பாடுகள் நமக்கு நேரிடல் ஏது
வாதைகள் வழியில் வருவதும் ஏது
வாரண தேவன் காவலினாலே முருகண்டி

மோதி வீரட்டும் தீவினை மாளும்
முந்தி வருத்தும் நிந்தனை மாயும்
சோதி விளங்கும் மாவழி தோறும்
துங்கக் கரிமுகன் ஆண்டவனாலே முருகண்டி

பண்ணிய பயணம் பாங்குடனாகும்
பாதகம் நேருங் பாடுகள் தீரும்
எண்ணிய நோக்கம் திண்ணம் இனிக்கும்
ஏரம்ப நாதன் பேரன்பினாலே முருகண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# வல்லிபுரம் மாதவன்

பல்லவி

அலைகடல் மருவீடுந் திருப்புரமாம்
அதுதான் அரங்கனின் வல்லிபுரமாம் அலை

அநுபல்லவி

மலைதிருப் பதியருள் ஆண்டவனாம்
மாலவன் ஆலயம் தானிதுவாம் அலை

சரணங்கள்

வடமுனைத் தேசத்தின் மாந்தரையும்
வையகம் ஆங்குறும் யாவரையும்
படமெழும் பாம்பணை மீதுறைவான்
பாங்குடன் ஆண்டிடுங் கோவிலிதாம் அலை

தாமரைக் கண்ணெழில் மாதவனார்
தாள்பணிந் தாரவர் தாமுயர்ந்தார்
கோமளக் கண்ணனின் பாதங்களைக்
கும்பிடு வாரவர் கோளகன்றார் அலை

குங்கும நாயகி ஸ்ரீதேவி
கூடி மகிழ்ந்திடும் ஸ்ரீரங்கன்
மங்கள மாதலம் வாரீரோ
வாழ்க்கையில் ஆனந்தங் காணீரோ அலை

வடமரின் ஆட்சியின் மானிலத்தில்
வந்தருள் தந்திடுந் திருமாலை
நடமிடும் நாகமே துணையாகும்
நாரணக் கடவுளை நாடிடுவோம் அலை

பொங்கிடும் பேரலைப் புயல்தடுப்பான்
பூகம்பம் எரிமலை போக்கிடுவான்
திங்களும் ஞாயிறும் திகழவைப்பான்
திருப்பதி நாயகன் வல்லிபுரத்தான் அலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுக்கேணி முருகையன்

வங்கமணிக் கடல் ஓரத்திலே – திரு
மாமயில் வாகனன் கோவிலடி
பொங்கும் அலைவந்து மோதுமடி – வண்ணப்
பூமணக்குந் தென்றல் வீசுமடி வங்கமணி

எங்குந் திருநீற்றுக் கேணியிலே – தமிழ்
இன்பத் திருப்புகழ் நாதமடி
தங்கி வளர்ந்திடுந் தாழையிலே – மனம்
தாவி யெழுந்திடும் வாசமடி வங்கமணி

பொங்கலும் அமுதும் பேரழகன் – தினம்
பூரிக்கும் ஆனந்தப் பூசையடி
குங்குமஞ் சந்தனங் குங்கிலியம் – அவன்
கோவிலிற் கமழுஞ் சந்தமடி வங்கமணி

கூடித் தினந்தினம் வந்திடுவார் – மக்கள்
கூட்டம் ஒருங்கே திரண்டிடுவார்
கோடி வரங்களைக் கொண்டிடுவார் – அந்தக்
கோலச் சிறப்பைநீ பாருமடி வங்கமணி

அண்ணன் வினாயகர் ஆதியிலே – வந்து
ஆலயங் கொண்டநல் லூரிதடி
வண்ண முருகையன் பின்னாலே – இங்கு
வருகை தந்ததும் யோகமடி வங்கமணி

ஆறுபடைத் தலம் ஆங்கிருப்பான் – நம்மை
ஆளுங் குமரையன் ஈங்கிருப்பான்
நூறுபடைத் துயர் நோயறுப்பான் – உயிர்
நோக்கிடுங் காலனைத் தாக்கிடுவான் வங்கமணி

கார்த்திகை நாளிலே தீபங்களாம் – ஒளி
காணும் அண்ணாமலைக் காட்சிகளாம்
கீர்த்தி விளங்கிடும் ஆனந்தமாம் – இசைக்
கீதம் முழங்கிடுஞ் சோபிதமாம் வங்கமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் – விம்பிள்டன் பிள்ளையார்

பல்லவி
விம்பிள்டன் பிள்ளையாரைக் கும்பிடவாரீர்
நாளும் – கும்பிட்டு வாரீர் விம்பிள்டன்

சரணங்கள்
அம்பிகையின் பாலகனை
ஆண்டருளும் நாயகனை
நம்பி வந்து பாதங்களை
நாடிவரும் எங்களுக்குக்
கோடி இன்பமாம் – நூறு – கோடி இன்பமாம் விம்பிள்டன்

கொண்டவினை தானகலும்
கோளாறு மாறிவிடும்
லண்டன் நகர்ப் பிள்ளையாரை
நாடிவரும் எங்களுக்குக்
கோடி இன்பமாம் – நூறு – கோடி இன்பமாம் விம்பிள்டன்

சொந்த நாட்டில் ஆங்குமிங்கு
வந்த நாட்டு மண்ணிலேயும்
நொந்துமனம் பிள்ளையாரை
நோக்கிவரும் எங்களுக்குக்
கோடி இன்பமாம் – நூறு – கோடி இன்பமாம் விம்பிள்டன்

நிந்தனைகள் நீங்கிடவே
நேருமிடர் மாறிடவே
தந்தமுகன் காலடியே
தஞ்சமாகும் எங்களுக்குக்
கோடி இன்பமாம் – நூறு – கோடிஇன்பமாம் விம்பிள்டன்

அங்குமிங்கும் ஆழியலை
போலலைந்து சீர்குலைந்து
தங்கிவாழும் எங்களுக்குத்
தம்பிரானின் கோவிலிலே
கோடி இன்பமாம் – நூறு – கோடி இன்பமாம் விம்பிள்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் பிள்ளையார்

பல்லவி

விளையாட்டுப் பிள்ளையார்
விம்பிள்டன் பிள்ளையார்
விளையாடுவார் – வாழ்வில்
வெற்றி தருவார் விளை

சரணங்கள்

கும்பிடுவார் நெஞ்சிலே
கோயில்கொண்டு வாழுவார்
நம்பிடுவார் தம்மையே
நாடி நித்தம் ஆளுவார் விளை

அம்பிகையின் பாலகன்
ஆனைமுகன் ஆண்டவன்
தும்பிக்கரன் நாயகன்
தோன்றினாரே லண்டனில் விளை

கண்டவர்கள் போற்றுவார்
காணும் இடர் வெல்லுவார்
கொண்ட குறை மாற்றுவார்
கோடி இன்பங் கொள்ளுவார் விளை

மேலை நாட்டு மண்ணிலே
மேலுஞ் சைவம் ஓங்கவே
ஆலயங்கள் தோற்றவே
ஆசி தரும் பிள்ளையார் விளை

சக்தி சிவன் கோவிந்தன்
சரவணன் கோவில்கள்
எத்திசையும் லண்டனில்
இங்குவைத்த பிள்ளையார் விளை

நாட்டிலேயும் பாரிலும்
நாயகனார் தோற்றினார்
ஏட்டிலேயும் பாட்டிலும்
ஏற்றி மாந்தர் போற்றினார் விளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழுகாமம் ஊராளும் தெய்வங்கள்

*ஊஞ்சற் பாடல் 1*

## கேணிக்கரைப் பிள்ளையார்

தந்தனத் தோம் தானத்தோந் தந்த
நானத் தோம் தானானே தந்தன

கேணிக்கரை மீதினிலே வந்து
கேடகற்றும் பிள்ளையாரே
தோணியப்பன் சங்கரியாள் பெற்ற
தும்பிக் கரம் பிள்ளையாரே தந்தன

வேம்படியில் வீற்றிருக்கும் துறை
வேழமுகன் நீயல்லவோ
நாம்படிக்கும் மந்திரங்கள் உன்தன்
நல்லபுகழ் தானல்லவோ தந்தன

கிண்ணையடி வெள்ளிமலைத் தலம்
கீர்த்தியுடன் கொண்டவரே
பண்ணைகளின் போகமெல்லாம் என்றும்
பாங்குடனே நீவளர்ப்பாய் தந்தன

மாவேற்கடைச் சன்னிதியில் உன்னை
வணங்கினோம் நாளுமையா
காவேலன் அன்புத் தமயனே
காலடியே தஞ்சமையா தந்தன

ஆலமரம் நீழல் தரும் உந்தன்
ஆலயங்கள் ஆயிரமாம்
மூலமுதல் ஆண்டவனே எம்மை
முன் நடத்தும் காவலனே தந்தன

ஊரிலெங்கும் நீயிருந்தாய் புகழ்
ஓதுகின்றோம் ஐங்கரனே
பாரிலெங்கும் ஆளுகின்றாய் பதம்
பாடுகின்றோம் ஏரம்பனே தந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துமாரி அம்மன்

*ஊஞ்சற் பாடல் 2*

தனன்ன தன தனன்ன தன
தனன்ன தன தனன்னே
தனதந்தை தனதந்தை
தனதந்தை தனன்னே தனன்ன

மாதத்திலே மூன்று மாரி பொழிவாயே
மங்காத செல்வங்கள் தாமருளுவாயே
பாதத்திலே வந்து நாங்கள்பணிவோமே
பார்வதியே சங்கரியே பாராளுந் தாயே தனன்ன

முத்தழகு மாரியே மூர்க்கமது கொண்டாய்
மூன்றுமா சக்தியே முப்புர மெரித்தாய்
அத்தனையும் ஆணவம் நீயுட னறுத்தாய்
ஆனந்த வல்லியே பேரின்பமானாய் தனன்ன

தான்தோன்றி ஈஸ்வரன் தேவிநீ அம்மா
தாமோதரன் மாயன் தங்கைநீ அம்மா
கூந்தலை விரித்தேநீ கும்பமணிவாயே
குங்குமஞ் சந்தனம் மஞ்சளணிவாயே தனன்ன

அன்றாடம் உன் பூசை காணுவோம் தாயே
ஆண்டுச் சடங்குகள் ஆற்றுவோம் தாயே
மன்றாடி நின் தீர்த்தம் ஆடுவோம் தாயே
வாழ்வுக்கு மாவரம் தேடுவோம் தாயே தனன்ன

நேர்த்திகள் கொண்டே குவிக்கிறோம் நாங்கள்
நிம்மதியும் இன்பமும் கொள்கிறோம் நாங்கள்
கீர்த்தியும் செல்வமும் ஈட்டுவாய் நீயே
கேடுகள் நேராமல் ஆளுவாய் நீயே தனன்ன

ஆண்டுக் குளித்தல் நீ ஆடிமகிழ்வாயே
ஆனந்தம் அன்னையே நாடிமகிழ்வாயே
வேண்டும் வரங்களைத் தந்துமகிழ்வாயே
மேன்மைகள் யாவையும் தந்துமகிழ்வாயே தனன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திர வேலாயுத சுவாமி

*ஊஞ்சற் பாடல்* **3**

தந்தனத் தானதன் னாதன தந்தனத்
தந்தனத் தானானே – தன
தந்தனத் தானதன் னாதன தந்தனத்
தந்தனத் தானானே தந்தன

ஊருக்கு மத்தியில் ஆளும் முருகனே
உத்தம நாயகனே – இந்தப்
பாருக்கு நித்தம் பொழியுங் கருணையைப்
பாலிக்கும் ஆனந்தமே தந்தன

சித்திர வேலின் திருப்புகழ் ஆலயம்
செல்வம் மிகுந்ததையா – புகழ்
அத்தனையும் தரும் ஆறிரு கைகளும்
ஆறுதல் தந்ததையா தந்தன

கேணிக் கரையினில் அண்ணன் விநாயகர்
கிட்டியே வீற்றிருந்தார் – உந்தன்
மாணிக்க வேலின் மகிமையைக் கண்டுனை
வாழ்த்தி மனம் மகிழ்ந்தார் தந்தன

அன்னை பாஞ்சாலியும் ஆவலுடன் வந்து
அக்கினிக் கட்டைகளை – உங்கள்
முன்னிலை தன்னிலே தானெடுப்பாள் தணல்
மூட்டி எரித்திடுவாள் தந்தன

பன்னூறு காலத்துப் பேரால மாமரம்
பாரிற் சிறந்த மரம் –என்றும்
தன்னிகர் அற்றே விளங்கும் தலமிது
தங்க வேல் ஆயதனே! தந்தன

பொங்கல் மணக்கும் விநாயகர் பூசைகள்
மங்களப் பூசைகளாம் –அருள்
பொங்குமுன் ஆலயப் பூசைகள் என்றுமே
ஆனந்தப் பூசைகளாம் தந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா விஷ்ணுமூர்த்தி

*ஊஞ்சற் பாடல் 4*

தந்தனத்தோம் தனதனத்தோம்
தனதனத்தோம் தானோம்
தனதனத்தோம் தானோம்
தந்தனத்தோம் தனதனத்தோம்
தனதனத்தோம் தானோம்
தனதனத்தோம் தானோம் தந்தன

மாங்கிளையின் மீதினிலே
மாலைமணி ஊஞ்சல்
மாலைமணி ஊஞ்சல்
தாங்கி யெம்மை மேகமெல்லாந்
தாவிவரும் ஊஞ்சல்
தாவிவரும் ஊஞ்சல் தந்தன

ஓங்கிநிற்கும் ஆம்பிலத்தில்
உன்னியாடும் ஊஞ்சல்
உன்னியாடும் ஊஞ்சல்
நாங்கள்தொழும் மாலவனைப்
பாடியாடும் ஊஞ்சல்
பாடியாடும் ஊஞ்சல் தந்தன

வந்துதிருப் பழுகாமம்
வாழும் மகா தேவன்
வாழும் மகா தேவன்
மாமதுரை மாளிகையில்
வாழும் வாசு தேவன்
வாழும் வாசு தேவன் தந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தமுடன் போற்றிவரும்
மாந்தருக்கு நேசன்
மாந்தருக்கு நேசன்
பாதங்களை நாடிவரும்
ஏழைகளின் தோழன்
ஏழைகளின் தோழன் தந்தன

மாலையிலே திருவேட்டை
ஆடிவரும் காட்சி
ஆடிவரும் காட்சி
மானிடரும் வானவரும்
காணுமருங் காட்சி
காணுமருங் காட்சி தந்தன

காலைவரைக் கோவிலிலே
காணுங்கலைக் காட்சி
காணுங்கலைக் காட்சி
கண்ணன் நந்த பாலன்வீந்தை
காட்டியாடுங் காட்சி
காட்டியாடுங் காட்சி தந்தன

செங்கருட வாகனத்தில்
ஏறிவரும் தோற்றம்
ஏறிவரும் தோற்றம்
சீரழகுத் திருமாலின்
திருப்பவனித் தோற்றம்
திருப்பவனித் தோற்றம் தந்தன

அங்கமெலாம் பூண்டுவரும்
ஆடையலங்காரம்
ஆடையலங்காரம்
அழகுதிருப் பதியில்வாழும்
வெங்கடேசன் கோலம்
வெங்கடேசன் கோலம் தந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவரங்க நாயகனார்
திகழும் பதி ஈதாம்
திகழும் பதி ஈதாம்
வருடந்தோறும் திருவிழாக்கள்
காணும் கோயில் ஈதாம்
காணும் கோயில் ஈதாம்। தந்தன

தங்கையவள் பாஞ்சாலி
கோயில் கொண்டதாலே
கோயில் கொண்டதாலே
தாமிருக்கும் ஊரினிலே
தானமர்ந்ததாலே
தானமர்ந்ததாலே தந்தன

எங்கள் நமோ நாராயணன்
இன்பமாகினாரே
இன்பமாகினாரே
ஏற்றி வாழும் எங்களுக்கும்
அன்பு சொரிந்தாரே
அன்பு சொரிந்தாரே தந்தன

பத்து அவ தாரங்களைப்
பாரிலெடுத்தாரே
பாரிலெடுத்தாரே
அத்தனையும் தாங்கி நீதி
ஆங்கு படைத்தாரே
ஆங்கு படைத்தாரே தந்தன

வாழ்கவென்று போற்றிடுவோம்
வாசுதேவன் பாதம்
வாசுதேவன் பாதம்
வாழ்கவென்று போற்றிடுவொம்
வண்ண மாயன் பாதம்
வண்ண மாயன் பாதம் தந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரௌபதி அம்மன்

*ஊஞ்சற் பாடல் 5*

ஊஞ்சல் பறக்குது பள்ளையமாம்
உன்னிப் பறக்குது பள்ளையமாம் ஊஞ்சல்

வீரமரத்திலே கட்டை வெட்டி
வெட்டுங் குழியிலே குவிக்கிறோம்
கோர நெருப்பிலே கொண்டுவந்து
கொழுந்தில் அடுக்கி எரிக்கிறோம் ஊஞ்சல்

எரிந்து கட்டைகள் வெந்தணலாய்
இருக்கும் போதிலே மஞ்சளிட்டே
சிரிக்குந் தாயவள் பாஞ்சாலித்
தேவி நெருப்பிலே குளிக்கிறாள் ஊஞ்சல்

பாஞ்சாலி எங்கள் பத்தினியாம்
பாசம் விளங்கும் உத்தமியாம்
பாய்ந்தாடும் தீப் பள்ளையமாம்
பாவம் தொலையும் பள்ளையமாம் ஊஞ்சல்

தீயில் நடக்கும் மாந்தருக்கு
தீரும் வினைகள் ஆயிரமாம்
தாயின் கருணை எங்களுக்கே
தஞ்சம் ஆவது நிச்சயமாம் ஊஞ்சல்

தேசத்தலே வரும் நோய்களெல்லாம்
தீர்த்து வைப்பாள் திரௌபதி
மாசத்திலே இங்கே மூன்று மழை
வழங்கிடுவாள் மாதரசி ஊஞ்சல்

பாண்டவர் இனிய பாரியவள்
பாரத வெற்றியின் தாயாளாம்
ஆண்டருளும் எங்கள் அன்னையவள்
ஆலயம் விளங்கும் ஊரிதுவாம்! ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர்
## ஆலயச் சூழலும்
## கும்மிப் பாடலும்

மட்டு மாநகரிலிருந்து கல்லடிப் பாலத்தைக் கடந்து கல்முனை நோக்கிச் செல்லும்பொழுது இரண்டு மைல் தூரத்துக்குள்ளேயே வலது பக்கமாக அமைந்துள்ளது கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.

தவத்திரு விபுலானந்த அடிகளாரின் தவயோக ஸ்தாபனமாக வும், சமரச நிலையமாகவும் விளங்கும் சிவானந்த ஆச்சிரமமும், அடிகளாரின் மணிமண்டபமும் பகிரங்க வீதியின் கிழக்குப் பாங் கிலே, நமக்கு இடப்புறமாக அமைந்திருப்பதையும், எம் பெரு மான் ஸ்ரீ சித்தி விநாயகரின் தலம் மேற்குப் பாங்கிலே நமக்கு வலப் புறமாக அமைந்திருப்பதையும் நாம் காணலாம்.

இது ஒரு தெய்வீக இணைப்பு என்றும் நமக்கு எண்ணத் தோன்றும்!

நாட்டு வழி ஓரம், காட்டுப் பாதை ஓரம், மலைமுடிச் சிகரம், மலையடிவாரம், ஆலமரத்தடி, அரசமரத்தடி, வேம்புமரத்தடி, கேணிக்கரை, குளக்கரை, ஆற்றங்கரை, வாவிக்கரை, வயற்புறம், கழனிப்புறம், கல்வி நிலையம், தொழில் நிலையம் ஆன எந்த இடமானாலும் ஆங்கே எவராயிருப்பினும் ஒரு சிறு கல்லைத் தூக்கிவைத்து உள்ளம் நிறைந்த உண்மையான பக்தியுடன் பிள்ளையாரே! பெருமானே! என்றழைத்து மன்றாடி வழிபாட்டை ஆரம்பித்துவிட்டாற் போதும்!

பிள்ளையார் பெருமானுக்கு ஆங்கே ஓர் ஆலயமே தோன்றிவிடும். அவ்வாறு தோன்றிய தலம் தங்குதடை எதுவுமே இன்றித் தானாகவே வளர்ந்துவரும். பின்னர் பேரான ஒரு பெருந்தல மாகவும் மாறிவிடும்.

கோடானுகோடி மக்கள் கும்பிடும் ஓர் தேசத் தலமாகவும் திகழும் என்றாலும் அது ஒருபொழுதும் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறுதான் ஆரம்ப காலத்தில் ஒரு குடும்பத் தலமாக உருவாகி வளர்ந்துவந்த எம் பெருமான் ஸ்ரீ சித்தி விநாயகருடைய கல்லடி உப்போடைத் தலமும் இன்று தேசமக்களின் திருத்தலமாக விளங்குவதை நாம் காண்கின்றோம்।

## விநாயகர் கும்மிப் பாடல்

சித்தி விநாயகர் ஆட்சியில் நமக்குச்
சித்தி உண்டாமடி செந்தமிழே
சித்தம் மகிழடி செந்தமிழே சித்தி

கற்றதும் வளரும் கல்வியும் உயரும்
கவலை மறையும் செந்தமிழே
கருணை விளங்கும் செந்தமிழே சித்தி

கல்லடி உப்போடைச் செல்லவிநாயகர்
காலடி தானடி செந்தமிழே
காத்தருள் புரியும் செந்தமிழே சித்தி

ஆனந்த விபுலன் ஆச்சிரமத்திலும்
அஞ்சலி நடக்கும் செந்தமிழே
ஆனைமுகனுக்குச் செந்தமிழே சித்தி

பேரிசை ஒலிக்கும் யாழிசை கேட்கும்
பெருமை கொண்டவர் செந்தமிழே
பிள்ளையார் இறைவன் செந்தமிழே சித்தி

அன்று சிறுதலம் ஆனதலமின்று
ஆங்கொரு மாதலம் செந்தமிழே
அழகு சன்னதி செந்தமிழே சித்தி

காலைப் பிடித்து வணங்கிடும் இறைவன்
கற்பக நாயகன் செந்தமிழே
கணங்கள் தலைவன் செந்தமிழே சத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைக் கும்மி

மாணிக்க கங்கையில் நீராடி – வண்ண
மாமயில் நாதனை மன்றாடிக்
காணிக்கையாகச் செலுத்தி விட்டேன் – என்றன்
காயம் மனம் செயல் யாவையுமே மாணிக்க

சூரன்மலை தன்னில் ஏறிநின்றேன் – அங்கே
சுற்றி வலம்வந்து பாடிநின்றேன்
வீரன் முருகனை வேண்டிநின்றேன் – அவன்
வெற்றித் திறத்தினை மெச்சி நின்றேன் மாணிக்க

வள்ளிதெய் வானையின் கோயில் கண்டேன் – அந்த
மாட்சிமை உள்ளங் கவரக் கண்டேன்
புள்ளி மயிலுடன் மானுங் கண்டேன் – நகை
பூண்டுவரும் எழில் யானை கண்டேன் மாணிக்க

கும்மி கோலாட்டங்கள் ஆடக்கண்டேன் – பக்தர்
கூடிக் கரகங்கள் ஆடக் கண்டேன்
நம்மிறைவன் கந்தன் காவடிகள் – எந்த
நாளும் மகிழ்ந்துகொண் டாடக் கண்டேன்! மாணிக்க

சாதிமதம் என்னும் பேதமின்றி – மக்கள்
சங்கமம் ஆகும் நிலைமை கண்டேன்
நாதியென்றே வரும் சீரடியார் – தம்மை
நாளும் முருகையன் ஆளக் கண்டேன்! மாணிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி நாட்டுப் பேர்ளின் மாநகர் முருகன் 108 போற்றிகள்

பேர்ளின் ஸ்ரீ முருகன் கும்பாபிஷேகம்
நிறைவேறியதை முன்னிட்டுப் பாடி
நூலாக வெளியிட்ட பாடல்கள்

## தலவரலாற்றுப் பாடல்

தொண்ணூற்றி ஓராம் ஆண்டிற்
தொடங்கிய புனிதப் பணிகள்
கண்ணாரக் கண்டே நாங்கள்
களிப்பூர முழுமை கொண்டே

தொண்ணூற் றிரண்டாம் ஆண்டிற்
தொழுதிடத் தலமாய்த் தோன்றி
விண்ணோடு மண்ணும் எண்ணி
வியந்திட மலர்ந்த தன்றோ!

பேர்ளின் மா நகரந் தன்னில்
வாழும் மெய் அன்பர் தாமும்
ஜேர்மன் மா தேசம் எங்கும்
செறிந்து வாழ் தமிழர் தாமும்

ஒன்றிணைந் தொருமைப் பட்டே
ஒப்பற்ற கோயில் கண்டார்
குன்றில்நின் றாடும் வண்ணக்
குமரனைத் தொழவே நன்றாய்!

தனமுளோர் நிதி கொணர்ந்தார்
தயவுளோர் நலம் இணைந்தார்
மனமுளோர் துணை புரிந்தார்
மாறிலார் கூடி நின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமென்னும் தமிழ் நினைந்தார்
எங்கள் மா மறை உணர்ந்தார்
வனமகள் வள்ளி நாதன்
வாழுமோர் கோயில் கண்டார்।

கும்பாபி ஷேகம் செய்தார்
குவலயம் மகிழச் செய்தார்
சங்காபி ஷேகம் செய்தார்
சைவமே திகழச் செய்தார்

நந்தேசம் முதலாய்ப் பாரில்
நாலெட்டுத் திசையும் மாந்தர்
சந்தோஷம் மிகவே முருகன்
சன்னிதி தன்னைத் தந்தார்।

கருணையின் வள்ளல் நம்மைக்
காத்திடும் முருக வேளும்
மருவிடும் தெய்வமாதும்
வள்ளியும் குடியமர்ந்தார்।

பெருவளப் பேர்ளின் நகரிற்
பேரின்ப நிலை கொண்டோமே
அருளெனும் பேரானந்தம்
அடைந்துமன் றாடினோமே।

கந்தன் ஆலயமே வாழ்க।
கதிர் வேலின் புகழே வாழ்க।
பெருகிடும் அருளே வாழ்க।
பிழையிலாச் சைவம் வாழ்க।

செந்தமிழ் இனமே வாழ்க।
சிவநெறி நலமே வாழ்க।
பந்தமார் அடியார் வாழ்க।
பலகோடி யுகமே வாழ்க।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்ளின் முருகன்
# 108 போற்றிகள்

திருச்சிற்றம்பலம்

ஐங்கரன் தம்பியானாய் ஆறுநல் முகனே போற்றி
அகிலத்தில் எங்குங்கோயில் ஆனதே முருகா போற்றி
சங்கரன் உமையாள் ஈன்ற சண்முகா! தலைவா! போற்றி
தரிசிக்கும் அடியார் தம்மைத் தயவுடன் ஆள்வாய் போற்றி

பேர்ளின்மேல் இனிய நாட்டிற் பேரின்பம் எய்தாய் போற்றி
பின்னங்கள் வாராதெம்மை முன்னின்று காப்பாய் போற்றி
கோளின்மா றெல்லாம்போக்கிக் குறையாவும் தீர்ப்பாய் போற்றி
கோணங்கள்தோறும் உன்னைக் கும்பிட்டோம் ஐயா போற்றி

நம்பிவரும் எங்களுக்கே நல்லபதம் அருள்வாய் போற்றி
நாளுமுனைப் பாடிப் பாடி நாடுகிறோம் அப்பா போற்றி
அம்பிகையின் பாலா வெற்றி ஆனந்த வேலா போற்றி
ஆனதுயர் யாவுந்தீர்க்கும் ஆண்டவனே ஆள்வாய் போற்றி

வீடாறு படைநீ கொண்டாய் மேதினியில் ஐயா போற்றி
விண்ணவரும் வியந்து நாடும் வண்ணவடி வேலா போற்றி
வாடாத வாழ்வைத் தருவாய் மயிலேறுங் குமரா போற்றி
வந்துனது காலைத்தொட்டோம் கந்தாநீ காப்பாய் போற்றி

உன்கருணை பொழிவாயெங்கள் உள்ளத்தில் நிறைவாய் போற்றி
ஓராறு முகனே இன்பம் ஊட்டுமொரு குகனே போற்றி
அன்புடைய தேவா மின்னும் அழகுவடி வேலா போற்றி
ஆரமுதம் ஆகுந் தமிழின் ஆண்டவனே வாவா போற்றி

தொல்லைதரும் வினைகள்போக்கும் சுந்தரனே முருகா போற்றி
தூயதமிழ் ஞானம் ஊட்டும் பண்டிதனே வருவாய் போற்றி
முல்லையருங் குறிஞ்சிவாழும் மன்னவனே வருவாய் போற்றி
முத்தழகு வதனா வள்ளி தெய்வானை துணைவா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்ளின்மா நகரந்தன்னில் பேரின்பம் எய்தாய் போற்றி
பின்னங்கள் யாவுந்தீரும் நல்லருளைத் தருவாய் போற்றி
கோளின்மா வினைகள்போக்கும் கோலமயில் நாதா போற்றி
கும்பிட்டு வாழும் எங்கள் குலதெய்வம் நீயே போற்றி

தெய்வங்கள் யாவும் இங்கே தரிசித்தோம் இறைவா போற்றி
தேவாநீ வாழும் பேர்ளின் சன்னிதியில் ஐயா போற்றி
வைகுந்த வாசன் மாமன் வாழ்த்திடும் மருகா போற்றி
வண்ணமணி கண்டன்சபரி மலையானின் முதல்வா போற்றி

இந்தியத் தமிழ்நா டெங்கும் இலங்கிடும் இறைவா போற்றி
ஈழத்தின் எட்டுத்திக்கும் இருந்தெம்மை ஆள்வாய் போற்றி
புந்தியில் இருத்தி நாமே வந்தனைகள் செய்தோம் போற்றி
புண்ணியனே பாவந்தீர்க்குங் கண்ணியனே காப்பாய் போற்றி

கடல்களைத் தாண்டினாலும் கருதினோம் வருவாய் போற்றி
காலங்கள் தோறும் வந்தே காத்தருள் தருவாய் போற்றி
உடல்களைத் தந்தாய் இந்தப் பிறப்பையும் தந்தாய் போற்றி
ஓயாமல் உன்னைத்தொழுதோம் உள்ளத்தில் நிறைவாய் போற்றி

வேலனே வினையைப் போக்கும் வெற்றி நாயகனே போற்றி
வீரத்தின் உருவாய் வந்தாய் வேந்தனே தலைவா போற்றி
சீலனே திசைகள் யாவும் திகழுமோர் ஒளியே போற்றி
தீரத்தின் இமயம் ஆனாய் தீயரை ஒழித்தாய் போற்றி

பாவங்கள் ஓயும் வண்ணம் பண்புதந் திடுவாய் போற்றி
கோபங்கள் தணியும் சாந்தக் குணமுவந் திடுவாய் போற்றி
சாபங்கள் நீங்கத்தானே தஞ்சமா கிடுவாய் போற்றி
தீபங்கள் ஏற்றிப் பணிவோம் ஆசிதந் திடுவாய் போற்றி

விந்தைகள் செய்யும் ஞானி! வித்தகா வேலா போற்றி
வேதத்தின் ஓங்காரத்தை விளக்கிய குருவே போற்றி
சிந்தையில் உணர்வாய் நிற்கும் சீவனே ஆனாய் போற்றி
திருப்பதி பேர்ளின்தன்னிற் திருத்தலங்கொண்டாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்கோர் கடவுளானாய் தரணிக்கோர் தலைவா போற்றி
தலமாக்கி நின்றன் புகழைச் சாற்றினோம் இறைவா போற்றி
அமுதுக்கும் இனிதாம் ஞானப் பழமே நீ ஆனாய் போற்றி
அருணகிரி நாதன் பாட்டால் ஆனந்த மானாய் போற்றி

அழகுறும் பேர்ளின் நாட்டில் உலவிடும் குமரா போற்றி
ஐரோப்பாத் தேசம் எங்கும் நிலவிடும் நேசா போற்றி
பழகுமுன் பாரியார்கள் சகிதமாய் நின்றாய் போற்றி
பாதார வீந்தங்களையே பற்றினோம் அருள்வாய் போற்றி

சுந்தரத் தமிழாய் வந்து தோற்றினாய் முருகா போற்றி
சூழ்கின்ற நேரம்பாவம் துணைநின்று காப்பாய் போற்றி
மந்திரம் சொல்லித் தினமும் வணங்கினோம் ஐயா போற்றி
மாலவன் மருகா! மன்னும் மானிலத் தலைவா போற்றி

வள்ளிதெய் வானைதன்னை வலமிடங் கொண்டாய் போற்றி
வானூர்ந்து கடலும் ஓடி வந்தோம் இரங்காய் போற்றி
துள்ளிநின் றோடித்திரியும் பிள்ளையின் வதனா போற்றி
தோகைமா மயில்வாகனனே சேவலின் கொடியாய் போற்றி

கண்டங்கள் தாவித்தாவிக் கரைசேர்ந்தோம் அப்பா போற்றி
காலங்கள் தோறும் எம்மைக் காக்குங்கா வலனே போற்றி
அண்டங்கள் யாவும் ஆட்சி கொண்டாளுகின்றாய் போற்றி
ஆனந்த மயமாய் எங்கும் அபயந்தந் திடுவாய் போற்றி

உலகெலாம் உந்தன் புகழை ஓதிடும் முருகா போற்றி
ஓம் எழில் மயனே! ஓம்ஓம் சரவண பவனே போற்றி
குலமினம் ஏழை செல்வர் சமரசம் தந்தாய் போற்றி
கோடானு கோடி இன்பம் கொடுத்திடும் செல்வா போற்றி

பழமிழந் தோடிச் சென்றே பழநியில் நின்றாய் போற்றி
பாதகர் அசுரர் தம்மைச் செந்தூரில் வென்றாய் போற்றி
அழகுவான் மகளை முன்னே பரங்குன்றில் ஏற்றாய் போற்றி
ஆரண்ய மாதைத் தணிகை ஆங்கே மணந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேரகத்திற் தந்தை குருவாகி வந்தாய் போற்றி
செந்தமிழ் ஔவை பாட்டுச் சோலையீற் கேட்டாய் போற்றி
மருதமா மலையில் நாங்கள் மன்றாடும் இறைவா போற்றி
மாணிக்க கங்கைக் கதிரை மலையானே தேவா போற்றி

சரவணப் பொய்கை தன்னிற் தானே பிறந்தாய் போற்றி
சங்கரன் உமையாள் ஈன்ற சண்முகா வாவா போற்றி
அரவணை அரங்கன் மாலின் அன்புநல் மருகா போற்றி
ஆறுமாப் படையின் காவல் அரசே நீ வாவா போற்றி

மேற்குமா தேசங்களிலே விளங்கிடும் இறைவா போற்றி
வெங்குளிர்ப் பனியைத் தாங்கும் வீரியம் தருவாய் போற்றி
நாற்றிசை யெங்கும் பாரில் தோற்றுகின்றாயே போற்றி
நாளுமுன் பாதம் தேடி நாடிவந்தோமே போற்றி

வீட்டைவிட் டோடிவந்தோம் வெற்றிவேல் ஐயா போற்றி
வேதனை பலவுங் கொண்டோம் நீதுணை ஆவாய் போற்றி
நாட்டைவிட் டோடிவந்தோம் ஞானவேல் முருகா போற்றி
நாமுய்ய வேண்டும் வழிகள் நன்றுநீ தாராய் போற்றி

அன்புருவம் ஆனாய் முருகா அழகுமயம் ஆனாய் போற்றி
ஆதிசிவன் உமையாள் சக்தி இன்பமகன் ஆனாய் போற்றி
முன்புருவம் ஆறாய் வந்தாய் கந்தவடி வானாய் போற்றி
முன்னிறைவன் ஆனைமுகவன் தம்பியவன் ஆனாய் போற்றி

ஓதினோம் துதிகள் பாடி ஒருநூற்று எட்டுப் போற்றி
ஒருநாளும் தவறாதையா உன்னுடைய பூசை போற்றி
நீதிநாம் தேடித்தானே வாடினோம் முருகா போற்றி
நிச்சயம் காப்பாய் தேவா நீதுணை தாதா போற்றி

உன்னடிகள் சரணம் சரணம் பன்னிருகை சரணம் போற்றி
ஓராறு முகமும் நுதலும் சென்னிகளும் சரணம் போற்றி
பொன்னடிமா வேலும் மயிலும் சேவலுமே சரணம் போற்றி
பொங்குமருள் பொழியும் நின்றன் புகழ்நாமம் சரணம் போற்றி

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள்மடம் முருகையன் 108 போற்றிகளும் – பஜனைப் பாடல்களும்

*1996ம் ஆண்டு மாசி மாதம் எம் பெருமானுடைய மணிக்கோபுரத்தில் முதன்முதல் மணி ஓலித்தபொழுது நிகழ்ந்த சிறப்புத் திருப்பூசை ஆரா தனைகளை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்புமலரின் முக்கியமான விடயங் களும் பாடல்களும் இங்கே இடம்பெறுகின்றன.*

பிரதான வீதியிலிருந்து நாம் குருக்கள்மடம் கடற்கரை வீதியால் ஏறக்குறைய இருநூறு யார்தூரம் செல்லுகையில் இடப்புறமாக அழகிய தோற்றம் அளிக்கின்றது குருக்கள்மடம் முருகையன் கோயில்.

"குறிஞ்சிக் குமரன்" என்னும் அழகிய திருநாமம் பூண்டு, இங்கே வீற்றிருந்து விளங்குகின்றார் ஆற்றுப்படை வேலவனார்.

எம் பெருமானுடைய இயற்கைவளம் சூழ்ந்த இந்தச் சன்னிதா னம் இங்கே தோன்றிச் சுமார் அரைநூற்றாண்டு காலம் ஆகும் சரித்திர வரலாற்றை அண்மிக்கொண்டிருக்கும் பெரும் புகழை முருகப் பெருமானுடைய அடியார்கள் பக்திசிரத்தையுடன் வியந் துரைப்பதை அங்கே நாம் அறியலாம்!

குருக்கள்மடத்தின் வடகிழக்குப் பாகத்தில் இயற்கை எழில் வளரும் குழுமையான சூழலிலே அப்பன் வெற்றிவடி வேலவனின் ஆனந்தக் கோயில் விளங்குவது பார்ப்பவர்க்குப் பக்திப் பரவச த்தை ஊட்டுகின்றது!

வற்றாத செல்வமாக வெற்றிலை வளர்ந்து சுற்றிவரக் காணும் பகுதியிலே கந்த முருகேசன் சன்னிதானம் எந்தத் திசையிலி ருந்து பார்த்தாலும் இனிய தோற்றமாவே இருக்கும்!

அப்பன் சுப்பிரமணியனை அன்றாடம் மன்றாடி ஆனந்த வாழ்வு பெற்றுப் பேரின்பம் அடையும் குருக்கள்மடம் அடியார்களுக்கு நிறைவது சுகமே அன்றிக் குறையேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுடைய ஆலயத்தில் அழகான நந்தவனம் உண்டு. போதிய நீர்வளம் தேங்கும் தீர்த்தக் கிணறுண்டு.

தீர்த்தக் கிணற்றைச் சூழ்ந்தனவாக நீண்டுவளர்ந்த நெடுவாழை மரங்கள் ஓயாது கனிகொடுத்த வண்ணம் காட்சி தருகின்றன.

பெருமானுடைய சன்னிதியின் வாசலிலே அழகிய மணிக்கோபுரம் அமைந்திருக்கின்றது. தினமும் மூன்று காலப் பூசை வேளைகளி லும் மணியின் நாதம் பெருமானுடைய பேரானந்த வேலின் அருளோசையாக.....,

அபயம்! அபயம்!! அபயம்!!!

என்று ஒலித்துக்கொண்டே இருக்கின்றது!

இலண்டன் மாநகரில் வாழ்ந்துகொண்டிருக்கும் குருக்கள்மடம் வாசிகளான எமது குடும்பத்தினரின் திருப்பணியாகவே இந்த மணிக் கோபுரம் அமையவேண்டும் என்பது அந்தப் பெருமானு டைய விருப்பம் போலும்!

நானும் எனது மனைவி மக்களும் இயற்றிய நேர்த்திப் பணியா கவே நான் இந்த மணிகோபுரத்தைக் கட்டியெழுப்பினேன். எங் களுக்கு ஐயன் முருகையன் கொடுத்தருளிய ஆனந்தப் பேற்றி னாலேயே இந்த அற்புதமான திருப்பணி ஒப்பேறியது.

எம்பெருமானுடைய திருத்தலத்தில் மணிக்கோபுரம் உருவான தும் ஊரின் நான்கு கோணங்களிலும் இப்பொழுது தெய்வங் களின் மணி ஓசைகள் தினந்தினம் ஒலிப்பது ஊருக்கே ஒரு திருமங்கலச் சிறப்பாக அமைந்துள்ளது.

செட்டிபாளையத்தையும் குருக்கள்மடத்தையும் இணைக்கும் தென்மேற்கு எல்லையிலே செட்டிபாளையம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மணியோசை ஒலிக்கின்றது!

குருக்கள்மடத்தின் மேற்கில், பிரதானவீதிக்கரையிலே சரித்திரப் பெருமையுடன் அமைந்துள்ள ஸ்ரீல ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி யின் பெரியகோவில் மணி ஓசை ஒலிக்கின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் மத்தியிலே கீதை விளம்பிய கிருஷ்ண பரமாத்மாவான எங்கள் காக்கும் கடவுளாம் கண்ணபெருமான் சன்னிதானத்தின் கருணை மணியோசை ஒலிக்கின்றது!

ஊரின் வடகிழக்கு எல்லையில் முருகையன் குருக்கள்மடத்தில் இரண்டாம் கோட்டமாகத் தலங்கொண்டிருக்கும் இந்தக் குறிஞ்சிக் குமரனுடைய தேவாலயத்தின் திவ்விய மணியோசை ஒலிக்கின்றது!

முருகையன் திருநாமத்தை உருகிமனம் ஓதுகின்ற அடியவர்க்கு ஒருநாளும் துன்பமில்லைச் சோகமில்லைத் துயரும் இல்லை!

ஓம் சரவணபவகுகனே சரணம்!
*என்றிட நமக்கு*

எல்லா நாளும் இன்ப நாளே!
எல்லாப் பொழுதும் இன்பப் பொழுதே!
எல்லா நிலையும் இன்ப மயமே!

*முதலொரு பெரியகோட்டம்*
*முருகா நீ கொண்டாய் ஊரில்*
*முதியதோர் சரிதம் அதனால்*
*முன்னேறக் கண்டாய் பாரில்*
*பின்னொரு சன்னிதானம் -*
*பெருமான் நீ கொண்டாய் ஊரில்*
*பேறிது தன்னைப் போலே -*
*வேறேது வேலா! பாரில்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# முருகையன் 108 போற்றிகள்

## திருச்சிற்றம்பலம்

ஐங்கரன் வேழநாதன் தம்பி நீ ஆனாய் போற்றி
சங்கரன் உமையாள் கொஞ்சும் தாமரைக் குமரா போற்றி
கும்பிடும் அடியார் கூட்டம் நம்பிடும் இறைவா போற்றி
அம்பிகைத் தாயார் சக்தி ஆனந்த வேலா போற்றி

குருக்கள்மடத்துக் குடிகள் குலதெய்வம் ஆனாய் போற்றி
இருக்கும் இடத்தை நாடி ஏற்றினோம் அருள்வாய் போற்றி
திருக்கோயில் கொண்டுவாழுஞ் சிங்கார மயிலா போற்றி
தேவியர் இருவர் சூழும் திருக்கதிர் வேலா போற்றி

வங்கத்தின் அலைகள் வந்தே வாழ்த்திடும் அழகா போற்றி
தங்கத்தின் பரிதிக் கிரணம் தரும் ஒளி காண்பாய் போற்றி
வெற்றிலை செழிக்கும் செல்வம் வேல் ஐயா தந்தாய் போற்றி
சுற்றிலும் இயற்கைச் சூழல் தோன்றுதே கந்தா போற்றி

உன்னுடைய தம்பி ஐயன் கோவிலுண் டிறைவா போற்றி
மன்னிவளர் ஆலஞ்சோலை மாநிழலில் மன்னா போற்றி
அன்புடைய மாமன் கண்ணன் ஆலயம் கண்டாய் போற்றி
ஒன்பதுங் கிரகம் காக்கும் ஊரீது முருகா போற்றி

அன்னைமக மாரித் தலமும் உண்டுசர வணனே போற்றி
தென்னைவளம் நாடித்தாயார் திகழுமருள் கண்டாய் போற்றி
வயிரவன் காவல் இங்கே வழுவாது வேலா போற்றி
உயிர்களைக் காக்கும் நாகம் உலவீடும் இறைவா போற்றி

அம்பெரிய கோயில் கொண்டாய் ஆதியிலமர்ந்தாய் போற்றி
கொம்பரிய தும்பிக்கையான் அண்ணனுடன் முன்னே போற்றி
மேலுமொரு செல்வக்கோட்டம் மேவியிருக்கின்றாய் போற்றி
நாலுதிசை யெங்கும் கோயில் நலமுண்டு முருகா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்காலும் பூசை நாளும் தப்பாது சயனே போற்றி
எக்காலும் தொடரும் எங்கள் பக்தியீது முருகா போற்றி
கதிரைமலைக் கோலங்காட்டிக் கந்தாநீ வருவாய் போற்றி
முதிரைவனத் தாந்தா வடிவம் தெரியவருவாயே போற்றி

திருக்கோயில் அலையிற்தோன்றும் தெய்வமே வருவாய் போற்றி
திருப்பெருந் துறையில்வாழும் செல்வனே வருவாய் போற்றி
மாவேற்குடா வேலவனே மயில்மீது வருவாய் போற்றி
காவேற் கடம்பா நல்லூர்க் கந்தாநீ வருவாய் போற்றி

வில்லூன்றிப் பதியில் வாழும் வேந்தன்நீ வருவாய் போற்றி
செல்வச் சந்நிதியில் மகிழும் செல்வாநீ வருவாய் போற்றி
முத்தாழி நீற்றுக்கேணி முருகையா வருவாய் போற்றி
சித்தாண்டிப் பதியின் மன்னா தேரேறி வருவாய் போற்றி

வெருகலங் கங்கைக் கோயில் வேந்தனே வருவாய் போற்றி
பெருவளம் சூழும் மண்டூர் அழகனே। வருவாய் போற்றி
அழகுறும் உகந்தைக் கிரியின் அரசேநீ வருவாய் போற்றி
பழகுமுன் மனையாள் இருவர் பாகமாய் வருவாய் போற்றி

திருப்பழநி மலையில் வந்தே தனித்துநீ நின்றாய் போற்றி
திருச்செந்தூர் தன்னில் அசுரன் சேனையை அழித்தாய் போற்றி
திருவே ரகத்தில் ஞானம் சிவனுக் குரைத்தாய் போற்றி
திருச்சோலை தன்னில்ஔவை திடுக்குறச்சிரித்தாய் போற்றி

திருத்தணிகை மலையில்வள்ளி திருமணமுகந்தாய் போற்றி
திருமருத மலையிற் தேவர் தெண்டனிட நின்றாய் போற்றி
அண்ணாமா மலையில்அருண கிரியைஆட் கொண்டாய் போற்றி
எண்ணாதார் நெஞ்சங்களையும் ஈர்க்கும்பேர் அழகா போற்றி

தான்தோன்றி ஈசன் மகனே। சண்முகா தலைவா। போற்றி
வான்தோன்றி அமரர்க் கபயம் வழங்கினாய் சமரா போற்றி
முன்னீஸ்வரத்தான் பரமன் தன்னுடைய குமரா போற்றி
மன்னார்மா தோட்டத் தீசன் மகேசனின் மைந்தா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலை இறைவன்சிவனார் ஞானமகனானாய் போற்றி
காணவடி வேலா! கந்தா காட்சி தரும் அழகா போற்றி
நகுலேஸ்வரத்தான் தில்லை நடேசனின் மகனே போற்றி
குகனே சண் முகனே தமிழின் குலதெய்வம் நீயே போற்றி

பாலாபி ஷேகம் நாளும் பண்ணுகிறோம் ஐயா போற்றி
வேலாலே வினைகள் தீர்க்கும் வேலவனே காப்பாய் போற்றி
நெய்யிலபி ஷேகம் செய்தோம் நித்தமருள் தருவாய் போற்றி
உய்யவழி காட்டும் நேசா! ஓராறு முகனே போற்றி

தேனாலே அபிஷேகம்நாம் செய்கின்றோம் இறைவா போற்றி
வானாலே பெய்யும் மழையும் வளமும்நீ தருவாய் போற்றி
முக்கனியில் அபிஷேகங்கள் தப்பாது முருகா போற்றி
சிக்கலுறும் போதில்வந்தே சீக்கிரம் அறுப்பாய் போற்றி

பன்னீரால் அபிஷேகம் நாம் பண்ணுகிறோம் ஐயா போற்றி
வெந்நீராங் கண்ணீர் அவலம் வேலவனே தீர்ப்பாய் போற்றி
சந்தனத்தில் அபிஷேகங்கள் தவறாது முருகா போற்றி
வந்தனைகள் அபிஷேகத்தால் வழுவாது குமரா போற்றி

சாந்துகளும் மலருங் கமழும் தலமீது முருகா போற்றி
காந்தமெனும் வேலின்கருணை காக்குமிடம் கந்தா போற்றி
குங்குமமும் மஞ்சள் மணமும் குறையாது முருகா போற்றி
மங்களமாய் நாளும் பூசை வண்ணமுறும் அழகா போற்றி

கோபுரத்தில் மணியின் ஓசை குலுங்கிட மகிழ்ந்தாய் போற்றி
மாபுரத்து வேலா செல்வா கதிர்காம நாதா போற்றி
நாலுதிக்கும் ஊரில் மணியின் நாதம் நீ கேட்பாய் போற்றி
மாலுனது மாமன் கோயில் மணியோசை கேட்பாய் போற்றி

தமயனார் மணியின் நாதம் தெற்கிலே கேட்பாய் போற்றி
பெரியநின் கோயில்மணியின் பேரிசை கேட்பாய் போற்றி
உமையவள் தாயும் அங்கே உன்னோடிருந்தாள் போற்றி
உன்னருந் தமயன் தானும் உடனங் கமர்ந்தார் போற்றி

பொது சன நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனார் பெருமானிங்கே ஆலயங் கொண்டார் போற்றி
ஆங்குமுன் வேலின் காட்சி ஆனதே முருகா போற்றி
நாகப்ப னாரும் கோயில் கொண்டாளுகின்றார் போற்றி
நாடிடும் காவற்தெய்வம் வயிரவர் ஆண்டார் போற்றி

திரெளபதித் தாயார் வாழ்த்தும் திருக்கதிர் வேலா போற்றி
அரவணைத் திருமால் இறைவன் ஆனந்த மருகா போற்றி
கண்ணகித் தாயார் கண்டு களிக்குமோர் அழகா போற்றி
மண்ணாளும் மாரித்தாயார் மகிழுமோர் மகனே போற்றி

மாமாங்க நாதன் தமயன் வாழ்த்துடன் வந்தாய் போற்றி
நாமாங்கு தீர்த்தம் ஆடும் நல்வரம் தந்தாய் போற்றி
பிள்ளையார் அண்ணன் களுதா வளையில் இருந்தார் போற்றி
பின்னவன் நீவந்திங்கே ஆலயங் கொண்டாய் போற்றி

சங்கமான் கண்டித் தலைவன் தம்பியே முருகா போற்றி
இங்குநாம் வாழக் காக்கும் இறைவனே பாதம் போற்றி
கோபுர மணியின் ஓசை நீயருள் செய்தாய் போற்றி
மாவரப் பேறாய் எண்ணி மன்றாடினோமே போற்றி

பஜனைகள் பாடிப் போற்றும் பக்தரை ஆள்வாய் போற்றி
பாங்குறு தமிழைக் கூறும் மாந்தரை ஆள்வாய் போற்றி
நிஜமுனை மறக்கமாட்டோம் நித்தமும் ஆள்வாய் போற்றி
நெஞ்சமே நின்றன் கோயில் நீயிருந் தாள்வாய் போற்றி

முருகா நின் சன்னிதானம் நீடூழி வாழ்க! போற்றி
மூவாறு முகனே வள்ளி தெய்வானை வாழ்க! போற்றி
ஒருஞாலக் குடைமன்னவனே உனதாட்சி வாழ்க! போற்றி
ஊரிலும் பாரில் எங்கும் உன் நாமம் வாழ்க! போற்றி

நிலையான வரம் கொடுக்கும் நின் பாதம் சரணம் போற்றி
நிம்மதியும் அருளும் ஈட்டும் பொன் பாதம் சரணம் போற்றி
மலைதோறும் மகிமை காட்டும் வடிவேலே சரணம் போற்றி
மங்காத வாழ்வுஞ் சுகமும் வழங்குவாய் சரணம் போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்தி வழிபாடு

நேர்த்தி வழிபாடு என்றால் இறைவனுக்குச் செலுத்தும் பிரதி உபகாரம் போன்றதே என்பது புறக்கருத்துக் கொள்வாரின் உட் கருத்தாகும். அது தவறு என்பதுவும் அவர்கள் அறியாத புதிரா கும். அவர்களுக்கு அன்பாக உணர்த்துவது அறிந்தவர்கள் கட னாகும்.இந்து மதத்தில் மாத்திரம் இந்த நேர்த்தி வழிபாடு இரு க்கவில்லை. எந்த மதத்திலும் இருப்பதை நாம் அறிவோம்.

இறைவன் கருணையை எல்லோருக்கும் வெளிப்படுத்துவதே நேர்த்தி வழிபாடாகும். தெய்வங்களின் அனுக்கிரகங்களைத் தெண்டனிடும் பக்தர்களுக்குத் தெரியப்படுத்துவதே நேர்த்தி வழிபாடாகும். நாம் செய்துவரும் தூய பக்தியின் பயனாகவும், மனம் ஒன்றிய மன்றாட்டத்தின் விளைவாகவும், எண்ணி வழிபடும் தெய்வமே நம்மை வாழ்விக்கும் என்ற திடநம்பிக்கையை வலியுறுத்தும் வழிபாடே நேர்த்தி வழிபாடாகும். தெய்வங்கள் நமக்கு அருளிச் செய்யும் அற்புதங்களை அறிவிக்கும் வகையில் நாம் அனைவரும் செய்யும் ஆனந்த வழிபாடே நேர்த்திக்கடன் செலுத்துகின்ற இந்த நேர்த்தி வழிபாடாகும்.

நேர்த்தி என்றால் திடநம்பிக்கையுடன் தெய்வங்களின் அனுக் கிரகத்தை எதிர்பார்த்து நிச்சயிக்கும் ஓர் உறுதியான திடசங்கர் ப்ப வழிபாடாகும். அத்துடன் நேர்த்தி என்றதும் கீர்த்தி, சிறப்பு, மேன்மை, புகழ், புனிதம், தெய்வீகம், ஆனந்தம், அருளின்பம் என்று பலவாறு இனியவிதமான கருத்துக்கள் நமக்குப் புலப்ப டுவது இயல்பாகும்.

இந்துமறை மாண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் வாயிலாகவும், பதினெட்டுப் புராணங்கள் மூலமாகவும், பஞ்சகாவியங்கள் ஊடா கவும் நீதி ஒன்றே நிலைக்கும்படியாக நிகழ்ந்துள்ள தெய்வத் தீர்ப்புக்களைத் தெரிந்துகொண்டவர்கள் நாம். அவைகளைத் தெய்வ அனுக்கிரகங்கள் என்றே உணர்ந்தவர்கள் நாம்.

அவ்வாறே துறவிகளின் தூய போதனைகளாலும், ஆத்மீக ஞானிகளின் அறிவுரைகளாலும், இறைவன் திருவருளை இனிதே தெரிந்து கொள்ளுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மற்றவர் சொல்லும் தெய்வீக மகிமைகளைக் கற்றுக் கொள்ளும் நாம், நமது வழிபாட்டாற் பெற்றுக்கொள்ளும் வரப் பேறுகளை மற்றவர்க்கும் அறிவிக்க வேண்டாமா...? அவ்வாறு அறிவிப்பதால் இறைவன் பெருங்கருணை எல்லோராலும் உணரப்பட்டு இந்த உலகத்தில் மென்மேலும் விளங்க வேண்டாமா...?

ஆகவேதான் நாம் எண்ணிய பிரகாரம், இறைவன் கருணையும் அருளும் கிட்டியதும் திடசங்கற்பம் செய்துகொண்டபடி நேர்த் திக்கடன்களை தெய்வங்களின் சன்னிதானங்களில் தவறாமல் நிறைவேற்றுகின்றோம். கேட்டவரம் கிட்டியதும் நிச்சயித்தபடி நேர்த்திகளைப் பூர்த்திசெய்து, பூசை ஆராதனைகளும் ஆற்றிப் போற்றி மகிழ்ந்து பூரிப்படைகின்றோம்।

திருவிழாக்கள், தேரோட்டங்கள் தீர்த்த உற்சவங்கள், திருநாட் பூசைகள், பெருநாள் அஞ்சலி வைபவங்கள் போன்ற மகோன் னத மன்றாட்டங்கள் செய்கின்றோம் இவைபோன்று பல்வேறு பக்தி முறைகளாலும் தெய்வங்களைத் துதிக்கின்றோம்.

ஆயினும் அத்தனை வழிபாடுகளுக்கு மத்தியில் இந்த நேர்த்தி வழிபாடு ஒரு மேன்மையும் புகழும் மிக்கதோர் சிகர வழிபாடா கவே விளங்குகின்றது என்றால் அது மிகமிகப் பொருத்தமாகும்.

பண்டுதொட்டே பாரம்பரிய வழமையாக விளங்கும் நமது தெய்வ வழிபாடுகளில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் வழிபாடுக ளும், திருப்பூசைகளும், நேர்த்திச் சின்னங்களைச் செலுத்தும் திருப்பணிப் பூசைகளும் ஆலயங்கள்தோறும் நிகழ்ந்துவருவதை நாம் காணலாம்.

பக்தர்களுடைய நேர்த்தி வழிபாட்டுச் சின்னங்கள் ஆலயங்களின் பிரகாரங்களையும், வெளிவீதிகளையும் அலங்கரிக்கின்றன. ஆலய ங்களின் காவல் அரண்களாகக் காட்சியளிக்கின்றன. சித்திரக் கோபுரங்களாகவும், மணிக் கோபுரங்களாகவும் விளங்குகின்றன. தீர்த்தக் கேணிகளாகத் தோற்றியிருக்கின்றன. தெய்வங்கள் பவனிவரும் வண்ண வண்ணத் தேர்களாகத் தலங்களில் வலம் வருகின்றன. விளக்கொளித் தம்பங்களாக வெளிச்சசங் கொடுத்த வண்ணம் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தான வீடுதிகளாகத் திகழ்கின்றன. வசந்த மண்டபங் களாக அமைந்திருக்கின்றன. அழகிய நந்தவனங்களாக இனிய நறுமணம் வீசும் மலர்களைத் தந்து வளர்கின்றன.

இவ்வாறாக இன்னும் எத்தனையோ வகையில் பக்தர்களின் நேர்த்திகள் ஆலயங்கள் தோறும் திருப்பணிச் சின்னங்களாக நிலைத்திருக்கின்றன.

தெய்வங்களின் அருள்வளத்தை மானிடர்க்குத் தெளிவாக உணர் த்தக்கூடிய ஒரு தெய்வீகமான வழிபாடுதான் நேர்த்தி வழிபாடு என்றால் அது ஒரு பொழுதும் மிகையாகாது.

தெய்வங்கள் மீது திடநம்பிக்கை கொள்ளும் எவருக்குமே அவ நம்பிக்கை இல்லை. அவர்களுக்கு ஏமாற்றமும் கிடையாது. கிடைப்பவை யாவும் அனுக்கிரகங்களே. தெய்வங்களின் வரப் பேறுகளே! என்னும் அழியாத உண்மையைத்தான் நேர்த்தி வழிபாடு என்னும் தத்துவ மன்றாட்டம் நிலைநாட்டுகின்றன.

குருக்கள்மடத்தில் தனது இரண்டாவது கோட்டத்தில் எழுந் தருளி இருக்கின்ற ஸ்ரீ முருகையன் எல்லோரையும் இனிதே ஆண்டருள வேண்டுமென்று அன்றாடம் மன்றாடுகின்றேன்.

*கவிஞர் ஞானமணியம்*

"திருப்பதி"
குருக்கள்மடம்

மாசித் திங்கள் 1996.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப் பாடல்

முருகையன் கோயில் – முன்னே – மணி ஒலிக்குதாம்
மூன்று நேரமும் – முருகா – என் றொலிக்குதாம்। முரு

வேலவன் நாமம் – தன்னை – மணி ஒலிக்குதாம்
வெற்றி நாயகன் – குமரன் – என் றொலிக்குதாம்। முரு

கார்த்தி கேயனின் – புகழை – மணி ஒலிக்குதாம்
காவல் ஆண்டவன் – கந்தன் – என் றொலிக்குதாம்। முரு

சண்முக நாதன் – பெயரை – மணி ஒலிக்குதாம்
சந்ததம் ஆள்வான் – நம்மை – என் றொலிக்குதாம்। முரு

சக்தியின் பாலன் – வீரன் – மணி ஒலிக்குதாம்
சங்கரன் ஆசைக் – குமரன் – என் றொலிக்குதாம்। முரு

சுந்தர முருகன் – அருள்வான் – மணி ஒலிக்குதாம்
சுப்பிர மணியன் – துணையாம் – என் றொலிக்குதாம்। முரு

தங்கவடி வேலன் – கருணை – மணி ஒலிக்குதாம்
எங்குமவன் அருளே – தஞ்சம் – என் றொலிக்குதாம்। முரு

எங்கள் குலதெய்வம் – பதியில் – மணி ஒலிக்குதாம்
ஈராறு தோளன் – காப்பான் – என் றொலிக்குதாம்। முரு

வள்ளி மணவாளன் – தயவை – மணி ஒலிக்குதாம்
வானமகள் நாதன் – ஆள்வான் – என் றொலிக்குதாம்। முரு

வண்ண முருகையனைப் – பாடி – மணி ஒலிக்குதாம்
வாழ்க தமிழ்க்கடவுள் – வாழ்க – என் றொலிக்குதாம்। முரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் குலதெய்வம்

முருகையன் தமிழர்தம் குலதெய்வம் என்பது இந்து மதத்தின் வரலாற்றுண்மை. நம்மைப் போல் இந்து சமயத்தைத் தழுவி வாழும் வெவ்வேறான இனங்கள் இன்னும் எத்தனையோ இருப் பதை நாம் அறிவோம்.

ஆனாலும் எல்லா இனத்தவர்களும் ஓரே தெய்வத்தையே தமது குல தெய்வமாகக் கொண்டவர்கள் அல்ல. ஒவ்வொரு இனத்து க்கும் வேறு வேறாக ஒவ்வொரு குலதெய்வம் உண்டு.
வீநாயகரைக் குலதெய்வமாகக் கொண்டவர் ஓரினத்வர். சிவ னையும் பார்வதியும் குலதெய்வங்களாகக் கொண்டவர் மற்று மொரு இனத்தவர். சிவன் மட்டுமே தமது குலதெய்வம் என்பார் கள் இன்னொரு இனத்தவர். இவ்வாறாகக் காளியம்மனையும், துர்க்கை அம்மனையும், கண்ண பிரானையும், சபரிமலை ஐயப் பனையும், நாகதம்பிரானையும் தனித்தனியே தமது குலதெய்வமா கக் கொண்டவர்கள் ஒவ்வொரு இனத்தவரும்.

இராமபிரான், இராமபக்த அனுமான் போன்ற இதிகாச புருடர் களையும் தமது குலதெய்வங்களாகக் கருதி வழிபடுகின்ற இந்து மத இனத்தவர்களும் இருக்கின்றனர்.
அதே போன்று தமிழர்களாகிய நாம் நமது குலதெய்வமாக வழி படுகின்ற தெய்வம் முருகப்பெருமானே ஆவார். முருகப் பெரு மான்தான் நமது குலதெய்வம் என்பதனால் ஏனைய இந்துமதத் தெய்வங்கள் எதையுமே நாம் புறக்கணிப்பதில்லை. ஒவ்வொரு தெய்வத்தையும் நமது குலதெய்வம் என்ற மேலான ஸ்தான த்தில் வைத்தே வழிபட்டுவருகின்றோம்.

இவ்வாறு எல்லாத் இந்துமதத் தெய்வங்களையும் எம்மையாளும் சொந்தத் தெய்வங்களாகவே கருதி வழிபடும் புனிதமான பண்பு தமிழ் இனத்வர்களாகிய நமக்குமட்டுமே உண்டு என்பதால் நாம் பெருமையும் புகழும் உடைவர்கள் ஆகின்றோம்.

இவ்வாறான பெருமையும் புகழும் இந்துமதத்தின் ஏனைய இன த்தவர்களுக்கு மட்டுமல்ல உலகத்தில் எந்த இனத்தவர்களுக் குமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமான் தமிழர்தம் குலதெய்வம் என்பதைக் கந்தன் கருணையை ஆதி அந்தமாக விளக்கும் "திருமுருகாற்றுப்படை" என்னும் திவ்விய நூலின் மூலமாகவே நாம் அறிகின்றோம்.

எனவேதான் எம் பெருமான் முருகையனை நாம் தென்னாட்டுத் தெய்வம், செந்தமிழ் இறைவன், அழகுதமிழ் இறைவன், தமிழ் ஞானப் பண்டிதன், ஒளவையின் ஆசான், ஞானத் தமிழ்ப் பழநீ, பைந்தமிழ்ப் பண்டிதன், கனிமொழிக் காவலன், தமிழ்ச் சங்கத் தலைவன், அமுதமொழி ஆண்டவன் என்று எத்தனையோ இனிய தமிழ்ப் பெயர்கள் சூட்டி இன்பமாக அழைக்கின்றோம்.

எங்கள் குலதெய்வமாக விளங்கும் முருகையன் நம் கிராமமாகிய குருக்கள்மடத்திலே ஆதிநாளிற் பெரிய கோவில் கொண்டு ஆண்டுவருகின்றார். பின்னர் மேலுமொரு ஆலயத்தில் இங்கே வீற்றிருந்து நம்மை ஆளுகின்றார்.

அப்பனின் திருக்காட்சிகளைக் கண்டுகண்டு நாம் ஆனந்தம் அடைகின்றோம்! அன்றாடம் வழிபட்டு மன்றாடுகின்றோம்! தனித்தமிழ் ஊரிலே தமிழிறைவன் தலங்கள் இரண்டு கொண் டமை நாம் செய்த தவப் பயனே ஆகும்.

அன்றாடம் மூன்று வேளைகளிலும் கந்தகுரு கவசமும், கந்த சஷ்டி கவசமும், கந்தனருட் திருப்புகழும் ஒன்றின்பின் ஒன்றாக ஒலிப்பது போல் ஐயன் கோபுரத்தில் ஆனந்த மணியோசை ஒலிக்கவேண்டும்! அதனால் எல்லோரது வாழ்விலும் இன்பம் செழிக்கவேண்டும் என்று மன்றாடுகின்றேன்.

**கந்தன் கருணையே துணை!**
**கந்தன் திருக்கை வேலே துணை!**
**கந்தன் திருமலர்ப் பாதங்களே துணை!**

– திருமதி ஞானம்மா ஞானமணியம் –
**இளைப்பாறிய ஆசிரியை – கலைவாணி மகாவித்தியாலயம்**
**"திருப்பதி"**
குருக்கள்மடம் – இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப் பாடல்

பஜனையில் வந்தே சேருங்கள்
பன்னிரு கையனைப் பாடுங்கள் பஜனை

வள்ளி மணாளனைப் பாடுங்கள்
மங்கள நாதனைப் பாடுங்கள்
புள்ளி மயில் தன்னைப் பாடுங்கள்
புன்னகை முருகனைப் பாடுங்கள் பஜனை

சேவலின் கொடியனைப் பாடுங்கள்
சேனையின் தலைவனைப் பாடுங்கள்
காவலின் இறைவனைப் பாடுங்கள்
கார்த்திகைத் தீபனைப் பாடுங்கள் பஜனை

சரவண பவன்தனைப் பாடுங்கள்
தாந்தா மலையனைப் பாடுங்கள்
பரமனின் குருவனைப் பாடுங்கள்
பார்வதி பாலனைப் பாடுங்கள் பஜனை

சுந்தரப் பழநியைப் பாடுங்கள்
சுடும்பழக் காரனைப் பாடுங்கள்
சந்தன மணத்தனைப் பாடுங்கள்
சரவணக் குளத்தனைப் பாடுங்கள் பஜனை

திருப் பரங் கிரியனைப் பாடுங்கள்
திருச்செந் தூரனைப் பாடுங்கள்
திருத்தணி முருகனைப் பாடுங்கள்
திருவே ரகத்தனைப் பாடுங்கள் பஜனை

மருத மலையானைப் பாடுங்கள்
மாணிக்க நதியனைப் பாடுங்கள்
கதிரை மலையானைப் பாடுங்கள்
கந்த வடிவேலைப் பாடுங்கள் பஜனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் கோவில் மணியோசை

முருகன் கோவில் மணியோசை ஒலிக்கும் பொழுதெல்லாம் முத்தமிழ் நாதத்தையே பாடி ஒலிக்கும் என்பார்கள் முருகபக்தர்கள் ஏனென்றால் முருகப் பெருமானே எங்கள் தமிழ்க் கடவுள் என்பதால்.

அபயம்! அபயம்! என்று ஒலிக்கும் பெருமானுடைய மணி ஓசை அதே வேளையில், தமிழ் – அமுதம் அமுதம் என்றும் ஒலிக்குமாம் என்று ஆனந்த பரவசம் அடைவார்கள் அடியார்கள்.

தனித்தமிழ்க் கிராமமாகிய நமது ஊரிலே தமிழிறைவன் முருகப் பெருமானுடைய இரண்டாம் சன்னிதானத்திலும் மணியோசை கேட்கும் வரப் பேறு பெற்றுள்ளோம் நாம்.

விநாயகப் பெருமானின் திருநாமத்தை ஒலிக்கும் மணியோசை கேட்கும் வாய்ப்புடைய நாம், கண்ண பெருமானுடைய திருப்பதியிலே கீதையொலி முழங்கும் இரட்டை மணியோசை கேட்கும் இனிய பேறும் பெற்றுள்ளோம். ஆனைமுகன் நாமத்தையும், அன்னை முத்துமாரியின் அனுக்கிரகத்தையும், ஸ்ரீலஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமியின் திருவருள் நாதத்தையும் ஒலிக்கின்ற திவ்விய மணி ஓசையைக் குருக்கள்மடம் பெரிய கோவில் முன்னிலையிற் கேட்கின்றோம்!

இந்த வரப்பேறும் இனிய தவப் பேறும் நமக்கும் மற்றும் எல்லோருக்கும் நிலைத்திருக்க வேண்டும் என்று எம் பெருமான் முருகையனை என்றென்றும் மன்றாடுகின்றேன்.

ஜி.எஸ்.தஞ்சன்,
மின்சார / மின்னியற் பொறியியலாளர்
இலண்டன் சர்வகலாசாலை, பிரித்தானியா.

“ திருப்பதி ”
குருக்கள்மடம் – இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப் பாடல்

காவடிகள் ஆடுமையா வேலையா முருகையா
கார்த்திகையிற் தீபங் காணும் வேலையா முருகையா – கா

கரகமாடும் வீதியிலே வேலையா முருகையா
காவல் செய்யும் ஆண்டவனே வேலையா முருகையா – கா

கர்ப்பூரத் தீபமையா வேலையா முருகையா
கந்தனே சுமந்திடுவோம் வேலையா முருகையா – கா

வாழையும் நிறைகுடமும் வேலையா முருகையா
வரிசையாக வைத்திடுவோம் வேலையா முருகையா – கா

நேர்த்திகளைப் பூர்த்தி செய்தோம் வேலையா முருகையா
நிந்தனைகள் போக்கிடுவாய் வேலையா முருகையா – கா

பூப்பறித்து மாலை கோத்து வேலையா முருகையா
போட்டுனக்குப் பூசை செய்தோம் வேலையா முருகையா – கா

தோரணங்கள் கட்டி எங்கும் வேலையா முருகையா
சூரன்வதை கொண்டாடினோம் வேலையா முருகையா – கா

கந்தசஷ்டி நாயகனே வேலையா முருகையா
காத்து நோன்பு நாமிருந்தோம் வேலையா முருகையா – கா

பஜனை பாடிக் கும்பிடுவோம் வேலையா முருகையா
பாரை ஆளும் பங்கையனே வேலையா முருகையா – கா

நாளுங்காலை மதியம் மாலை வேலையா முருகையா
நாங்கள் பூசை பண்ணுகிறோம் வேலையா முருகையா – கா

ஆறுபடைக் காவலனே வேலையா முருகையா
ஆதரிக்க வேண்டுமையா வேலையா முருகையா – கா

சரணமையா சரணம் ஐயா வேலையா முருகையா
தஞ்சமையா தஞ்சம் ஐயா வேலையா முருகையா – கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவும் அசையாது

அவனன்றி ஓர் அணுவும் அசையாது. இந்த அருள்வாக்கு உலகத்தில் என்றுமே அழியாது. உண்மைத் தத்துவமான இந்தப் புனிதமான வாசகத்தைப் புறக்கணித்தவர்களின் வாழ்க்கையில் அருளும், அமைதியும், ஆனந்தமும் என்றுமே கிடையாது.

விஞ்ஞானம் வளர்ந்தோங்கி உச்சநிலை அடைந்து, மானிடர் சமுதாயம் விண்ணிலே பறந்து, வெண்ணிலாவிற் சஞ்சரித்து, ஆங்கேயும் தரித்திருந்து வாழும் நிலையினை எட்டிப் பிடித்தாலும் இத்தனை முயற்சிக்கும் எல்லாம்வல்ல இறைவனின் மூல சக்தியே காரணம் என்பதில் ஐயமே இல்லை.

இறைவன் சிவன் நாமத்தை ஆதிமுதலாகக்கொண்டு விளங்கும் நமது தெய்வங்கள் அனைத்தும் அவ்வாறே நம்மை அவ்வப் பொழுதில் ஆண்டு அருள்பாலித்துக் காக்கின்றன. அன்றாடம் நமது ஒவ்வொரு செயலுக்கும், ஒவ்வொரு முயற்சிக்கும் மூல சக்தியாக விளங்குகின்றன. இந்த நம்பிக்கை இந்து மதத்தில் மட்டுமன்றி எந்த மதத்திலுமே ஆணித்தரமான தத்துவமாக இருந்துவருகின்றது.

ஒளி மயமான விளக்கு வெளிச்சங்களும், கர்ப்பூரத் தீபங்களும், அபிஷேகங்களும், நைவேத்தியங்களும், ஆராதனைகளும், திருப்பூசைகளும், தினவழிபாடுகளும், நேர்த்தி வழிபாடுகளும், நித்திய மன்றாட்டங்களும், வாராந்த – மாதாந்த – வருடாந்த நோன்பு அனுட்டானங்களும், ஆண்டு மகோற்சவங்களும் "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற ஒரே திடநம்பிக்கையிலேயே நீடூழி நிலைபெற்று வருகின்றன.

இந்தத் தத்துவ உண்மைகளை மேலும் உறுதி செய்யும் வகையிலேயே குருக்கள்மடம் முருகையன் சன்னிதானத்தில் இப்பொழுது ஒரு மணிக்கோபுரம் அமைந்துள்ளது. திருமுருகன் நாமத்தை மணியின் ஓசை திக்கெல்லாம் ஒலிக்கின்றது!

**ஜி.எஸ்.இன்பன்,**
மின்சார / மின்னியற் பொறியியலாளர்
இலண்டன் சர்வகலாசாலை, பிரித்தானியா.
"திருப்பதி" குருக்கள்மடம் – இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஜனைப் பாடல்

வேல்முருகா நீலமயில்
மேலிருக்கும் முருகையா
மால்மருகா மங்களமாய்
வந்திருக்கும் முருகையா வேல்முருகா

நாடிவரும் துன்பங்களை
நாளும் மாற்றும் முருகையா
தேடிவரும் மாந்தர்களைத்
தேற்றும் அருள் முருகையா வேல்முருகா

காவலுக்கு நீ வருவாய்
காத்தருள்வாய் முருகையா
கோவிலுக்கு நாம் வருவோம்
கும்பிடுவோம் முருகையா வேல்முருகா

சூழவரும் தொல்லைகளைச்
சுட்டெரிக்கும் முருகையா
வாழவைக்கும் நேசமுடன்
வாருமையா முருகையா வேல்முருகா

வேதனைகள் தீரவேண்டும்
வேலவனே முருகையா
சோதனைகள் மாளவேண்டும்
சுந்தரனே முருகையா வேல்முருகா

கந்த சஷ்டி கவசம் பாடிக்
கதிரை மலை முருகையா
வந்து நோன்பு நாமிருந்தோம்
வரமருள்வாய் முருகையா வேல்முருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி

குருக்கள்மடம் இன்று ஒரு திருப்பதியாக விளங்குவதைக் காண்கின்றோம்।
பரந்து விசாலித்து விரிந்த பெருங் கிராமம் அல்ல நமது கிராமம். ஆயினும் திரும்பிய திக்கெல்லாம் தெய்வத் திருத்தலங்கள் தென்படும் ஓர் தெய்வீகச் சூழல் நிறைந்த ஒரு சிவநெறிக் கிராமமாகத் திகழ்கின்றது. இதனால் நமக்குச் சிறப்பும் பெருமையும் பக்திப் புகழும் கிட்டியுள்ளதை நாம் அறிவோம்.

ஒருதிக்கை நோக்கினால் ஆங்கே செட்டிபாளையம் ஸ்ரீ விக்கினேஸ்வரன் கோயில். இன்னொரு திக்கை நோக்கினால் ஸ்ரீலஸ்ரீ வெல்வக் கதிர்காம சுவாமி கோயில் தெரிகின்றது. மற்றுமொரு திசையில் பார்த்தால் முருகையன் எழுந்தருளி இருக்கும் இரண்டாம் கோட்டம் அழகிய காட்சியழிக்கின்றது. ஊரின் மத்தியிலோ எமது காக்கும் கடவுளான கண்ண பெருமானுடைய திருப்பதி தெரிகின்றது. ஊரின் வடக்கு எல்லையிலே சபரிமலை ஐயப்பன் வீரமணி கண்டனுடைய சன்னிதானம் விளங்குகின்றது. ஆங்கே நாக தம்பிரானுடைய கோவிலும் இருக்கின்றது. வேலவனின் வடிவேலுக்கும், வயிரவக் கடவுளாம் காவற் தெய்வத்துக்கும், ஆங்கே வழிபாடு நடக்கின்று.

கிராமத்தின் எல்லைக்குள்ளே இருக்கின்ற கோயில்களில் இரண்டு கோயில்களிலே கிரகதோஷ நிவர்த்தி வழிபாட்டுக்கென நவக்கிரக பீடங்களும் அமைந்திருப்பது நமது வரப்பேறாகும். மூன்று தலங்களில் மணிக்கோபுரங்கள் இருக்கின்றன. இறைவன் திருநாமத்தை எங்கும் எப்பொழுதும் எல்லோருக்கும் கேட்கும் படியாக ஒலித்துக்கொண்டிருப்பதே மணியின் ஓசை. இதுவும் நமது கிராமத்துக்கோர் பெரும் பாக்கியமாகும்।

எனவே நமது கிராமம் ஓர் திருப்பதியாகவே திகழ்வது நாமும் நம் முன்னோரும் செய்த தவத்தின் பயனே ஆகும்।

**கோகிலம் ஞானமணியம்**

**ஆரோக்கிய விஞ்ஞான டிப்ளோமா – இலண்டன், பிரித்தானியா.**

"திருப்பதி" குருக்கள்மடம் – இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

## பஜனைப் பாடல்

மணியொலி கேட்குது முருகையா
வானெங்கும் ஒலிக்குது முருகையா மணி

ஊரினி லெங்கும் உன்திரு நாமம்
ஓங்கி யொலிக்குது முருகையா
பாரினி லெங்கும் மானிடர் ஓதும்
பக்தி ஒலிக்குது முருகையா மணி

அஞ்சேல் அஞ்சேல் அஞ்சேல் என்றே
அபயம் ஒலிக்குது முருகையா
நெஞ்சம் முழுதும் நிறையும் உந்தன்
நேசம் ஒலிக்குது முருகையா மணி

காலந் தோறும் காவல் செய்யும்
கருணை ஒலிக்குது முருகையா
வேலும் மயிலும் துணையாம் என்றே
வேதம் ஒலிக்குது முருகையா மணி

மாமயில்ஏறும் காவல னுந்தன்
மாண்பை ஒலிக்குது முருகையா
தேவியர் இருவர் கூடி விளங்கும்
செல்வம் ஒலிக்குது முருகையா மணி

பைந்தமிழ் ஞானம் தந்திடும் அருளைப்
பாடி ஒலிக்குது முருகையா
ஐந்து கரத்தான் தம்பியுன் அன்பை
ஆடி ஒலிக்குது முருகையா மணி

நாமுன்னை நம்பி நாடி வணங்கும்
நாட்டம் ஒலிக்குது முருகையா
ஓம் சரவணனே கந்த புராணம்
ஓதி ஒலிக்குது முருகையா மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருக்கள்மடம் இருகோயில் வாசன்

முருகையா –மனம்– உருகையா!
மோகனனே –பன்னிரு– கையா! முருகையா

காலமெல்லாம் உன்னைக் கும்பிடுவோமே
கதியென்று நாளும் நம்பிடுவோமே முருகையா

ஊரிலிரண்டு தலங்களைக் கொண்டாய்
உன்னருள் ஆட்சியில் எங்களைக் கொண்டாய் முருகையா

அண்ணல் விநாயகர் ஆலய மிங்கே
ஆனது முனக்கோர் ஆனந்தமன்றோ முருகையா

மாதுமையாளுன் தாய்மக மாரி
வாரி யிருந்தாள் மாதம் மும்மாரி முருகையா

மாலவன் உன்றன் மாமனும் ஊரில்
மாளிகை கொண்டார் வாழ்வினைத் தந்தார் முருகையா

ஐயனார் பெருமான் ஆலயங் கண்டோம்
ஆங்குமுன் வடிவேல் அருளினைக் கண்டோம் முருகையா

நாகவிடபிரான் நாமமும் இங்கே
நான்கு திசைகளும் பாங்குறுமையா! முருகையா

ஆதிசிவன் தனக்கே உபதேசம்
ஓதிய குருவே ஓம் சரவணனே முருகையா

வாரண தேவனை வணங்கி நின்றாயே
வள்ளிதெய் வானையை மணந்துகொண்டாயே முருகையா

ஆறுபடைகளில் வாழுகின்றாயே
அகிலமெல்லாமே ஆளுகின்றாயே முருகையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
வாழைச்சேனை காகித ஆலை

# ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான்

# தல வரலாறும்
# 108 போற்றிகளும்

சமர்ப்பணம்
முத்தமிழ்ப் பாவலர்
**கவிஞர் ஞானமணியம்**

ஸ்தாபகர் / தலைவர்
**பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம்**
இலண்டன் – பிரித்தானியா

சர்வதேசப் பணிப்பாளர் நாயகம்
சுவாமி நடராஜானந்தா சிறுவர் இல்லம்
அறச்சேவை ஸ்தாபனம்
*சித்தாண்டி - இலங்கை*

**1985ம் ஆண்டு லண்டனில் கவிஞர் ஞானமணியம் அவர்களால்
பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம்
ஸ்தாபிக்கப்பட்டுப் பத்து ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு
வெளியிடப்பட்டதே இந்த ஆத்மிக நூல்**

**யுவ வருடம் – 1995/96**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைச்சேனை காகித ஆலை
ஸ்ரீ சித்தி விநாயகர்

# தல வரலாறு

## – விளம்பியவர்கள் –

சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் நூலின் மூலப் பிரதியில் மிகவும் விரிவாகக் கூறிய வரலாறு இங்கே சுருக்க மாக இடம்பெற்றுள்ளது

வரலாறு சொல்லுமியல் தரவேண்டும் இறைவா வாரணக் குமரா!
வளமான காகிதம் பெறவேண்டும் இறைவா பிள்ளையார் அப்பா!
திரமான சுகமெலாம் உறவேண்டும் இறைவா ஓங்கார வதனா!
சிந்தையிற் தீபமாய் வரவேண்டும் இறைவா சித்தி ஏரம்பா!

முன்னோர் சொல்லக் கேட்டறிந்த நிகழ்ச்சிகளும், முன்னே நிகழக் கண்டறிந்த நிகழ்ச்சிகளும், அடியார்கள் தமது வாழ் வில் அன்றாடம் அடைந்துள்ள அனுபவத்தால் வியந்துரைக் கத் தெரிந்துகொண்ட அற்புத நிகழ்ச்சிகழுமே எம்பெருமான் ஸ்ரீ சித்தி விநாயகர் தலவரலாற்றில் இடம்பெறுகின்றன.

1952ம் ஆண்டு தொடக்கம் வாழைச்சேனையிலும் ஓட்டமாவ டியிலும் இப்பகுதியிலுள்ள ஏனைய கிராமங்களிலும் உள்ள விவ சாயிகள் இங்கிருந்து வாகனேரிக்குளம் வரைக்கும் காடுகளை அழித்து நிலங்களைத் திருத்திப் பண்படுத்தி வயல்களாக்கி விவசாயம் செய்துவந்தனர். அதே காலகட்டத்தில் வளமான சோலைமரங்களாலும், தாமரை தழைத்து நிரம்பிய தண்ணீர் த்தடாகங்களாலும், பசும்புற் தரைகளாலும் சூழப்பட்டிருந்த மையாலும், வாவிக்கு இப்பால் மனங்கவரும் ஓர் தீபகற்பமாக இந்த இடம் விளங்கியமையாலும் நம் முன்னோர்கள் மிகப் பொருத்தமாக இவ்விடத்தைக் கமலத்தீவு என்றே சிறப்புப் பெயரால் அழைத்து வந்தனர்.

கமலத்தீவில் கோடை நாட்களிலும் வரண்டுவற்றாத இரண்டு தாமரைக் குளங்கள் இருந்தன. அவைகளைச் செந்தாமரைக் குளம், வெண்டாமரைக்குளம் என்று அழைத்தார்கள்.
இந்தக் குளங்களில் இரண்டு யானைகள் வந்து தண்ணீர் அருந்தித் தங்கியிருந்து போவது தவறாத வழக்கமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைக் குளங்கள் இரண்டுக்கும் இடையிலாகத் தமக்கான போக்குவரத்துப் பாதையொன்றினை அமைத்துக் கொண்டிருந்த விவசாயிகளின் கண்களுக்கு ஓர் அற்புதமான காட்சி தோன்றியது.

ஓர் ஆலமரமும் ஒரு கள்ளி மரமும் ஒன்றையொன்று அணைத்துக் கொண்டவாறு மருவிநின்றதைக் கண்டனர். அத்துடன் போக்குவரத்துச் செய்யும் தருணங்களில் ஆங்கே தெய்வீகமான ஒரு புது நறுமணம் வீசுவதையும் உணர்ந்தனர்.

பின்னர் அவர்கள் அவ்விடத்தை நன்கு அவதானித்தபொழுது பிள்ளையார் பெருமானின் முகவடிவங்கொண்ட கல்லொன்றும் ஆங்கே இருப்பதைக் கண்டனர். உடனே தென்னை ஓலைக் குடிசையொன்றினை எம்பெருமானின் திருக்கோயிலாக முதன் முதலில் அமைத்தனர். அன்றுதொடக்கம் ஆனைமுகப்பெருமானை நன்றே வழிபட்டு வந்தனர். நாட்கள்சில நகர்ந்ததும் ஆனைமுகனின் தாமரைக்குள வட்டாரத்தில் ஆனைக்கூட்டங்கள் அணியணியாக வந்து கொண்டாடிச் செல்லும் குதூகலக் காட்சி அவர்களுக்குத் தெய்வீக நிகழ்ச்சியாகத் தென்பட்டது.

ஆயினும் வனவிலங்குகள்தானே என்று தமக்கு உண்டான மனத் தயக்கத்தால் பக்தர்கள் ஆங்கே மன்றாடச் செல்லும் வழக்கத்தை நிறுத்திவிட்டனர். எல்லாம் இறைவன் செயலே என்று சிலநாட்கள் விவசாயத்தையும் வழிபாட்டையுமே நிறுத்திக் கொண்டனர்.

அந்தக் காலகட்டத்தில் ஓட்டமாவடிப் பாலத்திற்கு அருகாமையில் உள்ள தியாவட்டவான் கிராமத்திற் குடியேறிய விவசாயிகள் பாலத்தை அண்மியதாய்ப் பாதையின் ஓரத்தில் விநாயகப்பெருமானின் சிலையைக் கொண்டுவந்து ஒரு பீடத்தில் வைத்து வழிபாட்டை மீண்டும் தொடர்ந்தனர்.

வீதிக்கரைப் பெருமான் என்ற புகழ்ப்பெயர் நமது வினாயகப் பெருமானுக்கு மிகவும் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களை வாழ்க்கைப் பாதையில் மட்டுமன்றிப் பயணப் பாதையிலும் வழிநடத்தும் வாரணத் தெய்வமே பிள்ளையார் பெருமான்.

ஏற்கனவே தியாவட்டவான் வீதிக்கரையில் சிலவருடங்கள் வீற்றி ருந்து, எம்பெருமான் நாடிவரும் எல்லோரையும் ஆண்டு அருள்பாலித்தார். தியாவட்டவான் கிராமத்து மூதாதையர்களால் பிள்ளையாரின் அஞ்சலிபீடம் அழகுறப் பேணிப் பராமரிக்கப் பட்டது.

1956ம் ஆண்டு காகித ஆலை உருவாக்கப்பட்டது.

காகித ஆலைத் தலைவர்கள், சிரேஷ்ட நிருவாகஸ்தர்கள், தொழிலாளர்கள், ஆலைக் குடியிருப்பு வாசிகள் அனைவரது ஆர்வத்தாலும், பக்தி சிரத்தையாலும் அப்பன் கணேசையனுக்கு ஆங்கே ஓர் ஆலயம் தோன்றியது.

ஆலைக் குடியிருப்பு மனைகளில் வாழும் ஊழியர்தம் குடும்பங்கள் மட்டுமல்ல, வாழைச்சேனை வட்டாரத்தில் வாழும் மக்கள் யாவரும் வீதிக்கரை விநாயகரை அன்றாடம் வந்து வழிபட்டு வந்தனர்.

தீவினைகள், நோய்நொடிகள், தீராத கொடும்பிணிகள், ஓயாத நெடுங்குறைகள் அனைத்தையும் போக்கி அருள்புரிந்து வாழ் க்கையிற் சித்திகளையே கொடுத்தருளிய நம் பெருமானை அடியார்கள் அன்று தொடக்கம் இன்றுவரை சித்தி விநாயகர் என்று பக்தியுடன் பெயரிட்டு அழைத்துவருகின்றனர்.
பின்னே தமது அடியார்கள் கமலத்தீவிலேயே தமது கமலப் பாதங்ளை மீண்டும் தொடர்ந்து வழிபடவேண்டும் என்று சித்தி விநாயகப் பெருமான் சித்தங்கொண்டார் போலும்.....!
1956ம் ஆண்டு தொடக்கம் வீதிக்கரையிலே வீற்றிருந்த எங்கள் பெருமான் ஆதியில் ஆலமரத்தடியில் காட்சி கொடுத்தருளிய மூலநிலையத்திலேயே மீண்டும் இனியதோர் ஆலயங்கொண்டு எம்மை ஆண்டருளப் பரிவுகொண்டுள்ளார் போலும்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையின் முன்னாலேயே வீற்றிருந்து இன்று விளங்குகின்ற மேலான சிறப்பையெல்லாம் காணவேண்டுமென்று அன்றே விருப்பங்கொண்டுள்ளார் போலும்.....!

1968ம் ஆண்டளவில் ஆலை நிருவாகத்தின் பணிப்புரை அனுமதியுடனும் ஆங்கே ஆலைக் குடிமனைகளில் வசித்திருந்த ஆலை ஊழியர் குடும்பங்களின் சம்மதத்துடனும் வீதிக்கரையிலிருந்த விநாயகப் பெருமானின் விக்கிரகம் ஆதிபீடத்திற் கொண்டு வந்து அமர்த்தப்பட்டது.
ஆதிபீடமான ஆலமரத்தடியிலேயே வந்து அமர்ந்தருளியதும் பிள்ளையாருடைய வழிபாடு அங்கே மீண்டும் வழுவாது சிறப்புடன் தொடர்ந்தது.

முன்னர் இங்கே ஆல மரத்தடியிற் தோன்றியிருந்து பின்னர் வீதிக்கரையிற் சென்று வீற்றிருந்து அருளாட்சி புரிந்துவிட்டு, மீண்டும் ஆலையின் முன்றிலில் ஆலமரத்தின் அடியிலேயே வந்து அமர்ந்தருளியமையால் பெருமானை அடியார்கள் பின்பிள்ளையார் என்று செல்லப்பெயரால் பிரியமாக அழைத்து வருவது சிறப்பு வரலாறாகும்.

1968ம் ஆண்டு சித்தி விநாயகருக்குக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறியது. மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் பெருமான் ஆலயத்திலிருந்து நமது விநாயகப் பெருமான் நெடுஞ்சாலையின் ஊடாக ஊர்வலம் வந்துகொண்டிருந்தார்!

தாமரைமுதல் ஏனைய நறுமலர்களாலும் இனிதே அலங்கரிக்கப்பட்ட மோட்டார் வாகனத்தில் அழகிய மூஷிக வாகனத்திறைவன் பேரானந்தப் பவனிவந்தார்!

எம்பெருமான் எழுந்தருளி வந்துகொண்டிருந்த வேளையில் ஊர்கள்தோறும் வீதியின் இருமருங்கிலும் காத்திருந்து போற்றித் துதிக்கும் பக்தர்கள் மங்கல நிறைகுடங்கள் வைத்து, விளக்கொளித் தீபங்கள் ஏற்றி வழிபாடு நிகழ்த்திய திருவிழாக் காட்சி என்றுமே மறக்கமுடியாத இனியதோர் பெருவிழாக் காட்சியாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நின்றுவிடாது அடியார்கள் அனைவரும் அணியணி யாகத் திரண்டு ஐயனின் ஊர்வலத்தில் இணைந்து, ஆலயம் வரைக்கும் அரஹர கோசத்துடன் சிரசுமேற் கைகூப்பிய வண்ணமாய்த் திருயாத்திரை செய்தமை ஓர் தேய்வீகத் திரு விழாக் காட்சியாகத் தோன்றியது।

ஆனைப்பந்தியிலிருந்து மிக நீண்ட ஊர்வலத்தை முடித்துக் கொண்ட சித்திவிநாயகப் பெருமான் ஆலையின்முன்னே தமது ஆலயத்தில் அமர்ந்தருளினார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தினப் பூசைகள், வாராந்தப் பஜனைப் பூசைகள், மாதாந்த விஷேட பூசைகள், வருடாந்தத் திருவிழாக்கள் அனைத்தும் கிரமம் தவறாது நிகழ்ந்துவந்தன. எம் பெருமானுக்குரிய விநாயக சதுர்த்திப் பூசையும், கந்தவடி வேலவனின் கந்தசஷ்டி விரதப் பூசையும், திருவெம்பாவை போன்ற மார்கழித் திருப்பூசைகளும் தவறாமல் நடைபெற்று வந்தன.

இயற்கையின் கோளாறு காரணமாக 1978ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் ஆலயம் சற்று உருக்குலைந்தது.

எனினும் தாமதமின்றிக் கோயில் திருத்தி அமைக்கப்பட்டு மீண் டும் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுப் பூசைகள் வழமைபோற் தொடர்ந்தன.. அதே வருடத்தில் என்பெருமானுடைய தலத் துடன் நாகதம்பிரான் கோவிலும் அமைய வேண்டும் என்று பரிபாலன சபையினரால் தீர்மானிக்கப்பட்டது.

அதே வேளையில் வெள்ளைநிற நாகமொன்று ஆலயத்தின் அருகாமையில் உள்ள புற்றிலே நுழைவதை அடியார்கள் அவதானித்தனர். உடனே அந்த இடத்திலேயே நாகபிரான் கோயில் உருவாக்கப்பட்டமை மிகவும் தெய்வீகமானதோர் நிகழ்ச்சியாகும். இன்றும் வெண்நாக தம்பிரான் ஆங்கே அடிக் கடி வந்துலவும் காட்சியைக் காணலாம்.

நவக்கிரக பீடம் அமையவேண்டும் நவக்கிரக வழிபாடும் தொடரவேண்டும் என்பது பக்தர்களின் நீண்டநாள் வேண்டு கோளாகும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ம் ஆண்டில் நவக்கிரக பீடத்துக்கான திருப்பணிகள் ஆரம்பமானது. மிகவும் விரைவான ஆக்கங்களாலும் ஊக்கங்க ளாலும் நவக்கிரக பீடம் இனிதே நிறைவேறியது.
23.03.1994 அன்று நவக்கிரகங்களுக்கான கும்பாபிஷேகமும் சிறப்புடன் நிறைவேறியது.

இறைவன் சித்திவிநாயகப் பெருமானுடைய தேவஸ்தானத்தில் இப்பொழுது நவக்கிரக வழிபாடும் நிகழ்ந்துவருகின்றது.

பெருமானுடைய தேவஸ்தானத்தில் தீர்த்தக்கிணறு, அறநெறிப் பாடசாலை, பூந்தோட்டம், தென்னந்தோப்பு என்பன சீருடன் அமைக்கப்பட்டு ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் விளங்குகின் றது।

எமது ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுடைய மகோற்சவத் திரு விழா ஆண்டுதோறும் ஆனி உத்தர நன்னாளில் ஆனந்தமாகவும் மங்களகரமாகவும் நடைபெற்று வருகின்றது.

காகித ஆலையைவிட்டு நீங்கியவர்கள், வெளிநாடு சென்றவர் கள், ஆலையை மறந்தாலும் ஆலைமுன் வீற்றிருந்து அருள்பா லிக்கும் எம்பெருமான் சித்திவிநாயகரை மறந்ததே இல்லை.

பொருளுதவிகளும், பூசைகளும் ஆலயத்துக்கான திருப்பணிக ளும் செய்துகொண்டே வருகின்றனர். ஏறக்குறையப் பதினாறு ஆண்டுகள் காகித ஆலை நிருவாகத்திற் கடமையாற்றி வீட்டுப் பன்னிரண்டு ஆண்டுகளின் முன்னர் வெளிநாடுசென்று வாழுகின் றவர் கவிஞர் ஞானமணியம் அவர்கள்.

ஆறாயிரம் மைல்களுக்கும் அப்பால் லண்டன் மாநகரில் வாழ்ந்துகொண்டிருந்த போதிலும் எங்கள் பெருமானாருடைய பேரருளை அவரால் என்றுமே மறக்கமுடியவில்லை. சித்தி விநாயகப் பெருமானின் பெருமைகளை அடக்கியதும் விளக்கிய துமான தலவரலாறும் 108 போற்றிகளும் என்னும் இந்த அரு மையான ஆத்மிகத் திருநூலை அச்சிட்டு வெளியீட்டுள்ளார் என்றால் எம்பெருமானுடைய பெருங்கருணைப் பேற்றை மேலும் விளக்க வேண்டியதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகப் பெருமானுடைய பக்தர்கள் சிலர் ஐயனின் திருவருளால் ஆளப்பட்ட திவ்வியமான அற்புதம் நிறைந்த சில நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

## விதியின் நியதி...!

தமது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட எதிர்பாராத தாக்க ங்களின் நிமித்தம் எம்பெருமான் சித்தி விநாயகர்மீது பழியைச் சுமத்துவதாய் விரக்தியடைந்து பெருமானாரின் தலத்துக்கே வாராதிருந்த சில பக்கதர்களுக்கு விதியின் நியதியை உணர் த்தி ஒருசில நாட்களுக்குள்ளேயே மீண்டும் தமது வழிபாட் டைத் தொடரும் பாக்கியத்தைப் பாலித்தவர் நம் இறைவன் பஞ்சகரத்து நாயகனார். என்னே...! எம் பெருமானுடைய பேராட்சி மகிமை.

## மருணித்த மகன் ஆலயத்தில் வாழ்கின்றார்...!

பெருமானுடைய தீவிர பக்தையொருத்தர் தமது மகன் விபத் தினால் மாண்டதால் விநாயகர் ஏன் என்னை இப்படிச் சோதிக்கவேண்டும்..? இனி நான் விநாயகரை வழிபடப் போவதில்லை என்று தரித்திருந்தார். பக்தர்கள் வெறுப்பினும் பக்தரை வெறுப்பவரில்லை நம் இறைவன்.

அந்தத் தாயாரின் கனவிலே மருணித்த மகன் தோன்றி..,
"அம்மா! நான் உண்மையிலேயே இறக்கவில்லை அம்மா. எம்பெருமான் சித்தி வநாயகர் ஆலயத்துக்குள்ளே பெருமானு டைய அணைப்பிலேயே இருக்கின்றேன் அம்மா"
என்று சொல்லிச் சென்றார்.

மறுநாட் காலையில் முதல் வேலையாக ஆலயத்துக்கு ஓடிச்சென்று வழிபட்ட தாயார் உண்மையிலேயே தன் மகன் நந்தி விக்கிரகத்தின் பின்னால் தோன்றி மறைந்த அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைந்தார்.
அன்று முதல் அந்தத் தாயார் முன்னரைப்போல் எம்பெருமானை என்றுமே மறவாது மன்றாடிவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்கமிழந்த கை வழக்கமானது...!

சித்தி விநாயகரின் தேவாலயத் தூபியைத் தவறாமல் நாள் தோறும் தொடர்ந்து வழிபட்டுவந்த ஒரு பக்தரின் கைகளில் ஒன்று வழக்கமிழந்து விட்டது. பலவாறாக வைத்தியங்கள் செய்தும் நிவாரணம் காணாது தொடர்ந்து வருத்தமுற்று வருந்தினார்.

அதனால் மனமுடைந்த பக்தர் சித்தி விநாயகப் பெருமானின் ஆலய முன்றிலில் நின்று ஐயனைவேண்டி மனமுருகி மன்றாடிய வண்ணம், இறைவா! உன்னை மன்றாடும் பக்தருக் கெல்லாம் இனியவரமளித்து நிவாரணங்கள் பாலிக்கின்றாயே! என்னை மாத்திரம் ஏன் தெய்வமே இன்னும் வருத்துகின்றாய்? எனக்கு விமோசனம் இல்லையா.? என்று முறையிட்டவாறு ஆலயத்தை வலம்வந்தார்.

அப்பொழுது தூபியிலிருந்து தொடர்ச்சியாகச் சில மலர்கள் அவரைநோக்கி வந்து வீழ்வதுபோற் கண்டார். உடனே மலர்களைத் தாவிப்பிடிக்க எண்ணிய அவர் வேதனையை மறந்து திடீரெனத் தமது வழக்கமிழந்த கையையே நீட்டினார். என்னே எம்பெருமானின் திருவருள் மகிமை.!

உடனே வழக்கமிழந்திருந்த கை வழக்கமானது! வருத்தம் முற்றாக நீங்கியது. சித்தி விநாயகரின் அருளையும் தமது நிவாரணத்தையும் இங்குள்ள ஊழியர்களிடம் உணர்ச்சி வசமான பக்தி சிரத்தையுடன் அந்தப் பக்தர் கூறிவருவதை நாம் காண்கின்றோம்.

## பிள்ளையைப் பிடித்த அம்மை நோய் அகன்றது...!

எம்பெருமானின் வழிபாட்டில் நம்பிக்கை இழந்த ஒரு ஊழியர் வாகனேரி **(water Pump House)** நீர்க்குழாய் மனையில் வேலை செய்துவந்தார்.
அவர் ஆலை ஊழியர் குடிமனை ஒன்றிலேயே வசிப்பவர்.
அவருடைய பிள்ளையொன்றுக்கு அம்மை நோய் கண்டது.
பலவாறாக முயன்றும் அம்மைநோய் அகலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை துடியாகத் துடித்தது. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திகைத்து வெதும்பினார். மாறாத மனக்கவலையுடன் ஓரிரவு வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தார். வயோதிபர் ஒருத்தர் அவருடைய கனவிலே தோன்றி,

"நீ வீணே கவலைப் படாதே! நான் ஆலைமுன் இருக்கும் ஆலயத்திற்தான் இருக்கிறேன். நீ ஒரு பூசைசெய்து என்னை வழிபடு. உன்பிள்ளையின் நோயும்தீரும் நீயும் கவலைதீர்ப்பாய்"
என்று கூறி மறைந்தார் எமது சித்தி விநாயகர்..
மறுநாள் காலை வெள்ளிக்கிழமையானதால் கனவின்படி சித்தி விநாயகருக்குப் பக்தி சிரத்தையுடன் பூசைசெய்து மன்றாடினார் அந்தத் தந்தையார். அத்துடன் பிள்ளையின் நோய் தணிந்து நிவாரணமானது! அத்தோடு அந்த ஊழியர் சித்தி விநாகரின் ஓர் சிறந்த பக்தரும் ஆனார்.

## குன்றாத நிதிவளம் உண்டானது!

இத்தனை அற்புதங்களுக்கும் சிகரமாய் அமைந்தாற்போல் நிகழ்ந்தவொரு சிறந்த அற்புதத்தையும் நாம் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆதியான கும்பாபிஷேகத்தின் பொழுது மட்டுநகர் ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து எம்பெருமானுடைய நெடும் பவனி வந்துகொண்டிருந்த வேளையில் ஆலைப் பெருமானின் திருத்தலத்திலுள்ள திருப்பணி நிதியின் பற்றாக் குறையைப்பற்றி ஆலையின் முகாமையாளர் சற்றுக் கலக்கமடைந்தவராய் ஆங்கே பவனியின் ஓரத்தில் ஓரிடத்தில் ஒருகணம் மெய்மறந்த நிலையில் ஸ்தம்பித்து நின்றார்.

அந்த வேளையில் நெற்றியிற் திருநீறணிந்த சைவப் பெரியார் ஒருத்தர் அவர் முன்னே தோன்றி...,
நீர் இவற்றையிட்டுக் கவலைப்பட வேண்டாம்...!
எல்லாம் இனிதே நிறைவேறும்...!
உமது கடமையைச் சரிவரச் செய்யும்..! என்று கூறிச் சென்றார். அன்றுமுதல் ஐயனுடைய ஆலய நிதிவளம் குறைந்ததும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலை முகாமையாளர் முன்னாற் தோன்றிச் சென்ற பெரியாரை அதற்குப் பின்னர் எப்பொழுதாவது எங்காவது ஆலை மூகாமை யாளர் கண்டதும் இல்லை.

காகித ஆலைமுன் ஆலயங்கொண்டு வீற்றிருந்தாலும் எம்பெரு மான் கணேஷ நாதன் காசினி எங்கணுமே வியாபித்திருந்து தமது பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார் என்பதில் ஐயமே இல்லை.

நமது சித்தி விநாயகரின் தலவரலாறும், 108 போற்றிகளும் ஓரே நூலாக அச்சேறி வெளிவந்துள்ள பெரும் பாக்கியத்தையும் நாம் இப்பொழுது பெற்றுள்ளோம், பேரின்பம் அடைகின்றோம்.

எம்பெருமானுடைய தலவரலாறு என்றென்றும் அழியாத திவ்விய சரித்திரமாக நீடித்து நிலைப்பதற்கு இந்த அருமையான நூல் ஒரு ஆத்மிக சாசனமாக அமைந்துவிட்டது என்றால் அது மிகவும் பொருத்தமாகும்.

எனவே நாம் அனைவரும் எம் பெருமானை என்றென்றும் பக்திமிகுதியுடன் பாடிப்பணிந்து, போற்றி மகிழ்ந்து, வாழ்வில் நல்லருளும் நற்பேறுகளும் பெறுவோமாக.

காகித வளம் பெருக்கும்
கடவுளே காப்பாய் சரணம்!
கணபதி இறைவா ஞானத்
தெய்வமே காப்பாய் சரணம்!
போற்றிகள் நூற்றியெட்டுச்
சாற்றினோம் காப்பாய் சரணம்!
புகழ்த்தல வரலாறோதி
ஏற்றினோம் காப்பாய் சரணம்!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணநாதன் அருள்காண வேண்டும்

பல்லவி

ஆதிசிவன் நாயகனின் ஆதிமகன் நீ
அன்னை உமை ஆனவளின் அன்புமகன் நீ ஆதிசிவன்

அநுபல்லவி

சோதிமய மாகும்வழி தோற்றுபவன் நீ
சுந்தரன் இளங்குமரன் ஏற்றுபவன் நீ ஆதிசிவன்

சரணங்கள்

நீதிமறை ஐயப்பன் அண்ணலவன் நீ
நெஞ்சிலமரும் விக்கி னேஸ்வரன் நீ
வேதியரும் விண்ணவரும் எண்ணுபவன் நீ
வினைதீர்க்கும் சித்திவி நாயகனும் நீ ஆதிசவன்

நாதியில்லை என்றுதினம் வாடுகிறேன் நான்
நல்லதிருப் பாதங்களை நாடுகிறேன் நான்
சாதிமத பேதங்களைச் சாடுகிறேன் நான்
சமரசம் ஆகுமினங் கூடுகிறேன் நான் ஆதிசிவன்

மோதிவரும் தீவினையில் நீடுகிறேன் நான்
மூளவே மாயைதிண் டாடுகிறேன் நான்
ஓதியுனை வேதமொழி பாடுகிறேன் நான்
உள்ளமதில் உன்வரவைத் தேடுகிறேன் நான் ஆதிசிவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி துணையாள வேண்டும்

பல்லவி

பாடும் வரம் தருவாய் கலைவாணி – வண்ணப்
பைந்தமிழாய் வருவாய் கலைவாணி பாடும்

அநுபல்லவி

நீடும் சுகம் அருள்வாய் கலைவாணி – என்றன்
நெஞ்சினிலே நிறைவாய் கலைவாணி பாடும்

சரணங்கள்

சித்தி விநாயகரின் நூற்றி யெட்டுப் – போற்றி
சீருடன் நான் ஓதும் பாவருள்வாய்
அத்தனையும் புலன்கள் அன்னையுன்னை – நாடும்
ஆனந்த ஞானவளம் நீயருள்வாய் பாடும்

வாழைநகர் ஆலைக் காகிதங்கள் – இந்த
வையகத்தில் விளங்கும் வரம் வேண்டும்
நீழவரம் கொடுக்கும் வேழமுகன் – புகழை
நித்தமும் நான் உரைக்கும் நிலை வேண்டும் பாடும்

வாழிய வென்று பதம் போற்றிடுவேன் – கலை
வண்ண மனக் கமலம் சாற்றிடுவேன்
ஊழியர் வாழும் பயன் மிக வேண்டும் – தினம்
உன்திருப் புகழ்பாடும் வரம் வேண்டும் பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காகித ஆலை
# சித்தி விநாயகப் பெருமான்
## 108 போற்றிகள்

திருச்சிற்றம்பலம்

காகிதம் வளரும் ஆலைக் கடவுளே காப்பாய் போற்றி
காத்தருள் புரியும் சித்தி விநாயக முதல்வா போற்றி
பாவிதம் பலவாய்ப் பாடிப் பணிகிறோம் ஐயா போற்றி
பாதங்கள் தம்மை நாடித் தொழுகிறோம் இறைவா போற்றி

ஆதியில் வனத்தில் வந்தாய் ஆலயம் கொண்டாய் போற்றி
ஆலமா மரத்தின் நீழல் ஆங்கமர்ந் திட்டாய் போற்றி
நாதியில் லாதார் எம்மை நலமுடன் ஆண்டாய் போற்றி
நாளுக்கு நாளாய் நின்றன் நல்லாசி தந்தாய் போற்றி

ஆலைக்கு முன்னே கோயில் ஆளநீ கொண்டாய் போற்றி
ஆகும்மா துயரும் பிணியும் ஆகாது காப்பாய் போற்றி
வேலைக்கு முன்னே பூசை ஆற்றினோம் ஐயா போற்றி
வீட்டிலும் பயணங்களிலும் ஏற்றினோம் இறைவா போற்றி

மாமாங்கப் பதியின் கோட்டை மன்னவா நின் தாள் போற்றி
மண்டூரில் வாழும் முருகன் கொண்டாடும் அண்ணா போற்றி
நாமோங்கப் பரிவுங் கனிவும் பாலிக்கும் இறைவா போற்றி
நல்லாசி தந்தாய் எம்மை நலமாளு கின்றாய் போற்றி

அன்றொரு காலந் தன்னில் அடர்ந்தகா டையா போற்றி
ஆனாலும் அங்கு வந்தாய் ஆலயம் கொண்டாய் போற்றி
இன்றொரு நகராய் மாறி இலங்குதல் கண்டாய் போற்றி
எங்களை ஆளத்தானே இன்பங்கள் தந்தாய் போற்றி

அன்னியரின் காகிதத்தை நம்பினோம் ஐயா போற்றி
ஆனதாற் பாடுபட்டோம் என்னாளும் இறைவா போற்றி
தன்னிறைவு கண்டே வளரும் காகிதம் தந்தாய் போற்றி
தாரணியில் எங்களுக்கும் ஓரிட மளித்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிநிற்கின்றோம் உன்றன் நல்லருட் பாதம் போற்றி
நாட்டுமா நகரிற் தலைமைப் பீடத்தை வைத்தாய் போற்றி
எம்பிலிப் பிட்டி யாங்கும் எழுப்பினாய் ஆலை போற்றி
எங்களின் புகழைத் தேற்றும் இறைவனே காப்பாய் போற்றி

முன்னர்வெண் கமலத்தீவை நண்ணி வந்தாயே போற்றி
முருகுசெங் கமலத்தீவை நாடி வந்தாயே போற்றி
மன்னிய சோலைக்குள்ளே வந்தமர்ந்தாயே போற்றி
வாழைமா வட்டாரத்தில் மகிமைகொண்டாயே போற்றி

கிழக்கிலே வாழைச்சேனை கீர்த்தியூர் ஐயா போற்றி
கேட்பவர் காண்பவர்க்கே நேர்த்தியூர் ஐயா போற்றி
வழக்கமாய்க் காகிதங்கள் மலிந்திடச் செய்தாய் போற்றி
மாமாங்கப் பதியில் வாழும் வள்ளலே வந்தாய் போற்றி

ஆரம்ப நாளில் ஆலை அமைந்ததும் ஐயா போற்றி
ஆனதாம் பலவாய் இன்னல் ஆனைமா முகனே போற்றி
கோரங்கள் ஏதானாலும் கோளறுத் தாண்டாய் போற்றி
கும்பிடும் தொழிலாளர்க்கே தஞ்சமாய் நின்றாய் போற்றி

விலங்கினம் வாழும் வனமாம் வேலவன் முதல்வா போற்றி
வீடமிகும் பாம்பின்காடாம் வினைதீர்க்கும் இறைவா போற்றி
இலங்குமா நகராம் இன்றே எங்கள்ஐங் கரனே போற்றி
ஈழத்தில் இதுவோர் புகழாம் வேழத்து முகனே போற்றி

ஆலையின் சங்காலுன்றன் அருளோசை கேட்டோம் போற்றி
ஆற்றிடும் தொழிலால் உன்னை அஞ்சலித்திட்டோம் போற்றி
வேலையின் சோர்வில்லாமல் ஆர்வமுண் டானோம் போற்றி
விக்கினம் தீர்க்கும் எங்கள் விக்கினேஸ் வரனே போற்றி

ஓயாமல் உறுதி நெஞ்சில் உழைத்திட வைத்தாய் போற்றி
சோராமல் இயந்திரங்கள் சுழன்றிடச் செய்தாய் போற்றி
மாயாமல் மின்சாரத்தால் மதிதந்து காத்தாய் போற்றி
நேராமல் ஆபத்துக்கள் நீ காவல் ஆனாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர் பதவி தந்தாய் ஊதியம் தந்தாய் போற்றி
ஓதுவார் நெஞ்சத் துறையும் ஒப்பிலா முதலே போற்றி
ஆழியில் உறங்கும் திருமால் ஆனந்த மருகா போற்றி
ஐயப்ப சுவாமிக்கும் நீ அண்ணனாம் ஐயா போற்றி

சிவசக்தி மகனே எங்கள் சித்திவிநா யகனே போற்றி
சிங்கார வேலன் தம்பி சேவிக்கும் முதல்வா போற்றி
நவசக்தி யாவும் மகிழும் ஞானப்பா லகனே போற்றி
நம்பிக்கை வைத்தோமையா தும்பிக்கை நாதா போற்றி

காகிதம் மலியுங் காட்சி தோற்றினாய் இறைவா போற்றி
கஜமுகப் பெருமானே நின் கருணையால் ஐயா போற்றி
நாவிதம் மறைசார்ந்தாலும் நாமொன்று சேர்த்தாய் போற்றி
நாளுக்கு நாளாய் ஆலை மேலோங்கச் செய்தாய் போற்றி

கணங்களை முதலாய் ஆளும் கணபதி இறைவா போற்றி
காலங்கள் தோறும் ஞாலம் காத்திடும் தலைவா போற்றி
வணங்கினோம் வந்துன் கழலை வள்ளலே காப்பாய் போற்றி
வாரணக் குமரா சக்தி மடிமீ தமர்ந்தாய் போற்றி

நெல்லாரும் வயல்கள்தோறும் நிலையங்களிறைவா போற்றி
நேர்த்தியாய் வைக்கோல்நிறையும் மலைகள்போல் ஐயா போற்றி
எல்லாரும் தொழிலைப்பெற்றார் இன்பங்கள்பெற்றார் போற்றி
ஈழத்தில் உதயத் தேசம் வாழ்விக்கும் ஐயா போற்றி

அம்பிகைத் தாயாருக்கோர் தும்பிக்கை மகனே போற்றி
அழகுவேல் முருகனுக்கோர் ஆசையண் ணாவே போற்றி
நம்புவார் துன்பம் தீர்ப்பாய் நல்லருள் தருவாய் போற்றி
நான்மறைத் தலைவன் சபரி நாயகன் முதல்வா போற்றி

நித்திரை விழித்திருப்போம் நீதுணை இருப்பாய் போற்றி
நேராமல் வினைகள் வந்தே நீதவிர்த் திடுவாய் போற்றி
ஒத்திருந் தாலைத்தொழிலை ஊக்கமாய்ச் செய்தோம் போற்றி
ஓம் அருள் ஞானச் சுடரே உலகாளும் ஒளியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிடும் இயந்திரங்கள் சூழ்ந்திடும் இறைவா போற்றி
துட்டமின் சாரம் பாயும் தொடுப்பினால் ஐயா போற்றி
உற்றிடும் விபத்தில்லாமல் உறுதுணை ஆவாய் போற்றி
ஓதிநின் நாமம் பாடி உழைக்கிறோம் ஐயா போற்றி

ஆலமரக் குடையின் நிழல் ஆனந்த மாமே போற்றி
ஆங்குவந் தமரும் தெய்வம் ஐயாநீ தானே போற்றி
மூலமுதற் பொருளே சக்தி முன்னின்ற மகனே போற்றி
முத்துமணி வீரன் கண்டன் மூத்த தம யோனே போற்றி

தென்கதிரை மலையி லுன்றன் தம்பியருள் கண்டாய் போற்றி
திருவெருகல் நதியின்தீர்த்தம் ஆடுமெழில் கண்டாய் போற்றி
அன்பர்களை முருகன்தாந்தா மலையடியில் ஆள்வான் போற்றி
ஆங்குமலை முடியில் ஐயா தாங்கியெமை ஆள்வாய் போற்றி

திருச்சங்க மான்கண்டியிலே இருக்கின்ற தேவா போற்றி
திருக்கோயில் ஆழிக் குமரன் சிறப்புநீ கண்டாய் போற்றி
திருப்பெருந் துறையில் வேலன் திகழ்வதுன் னாலே போற்றி
தெய்வமே முருகண்டியிலே உய்யநாம் அருள்வாய் போற்றி

வில்லூன்றி முருகன் புகழை மேலோங்க வைத்தாய் போற்றி
வேலாடும் சித்தாண்டியிலே மயிலாட வைத்தாய் போற்றி
நல்லூரில் எம்மைக் கந்தன் நலமாள வைத்தாய் போற்றி
நாட்டிலே தெய்வம்யாவும் நாங்கள்தொழ வைத்தாய் போற்றி

ஆறுபடை வீட்டில் முருகன் ஆண்டருளக் கண்டாய் போற்றி
ஐந்துகரத் தானே நின்றன் ஆசியினா லன்றோ போற்றி
நூறுபடை வினைவந்தாலும் நொடியினில் மறைப்பாய் போற்றி
நோன்புக ளிருந்துன்னாலே மாண்புக ளடைந்தோம் போற்றி

முத்தியருள் புரிவாய் சரணம் முன்னிறைவா சரணம் போற்றி
நித்தியமாய் அருள்வாய் சரணம் நின்னடிகள் சரணம் போற்றி
சித்தமதில் உறைவாய் சரணம் திருவடிகள் சரணம் போற்றி
சித்திவிநா யகனே சரணம் தெய்வமே சரணம் போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலைக்கோர் ஆலயம்

– கவிஞர் ஞானமணியம் –

சித்தி விநாயகப் பெருமானின் சித்தமது கிட்டுமானால் அருளின் பங்கள் அத்தனையும் கிட்டும் என்பதில் ஐயமே இல்லை.

1966ம் ஆண்டு ஜூன் மாதம் என் கடமையில் ஈடுபட்டேன். காகித ஆலை எல்லைக்குள் அடியெடுத்து வைத்தேன். ஏறக்குறையப் பதினாறு ஆண்டு காலம் கடமையாற்றினேன். ஆனால் அடிக்கடி மேற்கொண்ட இடைக்காலச் சேவைகளில் மொத்தமாக இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆலையில் உள்ள தரக்கட்டுப்பாட்டுப் பகுதியில் மூலப்பொருட் பரிசோதகராகவும், முடிவுப் பகுதியில் காகிதப் பரிசோதகராகவும் கடமை யாற்றினேன்.

ஏனைய பதினான்கு ஆண்டுகளிலும் கொள்வனவு நிலையங் களில் மூலப்பொருட் பரிசோதகராகவும், கொழும்பு மாநகரில் தலைமைக் காரியாலையத்திற் களஞ்சியப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்தேன். அதன்பின்னர் கிழக்கு மாநிலத்தின் பலகோண ங்களிலும், வடமத்திய மாகாணத்திலும் உள்ள மூலப்பொருட் கொள்வனவு நிலையங்களிலும், புனானைப் பரிசோதனைப் பண்ணையிலும் நிலைய அதிகாரியாகக் கடமையாற்றினேன்.

காகித ஆலை ஊழியர்களால் எனது கலைப் படைப்புக்களும் நன்றாக வரவேற்கப்பட்டன. எமது காகித உற்பத்தியை இட்டு ஊருக்கும் நாட்டுக்கும் எடுத்துச்சொல்லும் என்னுடைய....., "கிராமிய நடனங்கள்" ஆலை நிருவாகத்திடம் மதிப்பையும் சிறந்த பரிசுகளையும் பெற்றுள்ளன. "நாடறியும் முன்னே மாடறிந்த மர்மம்" "புனானைப் பரிசோதனைப் பண்ணை" போன்ற கவிதைகள் ஊழியர்களால் இனிதே இரசிக்கப்பட்டன. "ஊமன் கோழி" என்னும் கட்டுரை சாமங்கள் தோறும் ஊழியருக்குச் சிம்ம சொப்பனங்களைக் காணும் அனுபவத்தை தோற்றுவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகித ஆலையின் சார்பாக நான் அனுப்பிவைத்த ஒரு சோடி ஊமன் கோழிகள் ***Brown Fish Owls*** தெகிவளை மிருகக் காட்சி சாலையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.
நான் அனுப்பிவைப்பதற்கு முன்னர் இந்த இரவு காலப் பறவைகளைப் பிடிப்பது மிருகக் காட்சிசாலையினருக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது என்றும் காகித ஆலையினால் அந்தக்குறை தீர்ந்துவிட்டது என்றும் 1969ம் ஆண்டில் ஊமன் கோழிகளை நான் ஒருதடவை பார்க்கச் சென்றிருந்த பொழுது மிருகக்காட்சி சாலையில் அறிந்தேன்.

மிருகக் காட்சிசாலை இயக்குநர் எனக்கு நன்றி செலுத்தும் வகையில் வழங்கிய நன்றிமடலும், காகித ஆலை வழங்கிய பாராட்டு மடலும் என்றென்றும் என்னுடைய சான்றிதழ் ஆரத் தினை அலங்கரித்துக்கொண்டே இருக்கிறன.
விலங்கினக் காட்சி சாலை இயக்குநர் வழங்கிய நன்றிமடலின் பிரதி இந்த நூலில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆகவே காகித ஆலையின் நற்புகழை நானும் என்னால் முடிந்த அளவு பறைசாற்றியிருக்கிறேன் என்னும் பெருமையும் மகிழ்ச்சியும், திருப்தியும் எனக்குண்டு.

இந்தப் புனிதமான நூலின் சீரிய வெளியீட்டால் ஆலையின் புகழையும், ஆலைப் பெருமானின் வரலாற்றுப் புகழையும் மென்மேலும் நாடும் பாரும் அறியச் செய்துள்ளேன் என்ற பாக்கியத்தையும் எம்பெருமானுடைய கருணையால் நான் அடைந்துள்ளேன்.
நான் எங்குதான் சென்று என்ன கடமையில் ஈடுபட்டிருந்த போதிலும் இரவும் பகலும் என்னேரமும் ஆலையின் முன்னே ஆலயம் கொண்டிருக்கும் எம்பெருமான் சித்தி விநாயகரை எண்ணி வழிபட மறந்ததும் இல்லை. ஒருபொழுதும் அந்தப் பெருமானின் திருவருளை நான் இழந்ததுமில்லை.

சுருக்கமாகச் சொன்னால் வீட்டைவிட்டு – நாட்டைவிட்டுப் புறப்பட்டு ஏறக்குறையப் பன்னிரண்டு ஆண்டுகளாயினும், ஆறா யிரம் மைல்களுக்கும் அப்பால் இந்த லண்டன் மாநகரில் வாழும் நிலையிலும் எம்பெருமானை நான் எண்ணிவழிபடத் தவறியதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நெஞ்சாரப் பாடிப் படைத்துச் சமர்ப்பணம் செய்திருக்கும் இந்த இனிய 108 போற்றிகள் நிச்சயம் அதற்குச் சான்றாகும் என்பது என் திடமான நம்பிக்கையாகும்.

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் எம்பெருமானுடைய அனுக்கிரகம் நிறைந்த ஒருசில அற்புதங்களை இங்கே குறிப்பிடவிரும்புகின்றேன். கொள்வனவு நிலையங்களில் காரியாலைய நிருவாகங்கள் செய்யத்தொடங்கும் முன்னே நிலையங்களை ஆரம்பத்திலிருந்தே உருவாக்கும் முயற்சிகளில் நான் ஈடுபட்டிருந்தேன். ஆக்கப்பட்ட நிலையங்களை நிரந்தரமாக்கும் பொறுப்புக்களையும் ஏற்றுப் பணிபுரிந்தேன்.

அடர்ந்து வளர்ந்த பெருங்காட்டை வெட்டியழிக்க வேண்டும். வேரகற்றி நிலக்களத்தைச் சமனிடவேணடும்.
வேலியமைக்க வேண்டும். நிலையக் காரியாலயம், நிறுவைப் பாலம், தண்ணீர்க்கிணறு, ஊழியர் தங்குமிடம், காவலர் வாயிற் கொட்டாரம் போன்ற முக்கியமான கட்டிடவேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அமைய ஊழியர்களை நேர்முகத்தெரிவுகள் மூலம் நியமிக்க வேண்டும். வைக்கோல் கொள்வனவை ஆரம்பித்து வைக்கவேண்டும்.

ஒரு நிலையத்தை உருவாக்க வேண்டுமானால் முதன்முதலாகக் கொடிய வனவிலங்குகளும் கொடூர விடப்பாம்புகளும் வாழும் கோரவனத்துள்ளே கரடுமுரடான பாதைகளினூடாக நுழைந்து உரிய இடத்தைச் சென்றடைய வேண்டும். கொட்டில்கட்டி அதனுள்ளேதான் சீவியம் நடத்தவேண்டும். கூதற்குளிரில் முடங்கிக்கொண்டு படுத்துறங்கி விழித்தெழுந்து தான் வேலைசெய்ய வேண்டும்.
குடிநீர் இல்லையேல் ஆற்றிலோ குளத்திலோ குட்டையிலோ மொண்டு வந்து வடிநீர் அருந்திக்கொள்ள வேண்டும். நாளுக்குநாள் முன்னேற வேண்டும், அதன் பின்னரே நிருவாக ஒழுங்குகளை நிலைப்படுத்த வேண்டும்.
இத்தனையும் ஒருபுறமிருக்க, உருவாகப்போகும் அந்த நிலையத்தினால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள சுபீட்சமான ஒளிமயத்தை உணரமுடியாத பாமரமக்களின் உபத்திரவங்களையும் நாம் சமாளித்துக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என்ன புதுக் கூத்து? என்பார்கள். இங்கே என்ன நடத்தப் போகிறார்கள்? இனி எங்கே வேட்டையாடுவது?

எங்கே ஆடுமாடு மேய்ப்பது? எங்கே கொள்ளி பொறுக்குவது? எங்கே குந்தி எழும்புவது? எங்கே மரம்தறிப்பது அறுப்பது? எவ்வாறு வீடுகட்டுவது? எப்படித் தச்சுவேலைகள் செய்வது? சீவியம்போக்குவது எப்படி? என்று மனம் கொந்தளிப்பார்கள்.

பிறகு என்ன.? போராட்டங்கள்தான்.। நல்லது செய்யப் பொல்லாப்பு நேரும். மனதைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டும்.

தேனீக்களின் விஷக் குத்துக்கு ஆளாகித் தேனெடுப்பது போன்ற சிக்கலான தொழில்.। கரும்புதின்னக் கைக்கூலி கொடுக்கும் விந்தையான கருமம்..।
திட்டங்கள் தீட்டுவார்கள்....।கொட்டிலுக்குக் கல்லெறிவதே புத்தி.।கருமத்தில் நாம் முந்திவிடவேண்டும்। இல்லையேல் காரியங்கெட்டுவிடும் என்று தொல்லைப்பாணங்களைத் தொடுப்பார்கள்। பகுத்தறிவு இல்லாத இவ்வாறான பாமரமக்களின் சாபங்களுக்கும் ஆளாக வேண்டும்.

சாதுரியமாகச் சமாளித்துக் கொள்ளவேண்டும். மானிடர் தொல்லைகள் வலிந்து வருத்தும். கொடிய வனவிலங்குகள் நம்மைத் தனகிவந்து பயமுறுத்தும். பாம்பினம் படையெடுக்கும், சீறிவரும் நாகபாம்பு படமெடுக்கும்। இவைகளால் அடிக்கடி நம் உயிர்நடுங்கும்।

இத்தனை சிரமங்களின் மத்தியில் இன்னுமொரு சித்திர வதை। என்ன தெரியுமா.? ஒருசிலரின் இயல்பான கைங்கரியம்। பீட்டிஷம்। பெயரும் விலாசமும் இல்லாத மறைமுகமான முறைப்பாடு...।
இனிய பெரும் நட்பு, இணையற்ற பாசம், நீடித்த நேசம், அசையாத நம்பிக்கை, நாணயம் மிக்க நன்மதிப்பு, நல்ல மரியாதை, அமைதியான நிம்மதி கூட்டுறவு அத்தனையும் உடையவர் மத்தியிலே கொடிய பகையும், கடும்பழியும், தீராத ஆத்திரமும், கோபதாபமும் உருவாகி நிருவாகமே சீர்குலையும் வண்ணம் எழுத்துவன்மை காட்டும் சாணக்கிய மந்திரத்தால் நமது ஆலை நிருவாகம் சிறிது மனத்தாக்கமடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அது ஆலைநிருவாகத்தின் குற்றமல்ல. தப்புணர்வு கொண்ட ஒருசிலரின் உபத்திரவம். எனவே நிருவாகத்துக்கு உண்மையான விடயத்தை உணர்த்தும் உறுதியான மனமும் நெஞ்சு வலிமையும் வேண்டும். அதற்கு நமக்கு ஆண்டவனே தஞ்சமளிக்க வேண்டும்.

வேறுகதி ஏதுமில்லை.
எனவேதான் எம் பெருமான் சித்தி விநாயகரை அடியேன் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். பெருமான் என்னை ஒருபொழுதும் கைவிட்டதில்லை.

ஏற்ற துணைகொடுத்து இனியவரமளித்து என்னை அவ்வப் பொழுது காத்தருள் பாலித்தவரே நம் சித்தி விநாயகர்.
ஆயுள் உள்ளவரை தருணங்களிற் கைகொடுத்து வழிகாட்டிக் காத்தருளிய அந்தப் பெருமானை என்னால் மறக்கமுடியுமா.?

அங்கிருந்து வாழ்ந்தபொழுது ஆனைமுகத்திறைவன் என்னை ஆளாதிருந்தால் இங்கிலாந்தில் நான் இங்கிருக்கும்பொழுது நான் நிம்மதியாக வாழமுடியுமா..?

அங்கேயும் இங்கேயும் என்னையும் என் குடும்பத்தினரையும் என்றென்றும் ஆண்டு அருள் பாலித்துவருகின்ற வாரணப் பெருமான் எங்கள் ஆனைமுகப் பெருமானல்லவா.....!

பெருமானுடைய அருள்விளங்கும் தலவரலாற்றை இந்த நூலில் முன்னரே கற்றுணர்ந்த பக்தர்களுக்கு மற்றுமுள சான்றுகளை மென்மேலும் விளக்கவேண்டியது அவசியமன்று.
பெருமானுடைய பேரருள் இதுவரை குறைந்ததும் இல்லை.
குறைவதும் இல்லை.
குறைந்திடப் போவதுமில்லை.
நிறைந்த வண்ணம் நிலைத்திருப்பதே நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானை நாம்
அன்றாடம் வழிபடும் பொருட்டு
ஆலைக்கோர் ஆலயம்
அமைந்து விளங்கும் பெரும்பாக்கியத்தை
அறியாதார் ஆரும் உளரோ....!

அன்று, ஆலைக்கோர் ஆலயம்
ஆன சிறுத்தலம் இன்று,
நமது மானிலத்துக்கு மட்டுமல்லாமல்,
நாட்டின் ஏனைய மானிலங்களுக்கும்
ஓர் திருத்தலம் ஆனதுகண்டு நாம்
பேரின்பம் அடைகின்றோம்!
ஆலைப் பெருமானுடைய ஆலயம்
அருளும், கருணையும் விளங்கி
நீடூழி நிலைக்கவேண்டும்!
ஆலையின் புகழ் அதனால்
நாட்டிலும் பாரிலும்
நலமே சிறக்கவேண்டும்!

ஆலையின் நிருவாகம் அதனால்
சாலவும் சிறப்புற்றுத்
தழைத்து வளரவேண்டும்!
ஆலையில் வேலைசெய்யும் ஊழியர்கள்
அனைவரும் எம்பெருமான் ஆனைமுகனின்
அருள்பெற்று வாழவேண்டும்!

ஆலை ஊழியர்களை ஆண்டருளும் இறைவன்
அண்டிவரும் அடியார்கள் எல்லோரையும்
ஆளவேண்டும்! அருள் பாலிக்கவேண்டும்!
அதற்காகவே நாம் அனைவரும்
ஆனைமுகப் பெருமானை
அன்றாடம் அஞ்சலிக்க வேண்டும்!

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின்
திருவடிகளே சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளஞ்சலி – பஜனைப் பாடல்

ஐந்து கரத் தையனே தஞ்சம் அருள்வாய்
ஆனைமுக வள்ளலே தஞ்சம் அருள்வாய்
இந்து மறைத் தெய்வமே தஞ்சம் அருள்வாய்
எங்கள் முதல் இறைவனே தஞ்சம் அருள்வாய்

ஆயகலை வாணியே தஞ்சம் அருள்வாய்
ஆனந்த ரூபியே தஞ்சம் அருள்வாய்
தூயகலை வாணியே தஞ்சம் அருள்வாய்
தோன்று மனச் சோதியே தஞ்சம் அருள்வாய்

சிவசக்தி நாதனே தஞ்சம் அருள்வாய்
தேவீ உமை பாகனே தஞ்சம் அருள்வாய்
நவசக்தி மோகனே தஞ்சம் அருள்வாய்
நடராஜ தீபமே தஞ்சம் அருள்வாய்

ஆதிமா சக்தியே தஞ்சம் அருள்வாய்
அகிலாண்ட நாயகி தஞ்சம் அருள்வாய்
நீதிமா வீரியே தஞ்சம் அருள்வாய்
நிலையான தேவீயே தஞ்சம் அருள்வாய்

மாரியென்னும் தாயே நீ தஞ்சம் அருள்வாய்
மழைபொழியும் தெய்வமே தஞ்சம் அருள்வாய்
வீரியென்னும் காளியே தஞ்சம் அருள்வாய்
வெற்றி தரும் துர்க்கையே தஞ்சம் அருள்வாய்

ஸ்ரீதேவி அன்னையே தஞ்சம் அருள்வாய்
சிங்கார வல்லியே தஞ்சம் அருள்வாய்
ஸ்ரீரங்கன் அழகியே தஞ்சம் அருள்வாய்
செங்கமல வதனியே தஞ்சம் அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திடும் கடவுளே தஞ்சம் அருள்வாய்
கண்ணபெரு மானே நீ தஞ்சம் அருள்வாய்
பார்த்திபன் சாரதியே தஞ்சம் அருள்வாய்
பாண்டவரின் நாயகனே தஞ்சம் அருள்வாய்

வேலவனின் தம்பியே தஞ்சம் அருள்வாய்
வீரமணி கண்டனே தஞ்சம் அருள்வாய்
மாலவனின் மகனே நீ தஞ்சம் அருள்வாய்
மலரடிகள் சரணமே தஞ்சம் அருள்வாய்

நாகமணி இறைவனே தஞ்சம் அருள்வாய்
நாதர்முடி அழகனே தஞ்சம் அருள்வாய்
ஏகமும் நிறைந்தாயே தஞ்சம் அருள்வாய்
ஏறும் விடம் தீர்ப்பாயே தஞ்சம் அருள்வாய்

காவலின் கடவுளே தஞ்சம் அருள்வாய்
காத்திடும் வயிரவனே தஞ்சம் அருள்வாய்
மாவலம் வருவோனே தஞ்சம் அருள்வாய்
மண்டலங் காப்போனே தஞ்சம் அருள்வாய்

வள்ளிமண வாளனே தஞ்சம் அருள்வாய்
வானமகள் நாயகனே தஞ்சம் அருள்வாய்
புள்ளி மயில் வாகனனே தஞ்சம் அருள்வாய்
பொன்னழகு வேலவனே தஞ்சம் அருள்வாய்

ஆனைமுகன் தம்பியே தஞ்சம் அருள்வாய்
ஐயப்பன் தமயனே தஞ்சம் அருள்வாய்
தேனமுத மொழியனே தஞ்சம் அருள்வாய்
செந்தமிழர் தெய்வமே தஞ்சம் அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நாலு வார்த்தைகள்

காகித ஆலையின் முன்னே வீற்றிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மீது 108 போற்றிகள் பாடவேண்டும் அதனால் நம்மைப் பீடிக்கும் ஆயிரத்தெட்டுத் தொல்லைகளும் அகல வேண்டும் என்று நான் ஆவல்கொண்டது உண்மைதான். ஆனால் அதற்கும்மேலான இன்னுமொரு உண்மையும் உண்டு.

108 போற்றிகளைப் பாடுவதற்கு ஆலய வரலாற்றுச் சான்றுகள் வேண்டும், அறிந்தவரையில் ஆராய்ந்து எனக்கு அனுப்புங்கள் ஐயா! என்று ஆலய பரிபாலன சபைப் போசகரான ஆலை முகாமையாளர் அவர்களுக்கு எழுதினேன்.
ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் தலவரலாற்றை மக்கள் அனைவரும் அறியச் செய்யவேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் ஆவல், என்று அந்த இனிய ஆத்மிகத் தொண்டரிடமிருந்து ஒரு அற்புதமான பதில் இலண்டன் மாநகருக்குப் பறந்துவந்தது.
என்னே பேரின்பம்....! பின்னர் என்னே தாமதம்...?
இதோ! ஐயனின் 108 போற்றிகளும், தல வரலாறும் பெருமானைப் போற்றி வழிபடும் உங்கள் கரங்களிற் தோற்றி விட்டன.
ஆங்குள்ள அடியாரின் ஆவலும், இங்குள்ள அடியேனின் ஆவலும் ஒருங்கே இணையப் பெற்றுப் பலிதமாகிவிளங்கும் ஆன்மிகப் பிரதிவின்பமாகச் சித்திவிநாயகர் சன்னிதானத்தில் வெளிவந்துள்ளது! எல்லாம் அந்த ஏரம்ப நாயகனின் இணையில்லாத பேரின்பமே ஆகும்.

ஆன்மிக முயற்சிக்கு உறுதுணையான ஆலைய பரிபாலனப் போஷகருக்கும், ஆலயபரிபாலன சபையினருக்கும், மதிப்புக்குரிய ஆலை முகாமையாளருக்கும், ஆலை நிருவாகத்தினருக்கும், ஆலை ஊழியர்களுக்கும், ஆசியுரைகள் – அருளுரைகள் – பக்தி உரைகள் – சிறப்புரை – தலைவர் உரை – நன்றியுரை அனைத்தும் கொடுத்து நூலை அலங்கரித்த அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றிகள் என்றென்றும் உரியதாகும்.
எல்லோருக்கும் என் இனிய வணக்கங்கள்

கவிஞர் ஞானமணியம் – இலண்டன், பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகா சரணம் - *பஜனைப் பாடல்*

சங்கரன் குமரனே சண்முகா சரணம்
சரவணத் தெய்வமே சண்முகா சரணம்
தங்கவேல் ஐயனே சண்முகா சரணம்
சக்தியின் பாலனே சண்முகா சரணம்

கதிர்காம நாதனே சண்முகா சரணம்
கந்தவடி வேலனே சண்முகா சரணம்
புதிர் ஆன புகழனே சண்முகா சரணம்
பொன்மேனி அழகனே சண்முகா சரணம்

முத்துமணி மார்பனே சண்முகா சரணம்
மூவிரு முகத்தனே சண்முகா சரணம்
சித்தாண்டி வள்ளலே சண்முகா சரணம்
தென்பழநி அப்பனே சண்முகா சரணம்

திருப்பரங் குன்றனே சண்முகா சரணம்
தெய்வானை நாதனே சண்முகா சரணம்
திருத்தணி மலையனே சண்முகா சரணம்
ஸ்ரீவள்ளி துணைவனே சண்முகா சரணம்

மண்டூரின் மன்னனே சண்முகா சரணம்
மாவேற் குடாவனே சண்முகா சரணம்
தண்டமிழ் தெய்வமே சண்முகா சரணம்
தாந்தாவின் ஐயனே சண்முகா சரணம்

வெருகலம் பதியனே சண்முகா சரணம்
வீல்லூன்றி வேலனே சண்முகா சரணம்
மருதமலை அப்பனே சண்முகா சரணம்
மாலவன் மருகனே சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரசம் ஹாரனே சண்முகா சரணம்
சுப்பிர மணியனே சண்முகா சரணம்
வாரணன் தம்பியே சண்முகா சரணம்
வள்ளிதெய் வானையின் சண்முகா சரணம்

திருக்கோயில் இறைவனே சண்முகா சரணம்
திருவே ரகத்தனே சண்முகா சரணம்
திருநீற்றுக் கேணியனே சண்முகா சரணம்
திருப்பழம் உதிர்சோலைச் சண்முகா சரணம்

காவல் உகந்தை மலைச் சண்முகா சரணம்
காக்கும் பெருந்துறைச் சண்முகா சரணம்
சேவல் இணைந்த மயிற் சண்முகா சரணம்
செல்வநற் சன்னிதிச் சண்முகா சரணம்

ஆடிவேல் ஐயனே சண்முகா சரணம்
ஐயப்பன் அண்ணலே சண்முகா சரணம்
நாடினோம் உன்னையே சண்முகா சரணம்
ஞானமணி வரதனே சண்முகா சரணம்

பாரெங்கும் உள்ளோனே சண்முகா சரணம்
பதிநூறு கொண்டோனே சண்முகா சரணம்
தேரெங்கும் உடையோனே சண்முகா சரணம்
திருவீழாக் காண்போனே சண்முகா சரணம்

ஆறபடை வாசனே சண்முகா சரணம்
ஆறிரு கரத்தோனே சண்முகா சரணம்
ஏறுமயில் அழகனே சண்முகா சரணம்
எங்கள் தமிழ் இறைவனே சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலத் தீவுக் கடவுள்

அன்றும் இன்றும் என்றும் கமலத் தீவுக் கடவுளான
ஐயன் சித்திவிநாயகப் பெருமானின் ஆட்சியும், காட்சியும்,
ஆனந்த மாட்சியும் நீடித்து நிலைத்திருக்கும் என்னும்
சாலச் சிறந்த தனிப் புகழைப்பாடித் துதிக்கும் பக்திப்பாட்டு

பல்லவி
வெண்கமலம் செங்கமலம் எங்கும் மணக்கும் – அங்கே
வேழம்வந்து நாளும்புனல் ஆடிக் களிக்கும் வெண்

அநுபல்லவி
எண் திசையும் சோலைவளம் எழில் பரப்பும் – எங்கள்
இறைவன் கணேஷருக்குப் பூசை நடக்கும் வெண்

சரணங்கள்
தென்னை இழை ஓலையிலே கோவிலிருக்கும் – பக்தர்
சிந்தையிலே கோபுரங்கள் எழுந்து நிற்கும்
அன்னை உமை சங்கரியின் பிள்ளை முதல்வன் – தலம்
ஆலமரத் தடியிலே அமைந்திருக்கும் வெண்

பொங்கும்மணப் பங்கயங்கள் தங்கமலராய் – தினம்
பூத்துக் கமழுங் கமலத் தீவுக் கடவுள்
சங்கத்தமிழ் மூன்றுந்தரும் தும்பிக் கரத்தான் – அருள்
தஞ்சமென்னும் பேர்களுக்கு ஞானக் கடவுள் வெண்

அன்று சித்தி விநாயகர் அன்பு மிகுந்தார் – எம்மை
ஆளவென்று கானகத்தை நாடியிருந்தார்
இன்று புகழ் ஆலயத்தில் விளங்குகின்றார் – வரம்
இரந்திடும் மக்களுக்கு வழங்குகின்றார் வெண்

ஆலைத்தொழில் ஊழியர்க்கு வாழ்வு மலரும் – சித்தி
ஆனைமுகன் அன்பருக்கு இன்பம் நிறையும்
மேலைக்கலை விளங்கிடும் காகிதச் செல்வம் – நல்ல
வேகத்திலும் யோகத்திலும் மிக்க வளரும்! வெண்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் ஆனைப்பந்திப் பிள்ளையார்

ஆனைப்பந்தியில் ஆனைமுகன்
ஆளுகின்றார் வாழுகின்றார்
ஆதரிப்பார் ஆசையினால்
அரவணைப்பார் அன்பினால்

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம் ஆனைப்பந்தி

வாட்டி வதைக்கும் நோயெல்லாம்
மறைந்து போகும் வாழலாம்
ஆட்டி வதைக்கும் கோளெல்லாம்
அடங்கிப்போகும் மீளலாம்

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம் ஆனைப்பந்தி

தேடுங்கல்வி முன்னேற்றம்
தேற்றிடுவார் பிள்ளையார்
கூடும் அரிய மேன்மைகள்
கோடிக்கோடி நன்மைகள்

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம்! ஆனைப்பந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் உதய மண்ணிலே
கொண்டார் மட்டு நகரிலே
தேவி சங்கரி நாயகி
திருக்குமரன் கணபதி

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம் ஆனைப்பந்தி

ஆண்டு யோகத் திருவிழா
ஆகும் அழகுப் பெருவிழா
வேண்டும் மாந்தர் மணிவிழா
வேழமுகனின் புகழ்விழா

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம் ஆனைப்பந்தி

கோபுரமாம் பதியிலே
குடியிருந்தார் பிள்ளையார்
மாபுரமாம் மதுரையின்
மாதா மகன் பிள்ளையார்

கும்பிடுவோம் கூடுவோம்
குதூகலிப்போம் நாடுவோம்
நம்பிடுவோம் அம்பிகையாள்
ஞான மைந்தனைப் பாடுவோம் ஆனைப்பந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# இலண்டன் உயர்வாசற் குன்றம் திருமுருகன் 108 போற்றிகள்

*1986ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை முன்னிட்டுப் பாடியது*

திருச்சிற்றம்பலம்

ஓம் அருட் கணேஷன் ஐயன் ஓரிளைய கோனே போற்றி
உலகெங்குங் கோயில் கொண்டாய் ஓராறு முகனே போற்றி
நாம் அருட் பேறைக் காணும் நாயகனே குகனே போற்றி
நம்பிவரும் அடியார் தம்மை நலமாளுங் குருவே போற்றி

இங்கிலாந் தினிய நாட்டில் எழுந்தருள் செய்தாய் போற்றி
இலண்டன்மா நகரில் நாமே இறைஞ்சிடும் முருகா போற்றி
திங்களாய்த் திகழுஞ் சிவனார் செல்வனே குமரா போற்றி
தேசங்கள் தோறும்நின்றன் திருத்தலங்கொண்டாய் போற்றி

ஆறுபே ரெழில்வீட்டானே ஆனந்த மயனே போற்றி
அழகுயர் வாசற் குன்றில் அமர்ந்தசெந் தமிழா போற்றி
ஏறுமா மயில்வாகனனே ஈராறு தோளா போற்றி
இங்குநீ சீமைப் பதியில் எம்மையாண் டிடுவாய் போற்றி

ஆங்கிலக் குலமா மண்ணில் அருளாட்சி புரிவாய் போற்றி
அகிலத்து மேலை நாட்டில் அருட்சோதி ஆனாய் போற்றி
தாங்கியெம் பாரத்துயரைத் தவீர்த்துநீ ஆள்வாய் போற்றி
தமிழுக்கோர் தெய்வமாகித் தாமரையில் வந்தாய் போற்றி

விம்பிள்டன் பிள்ளையாரின் வெற்றிச் சோதரனே போற்றி
வேழமுக நாதன் அவனை நாடுமிளை யோனே போற்றி
தம்பிமணி கண்டன் வீரன் தமயன்நீ ஆனாய் போற்றி
தாரணியில் வேலைத்தாங்கித் தஞ்சமென வந்தாய் போற்றி

நாடிவரும் அடியவர்க்கு நல்லருளைத் தருவாய் போற்றி
தேடிவரும் அன்பருக்குத் திருக்காட்சி அருள்வாய் போற்றி
கூடிவரும் நேயருக்குக் குறையெல்லாம் தீர்ப்பாய் போற்றி
ஓடிவரும் உள்ளன்பர்க்கு உன்கருணை பொழிவாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தூரில் நின்றாய் தேவா சீமையிலும் நின்றாய் போற்றி
சிங்கார வேலா சிவனார் அன்பான பாலா போற்றி
கந்தாநீ கதிர்காமத்தில் காத்தருள வந்தாய் போற்றி
கங்கைதரும் மாணிக்கத்தைக் கண்டுகளிக்கின்றாய் போற்றி

அழகான லண்டன் கோயில் ஐயாநீ கொண்டாய் போற்றி
அகிலத்து மேலைநாட்டில் அருட்சோதி ஆனாய் போற்றி
பழமான ஞானக் குருவே பாலவய தானே போற்றி
பார்புகழும் உந்தன் கோயில் பாங்கான தையா போற்றி

கொண்டதுயர் குலையக்கூடும் அன்பரையணைப்பாய் போற்றி
லண்டனிலே உன்னைக் கூப்பி நாமுய்வோம் அப்பா போற்றி
மண்டலத்து மாந்தர் நம்பி வணங்கிடும் மயூரா போற்றி
வடிவழகு மிளிரும் வண்ண மாலவனின் மருகா போற்றி

குன்றமதில் உயர்வாசலிலே நன்றமரும் இறைவா போற்றி
குறவள்ளி தெய்வயானை கூடிவரும் நாதா போற்றி
தென்றல்வரும் தலமீதையா தெய்வமே முருகா போற்றி
தேவர்களுங் கண்டின்புறவே திகழும்மா மயிலா போற்றி

மாடிபல கொண்டிலங்கும் மாகோயிற் பதியே போற்றி
மாநகர் இலண்டன் தன்னில் வாழுமருள் நிதியே போற்றி
ஓடிமயில் மீதில் ஏறி உலகைவலம் வந்தாய் போற்றி
ஓங்கார வடிவாய் இங்கே பாங்காய் அமர்ந்தாய் போற்றி

உன்னரிய கோயிற் தோற்றம் ஓரின்பம் ஐயா போற்றி
உள்ள மணிக் கோபுரங்கள் வண்ணமுறும் அழகா போற்றி
பன்னரிய சித்திரங்கள் பக்திமய மாமே போற்றி
பார்த்தவரின் உள்ளமெல்லாம் தெய்வீக மாமே போற்றி

தந்தைசிவன் லிங்கமுண்டு தரிசிக்கத்தானே போற்றி
தாய்மாரித் தலமும் உண்டு சரவணா சமரா போற்றி
தந்தமுகன் பதியும் உண்டு தஞ்சனே இறைவா போற்றி
சக்திவடி வேலாநின்றன் சன்னதியில் முருகா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவக் கடவுள் பீடம் வணங்கவுண் டையா போற்றி
மாநவக் கிரகம் போற்றும் மகிமையுண் டருளா போற்றி
வசந்தமா மண்டபத்தில் வந்துநீ அமர்வாய் போற்றி
வலம்வரும் வீதிக்காட்சி மாண்புறும் இறைவா போற்றி

அழகான கோவிலீதாம் அவனியில் ஐயா போற்றி
ஆனந்தக் கோவிலீதாம் ஆண்டிடும் அழகா போற்றி
புகழான கோவிலீதாம் பூசித்தோம் இறைவா போற்றி
பூரணக் கோவிலீதாம் போற்றினோம் அப்பா போற்றி

முத்துமணிக் கோவிலீதாம் முருகா மால் மருகா போற்றி
மோனமயக் கோவிலீதாம் மூவிரண்டு நுதலாய் போற்றி
சக்திமணிக் கோவிலீதாம் தங்கமயில் வேலா போற்றி
சாந்தமயக் கோவிலீதாம் சரவணா குகனே போற்றி

முப்பொழுதும் பூசை கண்டாய் மூவிரு முகத்தாய் போற்றி
முறையான அபிஷேகங்கள் மூழ்கிக் குளித்தாய் போற்றி
எப்பொழுதும் அடியார்கூட்டம் ஏற்றிட மகிழ்ந்தாய் போற்றி
எத்தருண மானாலும்நீ எம்முடனிருப்பாய் போற்றி

நாளாந்தப் பூசையிங்கே ஓயாமல் நிகழும் போற்றி
வாரங்கள் தோறும் கூட்டு வழிபாடு தொடரும் போற்றி
மாதாந்தத் திதியஞ்சிலிகள் வழுவாமல் நீடும் போற்றி
வருடாந்த மாய்விளங்கும் திருவிழாக்கோலம் போற்றி

அத்தனை சிறப்புங் கண்டாய் அற்புதப் புகழாய் போற்றி
முத்தனே முருகா வித்தை மூலனே சீலா போற்றி
வித்தகா லண்டன்வாழ்வில் வெற்றியைத் தருவாய் போற்றி
முத்தமிழ்க் குருவேஞானம் போதிக்க வருவாய் போற்றி

இன்பங்கள் தாம்படைக்கும் இன்பனே இறைவா போற்றி
இன்னல்கள் தாம்மறைக்கும் ஈராறு தோழாய் போற்றி
துன்பங்கள் தாமகற்றும் தோகைமா மயிலாய் போற்றி
சோதியாய்த் திகழும்வண்ணச் சுந்தரவேலா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைநன் நாட்டில் அடியார் வேண்டும் விசாகா போற்றி
வெண்பனிக் காலக்குளிரை விரட்டிடுங் கதிரா போற்றி
ஆலயம் வந்துன் அருளை அடைகிறோம் அன்பா போற்றி
அனுதினம் உனையே நம்பி அணுகினோம் அருளா போற்றி

கோலமா வேழத்திறைவன் கோயில்கள் கண்டாய் போற்றி
கோகில வேணுகோபன் கோயில்கள் கண்டாய் போற்றி
ஞாலமா தேவிதுர்க்கை கோயில்கள் கண்டாய் போற்றி
நாலுமா திசையும் சைவம் நலமுறக் கண்டாய் போற்றி

திருப்பழநி மலையில் வந்தே தனித்துநீ நின்றாய் போற்றி
திருச்செந்தூர் தன்னில்அசுரன் சேனையைஅழித்தாய் போற்றி
திருப்பரங் குன்றிற் தெய்வ யானையை மணந்தாய் போற்றி
திருவேரகத்தில் ஞானம் சிவனுக்குரைத்தாய் போற்றி

திருச்சோலை தன்னில்ஔவை திடுக்குறச்சிரித்தாய் போற்றி
திருத்தணிகை தன்னில்வள்ளி திருமணமுகந்தாய் போற்றி
திருமருத மலையிற்தேவர் தெண்டனிட நின்றாய் போற்றி
திருக்கதிரைவேலா! எங்கள் சிந்தையிலும்வாழ்வாய் போற்றி

ஆறுபடை கொண்டாய் வெற்றி ஆனந்தவேலா போற்றி
அண்ணாமா மலையிற்கிரியை ஆட்கொண்டதேவா போற்றி
ஏறுமயில் ஏறிப்பாரில் நீபவனி வந்தாய் போற்றி
இங்கிலாந்தினிலும் கோயில் எங்குமே கொண்டாய் போற்றி

கந்தனே கடம்பா கார்த்தி கேயனே கதிரா போற்றி
சந்தனே சமரா வேலா சண்முகத் தலைவா போற்றி
சொந்தமே துணையாய் நிற்கும் சுப்பிரமணியா போற்றி
சந்ததம் உலகைக் காக்கும் சரவணா முருகா போற்றி

நாமோதும் பாராயணமே நீகேட்டு நின்றாய் போற்றி
நாமுறும் பழிபாவங்கள் தாமோட்டுகின்றாய் போற்றி
பாவோதும் அடியார் உன்னைப் பணிகிறோம் ஐயா போற்றி
பாராளும் இறைவா நின்றன் பதங்களே சரணம் போற்றி

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வாசற் குன்றம் முருகன் காவடிப் பாட்டு

*எடுப்பு*

ஆறுதலைத் தரும் ஐங்கரனார் எங்களையே
ஆண்டருள வேண்டுமென்றே பாடிடுவோம்...।
தேறுதலைத் தருபவளாம் தேவீ சரஸ்வதியைத்
தெண்டனிட்டு மன்றாடிப் பாடிடுவோம்...।
கூறுதலைப் புகழாம் அத்தனையும் தந்தருளும்
குலதெய்வம் யாவையுமே தொழுதிங்கே பாடிடுவோம்...।
ஆறுதலைப் பாலிக்கும் உயர்வாசல் ஆண்டவனை
ஆனந்தக் கதிர்காம நாதனைநாம் பாடிடுவோம்...।

*தொடுப்பு*

காவடிகொண் டாடிடுவோம் கொண்டாடுவோம்
காக்கவேண்டும் வெற்றிவேலன் என்றாடுவோம் காவடி

*இணைப்பு*

உயர்வாசற் குன்றிலே உலகாளும் மன்றிலே
துயர்வாசற் படிகளே தோன்றாத பதியிலே
கோவில்கொண்ட வேலனார் – கும்பாபி ஷேகமாம்
பூவிலெங்கும் மானிடர் – போற்றிடும் விஷேஷமாம் காவடி

இங்கிலாங்து நாட்டிலே எங்கள்மனக் கூட்டிலே
தங்கிவாழும் முருகனார் சன்னதியிற் திருவிழா
மங்களங்கள் பாடுவோம் – வலம்வந்தே கூடுவோம்
பொங்குமருள் நாடுவோம் – போற்றிமகிழ்ந் தாடுவோம் காவடி

*துடிப்பு*

பாற்காவடி பன்னீர்க் காவடி – பறந்து ஆடும் காவடி
வேற்காவடி மயிற்காவடி – விழுந்து புரளுங் காவடி
ஆடிடுவோம் காவடி – ஆனந்தமாம் காவடி
ஆறுமுகன் காவடி – வேலழகன் காவடி காவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கப்பிதாவத்தைப் பிள்ளையார்

பல்லவி
கப்பிதா வத்தைப் பிள்ளையார்
–கொழும்பிலே
காத்தருளும் செல்லப் பிள்ளையார் கப்பிதா

அநுபல்லவி
தப்பிநாம் கொடுமைகளால்
–உலகிலே
தரித்திடச் செய்யும் பிள்ளையார் கப்பிதா

சரணங்கள்
நாளும்பல தொழில்புரிவார்
–உறுதியாய்
நம்பிவந்து தொழும் பிள்ளையார்
ஆளுமெங்கள் அன்புப் பிள்ளையார்
–கருணையால்
ஆதரவு செய்யும் பிள்ளையார் கப்பிதா

கொண்டவினை களைந்திடுவார்
–வருத்திடும்
கோளகற்றி மறைத்திடுவார்
மண்டலத்து மாயங்களை நாம்
–விலக்கிடும்
வழிகளை வகுத்திடுவார் கப்பிதா

தனக்கொரு தனியிடமாய்
–விநாயகர்
தலங்கொண்டு தங்கியிருந்தார்
மனக்குறை அடைந்தவர்க்கே
–விநாயகர்
மலரடித் துணைகொடுப்பார் கப்பிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக்குளத்து மாரியம்மன்

மட்டுநகர் மத்தியிலே
மாரியம்மன் கோவிலாம்
மாதுமையாள் கோவிலாம்
கொத்துக்குளம் சோலையிலே
மாரியம்மன் கோவிலாம்
மாதுமையாள் கோவிலாம் மட்டுநகர்

பட்டதுயர் விட்டகலும்
மாரியம்மன் கோவிலாம்
மாந்தர் கூடுங் கோவிலாம்
பாரிலெங்கும் பேர்விளங்கும்
மாரியம்மன் கோவிலாம்
மாந்தர் கூடுங் கோவிலாம் மட்டுநகர்

கூடியின்பம் நாமடையும்
மாரியம்மன் கோவிலாம்
மாயன் தங்கை கோவிலாம்
நாடிவந்து நாம் பணியும்
மாரியம்மன் கோவிலாம்
மாயன் தங்கை கோவிலாம் மட்டுநகர்

வேப்பிலையின் தோரணமாம்
மாரியம்மன் கோவிலாம்
மகேஸ்வரி கோவிலாம்
வெண்ணீறாம் சந்தனமாம்
மாரியம்மன் கோவிலாம்
மகேஸ்வரி கோவிலாம் மட்டுநகர்

காப்பு மஞ்சள் குங்குமமாம்
மாரியம்மன் கோவிலாம்
வல்ல தாயின் கோவிலாம்
கர்ப்பூரத் தீபங்களாம்
மாரியம்மன் கோவிலாம்
வல்ல தாயின் கோவிலாம் மட்டுநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றிக் கந்தசாமி

வில்லூன்றிக் கந்தசாமி – அழகன்
வெற்றிவேல் மயில்முருகன்
பல்லோரும் வந்துநாடி – நாளும்
பணிந்திடும் தமிழிறைவன் வில்

கோணமலைச் சிவன் நகரில் – மகனும்
கோயில் கொண்டு விளங்குகின்றார்
காணவரும் அடியவர்கள் – குறைகள்
களைந்திட வணங்குகின்றார் வில்

மாதுறையின் மருங்கினிலே – கதிரை
மன்னன்வந்து குடியமர்ந்தார்
மாதிருவர் மணவாளன் – நமக்கே
வரங்களை வழங்குகின்றார் வில்

தாமரையிற் பிறந்தவனாம் – புகழும்
சரவணன் அழகையனாம்
பாமரரும் அறிந்தவனாம் – அதனால்
பாருலகில் இனியவனாம் வில்

இலங்கையின் திசையாவும் – நிறையும்
எங்கள்திரு முருகையனாம்
தலங்களும் பலநூறாம் – வளரும்
தங்கவடி வேல் ஒளியாம் வில்

காளியம்மன் திருப்பதியும் – மலையில்
கண்டுமனங் களிப்பவனாம்
கோளியங்கும் அவதிகளை – முருகன்
குன்றவைத்து முடிப்பவனாம் வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள்மடம் கண்ணபிரான் 108 போற்றிகளும் பஜனைப் பாடல்களும்

குருக்கள்மடம் பிரதான வீதியிலிருந்து கிழக்கே திரும்பி ஆங்கே கண்ணன்கோயில் வீதியால் ஏறக்குறைய நூறு யார் நடந்து செல்லும்பொழுது இடப்பக்கமாக இறைவன் கண்ணபிரானின் சன்னிதானம் காட்சியளிக்கின்றது!

ஊரின் உயர்வுக்கும் கல்விச் செல்வத்திற்கும் ஆரம்பக் கலைக் கோயிலாக நீடித்து விளங்கும் அன்னை கலைவாணியின் அருங் கூடமான கலைவாணி மகாவித்தியாலயம் இதே வீதியில், ஐயன் பரந்தாமனுடைய ஆலயத்துக்கும் அப்பால் இருப்பதால், இப் பொழுது இந்த வீதி மகாவித்தியாலய வீதியெனப் பெயர்பெற் றுள்ளது.

காக்கும் இறைவனும், கல்வி ஈட்டும் இறைவியும் இருந்தாளும் தலங்களுக்குச் செல்லும் இனியதொரு பாதையாகவே இந்த வீதி இன்று விளங்குகின்றது!

அரைநூற்றாண்டு காலத்தையும் கடந்து, அருளும், புகழும், ஆனந்த நிலையும் பூண்டு, சிறப்புடன் விளங்கும் அரங்கநாதப் பெருமானுடைய இந்த ஆலயம் குருக்கள்மடம் மக்களின் மனங்களில் மட்டுமல்லாமல் ஏனைய ஊர் மக்களின் உள்ளங் களையும் ஈர்த்துப் பக்தி பரவசத்தில் ஆழ்த்தியுள்ள அருட் பெருமையை இன்று நாம் காணலாம்!

ஆண்கள் பெண்கள் ஆன இருசாராரும் சங்கங்கள் அமைத்துச் சங்கங்களின் மூலமாக வழிபாட்டு முறைகளும், திருப்பணித் தொண்டுகளும் பேணிவருவது கோவிந்த நாயகனுடைய ஆலயத்தில் ஓர் சிறந்த வரலாற்றுப் புகழாகும்!

கண்ணபிரானுடைய ஆலயப் பரிபாலன சபையின் பூரண மேற் பார்வையிலேயே தலத்தின் சீரான நிருவாகமும், இயங்கிவரும் ஆண்கள் பெண்கள் சங்கங்களின் நடைமுறைகளும் அனுசரிக் கப்பட்டு வருகின்றன.

**கண்ண பிரானை எண்ணி வழிபட்டார் கெட்டாரில்லை!**
**ஏற்றி வாழ்ந்தார் தாழ்ந்தார் இல்லை!**
**அரி ஓம் நமோ நாராயணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணபிரான் 108 போற்றிகள்

திருச்சிற்றம்பலம்

ஐங்கரன் மாமன் ஆனாய் போற்றி
அன்னை மகேஸ்வரி அண்ணா போற்றி
சங்கரன் மைத்துனர் ஆனாய் போற்றி
தனமருள் தாயின் தலைவா போற்றி

அரவணை ஆகும் அரங்கா போற்றி
ஆழியில் உறங்கும் மாலே போற்றி
வரமருள் செய்யும் மாயா போற்றி
மானில மாளும் இறைவா போற்றி

மாலவனே துணை நீயே போற்றி
மணிகண்டன் தாயின் வடிவே போற்றி
வேலவன் மாமன் நீயே போற்றி
வினைகள் அறுக்கும் அருளே போற்றி

விண்ணும் மண்ணுங் காப்பாய் போற்றி
வெற்றியும் உயர்வுந் தருவாய் போற்றி
கண்ணா வண்ணா கருணா போற்றி
கார்முகில் போலும் தேவா போற்றி

ஓம் அருள் மயமே மாலே போற்றி
உலகைக் காக்கும் இறைவா போற்றி
நாமிருள் போக்கும் நல்லொளி போற்றி
நாராயணா ஓம் அரி ஓம் போற்றி

குருக்கள்மடத்தின் கோவே போற்றி
இருக்கும் குறைகள் தீர்ப்பாய் போற்றி
செம்பீக் கரிமுனி தேவா போற்றி
நம்பிக் கழலடி நின்றோம் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங் கூடிப் பணிவோம் போற்றி
சரணம் பாடித் தொழுவோம் போற்றி
மூவுல கேற்றும் முகுந்தா போற்றி
மூன்றடி காட்டும் தேவா போற்றி

பாவலர் பாடும் அரங்கா போற்றி
பாற்கடல் மீதில் உறங்காய் போற்றி
பார்த்திபன் சாரதி ஆனாய் போற்றி
பாண்டவர் படையின் நாதா போற்றி

நேர்த்திகள் செய்தோம் நேசா போற்றி
நிம்மதி வேண்டும் தாதா போற்றி
கண்ணா கார்முகில் வண்ணா போற்றி
காதல் ராதையின் அழகா போற்றி

விண்ணவர் புகழும் விமலா போற்றி
வேங்கட மலையின் தலைவா போற்றி
தாமோ தரனே தாளிணை போற்றி
தயவும் பரிவும் உடையாய் போற்றி

நாமோ திடுவோம் நாமம் போற்றி
நலியுந் தருணம் அருள்வாய் போற்றி
கோகுல ஜனனம் கொண்டாய் போற்றி
கோசலை மகனாய் வந்தாய் போற்றி

மாகுல வானோர் வதனா போற்றி
மாயவனே ஸ்ரீ கிருஷ்ணா போற்றி
ஊரில் இருந்தாய் உன்னடி போற்றி
ஒவ்வொரு கணமும் உணர்வோம் போற்றி

திருமகள் நாடும் செல்வா போற்றி
ஸ்ரீ ரங்கா பெருமானே போற்றி
வரும்பிணி மாற்றும் மருந்தே போற்றி
மனக்குறை தேற்றும் வள்ளலே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினை மாய்க்கும் திருவடி போற்றி
சிக்கல் அறுக்கும் சீரடி போற்றி
சாவினை மறுக்கும் தயவடி போற்றி
சஞ்சலம் தீர்க்கும் சதுரடி போற்றி

மணியொலி நாதம் கேட்பாய் போற்றி
வாழ்த்தொலி கேட்டே மகிழ்வாய் போற்றி
மணிமுடி சூடும் மன்னா போற்றி
மதுரையை ஆளும் அரசே போற்றி

பாதைகள் வாழ வகுப்பாய் போற்றி
பாவங்கள் மாள மறைப்பாய் போற்றி
ஆதியும் ஊழியும் அறிவாய் போற்றி
ஆயுளும் அந்தமும் உணர்வாய் போற்றி

*வேறு நடைப் போற்றிகள்*

நாராயணா நமோநமோ நாராயணா போற்றி
சோமேஸ்வரா னந்தகிரி தொழும்மால் போற்றி
பாலக்கிருஷ்ண கிரிபாய் பணிமால் போற்றி
பைந்தமிழ் மடத்தின் இறைவா போற்றி

ஆண்கள்பெண்கள் சங்கமிங்கு அமைத்தோம் போற்றி
அனுதினம் விளங்கிட வளர்த்தோம் போற்றி
மாண்புதருங் கீதைமறை படித்தோம் போற்றி
மங்களம் நிறையு மின்பங் களித்தோம் போற்றி

பாடித்தலம் தன்னைவலம் புரிந்தோம் போற்றி
கோடித்தவம் நாடிவந்து பணிந்தோம் போற்றி
ஆடிக்கும்மி கொட்டியின்பம் அடைந்தோம் போற்றி
வேடிக்கை வசந்தம் ஆடி மகிழ்ந்தோம் போற்றி

நாடித்தினம் பாராயணம் படித்தோம் போற்றி
நமோ நமோ நாராயணா நம்பினோம் போற்றி
கூடித்திருப் பணிகளைத் தொடர்ந்தோம் போற்றி
கொண்டவினை தவிர்த்திடும் கோவிந்தா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடிமணி ஓசையொலி குலுங்கின போற்றி
சூதனனே பூசையொலி பொலிந்தன போற்றி
வாடிமனம் சோருகையில் அணைத்தாய் போற்றி
வரங்களை நிரந்தரங் கொடுத்தாய் போற்றி

நாட்கள்தோறும் பூக்கள்தூவிப் பணிந்தோம் போற்றி
வாரந்தோறும் பொங்கலிட்டுப் படைத்தோம் போற்றி
மாதந்தோறும் நோன்பிருந்து மகிழ்ந்தோம் போற்றி
ஆண்டுதோறும் திருவிழாத் தொடர்ந்தோம் போற்றி

தோரணங்கள் கட்டிமுன்னே தொடுத்தோம் போற்றி
தோழருடன் கூடுமுன்னை நினைத்தோம் போற்றி
மோரிருக்கும் முட்டிகட்டி உடைத்தோம் போற்றி
முன்னிளமைப் பருவத்தைப் பயின்றோம் போற்றி

அன்னையசோ தாவின்புகழ் அறிந்தோம் போற்றி
அன்புச்சேரி மக்கள் பண்பு தெரிந்தோம் போற்றி
கோகுலத்து மாயவனே கோவிந்தா போற்றி
கோபியர்கள் கொஞ்சும் எழில் ரமணா போற்றி

ஆதவனின் பேரொளியில் அமர்ந்தாய் போற்றி
ஆடும்வெள்ளி நிலவினில் நிறைந்தாய் போற்றி
தாரகைகள் மின்னுவதிற் திகழ்ந்தாய் போற்றி
தாவிச் செல்லும் மேகத்திலே தவழ்ந்தாய் போற்றி

வீசுகின்ற தென்றலிலே மிதந்தாய் போற்றி
வேய்ங்குழலின் மெல்லிசையிற் கலந்தாய் போற்றி
பூமணக்குஞ் சோலையிலே மலர்ந்தாய் போற்றி
புண்ணியங்கள் செய்யும்நெஞ்சில் அமர்ந்தாய் போற்றி

எங்கள் அன்புச் சிந்தையிலே இருந்தாய் போற்றி
ஏர்படைக்கும் நெல்லுருவில் விளைந்தாய் போற்றி
சீர் உரைக்கும் சீலர்மனம் கவர்ந்தாய் போற்றி
திருப்பதி நாராயணா ஹரி ஓம் போற்றி

அரி ஓம் நமோ நாராயணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் பாடல்கள்
## மணி ஓசை

பல்லவி
கண்ணன் கண்ணன் கண்ணன் என்றே
காலையிற் பாடும் மணி ஓசை

அநுபல்லவி
வண்ணன் வண்ணன் வண்ணன் என்றே
மாலையிற் பாடும் மணி ஓசை கண்ணன்

சரணங்கள்
எண்ணம் மலரும் பள்ளி யெழுச்சி
என்றே பாடும் மணி ஓசை
என்றே பாடும் மணி ஓசை
விண்ணும் மண்ணும் ஓதுங் கீதை
வேதம் பாடும் மணி ஓசை
வேதம் பாடும் மணி ஓசை கண்ணன்

மங்களம் எங்கணும் எங்கணும் என்றே
வாழ்த்திப் பாடும் மணி ஓசை
வாழ்த்திப் பாடும் மணி ஓசை
பொங்கி விளைந்திடும் மாவள மென்றே
போற்றிப் பாடும் மணி ஓசை
போற்றிப் பாடும் மணி ஓசை கண்ணன்

அஞ்சேல் அஞ்சேல் அஞ்சே லென்றே
அபயம் பாடும் மணி ஓசை
அபயம் பாடும் மணி ஓசை
கொஞ்சும் மழலைத் தமிழாய் அன்பின்
குரலைப் பாடும் மணி ஓசை
குரலைப் பாடும் மணி ஓசை கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல் நிலையம்

பல்லவி
பார்த்திபன் சாரதி பரந்தாமன்
பாரத நாயகன் திருக்கோயில் பார்த்திபன்

அநுபல்லவி
காத்திடும் மாலவன் நாராயணன்
கார்முகில் வண்ணனின் திருக்கோயில் பார்த்திபன்

சரணங்கள்
நோயும் நொடியும் தீரத்தானே
நோன்புகள் செய்யும் திருக்கோயில்
மாயும் துயரம் மாளத் தானே
வந்தனை செய்யும் திருக்கோயில் பார்த்திபன்

சூழும் வினைகள் தொலையத்தானே
தொண்டுகள் செய்யும் திருக்கோயில்
வாழும் வழிகள் காணத்தானே
வணக்கம் செய்யும் திருக்கோயில் பார்த்திபன்

ஊரின் நடுவே காவல் நிலையம்
உள்ளது போலாம் திருக்கோயில்
தேரின் நடுவே திகழுங் கண்ணன்
திருப்பதி போலாம் திருக்கோயில் பார்த்திபன்

மாதவன் மதுரை மாமணி மின்னும்
மாளிகை போலாம் திருக்கோயில்
ஆதவன் உதயம் அனுதினம் முன்னால்
அஞ்சலி செய்யும் திருக்கோயில் பார்த்திபன்

தாமரை விழிகள் தாமொளி வீசும்
தாமோதரனார் திருக்கோயில்
நாமுறை செய்யும் ஆசிவழங்கும்
நாராயணனின் திருக்கோயில் பார்த்திபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் லீலைகள்

பல்லவி

கோகுலத்திலே பிறந்த கோபாலன்
கோசலைக்குமே பிறந்த ராமேஸன் கோகுல

அநுபல்லவி

கோகிலத்தின் ஓசைதருங் குழல் நாதன்
கோபியெங்க ளோடுவிளை யாடும் மாயன் கோகுல

சரணங்கள்

மங்கையர்கள் கங்கையிலே மகிழ்ந்திடவே
மாயமாய் விரைந்துடைகள் கவர்ந்திடுவான்
தங்கையவள் பாஞ்சாலி தானழைக்கவே
தஞ்சமாகி வந்து ஆடை வழங்கிடுவான் கோகுல

பண்ணையிலே வெண்ணையுண்டு பதிங்கிடுவான்
பார்க்கவோடி மூலையிலே ஒதிங்கிடுவான்
மண்ணையுண்டு மண்டலத்தைக் காட்டிடுவான்
மாலவன் தன் பேரைநினை வூட்டிடுவான் கோகுல

சேரியிலே பாவையரைக் கேலி பண்ணுவான்
செல்லமாகக் கொள்ளைகொண்டு நெஞ்சையள்ளுவான்
ஏரியிலே கோபியரைத் தாவியிழுப்பான்
எப்பொழுதும் காவலாகி எங்குமிருப்பான் கோகுல

ஒன்றுகூடி நின்றுபாடி மகிழ்ந்திடுவான்
ஓட்டிமறைந் தங்குமிங்கும் மோடிபண்ணுவான்
கன்றுகளைக் கட்டவிழ்த்து வீட்டுவிடுவான்
கண்ணனவன் ஆன்குலத்தைக் கண்டுகளிப்பான் கோகுல

ஏறிமரம் மேலிருந்து பழம் பறிப்பான்
ஏய்த்துவிட்டு நண்பர்களைத் தின்று முடிப்பான்
ஆறிலேயும் நூறிலேயும் பாலகனாயும்
ஆட்டமுறும் பாட்டனாயும் அவதரிப்பான் கோகுல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி மதுரை ஸ்ரீரங்கம்

குருக்கள்மடம் தன்னில்
ஒரு கோட்டம் –நாம்
கும்பிடுங் கண்ணனின்
திருக் கோட்டம் குருக்கள்

திருப்பதி மதுரை ஸ்ரீரங்கம்
சேர்ந்து வணங்கும் ஆனந்தம்
இருப்பது கண்டோம் இங்கேயும்
இனியென்ன வேண்டும் எங்கேயும் குருக்கள்

பாற்கடல் அலைகள் தாலாட்டும்
பகவான் வங்கக் கடல் மீதும்
தோற்றிடும் காட்சிக் கோலங்கள்
தோன்றிடும் எங்கள் மாமன்றம் குருக்கள்

மாயவன் கருணை மலரடிகள்
வாழ்த்திடும் வண்ணத் திருக்கூடம்
தூயவர் அடியார் துதி பாடும்
சுந்தர மாலின் தவக் கூடம் குருக்கள்

எங்கணும் ஆலயம் ஊர்தோறும்
இங்கே கொண்டான் சாரங்கன்
தங்கிடும் அதனால் மாலவனின்
தலங்களில் என்றும் ஆனந்தம் குருக்கள்

ஞாயிறுந் திங்களும் அவன்தோற்றம்
நவக்கிர கங்களும் அவனாட்சி
தாயுறும் பாசமும் நேசங்களும்
தானுறும் இறைவன் தாமோதரன் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகுல நந்தன்

பல்லவி

எத்தனை கோடிச் செல்வ மிருந்தும்
நிம்மதி யில்லைச் சுகமில்லை — எத்தனை

அநுபல்லவி

பத்தவ தாரன் பாலன் முகுந்தன்
பக்தி யிழந்தால் அருளில்லை — எத்தனை

சரணங்கள்

பந்த மிருந்தும் பாச மிருந்தும்
பற்றும் நட்பு மிருந்தாலும்
சொந்த மிருந்தும் சுற்ற மிருந்தும்
சூழும் துணைகள் இருந்தாலும்
கோமள வண்ணன் – கோகுல நந்தன்
கோட்டம் தன்னை மறந்தாலே
கும்பிடும் அன்பை இழந்தாலே — எத்தனை

நாடும் நகரும் ஆளும் புகழும்
மாடம் மாளிகை மந்திரிமார்
கூடுஞ் சபையும் கோபுர நிலையும்
கொண்டு மகிழ்ந்து சிறந்தாலும்
கோமள வண்ணன் – கோகுல நந்தன்
கோட்டம் தன்னை மறந்தாலே
கும்பிடும் அன்பை இழந்தாலே — எத்தனை

பாலும் பழமும் தேனும் சுவையும்
பருகும் பாகும் இருந்தாலும்
நாலும் மலிந்து குறைவில்லாமல்
நாடும் யோக மிருந்தாலும்
கோமள வண்ணன் – கோகுல நந்தன்
கோட்டம் தன்னை மறந்தாலே
கும்பிடும் அன்பை இழந்தாலே — எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாற்கடல் இறைவன் (பொன்விழாப் பாடல்)

பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமன் –இந்தப்
பாருலகை ஆளுஞ்சீர் அரங்கநாதன்
தோற்றி அறம் வாழத்தச அவதாரம் –மது
சூதனன் சுமந்த கதை அருள்வேதம் பாற்

அலைதவழும் கடலின் மடியினிலே –கண்ணன்
அழகு மயம் விளங்கும் பரிதி கண்டோம்
மலை தொடரும் இயற்கை வளங்களிலே –இசை
மருவும் குழலின் சுவை அமுதமுண்டோம் பாற்

வல்லசுர மின்னலிடிப் புயல் தடுப்பான் –கரு
மாமுகிலன் எரிமலைக் கனலணைப்பான்
கொல்லசுர வெள்ளம்வரும் அல்லல்மறைப்பான் –எந்தக்
கொடுமைக்கும் அழிவுக்குந் தடைவிதிப்பான் பாற்

உருக்கமுடன் வணங்கும் அடியவர்க்கே –மன
உறுதியும் அமைதியும் உவந்திருப்பான்
குருக்கள்மடம் வதியும் குடிகளுக்கே –கொண்ட
குறைகள் இறைவனவன் களைந்திருப்பான் பாற்

செம்பிமலைத் திருமுனி தவப்பயனே –இங்கு
திகழ்ந்தது சிறந்தது திருத்தலமே
நம்பிநினைத் தஞ்சலித்து நன்மை பெறுவோம் –நமோ
நாராயணன் மந்திரத்தை நாளும் சொல்லுவோம் பாற்

கண்ணன்திருப் பதியெங்குங் கலைக்கோலம் –நம்மைக்
காக்கும் அருட் கடவுளின் எழிற்கோலம்
வண்ணன் மணி வாசலிலே மலர்க் கோலம் –இன்று
மலர்ந்தது பொன்விழாவின் புதுக்கோலம் பாற்

முகுந்தன் அமர்ந்திருப்பான் ஆலிலையிலே –இங்கே
முத்து லக்ஷ்மி வீற்றிருப்பாள் வெற்றிலையிலே
புகுந்திரு தெய்வங்களும் உள்ளங்களிலே –அருள்
புரிந்திடப் போற்றிடுவோம் பொன்விழாவிலே பாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுதாவளை வீதிக்கரைப் பிள்ளையார்

பல்லவி

களுதா வளையூர் நெடுஞ்சாலைக்
கணபதி இறைவன் புகழ்மாலை
பாடிடுவோம் அருள் நாடிடுவோம்
பாரெங்கும் ஆனந்தம் ஓதிடுவோம் களுதா

சரணங்கள்

வாவிக் கரை ஓரம்
வாழ்ந்திருக்கும் பிள்ளையார்
வீதிக் கரை ஓரம்
வீற்றிருக்கும் பிள்ளையார்
வேண்டிச் செய்யும் பயணம்
வென்று தரும் பிள்ளையார்
தாண்டிச் செல்லும் அடியார்
தாம்வணங்கும் பிள்ளையார் களுதா

வாகனங்கள் செலுத்தும்
சாரதிகள் தமக்கும்
வேகந்தணித் திரங்கும்
விநாயகப் பிள்ளையார்
தூரஞ் செல்லும் பாதை
தொடர்ந்திடும் வேளை
நேருந் துயர் யாவும்
நிறுத்திடும் பிள்ளையார் களுதா

மீறும் புயல் மழையும்
வெள்ளம் வரும் நிலையும்
மாறும் வழிப் பயணம்
வகுத்திடும் பிள்ளையார்
வல்ல வினை வழியில்
வருத்திடும் பொழுதில்
நல்ல துணை அளிக்கும்
நம் இறைவன் பிள்ளையார் களுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

குருக்கள்மடம்

# ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி தலவரலாறும் – 108 போற்றிகளும்

குருக்கள்மடம்

ஊர்மக்கள்

சார்பில்

கவுத்தன் குடி

வச்சினார் குடியினர்

சமர்ப்பணம் செய்யும்

## காணிக்கை

வெளியீடு

முத்தமிழ்ப் பாவலர்

**கவிஞர் ஞானமணியம்**

"திருப்பதி"

குருக்கள்மடம்

1997 – மாசித்திங்கள் – மாசிமகத் திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தி நாயகனே போற்றி

ஓரடி எடுத்து வைத்து
உசும்பிநாம் அசையும் போதும்
சீரடி தொழுவோம் ஐயா
சித்தி நாயகனே போற்றி! ஓரடி

ஊரினில் எம்மை ஆளும்
உன்னருந் தம்பி யோகம்
பாரினில் நாம் உரைக்கும்
பாக்கியம் அருள்வாய் போற்றி! ஓரடி

ஆதியில் இருந்து வேலன்
ஆலயச் சரிதம் பாடி
ஓதிடும் வரங் கொடுப்பாய்
உன்திருப் பாதம் போற்றி! ஓரடி

ஊரினில் உள்ள மக்கள்
ஒன்றாகி அஞ்சலித்தோம்
சீரிய மகிமை சொல்லும்
திறமை நீ தருவாய் போற்றி! ஓரடி

தம்பியின் தலத்தில் மாரித்
தாயுடன் வந்தமர்ந்தாய்
கும்பிடக் காட்சி தந்தாய்
குஞ்சர முகனே போற்றி! ஓரடி

ஆலய வரலா றோதும்
ஆற்றலைக் கொடுப்பாய் போற்றி!
காலையே நாடி நின்றோம்
காத்திடும் இறைவா போற்றி! ஓரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவல்லி

நாமகளே! பாமகளே!
ஞான வல்லியே! – கலை
யாவையுமே பூவுலகில்
நல்கும் அன்னையே!
தாமரையில் வீற்றிருக்கும்
பூமகளம்மா – நாளும்
தந்தருள வேண்டுகிறோம்
செந்தமிழம்மா! நாமகளே

செல்வக் கதிர் வேலவனின்
சீரைப் பாடுவோம் – அவன்
திருப்பதியின் சரித்திரத்தை
ஓதிப் பாடுவோம்
வெல்லவரும் தோஷமோடி
வீரையப் பாடுவோம் – எங்கள்
வேதனையும் சோதனையும்
விலகப் பாடுவோம்! நாமகளே

அன்னையோடும் அண்ணனோடும்
ஆறு முகத்தான் – இங்கே
ஆலயத்தில் வாழும் புகழ்
அதனைப் பாடுவோம்!
முன்னைவந்து காட்சிதந்து
முருகன் ஊரிலே – ஆதி
மூலத் தெய்வம் ஆனதை நாம்
கூறிப் பாடுவோம்! நாமகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா முருகையா

இருக்குமிடம் நீ தேடி அமர்ந்தாய்
முருகா! முருகையா! – முருகா
எங்களை நாளும் ஆண்டருள்கின்றாய்
முருகா! முருகையா!
குருக்கள்மடம் நீ நாடி மகிழ்ந்தாய்
முருகா! முருகையா! – முருகா
கொண்டொரு கோட்டம் தங்கியிருந்தாய்
முருகா! முருகையா! இரு

பத்துக் குடியும் ஒன்றானோமே
முருகா! முருகையா! – முருகா
பாதப்பூசை புரிகின்றோமே
முருகா! முருகையா!
முத்துச் சுடரின் சித்திர வேலா
முருகா! முருகையா! – முருகா
மூவிரு தோளா பன்னிரு கையா
முருகா! முருகையா! இரு

உன்னருள் பாடும் வரலாறைத்தான்
முருகா! முருகையா! – முருகா
உலகம் அறியச் சொன்னோம் ஐயா
முருகா! முருகையா!
பன்னலமாகும் புகழே கொண்டாய்
முருகா! முருகையா! – முருகா
பாரினிலெங்கும் தலமே கொண்டாய்
முருகா! முருகையா! இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுக் குறிப்புக்கள்

சைவத் திருத்தல வரலாற்றில் மாற்றம் செய்வது சைவநிந்தை என்பது பொதுவான சைவப் பண்பாடு, புனிதமான ஆசார வீதி. இந்த நியதியை நாம் ஒவ்வொருத்தரும் பேணுகின்றோம். இருந்தபோதிலும், இந்த மேம்பாட்டை மேலும் வலியுறுத்திய வாறு குருக்கள்மடம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காமசுவாமி கோவி லின் தலவரலாற்றில் எந்தவொரு மாற்றமும் செய்யாவண்ணம் நாம் எழுதி அனுப்பியவாறே நூலில் அச்சிடவேண்டும் என்று பிர ஸ்தாப ஆலயபரிபாலன சபையினர் என்னிடம் வேண்டிக் கொண் டனர். அவர்களுடைய வேண்டுகோளின்படி எந்தவொரு மாற்ற மும் இல்லாமலேயே எம் பெருமானுடைய தலவரலாறு இந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

### பதிக்கொரு பாடல்

என் தாயூர்ப்பதியான திருப்பழுகாமம் மாவேற்கடவைப் பெருமா னுடைய பாதகாணிக்கையாக நான் வெளியீடும் 'பதிக்கொரு பாடல்' எம் பெருமானுடைய திருவருளால் நிறைவேறியுள்ளது। உலகின் பலபாகங்களிலும் உள்ள சைவத் தலங்களையும், ஆயிர த்தெட்டுத் தலங்களில் விளங்கும் இறைவன் சிவனுடைய 1008 நாமங்களைப் போற்றும் 1008 போற்றிகளையும், 210 க்கும் அதிக மான துதிப் பாடல்களையும், தலவரலாறுகளையும் அடக்கியுள்ள இந்த ஆத்மீகநூல் மிகவிரைவில் சைவத்தமிழ் மக்களின் கரங் களைச் சென்றடையவும் மாவேற்கடவை நாதன் அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகின்றேன்।

*கவிஞர் ஞானமணியம்*
*'திருப்பதி'*
*குருக்கள்மடம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# குருக்கள்மடம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி திருத்தல வரலாறு

## விளம்பியவர்கள் ஆலய பரிபாலன சபையினர்

மட்டுமா நகர் தென்பால் மண்முனைதென் எருவில் பற்றில் நீர் வளமும் நிலவளமும் நிலைக்கப்பெற்ற எழில்மிகு கிராமம் குருக்கள்மடம்.

கிழக்கே வங்காளவிரிகுடாக் கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும், வடக்கே கிரான்குளம் கிராமத்தையும், தெற்கே செட்டிபாளையம் கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்டு, இரம்மியமான இயற்கை வனப்புடன் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு – கல்முனை வீதியில் மட்டக்களப்பிலிருந்து பதினெட்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்தியாவில் வேதாரணியத்தில் இருந்து ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் குரு என அழைக்கப் படும் உலககுரு நாதர் அவர்கள் ஈழத்துக் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கப் பரிவாரங்களோடு மட்டக்களப்பு வழியாக யாத்திரை வந்தார். வரும் வழியில் இன்று குருக்கள்மடம் எனப் புகழான திருப்பெயர் பூண்டு விளங்கும் இந்தப் பதியிற் சில தினங்கள் தங்கினார்.

இங்கே தங்கியிருந்த பொழுது குரு அவர்களுக்கு யாத்திரை தொடரமுடியாத உடல்நிலை ஏற்பட்டது. குருவும் அவருக்கு உதவியாகச் சிலரும் இவ்விடத்திலே தங்கினார்கள். ஏனையோர் யாத்திரையைத் தொடர்ந்து கதிர்காமம் சென்றார்கள்.

முருகப்பெருமானைத் தரிசித்த பின்னர் அவர்கள் மீண்டும் இதே இடத்தையே வந்தடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானுக்குக் கொத்துப் பந்தலினால் ஆலயம் அமைத்து எல்லோரும் வழிபாடு செய்தார்கள். அத்தோடு அடியார்கள் தங்குவதற்கும் ஆச்சிரமம் அமைத்துக்கொண்டார்கள்.

குரு அவர்களின் உடல் நிலையோ சரியாக நிவாரணம் அடையவில்லை. அதனால் குரு அவர்களுக்கு இந்தப் பதியிலேயே தங்கியிருக்கும் இதமான சிந்தனையும் உறுதியாகி விட்டது.

குரு அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம்.....,

**– சின்னக் கதிர்காமம் –**

என்னும் திருநாமம் பெற்றது!

சில வருடங்களின் பின் குரு அவர்கள் சமாதியடைந்தார். அவருடைய மறைவின் பின்னர் அவருடைய நாமமே இந்தப் பதியின் பெயராக அமைந்தது. *குருநாதர்மடம்* என்னும் பெயர் சிறப்புடன் அமைந்தது.

அன்றுமுதல் இந்த அழகிய பெயருடன் இக்கிராமம் ஆறுமுகப் பெருமானுடைய குறைவில்லாத திருவருள் ஆட்சியிலே மேலோங்கி விளங்கலாயிற்று.

குருக்கள்மடம் கிராமத்தைப் பற்றியும் குருக்கள்மடத்திலே எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுடைய தலவரலாறு பற்றியும் ஆராய்ந்து அறிவதில் மிகவும் ஆர்வங்கொண்டிருந்தவர்கள் மத்தியில் அமரர் பண்டிதர் ஐ குழந்தைவேல் அவர்களும் ஒருத்தராவார்.

பழுகாமத்தைப் பிறந்த இடமாகவும், களுவாஞ்சிகுடியைப் புகுந்த இடமாகவும் கொண்டவரான பண்டிதர் அவர்கள் 1958ம் ஆண்டு பண்டிதப் பரீட்சைக்குத் தோற்றியபொழுது சமர்ப்பித்த கட்டுரையிற் குறிப்பிட்டுள்ள சில முக்கியமான அம்சங்கள் பெருமானுடைய தலவரலாற்றுக்கு மிகவும் பொருத்தமான சான்றுகளாகின்றன.

அன்னார் குறிப்பிட்ட வார்த்தைகளை இங்கே சுட்டிக் காட்டுவதால் நாம் பெருமை அடைகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மட்டக்களப்பு தென்திசையில் குருக்கள்மடம் என்னும் கிராமம் உண்டு. இதன் பழம் பெயர் குருநாதர்மடம் என்பர். வேதாரணிய பரம்பரையைச் சேர்ந்த உலககுருநாதர் அவர்கள் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் தனக்கு உகந்த பகுதியாக, எண்ணிக் குருக்கள்மடத்திலே தங்கியிருந்தார். முருகன் ஆலயம் அமைத்தார். வழிபாடு செய்தார்.

இந்தப்பதியிலேயே இறைவனடி சேர்ந்தார். இப்பதிக்குக் குரு நாதர்மடம் எனப் பெயர் வழங்கலாயிற்று. கைலாயச் செட்டியார் என்பவர் முருகன் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தார். அவருடை மகன் செட்டிப் போடியார் அவர்களும் ஆலயம் சிறக்கத் தருமசாதனம் வழங்கினார்."

என்று இவ்வாறாகப் பண்டிதர் குறிப்பிட்டுள்ளார்.

உலககுருநாதரின் தொடர்பினால் தமிழகத்திலிருந்து பூபால கோத்திர வேளாளர்களும், சிவாசாரியார்களும் இங்கு வந்தார்கள் என்று அறியவருகின்றது. குருநாதர் அவர்கள் தத்தாக்கு, வன்னி, குருக்கத்தி, கவிதும்பை, விதைகளை நட்டுப் பெருஞ் சோலைகள் உண்டாக்கினார். மதுரை மாநகரை ஒத்ததாக வீதி, கூடல் மாவீதி, கொங்கு மந்தாரை வீதி, பிராமணன் வளவு, குரு க்கள் வளவு, கூடல் வளவு, ஓதுவார் வளவு, காரியஸ்தர் வளவு நந்தவன வளவு என வீதிகளுக்கும், வளவுகளுக்கும் நாமஞ் சூட்டியுள்ளார்.

இவற்றை நோக்குமிடத்து மதுரை மாநகருக்கும் குருக்கள்மடத் துக்கும் பூர்வீகப் பொருத்தமும் தொடர்பும் இருந்தமை நமக் குப் புலனாகின்றது.

உலககுருநாதர் அவர்களின் மறைவின் பின்னர் சின்னக்கதிர்காம ஆலயத்தை அவருடைய மகன் கைலாசச் செட்டியார் பரிபாலி த்து வந்தார். கைலாசச் செட்டியாரின் மகன் செட்டிப் போடியா ரும் ஆலயம் சிறக்க அரும்பணிகள் செய்து வந்தார். அத்தோடு செட்டிப்போடி அவர்கள் பெரும்பாலான தமது சொத்துக்களை ஆலயத்துக்கே தானமாக அர்ப்பணித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக உலககுருநாதரின் சந்ததியினரால் குருக்கள்மடம் சின்னக் கதிர்காமம் ஆலயம் சீரோடும், சிறப்போடும் பரிபாலிக் கப்பட்டு வந்துள்ளது.
உலககுருநாதர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சின்னக் கதிர்காம சுவாமி கோயில், பின்னர்.....!

**– ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி கோயில் –**

எனச் சிறப்புப்பெயர் பூண்டு விளங்கியது!

அன்றும் முன்னோரால் மேலோங்கியது! இன்றும் நம்மவரால் சிறப்புடன் திகழ்கின்றது! என்றும் இவ்வாறே நிலைத்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை!

அதேபோன்று குருநாதர்மடம் என விளங்கிய இந்தப் பதி குருக் கள்மடம் என மருவிநிற்கின்றது. ஆலய நித்திய நைமித்திய மகோற்சவப் பூசைகள் செய்வதற்கு யாழ்ப்பாணம் கெருடாவில் லைச் சேர்ந்த மதகுருமாரே ஈடுபட்டுவந்தார்கள்.

1950ம் ஆண்டின் பின் எமது சூழலிலேயே உள்ள ஆசாரி அபிஷே கம் பெற்ற சைவக் குருமார் பணியாற்றி வருகிறார்கள்.

முருகப் பெருமானுடைய அருள்பெற்ற வள்ளலான நிலமைச் செட்டிப் போடியார் 1848ம் ஆண்டு ஆவணிமாதம் 25ந் திகதி நெல் விளையும் காணிகளைப் பெருமானுடைய ஆலயத்துக்குத் தருமச்சாதனம் செய்தார். காணிகளின் ஊதியங்கள் அனைத்தும் கோவிலுக்குச் சேரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

*ஆரம்பத்தில்,*
செட்டி குடியினரும், அத்தியா குடியினரும் பரிபாலகர்களாக இருந்தனர்.

*பின்னர்*
செட்டி குடியினரும், அத்தியா குடியினரும், தன்மன் செட்டி குடி யினரும் பரிபாலனம் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும்*
*20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்*

குடிகளின் சார்பில் பரிபாலனம் செய்தவர்கள் :-

அத்தியா குடி..............................................*திரு எஸ் தம்பிமுத்து*
செட்டிகுடி..............................*திரு என் ரி குமரப் பெருமாள்*
தன்மன் செட்டி குடி....................*திரு ஏ ரி கந்தப்பெருமாள்*
கவுத்தன் குடி......................................*திரு வீ கதிரேசபிள்ளை*
வச்சினா குடி..............................................*திரு கே முருகப்பன்*

(இவர்களுடைய பெயர்களின் முன்னெழுத்துக்கள் ஆங்கில உச்ச ரிப்பின்படியே வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதால்)

**S - N.T - A.T - V - K** என இவர்கள் ஐவருடைய முன்னெழுத் துக்களையும் அறிந்துகொள்ளவும்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சமயசீலரும், சைவப் பண்புகள் நிறைந்தவருமான திரு சிவசரணம் அவர்கள் 1921ம் ஆண்டில் இவ்வாலயத்துக்கு வருகைதந்தார்.

ஆலயத்திற் தங்கினார். கிராம மக்களோடு மிகவும் ஒன்றியவராய், சகோதரத்துவத்துடன் வாழ்ந்தார்.

ஆலயத் தொண்டுகளிலும், சமய முன்னேற்றங்களிலும் ஈடுபாடு கொண்டு அரும்பாடுபட்டார். பிரார்த்தனைப் பாடல்களையும், பஜனைப் பாடல்களையும் இசைக் கருவிகளோடு பயிற்றுவித்தார்.

மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டினார். அதற்கேற்ப மக்களும் அவருடன் பற்றோடு பழகினார்கள்.

அவ்வாறான அமைதியான தருணத்தில் ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலன சபைப் பிரதிநிதிகள் :-

அத்தியா குடி......................................................திரு க சின்னத்தம்பி
திரு சீ சாமித்தம்பி
செட்டிகுடி..............................................................திரு வி மூத்ததம்பி
திரு மு பூபாலபிள்ளை
தன்மன் செட்டிகுடி...............................................திரு க சீனித்தம்பி
திரு சி மூத்ததம்பி
கவுத்தன்குடி.........................................................திரு க வேலுப்பிள்ளை
திரு கா கந்தப்பன்
வச்சினாகுடி...........................................................திரு த மூத்ததம்பி
திரு க சாமித்தம்பி

இவர்களுடைய காலத்தில் ஆலய பரிபாலனம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றுவந்தது. திரு சிவசரணம் அவர்களை ஐந்து ரூபா சாஸ்திரியார் என்றும் அழைப்பார்கள்.

சில காலத்தின் பின்னர் சாஸ்திரியார் அவர்கள் தமது பிறப்பிடமான யாழ்ப்பாணம் திரும்பிவிட்டார்.

1938ம் ஆண்டின் முன்னும் பின்னுமாகப் பரிபாலனக் குழுவினராக இருந்தவர்கள் :-

திரு க மயில்வாகனம், திரு மு பூபாலபிள்ளை
திரு சீ சாமித்தம்பி, திரு த மூத்ததம்பி
திரு சி கந்தையா, திரு கா கந்தப்பன்
திரு சி மூத்ததம்பி

இவர்களுடைய குடிவிபரங்கள் வரலாற்றில் தரப்படவில்லை.

ஆலய நிருவாகத்தைப் புனர் அமைப்புச் செய்வதற்காக 1958ம் ஆண்டு விசாரணைச் சபை ஏற்படுத்தப்பட்டது. விசாரணைச் சபையின்போது ஐந்து குடி கொண்ட நிருவாகம் எட்டுக் குடி நிருவாகமாக மாற்றி அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூ... பி.
மாநகர நூலக சேவை

இதோ எட்டுக்குடி நிருவாகத்தின் அமைப்பு!

**1 அத்தியா குடி**
**2 செட்டி குடி**
**3 தன்மன் செட்டி குடி**
**4 கவுத்தன் குடி**
**5 வச்சினா குடி**
**6 குருக்கள் அத்தியா குடி**
**7 பட்டணத் தேவேந்திரன் குடி**
**8 கோயில் பகுதிக் குடி**

இந்த நிருவாக மாற்றம் பயனளிக்கவில்லை.

ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமியின் திருவருளால் அவரது சன்னிதானத்தில் மேலும் ஒரு சுமூகமான நிருவாக மாற்றம் ஏற்பட்டது.

1962ம் ஆண்டு ஆலய முன்றிலில் தேச வன்னிமை திரு த சதாசிவம்பிள்ளை அவர்கள் தலைமையில் மகாசபை கூடியது.

ஊரிலுள்ள சகல குடி மக்களும் ஒருமித்துக் கூடினர். ஊரிலுள்ள பத்துக் குடிகளுக்கும் பத்து வண்ணக்குமார் நியமிக்கப்பட்டனர்.
தெரிவுசெய்யப்பட்ட வண்ணக்குமார் பத்துப்பேரையும் கொண்ட ஒரு பரிபாலன சபையும் அமைக்கப்பட்டது.

பத்துக் குடி வண்ணக்குமார் நிருவாக அமைப்பு!

*1 அத்தியா குடி ............ திரு க சீனித்தம்பி-*
*2 செட்டி குடி ............ திரு ஆ சோமசுந்தரம்*
*3 தன்மன் செட்டி குடி ............ திரு சா கந்தப்பன்*
*4 கவுத்தன் குடி ............ திரு த முருகப்பன்*
*5 வச்சினா குடி ............ திரு செ சீனித்தம்பி*
*6 குருக்கள் அத்தியா குடி ............ திரு சி கந்தவனம்*
*7 பட்டணத் தேவேந்திரன் குடி ............ திரு பொ கணபதிப்பிள்ளை*
*8 பெரிய கவுத்தன் குடி ............ திரு சா ஆறுமுகம்*
*9 சிங்களக் குடி ............ திரு மு கதிர்காமத்தம்பி*
*10 குருக்கள் பகுதிக் குடி ............ திரு இ கந்தப்பன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்துக்குடி வண்ணக்கு சபை மிகவும் சீராகவும் சிறப் பாகவும் இயங்கியது. எம் பெருமானுடைய சன்னிதானம் புதுப் பொலிவுடனும், பூரணமான அருள்மயத்துடனும் விளங்கியது। ஊர்மக்களின் ஏகோபித்த இணைப்பும் ஒற்றுமையும் மேலோங்கி வளர்ந்தது. புதிய சபை அமைக்கப்பட்ட இதே வருடம் ஆவணி மாதம் எம் பெருமானுக்கு *திரு உலா* நடாத்தினார்கள். இந்து சமய அபிவிருத்திச் சபையும் ஆலய பரிபாலன சபைக்கு உதவி யாக இருந்தது.

மேலும் ஒருமுறை நிருவாகப் புனரமைப்புச் செய்யும்பொருட்டு விசாரணைச் சபையின் தீர்மானத்துக்கு இணங்க 1978ம் ஆண்டு ஆவணி மாதம் 25ந் திகதி மகாசபை கூடியது.

ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி ஆலய மண்டபத்தில் திரு க சீனித்தம்பி அவர்கள் தலைமையிலும், அரசாங்க அதிபர் திரு எம் அந்தோனிமுத்து அவர்கள் சமூகத்திலும் மகா சபை அன்று கூடியது.

அன்றைய மகாசபைக் கூட்டத்திலேயே எமது முருகப் பெருமா னுடைய தலவரலாற்றில் முதன் முறையாக ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டது.

*அத்தியாகுடி ....................திரு க சீனித்தம்பி (ஆயுட்காலத்) தலைவர்*
*செட்டிகுடி..............................திரு ஆ சோமசுந்தரம் .. உப தலைவர்*
*தன்மன் செட்டிகுடி........................திரு க மயில்வாகனம் ... செயலாளர்*
*கவுத்தன்குடி..................................திரு க முத்துலிங்கம் ... பொருளாளர்*
*வச்சினாகுடி.................................................................திரு செ சீனித்தம்பி*
*குருக்கள் அத்தியாகுடி...................................................திரு த வடிவேல்*
*பெரிய கவுத்தன்குடி...................................................திரு ம விமலேஸ்வரன்*
*பட்டணத் தேவேந்திரன்குடி.........................திரு பொ கணபதிப்பிள்ளை*
*சிங்களக்குடி.............................................................திரு ஆ மயில்வாகனம்*
*குருக்கள்குடி........................................................திரு சி கிருஷ்ணபிள்ளை*
*சம்பந்திகுடி..................................................................திரு க மாமாங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பரிபாலன சபை அமைக்கப்பட்ட நாள் தொடக்கம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமியின் திருத்தல நிருவாகம் சிறப்புடனும், திருப்தியுடனும் விளங்கி வருகின்றது.
1978ம் ஆண்டு அகோரமாக வீசிய சூறாவளி எமது கிராமத்திலும் பெருமானுய ஆலயத்திலும் பெரும் சேதங்களை ஏற்படுத்தியது.

ஊர் மக்களின் மனோ திடத்தினாலும், அளப்பரிய ஒத்துழைப்பா லும் அரசாங்க உதவியினாலும் ஆலயம் புனருத்தாரணம் செய்ய ப்பட்டது.

1982ம் ஆண்டு மீண்டும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்தில் இருந்த ஏனைய குறை வேலைகளும் பூர்த்தியான தும் 1993ம் ஆண்டில் மஹா கும்பாபிஷேகமும், மண்டலாபிஷே கமும், சங்காபிஷேகமும் விமரிசையாக நடைபெற்றது.

இளைய பெருமானாம் வேலவனின் வெள்ளை மணல் பரந்த இந்த விசாலமான சன்னிதானத்தில் மூத்த பெருமானாம் எங் கள் விக்னேஸ்வரப் பெருமானும் கோயில்கொண்டு, எம்மை ஆண்டு அருள்பாலித்து விளங்குகின்றார்.

மூத்த பெருமானுக்கும், இளைய பெருமானுக்கும், மூன்று மகா உலகங்களுக்கும் அன்னையாக விளங்கும் மாரியம்மனும் இங்கே ஆலயங்கொண்டு அலங்காரமாக வீற்றிருந்து ஆருளாட்சி புரிகின் றாள். மாதம் மூன்று மாரி பொழியவும், மங்காத வளங்களனைத் தும் பொங்கி வளரவும் செல்வம் ஈட்டுகின்றாள்!
நம்மை எதிர்க்கவரும் தோஷங்கள் யாவையும் விலக்கி விரட்டும் கோளருந் தெய்வங்களான நவக்கிரகங்கள் இங்கே தோற்றியி ருக்கின்றன. அன்றாடம் அணுகிவரும் துன்பங்கள் அனைத்தை யும் மறைத்தவண்ணம் ஆளுகின்றன.

அல்லும் பகலும், என்னேரமும், எல்லா இடங்களிலும் வியாபித்து விளங்கும் காவற் தெய்வமான வயிரவனார் இங்கே அழகிய பீடத்தில் அமர்ந்து அருளாட்சி புரிகின்றார். நவக்கிரகங்கள் மத்தியில் இராகுகேது வழிபாட்டுக்காக இருப்பினும், கண்கண்ட தெய்வமாக எங்கணுமே உலவுகின்ற நாகதம்பிரானையும் அப்பன் முருகனுடைய தலத்திலே எண்ணி வழிபடுவதை அடியார்கள் என்றுமே மறப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழுகின்ற சேவலுடனும், மயிலுடனும், சேர்ந்து மகிழும் தோழனல்லவா நாகபிரான்!

ஆலய முன்றிலில் அமைந்து நிற்கின்ற மணித்தூணில்.....,
அஞ்சேல்! அஞ்சேல்! அஞ்சேல்!

என்று ஆறுமுகனின் அருள்மணி ஓசை ஊரின் எட்டுத் திக்கிலும் எட்டும்படியாக அன்றாடம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. தண்ணீர்த் தாங்கியும் தலத்தில் நேர்த்தியாக அமைந்துள்ளது. தீர்த்தக்கிணறும் ஆலயத்தின் உட்பிரகாரத்திற் சுத்திகரமாக அமைந்துள்ளது. ஆலயத்தின் உட்பிரகாரத்தை உள்ளடக்கிய வண்ணமாய்ச் சுற்றி வர மதிலும் அமைந்துள்ளது.
நந்தவனம் தேவாலயங்களைச் சிறப்பித்து விளங்கும் தெய்வீகச் சூழல் என்பார்கள். அதற்கேற்பப் பெருமானுடைய தலத்தில் முன்னாளில் அழகிய நந்தவனம் இருந்தமைக்கு இன்னாளிலும் ஒரு சான்று உள்ளது. நந்தவனவளவு என்று ஊர்மக்கள் அழைக்கும் ஒரு இடத்தை நாம் இன்றும் ஆலயத்தின் அருகாமையி லேயே அவதானிக்க முடியும். எனவே அன்றிருந்த நந்தவனம் ஏதோ ஒரு வகையில் இயற்கையின் நிமித்தம் மறைந்திருக்க லாம் என்று, இன்று நாம் ஊகித்து உணரக்கூடியதாக இந்த நந்தவன வளவு நிலைத்திருக்கின்றது. இன்னுமொரு நந்தவ னம் உண்டாவதற்கு அந்தக் கந்தவனம் ஈட்டும் அருளும் வல் லமையும் நிச்சயம் நமக்கு உண்டு என்பது எமது நம்பிக்கை.

பெருமானுடைய சன்னிதானத்தில் ஆண்டு தோறும் சங்காபிஷே கம், மகோற்சவம், விசேட பூசைகள் யாவும் ஒழுங்காக நடை பெற்று வருகின்றன. மேலும் இவ்வாலயத்துக்கு அமையவேண் டிய பல தேவைகள் இருக்கின்றன. இத்தேவைகளைக் கிராம மக்கள் உதவியுடன் ஆலய நிருவாகம் முன் நின்று செய்துவரு கின்றது. இவை யாவும் நிறைவு பெற்றபின் பூரண ஆலயமாக விளங்குவதற்கு எம் பெருமான் ஸ்ரீல ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமிநாதன் அருள் பாலிக்கவேண்டும். அதற்காகவே நமது வழிபாடுகள் அன்றாடம் தொடரவேண்டும்.

பெருமானுடைய தலவரலாறு நூலுருவில் நிலைபெற வேண்டும். அழியாத சரித்திரச் சாசனமாக நீடித்திருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் நமது எதிர்காலப் பரம்பரையினரும் எம் பெருமானுடைய திவ்விய சரித்திரத்தை அறிந்துணர வேண்டும். புகழ்ந்து போற்றி, நல்லருள் பெற்றுச் சிறந்து வாழவேண்டும்.
ஆகவே நமது ஊர்ப் பெரியகோயில் எனப் பெருமையோடு நாம் வழிபடுகின்ற முருகப் பெருமானுடைய தலவரலாற்றுக் குறிப்புகளை எழுதி அனுப்புங்கள். பெருமானுடைய தலவரலாற்றையும், பெருமானைப் பற்றிய 108 போற்றிகளையும் நூலில் அமைக்க ஆவற்படுகின்றேன் என்று இலண்டனில் வாழும் குருக்கள்மடம் வாசியான எமது உறவினர் கவிஞர் ஞானமணியம் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்.

பரிபாலன சபையினராகிய நாம் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினோம். பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைத் தமது சொந்தச் செலவாகச் செய்து, நூலை அச்சிட்டு எமக்கு அனுப்பியுள்ளார்.

பல்லாண்டு பல்லாண்டு காலமாக எம் பெருமானுடைய தல வரலாற்றுப் பெருமையும் புகழும் நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் அரும்பெரும் செயலாக இந்தத் திருப்பணியை நிறைவேற்றியுள்ளார்.
கவிஞர் ஞானமணியம் அவர்களுக்கும், அவருடைய மனைவி மக்களுக்கும் எம் பெருமான் ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி என்றென்றும் அருள்பாலிக்க வேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்வோமாக!

உன்தல வரலாறு – ஓதிடும் மாந்தருக்கு
ஓரிடர் தானுமுண்டோ – கந்தையனே!
முன்தலம் இதை நாடி – முத்தமிழ் இடம் தேடி
மூவிரு முகத்தோனே – கோயில் கொண்டாய்!
இன்தலம் ஈதிலுன்னை – ஏற்றிடும் எங்களுக்காய்
ஈட்டுதற்கே வரங்கள் – அன்பு கொண்டாய்!
தென்தலம் கதிரையில்நீ – நின்றிடும் திருக்கோலம்
தென்படும் தலமிதையா – திருமுருகா!

**– ஓம் சரவணபவ –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# தெய்வத்தின் தெய்வம்

மதுரையம் பதியிலே, பாண்டிமா மன்னவன் மாமகா சபையிலே...., வேண்டும் நீதி.....। வேண்டும் நீதி.....।।வேண்டும் எனக்கு நீதி...।।।
என்று வீராவேசங் கொண்டு, வீறிட்டுக் கொந்தளித்து அரண் மனை எங்கணுமே எதிரொலிக்கும்படியாக ஆரவாரஞ் செய்து ஆர்ப்பரித்து நின்றாள் கற்பின் செல்வி கண்ணகித்தாய்।

ஒற்றைச் சிலம்பை ஓங்கி எறிந்து, மண்ணுலகும் விண்ணுலகும் மயங்கித் தயங்கி வியந்து நிற்கும்படியாக மாணிக்க மணிகளைக் கலீரென்று சிதறிப் பரப்பினாள் தரையிலே। நீதி வழுவாது நீடூழி வாழ்ந்திருக்கும் பாண்டிய மன்னர் பரம்பரைக்கும், பாராளும் செங்கோலுக்கும் நேர்ந்ததே.....। மாறாத களங்கம் என்ற ஏக்க த்தால், பெருமூச்சென்னும் ஒருமூச்சோடு தன்னுயிர் துறந்தான் தமிழரும் காவலன் மதுரை மன்னன்.

நீதிதேவதையின் அனுக்கிரகம் பெற்றுவிட்டாள் கண்ணகித்தாய்।
நியாயம் என்னும் நீங்காத வரம்பெற்றுவிட்டாள் கண்ணகித்தாய்।
தலைநிமிர்ந்து தன்னை மறந்தே கூச்சலிட்டாள் அன்னை.
அக்கினி பகவானையும், வாயுதேவனையும் அழைக்கின்றாள்।
அழித்திடுக। எரித்திடுக। மதுரை மாநகரை।
பாவம் இழைத்தவர்கள் தம்மையே மாய்த்திடுக।
பாவம் அறியாத நல்லவர்கள் எல்லோரையும் வீடுத்திடுக।
என்று பணிந்து நிற்கின்றாள்।

சிந்தித்து ஆராய்ந்து பாராத செங்கோலின் அவசரத் தீர்ப்பி னால் இந்தப் புனிதமான மதுரை நகரம் எரியும் அகோரக் காட்சியைக் கண்டு நான் மனம் சகிக்க மாட்டேன் என்று புறங்காட்டியவளாய் வேகமாக விரைந்து நடக்கின்றாள்।
கீழ்த் திசை வாயிலின் ஊடாகத் தன் கணவனுடன் மதுரை நகர் எல்லைக்குள் நுழைந்தவள், கணவனை இழந்த விதவைக் கோலத்திலே, மேற்திசை வழியாக மதுரைமா நகரை வீட்டு வெளியேறுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நிலைப்பதற்காகவும் பத்தினிப் பெண்களின் பதிபக்தி நிலைப்பதற்காகவுந்தான் மதுரை நகரையும், தன் கணவனின் மரணத்துக்குக் காரணமானவர்களையும் அழித்தது போல்,
முன்னர் அமரர்தம் சுதந்திரம் நிலைப்பதற்காகவும், அவர்களைச் சிறையினின்று வீடுவிப்பதற்காகவும் அசுரர் படைகளை அழித்து அழியாத புகழ் எய்திய தெய்வம் முருகப் பெருமான் என்பதைப் பூம்புகார் நகரில் வாழ்ந்துகொண்டிருந்த பொழுதே பற்றுடன் பயின்றுகொண்டவள் கண்ணகித் தாய்।

கந்தன் மீது அவள் கொண்டிருந்த பற்று மேலும் அவளுடைய பக்தியை உந்தியது போலும்।

முருகப் பெருமான் அசுர குலத்தை அழித்து ஒழித்த கிரவுஞ்ச மலைப் பகுதியைச் சென்றடைகின்றாள். பின்னர் அதனைக் கடந்து சென்று கந்தப் பெருமான் வெற்றிகொண்டு வேகந் தணிந்து, வீறிட்டுப் பொருதிக் களைத்த சினந்தணிந்து, அமை தியோடு சென்றமர்ந்து கோயில் கொண்டிருக்கும் திருச்செந் தூர்ப் பகுதியை அண்மியுள்ள நெடுவேள் குன்றத்தை வந்தடை கின்றாள்।

கந்தன் மீது கண்ணகி கொண்டிருந்த பக்தியின் நிமித்தம் போலும் அவள் பெருமானுடைய திருச்செந்தூர்க் கோட்டத்தை மருவிய இந்த இடத்திற்கு வந்தடைகின்றாள்।

ஆங்கே வேங்கைமர நீழலில், நடந்த களையாறி நிற்கின்றாள்।

குன்றக் குறவர்கள் கண்ணகியைக் கந்தன் மனையாள் வள்ளி தானோ என்று கும்பிட்டுக் கூடுகின்றனர். கண்ணகி தன் சோக வரலாறு சொல்லுகின்றாள்.
கோவலனை அவள் கூடி இணையவேண்டிய நாள் வருகின்றது।

கோவலன் வானிலிருந்து புஷ்ப வாகனத்தில் வந்து இறங்குகின் றான். கண்ணகி கணவனைத் தொழுது அவனுடன் இணைந்து கொள்கின்றாள்। இருவரும் வானுலகம் செல்கின்றனர்।
தேவர்கள், இவர்கள் இருவரும் மீண்டும் இணைந்துகொள்கின்ற தெய்வீகத் தன்மையைக் கண்டு வாழ்த்துகின்றனர்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீக நிகழ்ச்சியாக இவர்கள் முன் இணைந்ததும், பின் பிரிந் ததும், அடுத்து மீண்டும் இணைந்து வான் செல்வதும் அமரர் கள் அறிந்துகொண்ட அற்புதமல்லவா!
கண்ணகியின் புனிதமான இந்த அருட் காட்சியைக் கண்ட குற வரின மக்கள் கைகூப்பி மன்றாடுகின்றனர். குறக்குல மாதர்கள் குரவையிட்டுக் குரவைக் கூத்தாடி ஆனந்தமாய்க் கொண்டாடு கின்றனர். கண்ணகியைத் தமது குலதெய்வமாகக் கருதி வழி படுகின்றனர்.

கண்ணகி நின்றுகொண்டிருந்த வேங்கை மரத்தைச் சுற்றி மதில் அமைக்கின்றனர். கண்ணகி வழிபாடு தொடர்கின்றனர். மன்னன் சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணப் புறப்பட்டு அவ்விடம் வந்தடைகின்றான். கண்ணகியின் புனிதமான வரலாறு கேட்டுப் பக்திப் பேரின்பம் அடைகின்றான்!

சோழமண்ணிலே தோன்றி வளர்ந்து, பாண்டிமண்ணிலே பத்தி னியாகத் திகழ்ந்து, எமது சேரமண்ணிலே தெய்வமாகக் காட்சி கொடுத்தாளே கண்ணகியாள்! அது யாம்செய்த புண்ணியம் அல் லவா! என்று பெருமையடைகின்றான்!

வடநாட்டு மன்னரைப் போரில் வென்று, இமைய மலையிலே கல்லெடுத்து, தன்னிடம் தோற்றவரான கனக விசயன் ஆகிய மன்னர்தம் தலைகள் மீது கல்லைச் சுமக்கவைத்துக் கொண்டு வருகின்றான்! கண்ணகிக்குச் சிலை வடிக்கின்றான்!
சேரநாட்டிலே, வஞ்சிப் பதியிலே கண்ணகிக்குச் சிலைவைத் துக் கோயில் அமைக்கின்றான். கண்ணகி ஆங்கே நிலையான தெய்வமாகித் தலங்கொள்கின்றாள்.
அப்பொழுது வானிற் தோன்றிய கண்ணகித் தாயார் ஒலிக்கின்ற அருள் வார்த்தைகள் பல!

இதோ! அன்னையின் அருள் உரைகளில், பன்னிரு கையன் முருகப் பெருமானைப் பற்றிய வார்த்தைகள்!
தன்னுடன் பூம்புகாரில் அன்றாடம் விளையாடி மகிழ்ந்து பழகிய தோழியருக்கும், மதுரைமா நகரிலே மாதரியின் சேரியிலே தன்னு டன் அளவற்ற அன்புகாட்டிய ஆய்ச்சியர் குலத்துப் பாங்கியருக் கும் அன்போடு உரைக்கின்றாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னரும் தோழியர்காள்!
பூம்புகார் நகரிலே என்னுடன் களித்து விளையாடி இனித்து மகிழ்ந்து கொண்டாடியவர்களே! என்னருங் கணவனுடன் உங்களோடு வாழ்ந்திருந்த சில நாட்களைப் பல வருடங்களாக எண்ணிப் பாசங்கொண்டிருந்த மதுரைச்சேரிப் பாங்கியர்காள்!
என்னுடன் மீண்டும் விளையாடி மகிழ வேண்டுமா! கருணை வள்ளலான கந்தப்பெருமான் வாழும் தலங்களிலே வந்து நான் எப்பொழுதும் புகுந்து விளையாடுவேன்!
அங்கே வாருங்கள் என்னுடன் விளையாடி இன்புறுங்கள்!"
என்று ஆனந்தமாக ஒலித்தாள்! அத்துடன் வானில் மறைந்தாள்!

அதனால் தானோ என்னவோ, அப்பன் முருகப் பெருமான் இங்கே குருக்கள்மடத்திலே கோயில் கொண்டிருக்க, அன்னை கண்ணகித் தாயாரும் மிகவும் அணுகி அமர்ந்தவளாய், நமது அயலிடமாகிய செட்டிபாளையம் கிராமத்திலேயே காட்சி தந்து கோயில்கொண்டு விளங்குகின்றாள்!

ஒப்பற்ற சக்தியை உடையவன்—அப்பன் சிவனுக்கே மந்திரப் பொருள் சொல்லி அப்பன்சுவாமி ஆனவன்—சிவகுரு ஆனவன்—பைந்தமிழ்ப் பாட்டிக்கே அருந்தமிழ்ப் பாடம் சொன்னவன்—என்பதால், பெற்றவளான உமையவளாலேயே பெருமையுடன் போற்றப்பட்டவன் முருகன் அல்லவா! கண்ணகித் தாயாரும் அந்தக் கலியுகவரதனைப் போற்றுவதில் என்னே வியப்பு!
கண்ணகியாம் எங்கள் தெய்வத்தின் தெய்வம் ஆனவனல்லவா கந்தப் பெருமான்!
அவ்வாறான தெய்வத்தின் தெய்வத்தையே வழிபட்டு வாழும் அரும் பெரும் பாக்கியம் பெற்றவர்கள் அல்லவா நாங்கள்!

**கந்தன் புகழ் விளங்கும் தலங்கள் தோறும்**
**கண்ணகித் தாயாரின் அருள் விளங்கும்!**

*எனவே, கந்தன் ஆலயம் எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் கண்ணகித் தாயாரையும் எண்ணி வழிபடுவோமாக!*

—கவிஞர் ஞானமணியம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# குருக்கள்மடம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி

## 108 போற்றிகளும் – கும்பாபிஷேகப் பாடல்களும்

## 108 போற்றிகள்

– திருச்சிற்றம்பலம் –

ஆதியில் வந்தமர்ந்தாய் ஆலயங்கொண்டாய் போற்றி
சோதிவேல் சுடரக் கண்டோம் சுந்தரா வேலா போற்றி
நாதியில் லாதார் எம்மை நலமுடன் காத்தாய் போற்றி
வீதியின் ஓரம் தோன்றி வீற்றிருக்கின்றாய் போற்றி

செல்வக் கணேஷன் தானும் திகழ்வது கண்டாய் போற்றி
தேற்றிடும் மாரித் தாயும் தோற்றிடக் கண்டாய் போற்றி
வல்லகோள் ஒன்பதிங்கே மன்னிடக் கண்டாய் போற்றி
வயிரவன் பீடம் முன்னே நிலைபெறக் கண்டாய் போற்றி

செந்தமிழ் வாழும் பதியில் வந்தெமை ஆண்டாய் போற்றி
திருக்கதிர் வேலா செல்வக் கதிர்காம சுவாமி போற்றி
பைந்தமிழ் பாடும் புலவர் பாராட்டும் இறைவா போற்றி
பங்கையம் ஆறிற் தோன்றிப் பாராளுங் குமரா போற்றி

தெங்கிளஞ் சோலை சூழும் திருத்தலங் கொண்டாய் போற்றி
பொங்குநெல் வயலினோரம் ஆலயங் கொண்டாய் போற்றி
எங்கணும் வாழை தோன்றும் இன்தலம் கொண்டாய் போற்றி
வங்கமா கடலின் பாங்கில் மாதலம் கொண்டாய் போற்றி

கும்பிடும் அடியார் பாடும் குரலொலி கேட்பாய் போற்றி
கோபுரம் மணி ஒலிக்கும் பேரொலி கேட்பாய் போற்றி
நம்பிடும் எங்கள் பஜனைப் பாட்டொலி கேட்பாய் போற்றி
நாமோதும் மந்திரத்தின் சீரொலி கேட்பாய் போற்றி

முக்கனி அபிஷேகங்கள் மூழ்கித் திளைப்பாய் போற்றி
முருகா நீ பாலுந் தேனும் பருகித் திளைப்பாய் போற்றி
பக்குவம் உடைய பொங்கல் பாசமாய் உண்பாய் போற்றி
பலகார வகையும் அமுதும் உண்டே களிப்பாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா நின் வீரதக் கவசம் பாடினோம் ஆள்வாய் போற்றி
கார்த்திகைத் தீபங் காணும் கடவுளே ஆள்வாய் போற்றி
தந்தாய்நின் கருணை ஞானத் தலைவனே ஆள்வாய் போற்றி
சங்கார வதனா எம்மைச் சந்ததம் ஆள்வாய் போற்றி

தஞ்சமென் றோடி வந்தால், தஞ்சங் கொடுப்பாய் போற்றி
தாங்கொணாத் துயரில் இன்பம் தாங்கிக் கொடுப்பாய் போற்றி
அஞ்சுவார் தம்மைக் காத்தே அபயங் கொடுப்பாய் போற்றி
ஆண்டிருள் மாயம் போக்கும் வேலொளி கொடுப்பாய் போற்றி

ஊரிலே வாழுங் குடிகள் யாவும் நீ ஆண்டாய் போற்றி
ஊர்தோறும் உள்ள மாந்தர் தம்மையும் ஆண்டாய் போற்றி
பாரிலே கோணம் பலவும் பாங்குடன் ஆண்டாய் போற்றி
பாதகர் தம்மை வென்றே தேவரை ஆண்டாய் போற்றி

வீதியின் ஓரம் பதியில் வீற்றிருக்கின்றாய் போற்றி
மேவீடும் பயணம் செய்வோர் பார்த்திருக்கின்றாய் போற்றி
ஓதிடும் அடியார் பாடல் கேட்டிருக்கின்றாய் போற்றி
ஓராறு முகனே ஞாலம் காத்திருக்கின்றாய் போற்றி

நம்பினார் உன்னை என்றும் நலிவுற்ற தில்லைப் போற்றி
நாடினார் உன்னை என்றும் வாடினார் இல்லைப் போற்றி
எம்பிரான் ஈசன் மகனே துன்புற்ற தில்லைப் போற்றி
ஈஸ்வரி மைந்தா நேரும் இடையூறு மில்லைப் போற்றி

நின் பெரிய கோவில் என்றே நித்தம் அழைத்தோம் போற்றி
நீ வாழும் பெரிய கோட்டம் இதுவாகும் ஐயா போற்றி
உன்னரிய காட்சிக் கோலம் முன்கண்ட தலமே போற்றி
ஊருக்கோர் மூலப் பதியாய் உண்டான தலமே போற்றி

குருக்கள்மடத்தின் கோவே குகனே சண் முகனே போற்றி
கோவிந்தன் மாயன் வாழ்த்தும் வண்ணமரு கோனே போற்றி
திருக்குமர வடிவேலையா திகழுங்கா வலனே போற்றி
தென்கதிரைப் பதியில் வாழும் செந்தமிழ் இறைவா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாண்டி முருகா எம்மைத் தேற்றநீ வந்தாய் போற்றி
தேனாறு பாயும் வெருகல் முருகாநீ வந்தாய் போற்றி
முத்தழகு மண்டூர் முருகா சித்தமுடன் வந்தாய் போற்றி
முக்கோண மலை வில்லூன்றி முருகாநீ வந்தாய் போற்றி

நல்லூரின் இறைவா முருகா நாம்வாழ வந்தாய் போற்றி
நற்செல்வச் சன்னதியாரே நலமாள வந்தாய் போற்றி
நெல்லாரும் தாந்தா முருகா நீயாள வந்தாய் போற்றி
நீடுழி ஆளத்தானே நீ இங்கு வந்தாய் போற்றி

திருநீற்றுக் கேணி முருகா தெய்வமே வந்தாய் போற்றி
சீருயர் உகந்தை முருகா நாமுயர வந்தாய் போற்றி
திருமாவேற் கடவை முருகா சீராள வந்தாய் போற்றி
திருப்பெருந் துறையில் வாழும் தெய்வமே வந்தாய் போற்றி

முன்னோர்கள் வாழுங் காலம் தன்னில்வந் துற்றாய் போற்றி
மூளாமல் நிர்ப்பந்தங்கள் சூழாமல் ஆண்டாய் போற்றி
இன்னாத செயலும் வாழ்வும் இல்லாது காத்தாய் போற்றி
ஈராறு தோளும் வேலும் தாமாளும் இறைவா போற்றி

ஆண்டுமா உற்சவந்தான் ஆனந்தமாமே போற்றி
ஆவணி ஓணம் தன்னில் அலங்காரமாமே போற்றி
வேண்டுவார் நல்வரங்கள் வேண்டி யீன்புறுவார் போற்றி
வெற்றிவேல் இறைவா நின்றன் மேன்மைதான் என்னே போற்றி

ஊரிலே வாழுங் குடிகள் ஒன்றாகும் அப்பா போற்றி
ஊரெங்கும் ஆசாரங்கள் பேணுவார் கந்தா போற்றி
தேரிலே நின்றன் பவனி திகழுமே தேவா போற்றி
தெய்வமே மாந்தர் கூட்டம் திரளுமே முருகா போற்றி

எங்குமே தோரணங்கள் ஏறுமே முருகா போற்றி
பொங்குமா நிறைகுடங்கள் பொலியுமே முருகா போற்றி
தங்குமாம் அருளும் புகழும் சண்முகா முருகா போற்றி
மங்களம் பெருகும் தீபம் வளருமே முருகா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் திருநீறிங்கே கமழுமே முருகா போற்றி
தாமரை வாசம் நெஞ்சைத் தாவுமே முருகா போற்றி
வந்தனம் செய்யும் பஜனை நிகழுமே முருகா போற்றி
வாழ்த்திடுஞ் சஷ்டிக் கவசம் கேட்குமே முருகா போற்றி

பூசைகள் நாளும் மூன்றாய்ப் புரிகிறோம் இறைவா போற்றி
பொங்கலோ டபிஷேகங்கள் செய்கிறோம் இறைவா போற்றி
ஆசைகள் தம்மை விட்டே அஞ்சலித்தோமே போற்றி
ஆனந்த யோகம் அதனால் அடைகிறோம் இறைவா போற்றி

விரதங்கள் காப்பதாலே மேன்மை கண்டோமே போற்றி
வினைகளுங் கோளும் தீரும் வாழ்வு கண்டோமே போற்றி
இரதங்கள் மீதேறின்றன் பவனி கண்டோமே போற்றி
ஈடிலாக் காட்சிக் கோலம் இங்கு கண்டோமே போற்றி

தாம்பூலம் வளருஞ் செல்வம் தந்தாயே தேவா போற்றி
தங்கநெல் விளையும் போகம் தந்தாயே தேவா போற்றி
நாம்பூணும் அணியும் பொருளுந் தந்தாயே தேவா போற்றி
நாலான பயனும் சுகமும் தந்தாயே தேவா போற்றி

பண்டிதர் மணிகள் வாழும் பாக்கியம் தந்தாய் போற்றி
பாவலர் கவிஞர் தாமும் பாடிடத் தந்தாய் போற்றி
தண்டமிழ்ச் சைவப் புலவர் தம்மையுந் தந்தாய் போற்றி
சாருநோய் நொடிகள் மாற்றும் வைத்தியர் தந்தாய் போற்றி

நீதியின் நிலையைக் காக்கும் நேயர்கள் தந்தாய் போற்றி
நித்தமும் ஞானம் ஊட்டும் வித்தகர் தந்தாய் போற்றி
ஓதிடும் சைவமார்க்கம் ஓதுவோர் தந்தாய் போற்றி
ஒப்பற்ற பொறிவிஞ்ஞானம் கற்றபேர் தந்தாய் போற்றி

உலகிலே மேலாய் வாழும் உழவர்கள் தந்தாய் போற்றி
ஓவியம் சிற்பம் கீதம் நாடுவோர் தந்தாய் போற்றி
பலவிதம் பதவி ஆற்றல் படைத்தவர் தந்தாய் போற்றி
பாராளும் இறைவா எங்கள் ஊராளும் முருகா போற்றி

– திருச்சிற்றம்பலம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# பொன்னூஞ்சல் பாட்டு

பொதுப் பாடல்

ஆனந்தம் ஆனந்தம் பொன்னூஞ்சல்
ஆறுமுகன் திருப் பொன்னூஞ்சல்
ஆனந்தம் ஆனந்தம் பொன்னூஞ்சல்
ஆடி மகிழ்ந்திடும் பொன்னூஞ்சல் ஆனந்தம்

ஆனை முகத்தவன் ஐங்கரனார்
ஆளும் எங்கள் முதல் ஆண்டவனார்
அன்புச் சகோதரன் பொன்னூஞ்சல்
அழகன் முருகன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

தீர்த்தங் குளித்து மனங் குளிர்ந்தே
செந்தமிழ்ப் பாட்டிசை கேட்டசைந்தே
சித்தங் களித்திடும் வேலவனார்
சீருடன் ஆடிடும் பொன்னூஞ்சல் ஆனந்தம்

வள்ளி தெய்வானையும் வாஞ்சையுடன்
வந்தமர்ந் தாடிடும் பொன்னூஞ்சல்
வள்ளல் முருகனின் பொன்னூஞ்சல்
வண்ணக் கொடிமலர்ப் பொன்னூஞ்சல் ஆனந்தம்

மாணிக்க கங்கையின் தீரத்திலே
வாழும் இறைவனின் பொன்னூஞ்சல்
மாவலி கங்கையின் ஓரத்திலே
மன்னுங் குமரையன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

தோகை மயில்தன்னில் ஏறிவரும்
சூரசம் ஹாரனின் பொன்னூஞ்சல்
சோபனமானது பொன்னூஞ்சல்
சுந்தர மேனியன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சிவனுக்கு மந்திரத்தைச்
சாற்றிய பண்டிதன் பொன்னூஞ்சல்
சிந்தையில் வந்து குடியமர்ந்தே
சீவித் திருப்பவன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

ஆறு படைகொண்ட காவலனார்
ஆறுதல் அடையும் பொன்னூஞ்சல்
நூறு தலங்கொண்டு பாரிலெங்கும்
நோக்கி இருப்பவன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

தங்க வளையிலே தொங்கிடுதாம்
சரவணன் திருப் பொன்னூஞ்சல்
சந்தன வாசங் கமழ்ந்திடுதாம்
தாமரைப் பூமணப் பொன்னூஞ்சல் ஆனந்தம்

வெள்ளிக் கயிற்றிலே ஆடிடுதாம்
வேலவனின் திருப் பொன்னூஞ்சல்
மெல்ல மெல்ல அசைந் தாடிடுதாம்
வெற்றிக் குமரனின் பொன்னூஞ்சல் ஆனந்தம்

சந்தனப் பலகை போட்டதுவாம்
சாந்த முருகனின் பொன்னூஞ்சல்
கந்தன் அசைந்திடும் பேரெழில் நாம்
கண்டு வணங்கிடும் பொன்னூஞ்சல் ஆனந்தம்

முத்து மணிச் சரங் கட்டியதாம்
மோகனச் சுந்தரன் பொன்னூஞ்சல்
முத்தமிழ் ஆண்டவன் பொன்னூஞ்சல்
முருகன் அழகன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

பாடுந் திருப்புகழ் கேட்டாடும்
பன்னிரு கையனின் பொன்னூஞ்சல்
நாடும் அடியவர் தாமசைக்கும்
ஞானக் குமரனின் பொன்னூஞ்சல் ஆனந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி வணங்கிடும் மாந்தர்களைத்
தேற்றி அணைப்பவன் பொன்னூஞ்சல்
கோடி நலந் தரும் வேலவனார்
கோமளப் பூமணிப் பொன்னூஞ்சல் ஆனந்தம்

காவலை வேண்டிப் பணிந்தவரைக்
காத்திடும் நாயகன் பொன்னூஞ்சல்
காணும் அடியவர் தாம் மகிழும்
கார்த்திகேயன் திருப் பொன்னூஞ்சல் ஆனந்தம்

எங்கும் இருப்பவன் பொன்னூஞ்சல்
ஈசன் குருமகன் பொன்னூஞ்சல்
எங்கள் இறைவனின் பொன்னூஞ்சல்
ஈஸ்வரி தன் மகன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

கண்ணன் மருமகன் பொன்னழகன்
காற்றை நுகர்ந்திடும் பொன்னூஞ்சல்
விண்ணவர் கண்டு மகிழ்ந்திடத்தான்
வேலவன் ஆடிடும் பொன்னூஞ்சல் ஆனந்தம்

அன்பு நிறைந்திடும் பொன்னூஞ்சல்
அற்புதம் மேவிடும் பொன்னூஞ்சல்
இன்பம் நிலவிடும் பொன்னூஞ்சல்
இறைவன் முருகன் பொன்னூஞ்சல் ஆனந்தம்

பொன்னூஞ்சல் திருப் பொன்னூஞ்சல்
பூமணம் வீசிடும் பொன்னூஞ்சல்
மன்னவன் முருகன் சன்னிதியில்
மங்களம் பாடிடும் பொன்னூஞ்சல் ஆனந்தம்

ஆடிமுடிந்தது பொன்னூஞ்சல்
ஆறுமுகன் திருப் பொன்னூஞ்சல்
பாடிமுடிந்தது பண்ணிசையாம்!
பாரினில் எங்கணும் மங்களமாம்! ஆடிமுடிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1993ம் ஆண்டு குருக்கள்மடம் ஸ்ரீல ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் போன்ற மகோன்னத வைபவங்கள் நிகழ்ந்தேறியபொழுது இலண்டன் மாநகரிலிருந்து என் குடும்பத்தின் சார்பில் இயற்றி இசை யமைத்துப் பின்னணி வாத்திய இசைகளுடன் பதிவுசெய்து பெருமா னுடைய தலத்துக்கு நான் அனுப்பிவைத்த ஒலி நாடாவில் அடங்கிய பாடல்கள்.*

*பாடல் 1*

பல்லவி
முன்னிறைவன் பிள்ளையாரே – நாங்கள்
முன்னாலே சரணடைந்தோம்

அநுபல்லவி
குன்றழகன் முருகனுக்கே –நாங்கள்
கும்பாபிஷேகம் புரிந்தோம் முன்

சரணங்கள்
பக்தியுடன் மன்றாடிப் பிள்ளையாரே
பாடியுன்னை நாடினோம் பிள்ளையாரே
சக்திசிவன் தனையனே பிள்ளையாரே
தரிசித்தோம் உன்பதங்கள் பிள்ளையாரே முன்

கலைமகள் அலைமகள் பிள்ளையாரே
காத்தருளும் மலைமகள் பிள்ளையாரே
நிலைபெறும் ஆலயமே பிள்ளையாரே
நீயிருக்கும் ஆலயங்கள் பிள்ளையாரே முன்

குருக்கள்மடம் தன்னிற் பிள்ளையாரே
குமரனுன் தம்பியுடன் பிள்ளையாரே
இருக்குமெழில் கண்டோம் பிள்ளையாரே
எங்களை நீ ஆண்டருள்வாய் பிள்ளையாரே முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 2

பல்லவி

கும்பாபி ஷேகமையா
குமரவடி வேலா
கொண்டாடி மன்றாடினோம்
குமரவடி வேலா கும்

சரணங்கள்

மஞ்சள் குருத்தோலை
வண்ணமணித் தோரணம்
மாவிலை பூமாலை
வாடாத தோரணம்
வாழை குலைவாழை
வாசலெங்குஞ் சோபனம்
மங்கள நிறைகுடம்
ஒளிவிளக்கு வந்தனம் கும்

பெரிய கோவிலிலே
பேரான திருவிழா
பெருமான் ஆறுமுகன்
பேரின்பத் திருவிழா
கரிய முகனாருங்
காணுகின்ற திருவிழா
காத்திடும் உமையாளுங்
களிப்பாகும் திருவிழா கும்

குருக்கள் மடம்வாழுங்
குடிகளுக்கோர் திருவிழா
கூடி ஒன்றாகிக்
கும்பிடுமோர் திருவிழா
இருக்கும் ஊர்களிங்கே
இணைகின்ற திருவிழா
எல்லோரும் சங்கமமாய்
இன்புறுமோர் திருவிழா கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 3

பல்லவி

வண்டு பாடும் சோலைவளம்
மலர் கொடுக்குதாம்
வாழைபலா மாமரங்கள்
கனி கொடுக்குதாம் வண்டு

அநுபல்லவி

பண்டிருந்து பாலுந் தேனுந்
தினையும் உள்ளதாம்
பஞ்சாமிர்தப் பூசைகளே
தினம் நடக்குதாம் வண்டு

சரணங்கள்

கண்டு மாந்தர் நம்பிநின்று
கைதொழுதிடுங் கோவிலாம்
காவல் செய்யும் வேலன் ஞானக்
கந்தனின் திருக் கோவிலாம்
கொண்டதுன்பம் யாவுமோடக்
கும்பிடும் வண்ணக் கோவிலாம்
குருக்கள்மடம் தன்னில் வாழும்
குமரன் பெரிய கோவிலாம் வண்டு

ஆதிமூலக் கோட்டமன்றோ
வீதியோரக் கோவிலாம்
ஆளும் வண்ணக் கோட்டமன்றோ
ஆழிகாணுங் கோவிலாம்
மாதிருவர் மணவாளன்
வாழும் இரு பதிகளாம்
வாழ்த்திப் பாடிப் போற்றி நாங்கள்
வணங்கும் திருப் பதிகளாம் வண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 4

பல்லவி
குருக்கள்மடத்திலே கோயிற் பதியிலே
கர்ப்பூர தீபமையா – முருகா
கர்ப்பூர தீபமையா குரு

அநுபல்லவி
அம்மன் படியிலும் அண்ணன் படியிலும்
கர்ப்பூர தீபமையா – முருகா
கர்ப்பூர தீபமையா குரு

சரணங்கள்
கடலாடுங் காட்சி காணுமிடத்திலும்
கர்ப்பூர தீபமையா – முருகா
கர்ப்பூர தீபமையா
படமாடும் நாகம் தாலாட்டும் கண்ணன்
படியிலும் தீபமையா – முருகா
படியிலும் தீபமையா குரு

ஐயனார் கோவிலில் ஆலம் நிழலிலே
கர்ப்பூர தீபமையா – முருகா
கர்ப்பூர தீபமையா
தெய்வமாம் கண்கண்ட செந்நாக தம்பிரான்
புற்றிலே தீபமையா – முருகா
கர்ப்பூர தீபமையா குரு

வண்ணமயில் மீது வள்ளிதெய்வானை
மருவிட வாருமையா – முருகா
மருவிட வாருமையா
எண்ண வடிவேலை ஏந்தியுடன் வந்து
எங்களை ஆளுமையா – முருகா
எங்களை ஆளுமையா குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 5

பல்லவி

வேலன் கோயில் வீதியிலே —வெற்றி
வேலும் மயிலுங் கொண்டாடும் வேலன்

அநுபல்லவி

தேவன் கோட்டை வாசலிலே —வண்ணச்
சேவல் கொடியில் நின்றாடும் வேலன்

சரணங்கள்

தென்கதிரை மண்டூர்
திருக்கோயில் உகந்தை
சித்தாண்டி குடியாம்
திருப்பதி எங்கும் வேலன்

நல்லூரம் பதியில்
செல்வச்சன் னிதியில்
தாந்தா வெருகலாம்
தலங்களில் எங்கும் வேலன்

ஆறுபடை வீட்டிலே
மாமருத மலையிலே
குமரனின் குன்றிலே
வண்ணவயல் ஊரிலே வேலன்

திருப்பெருந் துறையிலே
திருநீற்றுக் கேணியிலே
குருக்கள்மடம் தன்னிலே
திருப் பழுகாமத்திலே வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 6

பல்லவி
ஆறுமுகம் ஆனவனே
அன்பு வேலவா
அழகுவள்ளி நாயகனே
அருள் வேலவா ஆறு

சரணங்கள்
கந்தனான பங்கையனே
கதிர் வேலவா
காத்தருளும் சண்முகனே
காவல் வேலவா
வந்துவரம் தந்திடுவாய்
வண்ண வேலவா
வடபழநி தென்பழநி
வாழும் வேலவா ஆறு

கதிரமலைப் பெருமானே
கருணை வேலவா
கணபதியின் இளையவனே
புனித வேலவா
மதுரைத் தமிழ்த் தாய் மகிழும்
பாடல் வேலவா
வானமகள் குஞ்சரியாள்
கொஞ்சும் வேலவா ஆறு

திருப்பதியாம் குருக்கள்மடம்
தன்னில் வேலவா
திருப்பணிகள் நாம்புரிந்தோம்
சக்தி வேலவா
விருப்பமுடன் மீண்டும் உயர்
கும்பாபி ஷேகம்
வேலவனே கொண்டாடினோம்
மன்றாடினோமே! ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் 7

பல்லவி
செல்வக் கதிர்காமக் கோவிலிலே
திருமுருகன் வந்து குடியமர்ந்தான் செல்வக்

அநுபல்லவி
வள்ளிதெய் வானையின் மணவாளன்
வாழுகின்றான் நம்மை ஆளுகின்றான் செல்வக்

சரணங்கள்
பாவங்கள் யாவுமே பறந்தோடும்
பட்டவை துன்பங்கள் மறைந்தோடும்
காலங்கள் இன்பமாய் விரைந்து வரும்
காத்திடும் தெய்வங்கள் வரங்கள் தரும்
தீமைகள் தொலையும் – திருப்பணி தொடரும்
நன்மைகள் வளரும் – நமக்கருள் சேரும்
ஓம் சரவணபவ நாம் சொன்னால்
ஓம் சரவணபவ நாம் சொன்னால் செல்வக்

ஊரெல்லாம் கூடினோம் ஒன்றாக
ஓதினோம் பாடினோம் நன்றாக
பாரெல்லாம் ஆண்டிடும் நவக்கிரகம்
பாங்குடன் அமைந்தன வரமாக
தீமைகள் தொலையும் – திருப்பணி தொடரும்
நன்மைகள் வளரும் – நமக்கருள் சேரும்
ஓம் சரவணபவ நாம் சொன்னால்
ஓம் சரவணபவ நாம் சொன்னால் செல்வக்

மாவேற்குடாவிலே வாழும் வேலன்
வையகம் எங்கணும் ஆளும் வேலன்
காவலாய் இருந்தான் குருக்கள்மடம்
காட்சியாய் மலர்ந்தான் விருப்பமுடன்
தீமைகள் தொலையும் – திருப்பணி தொடரும்
நன்மைகள் வளரும் – நமக்கருள் சேரும்
ஓம் சரவணபவ நாம் சொன்னால்
ஓம் சரவணபவ நாம் சொன்னால் செல்வக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடல் 8*

## நவசக்திகள்

சங்கரனார் தேவியவள் ஒன்பது ரூபம்
சங்கரனார் தேவியவள் ஒன்பது ரூபம் – இந்தத்
தாரணியில் எங்கணுமே தாங்கிடுங் கோலம்
சங்கரனார் தேவியவள் ஒன்பது ரூபம்...।
ஒன்பது ரூபம்। சங்கர

அம்பிகையும் கணாம்பிகை கௌரி கங்கையும்
அம்பிகையும் கணாம்பிகை கௌரி கங்கையும் –எங்கள்
அன்னை உமை பராசக்தி ஆதிசக்தியும் –எங்கள்
அன்னை உமை பராசக்தி ஆதிசக்தியும்...।
ஆதி சக்தியும்।

நம்பி நாங்கள் கும்பிடும்மெய் ஞானசக்தியும்
நம்பி நாங்கள் கும்பிடும்மெய் ஞானசக்தியும் –கிரியா
சக்தியுமாய் ஆனதுவே நவசக்தியாம் – கிரியா
சக்தியுமாய் ஆனதுவே நவசக்தியாம்...।
நவசக்தியாம்। சங்கர

பஞ்சபூதம் அத்தனையும் சங்கமமாகும்
பஞ்சபூதம் அத்தனையும் சங்கமமாகும் –அன்னை
பாதங்களிற் தானிருந்து ஆரம்பமாகும் –அன்னை
பாதங்களிற் தானிருந்து ஆரம்பமாகும்...।
ஆரம்பமாகும்।

சஞ்சலங்கள் அத்தனையும் அஞ்சி விலகும்
சஞ்சலங்கள் அத்தனையும் அஞ்சி விலகும் –எந்தச்
சக்தியையும் நவசக்தி வென்று விளங்கும் –எந்தச்
சக்தியையும் நவசக்தி வென்று விளங்கும்...।
வென்று விளங்கும்। சங்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடல் 9*

# கும்பாபிஷேகக் கும்மி

பல்லவி

வண்ணக் குமரியே கும்மியடி கும்மி ஆடு —நீ
வளைந்து நிமிர்ந்தாடு கும்மி ஆடு வண்ணக்

அநுபல்லவி

எண்ணக் கவலைகள் தீருமடி தீருமாமடி —நீ
இணைந்து மகிழ்ந்தாடு கும்மி ஆடு வண்ணக்

சரணங்கள்

நாமடையுந் துன்பமெல்லாம் நம்மைவிட்டே ஓடும்
நவக்கிரகம் தோன்றியதால் நன்மைகளே சேரும்
செல்வக் கதிர் காமத்தலம் வீதியிலே நாளும்
சிங்காரமாய்க் காவடிகள் சிந்துபாடி ஆடும் வண்ணக்

குருக்கள்மடம் குன்றழகன் கோயில்கொண்ட மாடம்
தெருக்களிலே தோரணங்கள் திசைகள்தோறும் ஆடும்
கும்பாபி ஷேகவிழாக் கோலாகல மாகும்
அம்பிகையின் பாலனவன் ஆலயத்தில் நாளும் வண்ணக்

கடலாடும் அலையோசை கந்தனின் புகழ் பாடும்
கழனிக்கரை வாவியிலே மீன்கள் துள்ளி ஓடும்
மடல்சாயும் வாழையுடன் வெற்றிலையும் வளரும்
மயில்மீது வடிவேலன் பவனிவரும் ஊரில் வண்ணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடல் 10*

# கும்பாபிஷேகம் தவயோகம்

கும்பாபிஷேகம் தவயோகம்
கொண்டாடுவோம் நாம் திசைதோறும் கும்பா

நம்பாவ தோஷம் விரைந்தோடும்
நவக்கிரகங்கள் துணையாகும் கும்பா

சிங்கார வேலன் கோவிலிலே – கோவிலிலே
தெண்டனிட்டாலே குறையேது – குறையேது
சங்கார வேலன் தலம் நாடித் – தலம் நாடிச்
சரணடைந்தாலே பயமேது – பயமேது கும்பா

மங்காத செல்வம் தாம்பூலம் – தாம்பூலம்
வாடாமல் வளரும் திருப்பதியாம் – திருப்பதியாம்
சங்கோத வளங்கள் தாம்பெருகும் – தாம்பெருகும்
தாமரை அழகன் குருக்கள்மடம் – குருக்கள்மடம் கும்பா

செந்தமிழ் கூறும் பரம்பரைநாம் – பரம்பரைநாம்
சேர்ந்துடன் வாழும் திருவூரில் – திருவூரில்
வந்தனை செய்வோம் மயில்முருகன் – மயில்முருகன்
மலரடி தொழுவோம் வரந்தருவான் – வரந்தருவான் கும்பா

வீதியினோரம் விளங்கிடுதாம் – விளங்கிடுதாம்
வெற்றியின் தலைவன் பெருங்கோயில் – பெருங்கோயில்
ஆதியிலிருந்தே வழங்கிடுதாம் – வழங்கிடுதாம்
அருள்நமக்கே இந்தத் திருக்கோயில் – திருக்கோயில் கும்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப் பாடல்

ஆலயங் கொண்டவனாம் – முருகனை
அன்புடன் வாழ்த்திடுவோம்।
வேலையும் சேவலையும் – மயிலையும்
விளங்க வாழ்த்திடுவோம்। ஆலயம்

நீண்ட கதையுரைத்தோம் – முருகனின்
நேர்த்திகள் நாமுரைத்தோம்
வேண்டும் வரங்கொடுக்கும் – வெற்றிவடி
வேலனை வாழ்த்திடுவோம்। ஆலயம்

குருக்கள்மடத்திலே – முன்னேவந்து
கோலக் குடியமர்ந்தே
இருக்கும் ஆண்டவனை – விருப்புடன்
இணைந்து வாழ்த்திடுவோம்। ஆலயம்

தம்பியுடன் தலத்தில் – மகிழ்ந்தே
தங்கி யிருப்பவராம்
தும்பிக்கை நாயகனார் – துணையென்று
தொழுது வாழ்த்திடுவோம்। ஆலயம்

வள்ளிதெய் வானையரின் – பதங்களை
வணங்கி வாழ்த்திடுவோம்।
கொள்ளை வரங்கொடுப்பாள் – மாரித்தாய்
கும்பிட்டு வாழ்த்திடுவோம்। ஆலயம்

நாகபிரான் தனையும் – அஞ்சலித்து
நாளுமே வாழ்த்திடுவோம்।
ஏகமுங் காவல் செய்வார் – வயிரவன்
இறைஞ்சி வாழ்த்திடுவோம்। ஆலயம்

நவக் கிரகங்களைத் – துதித்தே
நாமிங்கு வாழ்த்திடுவோம்
தவக் கருமங்களே – நிலைக்கும்
தலத்தில் வாழ்த்திடுவோம்। ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் சௌத்ஹோல் கண்ணபிரான்

*அலங்காரமாய் அமைந்து விளங்கும் கண்ணபிரானின் இந்த ஆலயத்தில் கண்ணபிரான் இராதையுடன் காட்சியளிக்கின்றார். சங்கு சக்கரத்துடன் தனிமையிலேயும் தோற்றமளிக்கின்றார். விநாயக்பெருமான், சிவன், மகேஸ்வரி, கங்கேஸ்வரி, துர்க்கை அம்மன், சிவலிங்கம், நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களையும் நாம் இங்கே வழிபடலாம். அத்துடன் இராமபிரான், ஹனுமான் ஆகிய புருஷோத்தமர்களையும் இங்கே பக்தர்கள் வழிபடலாம்.*

ஆங்கில மண்ணிலே நீயமர்ந்தாய்
ஆழியின் மீதிலே பள்ளிகொண்டாய்
மூங்கில் இசையிலே நீ மகிழ்ந்தாய்
மோகன ராதையை நீமணந்தாய் ஆங்கில

எங்கும் நிறைந்திடும் மாயவனே
இன்பத் திருமுகில் ஆண்டவனே
பொங்கும் அருள்வளம் தாருமையா
பூமியில் எங்களை ஆளுமையா ஆங்கில

மாயங்கள் வந்து வதைக்காமல்
வல்ல வினைகள் வருத்தாமல்
தாயவள் போலெம்மை தாங்கிடுவாய்
தாமரைப் பூவிழி மாலவனே ஆங்கில

கீதையின் போதனை கேட்குதையா
கேசவனே உந்தன் கோவிலிலே
வாதை மறந்துடன் போகுதையா
மங்கள நாதம் முழங்குதையா ஆங்கில

ஏழுமலைப் புகழ் நாயகனே
இலண்டன் நகரின் காவலனே
வாழும் வழிகள் வகுப்பவனே
வாதைகள் யாவும் மறைப்பவனே ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுமாநகர் திருப்பெருந்துறை முருகன்

பல்லவி
திருப்பெருந் துறைக்கே வாருங்கள்
திருமுருகன் தலம் பாருங்கள் திரு

சரணங்கள்
காலங்கள் தோறும் நாடுங்கள்
காத்திடும் வேலைப் பாடுங்கள்
நாலையுங் கவலை தீருங்கள்
நம்பிக்கையுடனே வாழுங்கள் திரு

மட்டுநகர் மா மானிலத்தில்
வாழ்ந்திடும் மாந்தர் யாவருமே
எட்டிரு கோணம் எங்கனுமே
ஏற்றிடும் வேலன் ஆலயமாம் திரு

பாலருஞ் சுவையாம் பொங்கல்களாம்
பாகம் இனிக்கும் அமுதுகளாம்
வேலவனார் பெருந் துறையினிலே
விரும்பிடும் ஆசை பூசைகளாம் திரு

பச்சையிளம் பூஞ் சோலையிலே
பஜனை ஒலிக்கும் வீதியிலே
இச்சையுடன் தன் தோகையிலே
ஏறிவரும் துறை வேலவனாம் திரு

கொத்துக் குளத்து மாரியம்மன்
கோமளக் குமரன் ஆறுமுகன்
முத்தழகேசன் முருகேசன்
முத்தமிழ் காக்கும் கோட்டமிதாம் திரு

அண்ணன் கணேஷன் ஆதியிலே
அமிர்தகழிப் பதி அடைந்தாரே
வண்ணன் முருகன் தம்பியரும்
வந்து பெருந்துறை சேர்ந்தாரே திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாட்டுத் தலங்கள்

## திருச்சி உச்சிப் பிள்ளையார்

பல்லவி

ஏறி மலையேறி ஏறிச் செல்லுவோம்
தாவிப் படியேறித் தாண்டிச் செல்லுவோம் ஏறி

அநுபல்லவி

திருச்சி மலையுச்சிப் பிள்ளையாரிடம்
செல்வ நாயகப் பிள்ளையாரிடம் ஏறி

சரணங்கள்

காவேரி பாயும் கரையிலே –வழி
காட்டும் தெய்வமாய் மலையிலே
தங்கி வாழுகின்றார் –நம்மையே
தாங்கி ஆளுகின்றார் ஏறி

செந்தமிழ் வாழும் நகரிலே –எங்கள்
தேவன் கணேஷன் பதியிலே
வந்தனை செய்திடுவோம் –பிள்ளையார்
மலரடி தொழுதிடுவோம் ஏறி

நாளுக்கு நாளாய்க் கூடுவோம் –வந்து
நாயகன் அருளை நாடுவோம்
நம்பி வணங்கிடுவோம் –இன்பமே
நாடி அடைந்திடுவோம் ஏறி

மாயங்கள் ஓடி மறையுமே –தினம்
வாட்டும் தோஷங்கள் மாளுமே
அஞ்சலி செய்திடுவோம் –பிள்ளையார்
அப்பனைக் கும்பிடுவோம் ஏறி

பாவங்கள் எல்லாம் தீருமே –பழி
பாசம் நேசமாய் மாறுமே
பாடிநிதம் பணிவோம் –பிள்ளையார்
பாதங்களே பணிவோம் ஏறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்ஷி

திருவிளையாடல் அறுபத்து நான்கும்
சிவனார் ஆடிய மதுரையிலே
திகழும் தாயவள் மீனாட்ஷி
செந்தமிழ் அன்னை மீனாட்ஷி திரு

சங்கம் இயற்றிய சரஸ்வதி வாணி
தலத்தினில் வாழும் தாயரசி
தாயிவள் உலகின் பேரரசி
தனி அரசாளும் தமிழரசி திரு

பாரிலுயர்ந்தன கோபுரமாங் கலைப்
பாங்கில் அமைந்தன ஓவியமாம்
பார்த்திடக் கவரும் தோரணமாம்
பார்வதித் தாயின் ஆனந்தமாம் திரு

காஞ்சியில் மாதா காமாட்சி திருக்
காசியில் ஆங்கு விசாலாட்சி
கருணை விளங்கிடுங் கல்யாணி
காத்தருள் புரியும் சிவகாமி திரு

சுந்தர நாதன் சோமேஸ்வரனார்
சுந்தரி நமக்கே துணையானாள்
சுடரொளி மணியின் கதிரானாள்
தொழுதிடும் எங்கள் தாயானாள் திரு

123510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையம்பலம்

தில்லையில் நாம் கூடுவோம்
சிவபுராணம் பாடுவோம்
வல்ல வரம் நாடுவோம்
வாழும் வழி தேடுவோம் தில்லை

இறைவ னாடுந் தாண்டவம்
எத்தனையோ காணலாம்
மறைகள் ஓதும் அந்தணர்
மந்திரங்கள் கேட்கலாம் தில்லை

மண்ணில் வீண்ணைக் காணலாம்
வானயோகம் அடையலாம்
எண்ணும் இன்பங் கொள்ளலாம்
ஈசன் பாதம் இணையலாம் தில்லை

இந்திரர்கள் பாடவும்
ஈஸ்வரியாள் நாடவும்
நந்தி தாளம் போடவும்
நாதன் ஆடும் தில்லையாம் தில்லை

பரத நடம் பரமனார்
பயிலுமிடம் சிதம்பரம்
இரத மதில் எம்பிரான்
எழுந்து வரும் ஈஸ்வரம் தில்லை

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவரங்கம் (ஸ்ரீரங்கம்)

திருவரங்கம் தனிலுறங்கும்
திருவரங்கனாம் – திருத்
தேவி நாதனாம் திரு

உலகமெங்கும் மாதவனார்
உருவெடுப்பாராம் – காவல்
உடனிருப்பாராம் திரு

வானுயருங் கோபுரமாம்
மாண்பு கொண்டதாம் –அங்கே
வளர்ந்து நிற்குதாம் திரு

அழிவுதருங் கொடுமைகளை
அடக்கிடுவாராம் –நம்மை
ஆண்டிடுவாராம் திரு

ஐந்திரண்டு வேடங்கொண்டு
அதம் ஒழிப்பாராம் –எங்கும்
அருள் கொடுப்பாராம் திரு

காத்தருளும் கடவுளரைக்
கண்டு வணங்குவோம் –கொண்ட
கவலை தீருவோம் திரு

அரங்கனவர் பாதங்களை
அன்றாடம் தொழுவோம் –வாழ்வில்
ஆனந்தம் அடைவோம் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயபுரம் மாரியம்மன்

பல்லவி
சமயம் அறிவாளாம் – தாயார்
சமய புரத்தாளாம் சமயம்

அநுபல்லவி
அபயம் தருவாளாம் – நம்மை
அன்பில் அணைப்பாளாம் சமயம்

சரணங்கள்
வேப்பிலை எடுப்பாளாம் – நோயை
விரட்டி அடிப்பாளாம்
கூப்பிய மாந்தருக்கே – தேவி
குங்குமம் தருவாளாம் சமயம்

தேரினில் வருவாளாம் – மாரி
சிங்காரம் ஆவாளாம்
நேரினில் நிற்பாளாம் – எங்கள்
நெஞ்சினில் உறைவாளாம் சமயம்

காவேரி ஓரத்திலே – அம்மாள்
காட்சி கொடுப்பாளாம்
ஆவேசம் ஆவாளாம் – கொடுமை
அகன்றிடச் செய்வாளாம் சமயம்

நாளுக்கு நாளாங்கே – மாந்தர்
நாடியே கூடிடுவார்
கோளுக்கும் பயமில்லை – தாயைக்
கும்பிடுவோம் நாங்கள் சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவண்ணாமலை

அண்ணா மலைக்குச் சென்றிடுவோம் – சிவன்
அடியை வணங்கி நின்றிடுவோம்
விண்ணோர் தமக்கும் ஆலயமாம் –இந்த
மேதினிக்கே யொரு விண்டலமாம் அண்ணா

அம்பிகை நாதனைச் சங்கரனை – தொழும்
அத்தனை அன்பரும் உத்தமரே
தும்பிக்கை அண்ணலும் சண்முகன் தம்பியும்
தோற்றிடுவார் இங்கு நித்தமுமே அண்ணா

தென்னாற் காடெனும் ஜில்லாவில் – அங்கே
திகழும் பெரிய கோவிலிதாம்
முன்னா லிருக்கும் கோபுரம் – மீது
முருகன் பெயரும் விளங்குதாம் அண்ணா

பாடித் திருமுறை ஓதிடுவார் – எங்கள்
பைந்தமிழ் நாட்டுச் சிவனடியார்
கூடித்தினம் வந்து கும்பிட்டு – நாயகன்
கோவி லடைந்ததை நாமறிவோம் அண்ணா

வாட்டுங் கொடும்பிணி வாதையில் – உயிரை
மாய்த்திடக் கோபுரம் ஏறிநின்றான்
பாட்டுத் திருப்புகழ்ப் பாவலனை – கந்தன்
பாரினில் வாழ்த்திய கோவிலிதாம் அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம்

பல்லவி
தங்கி இராமன் தரிசித்தான்
சங்கரன் பாதம் பூசித்தான் தங்கி

அநுபல்லவி
செங்கதிர் வளரும் தலத்தினிலே
திகழுமிராமேஸ் வரத்தினிலே தங்கி

சரணங்கள்
மன்னன் இராமன் வணங்கியதால்
மன்னும் இராமேஸ்வரமீதாம்
தென்னகம் இலங்கைத் தேசங்கள்
சேருங் கடல்வழித் தலமீதாம் தங்கி

தசரதன் மைந்தன் சமுத்திரத்தைத்
தாண்டிய பேரணைத் தலமீதாம்
தசஅவ தாரன் பரந்தாமன்
தானுமிலங்கிடுந் தலமீதாம்। தங்கி

புண்ணிய தீர்த்தம் பலவுண்டாம்
பூமியில் நாடிடும் வரமுண்டாம்
பண்ணிய பூசைகள் பலித்திடுமாம்
பாவமுந் தோஷமும் பறந்திடுமாம் தங்கி

ஆழியின் ஓரத்தில் ஆலயமாம்
அந்தணர் ஓதிடும் ஓசைகளாம்
ஏழிசை பாடிடுங் கீதங்களாம்
இறைவனின் மந்திர நாதங்களாம் தங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழநி மலை

மாங்கனி தான்பெற முருகன் அழகன்
மாமயில் ஏறிப் பறந்து வந்தான்
மானிலம் இதனை வலம்புரிந்தான்
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

அண்ணன் விநாயகர் அன்னையுந் தந்தையும்
ஆனவர் தம்மையே சுற்றிவந்தார்
ஆங்கவர் தாமிந்த உலகமென்றார்
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

வானவர் நீதியி னாலே பழத்தினை
ஞானக் கணபதி தானடைந்தார்
நாணி முருகன் மனமுடைந்தார்
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

ஆத்திரங் கொண்டவன் ஆறுமுகன் உடன்
ஆங்கே பழநிக்கு ஓடிவந்தார்
ஆன்நிரைக் காவலன் ஆகிநின்றார்
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

சண்முக நதியின் தீர்த்தங் குளித்திடும்
சண்முகன் ஆலயம் தென்பழநி
தன்னிலமர்ந்தவன் நம்பழநி
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

ஆறுபடைகளில் ஆதிப்படையெங்கள்
ஆனந்தப் பழநி தென்பழநி
ஆனது வேலவன் ஆட்சியினால்
ஆதியிலே – வளரும் – காலத்திலே மாங்கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## சுவாமி மலை

அப்பன் சுவாமியின் ஆட்சிமலை
அழகன் முருகன் சாமிமலை
செப்பிச் சிவனுக்கு மந்திரத்தைச்
செவிக்குள் ஓதிய ஞானமலை அப்பன்

கும்பகோ ணத்திலே கங்கையவள்
கோலக் காவேரியின் பாங்கினிலே
அம்பிகை பாலகன் ஆறுமுகன்
ஆலயமாம் திரு வேரகமாம் அப்பன்

வேதப் பொருளுந் தமிழ் நெறியும்
வேண்டும் அடியவர் யாவருக்கும்
ஓதத் தலமிங்கு கொண்டிருந்தார்
ஓம் முருகேசன் குருநாதன் அப்பன்

## திருச்செந்தூர்

பல்லவி
திருச்செந்தூரை நாடுவோம்
திருப்புகழ்நாம் பாடுவோம் திருச்

சரணங்கள்
அமரர் குலத்தைச் சிறையில் அடைத்து
அடக்கி ஒடுக்கி வதைக்கும் அசுரர்
ஆணவத்தை வேகத்தைத்,
திமிரை அதிர நொறுக்கி முடக்கிச்
சேனை கொத்தளம் சிதறி அழித்துத்
தேவர்குலத்தை மீட்ட வேலன்। திருச்

திருச்செந்தூரின் கரையில் ஊன்றி
வேலைப் பாய்ச்சி வேகந் தணிந்து
வீரன்வடிவில் நின்றவன்,
செந்தில் முருகன் கோவில் அடைந்து
தெண்டனிட்டால் இன்பமுண்டாம்
தேடிநாடிப் போற்றுவோம்। திருச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பரங் குன்றம்

பல்லவி

திருப்பரங் குன்றத்திலே திருமணமாம் –அங்கே
தெய்வயானை திருமுருகன் திருமணமாம் திருப்பரங்

அநுபல்லவி

திருப்புகழ் நாதனுக்குப் பேரின்பமாம் – ஆளும்
தேவருக்கும் மானிடர்க்கும் ஆனந்தமாம்। திருப்பரங்

சரணங்கள்

இந்திரமா குலத்தை வேலன் மீட்டதனால் – தேவ
இந்திரனார் தன்மகளை ஈந்ததனால்
சுந்தரனார் பரங்கிரியில் மணந்ததனால் – வண்ணத்
தோற்றமுடன் ஆளுகிறார் நிரந்தரமாய்। திருப்பரங்

செந்தமிழின் மாமதுரைத் தாயவளாம் –எங்கள்
தேவி உமை ஆனவளின் ஆட்சியிலாம்
கந்தன்திரு மாமணமோர் சோபனமாம் – காட்சி
கண்டதேவர் யாவருக்கும் களிமயமாம்। திருப்பரங்

சென்றுதிருப் பரங்குன்றம் சேர்ந்திடுவோம் –நாங்கள்
தெண்டனிட்டு வேண்டிவரம் நின்றிடுவோம்
என்றுமுள்ள கவலையும் நாம் வென்றிடுவோம் – வாழ்வில்
இன்பங்களாம் அத்தனையும் கண்டிடுவோம் திருப்பரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தணி

வள்ளி திருமணமாம் –திருத்தணி
மலையில் நடந்ததாம்
அள்ளி வழங்கினராம் –இமையோர்
ஆசிகள் ஆயிரமாம் வள்ளி

வெள்ளிப் பனிமலையான் –பரமனும்
விளங்கும் ஈஸ்வரியும்
வள்ளி முருகன் தம்மை –அன்புடன்
வாழ்த்திக் கொண்டனராம் வள்ளி

சென்னை நகர்ப் புறத்தில் –முருகன்
திகழும் குன்றமிதாம்
கன்னலருந் தமிழாம் – புகழின்
காவற் கோட்டமிதாம் வள்ளி

குமரன் குன்றினிலும் – வடிவேற்
கோலம் விளங்கிடுதாம்
அமரர் காவலனாம் – அழகன்
அங்கும் இருந்தாராம் வள்ளி

கந்தமணிக் கோட்டம் – தன்னிலும்
கந்தன் அமர்ந்தாராம்
எந்த வினைப்பயமும் – நம்மையே
எதிர்த்து வராதாம். வள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமுதிர் சோலை

ஆசை வள்ளி நாயகி
அழகு தெய்வ நாயகி
நேசங் கொள்ளும் நாயகன்
நின்றுலாவுஞ் சோலையாம்

பூமலரும் – காய் வளரும்
பழமுதிரும் – சோலையாம் ஆசை

பச்சைவனம் தோன்றுமாம்
பாதையொன்று செல்லுமாம்
இச்சையுடன் நாடுவார்
எல்லோருக்கும் இன்பமாம்

மானும் மயிலும் – கூடியாடும்
பழமுதிரும் – சோலையாம் ஆசை

ஆறுபடை வேலனார்
ஆறுந் தலம் ஆனதாம்
ஏறும் மயில் வாகனன்
இறங்குந் தலம் ஆனதாம்

குயில்கள்பாடும் – குளுமையாகும்
பழமுதிரும் – சோலையாம் ஆசை

கல்லழகர் ஆஞ்சநேயர்
காவல் செய்யும் சோலையாம்
செல்லவடி வேலவனார்
சிந்தை மகிழும் சோலையாம்

பூமணக்கும் – தேன்மணக்கும்
பழமுதிரும் – சோலையாம் ஆசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத மலை

மருதமலை முருகனிடம்
மன்றாடுவோம் வாரீர் —நாம்
மன்றாடுவோம் வாரீர்
பொருதிவரும் துயரமெல்லாம்
போக்கிடுவோம் வாரீர் —நாம்
போக்கிடுவோம் வாரீர் மருதமலை

முறையிடுவார் குறைகளெல்லாம்
முருகனங்கே களைவார் —நம்
முருகனங்கே களைவார்
இறைவனிளம் மகன் நமக்கு
இன்பங்களே தருவார் — பேர்
இன்பங்களே தருவார் மருதமலை

அறுபடைகள் உடனிருக்கும்
அடுத்தபடை மலையாம் —ஓர்
அடுத்தபடை மலையாம்
மறுமையிலும் கருணை தரும்
மயில்முருகன் தலமாம் —மா
மயில்முருகன் தலமாம் மருதமலை

கொடியவினை தொலையுமிடம்
குமரனிடம் வாரீர் — வேற்
குமரனிடம் வாரீர்
நொடிமறையும் நோயகலும்
நோன்பிருப்போம் வாரீர் —நாம்
நோன்பிருப்போம் வாரீர் மருதமலை

தேவருக்குங் காவலனாம்
திருமருத மலையான் —நம்
திருமருத மலையான்
ஏவருக்கும் ஆண்டவனாம்
ஏழு படைத் தலைவன் —சீர்
ஏழு படைத் தலைவன் மருதமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரதகண்டமாகிய இந்திய நாட்டிற்**
**பெரியபுராணம் புகழும் சிவதலங்களும்**
**பின்னர் உருவான சிவதலங்களும்**

ஓம் நமசிவாய சிவசிவ சங்கர
ஓம் சிவ தலங்கள் வாழியவே
ஓம் நமசிவாய சிவசிவ சங்கர
ஓம் சிவ தலங்கள் வாழியவே ஓம்

திருச்சிற்றம்பலம் திருக்கோயில் திருக் கலையரங்கம்
திருத்தில்லை திருப் பொன்னம்பலம் திருச் சிதம்பரம்
என்றுதிருப்பெயர் கொண்டுவிளங்கிடும் திருநடராஜன்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருச்சீர்காழி திருப்புன்கூர் திருத் தென்காசி
திருவஞ்சைக்களம் திருவலிதாயம் திருவியலூர்
திருவண்ணாமலை திருவழுவூர் திருவலிவலம்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருவடுகூர் திருவிளநகர் திருவைக்காவூர்
திருப்பழுவூர் திருப்பழையாறை திருப்பனங்காட்டூர்
திருப்பெரும்புலியூர் திருமுதுகுன்றம் திருப்புத்தூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருநல்லூர் திருநெய்த்தாளம் திருநெடுங்கள்ளம்
திருத்தேவன்குடி திருநெல்வெண்ணை திருப்பேரூர்
திருமுண்டீச்சுரம் திருமறைக்காடு திருமருகல்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருப்பராய்த்துறை திருப்பருத்திநியமம்
திருப்பெருவேளூர் திருப்பனையூர் திருப்பாம்புரம்
திருவீழிமிழலை திருவின்னம்பர் திருவொற்றியூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேட்களம் திருவெயினனூர் திருவேதிகுடி
திருவானிலை திருவக்கரை திருமூலட்டாமை
திருநனிப்பள்ளி திருநள்ளாறு திருப்பழனம்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருநாகேச்சுரம் திருவரத்துறை திருநல்லம்
திருத்தலையூர் திருப்பாவநாசம் திருப்புறம்பயம்
திருப்புள்ளமங்கை திருநெல்வாயில் திருத்தேவூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருமூலநகரம் திருவலஞ்சுழி திருவடுகூர்
திருவாஞ்சியம் திருவன்னியூர் திருவாள்கொளிப்புத்தூர்
திருவிசையமங்கை திருமூச்சுரம் திருநாவலூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருப்பாலைத்துறை திருப்பாற்றுறை திருப்பட்டீச்சரம்
திருத்தெங்கூர் திருநெல்வேலி திருத்துறையூர்
திருப்பெருந்துறை திருமணஞ்சேரி திருப்பைஞ்ஞீலி
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருத்தருமபுரம் திருப்புனவாயில் திருமயேந்திரப்பள்ளி
திருப்பனந்தாள் திருப்பூவனூர் திருமழப்பாடி
திருமாற்பேறு திருப்பயற்றூர் திருமுருகன்பாண்டி
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே। ஓம்

திருநீலக்குடி திருக்கரவீரம் திருநணா
திருத்தெளிச்சேரி திருத்தினைநகர் திருநாரையூர்
திருத்துங்கானைமாடம் திருநருலிங்கபுரம்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருக்காரோணம் திருக்கானூர் திருக்குடவாயில்
திருக்கோட்டூர் திருவேதாரணியம் திருக்கடையூர்
திருக்கருவல்லி திருக்கண்டியூர் திருவிரும்பூளை
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையான்குடி திருவரசிலி திருக்கோடிக்கா
திருக்காராயில் திருக்கடிக்குளம் திருவன்னியூர்
திருராமேஸ்வரம் திருவாலம்பொழில் ஆனவையாம்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருவோமாம்புலியூர் திருக்கடவூர் திருச்சிக்கல்
திருக்கோடீச்சரம் திருக்களர் திருக்கோழம்பம்
திருக்குற்றாலம் திருவழுத்தூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருக்கொடும்பாளூர் திருக்கோட்டாறு திருச்சேறை
திருச்சோற்றுத்துறை திருக்கோடிக்கழகர்
திருக்கைலாசபுரம் திருக்காம்பீலி திருச்சுழியல்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருக்கருகாவூர் திருச்செப்பறை திருமங்கைபுரம்
திருச்சிற்றேமம் திருவேகம்பம் திருமுறைப்பாநாடு
திருக்கடைமுடி திருவாய்ப்பாடி திருச்செம்பொன்பள்ளி
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருக்குன்றாமலை திருவீயங்கோமலை திரக்காளக்காடு
திருக்கலிக்காமூர் திருக்காரைப்பேர் திருவெண்ணைய்நல்லூர்
திருக்கருக்குடி திருமங்கலக்குடி திருச்சிறுகுடி
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருவெரும்பியூர் திருக்குரகுக்கா திருச்சக்கரப்பள்ளி
திருமீயச்சூர் திருப்பேரெயில் திருக்கஞ்சனூர்
திருமூச்சுரம் திருப்பரமேஸ்வரம் திருக்காளத்தி
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

திருமதுரை திருவாவடுதுறை திருவெண்காடு
திருவானைக்கா திருக்காசி திருக்கைலாசம்
திருச்சிராப்பள்ளி திருவாரூர் திருத்தஞ்சாவூர்
சிவனார் தலங்கள் யாவும் வாழ்க வாழியவே ஓம்

*ஆய்வுக்கு எட்டாத இன்னும் எத்தனையோ சிவதலங்கள்*
*இந்தப் பாமாலையில் இடம்பெறவில்லை!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டு முருகன் தலங்கள்

திருமுருகன் திருத்தலங்கள் கூறுவோம் – தினம்
தெண்டனிட்டு நாங்களின்பங் காணுவோம் திரு

அழகுமலை ஊதிமலை கழுகுமலையாம்
மருதமலை சுருளிமலை சென்னிமலையாம்
வள்ளிமலை விராலிமலை வெள்ளிமலையாம்
வடிவேலன் திருமுருகன் ஆலயங்களாம் திரு

கபிலர்மலை யானைமலை குருந்தமலையாம்
வெண்ணைய்மலை திண்டல்மலை வட்டமலையாம்
திருமலையாம் புகழ்மலையாம் தேனிமலையாம்
சீரழகன் திருமுருகன் ஆலயங்களாம் திரு

குன்றத்தூரும் வயலூரும் கந்தன்கோயிலும்
குன்றக்குடியும் பஞ்சவேலும் தோவாளையுமாம்
செந்துறையும் சிவன்மலையும் கஞ்சமலையுமாம்
திண்ணியும் திருமுருகன் ஆலயங்களாம் திரு

தமிழ்நாட்டுக் கதிர்காமம் – காழிலியாம்
கண்ணனூரும் கந்தகுடியும் செட்டிகுளமுமாம்
ஹரிபாத்தும் மருகூரும் உத்தரசாமிமலையும்
கழனி வள்ளியூரும் முருகன் ஆலயங்களாம் திரு

எட்டுக்குடியும் கந்தாசிரமும் கந்தன்கோவிலும்
எல்லத்தூரும் திருச்செங்கோடும் இரத்தினகிரியும்
பார்வதிமலை குமரகிரி திருவினைக்கழியும்
கார்த்திகேயன் வீற்றிருக்கும் ஆலயங்களாம் திரு

வில்லூண்டியனும் கொளஞ்சியப்பரும் இலஞ்சியுமாம்
எண்கண்ணும் தைக்காடுமாம் வெள்ளக்கோட்டையாம்
வடபழனி பெரும்பேறாம் குமரன்குன்றமாம்
வடிவேலன் கொடியாடும் ஆலயங்களாம் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தகோட்டம் கதித்தமலை அனுபாவியுமாம்
கதிகாசலர் திருப்பேரூர் ஆண்டவர்கும்பமாம்
கங்கைகொண்டான் சோழபுரம் கொண்டல் மயிலமாம்
கதிர்வேலன் புகழ்பாடும் ஆலயங்களாம் திரு

குறுக்குத்தெரு இரட்டிப்பட்டி வைத்தீஸ்வரன்கோயில்
திருவான்மியூராம் வட சென்னிமலையாம்
திருவேதாரணியம் மேல் பட்டாம்பாக்கமாம்
திருமுருகன் அருள்விளங்கும் ஆலயங்களாம் திரு

சின்னாளப்பட்டு தொழுப்பேடு திருமயிலாடி
திருமுருகன்பூண்டி திருக் குமரன்கோயிலாம்
உதயபுரம் குளக்கோட்டம் வேலூர் இளையனார்
கந்தகிரியும் ஆறுமுகன் ஆலயங்களாம் திரு

## வேறிசை

பல்லவி

ஆறு படை வீடும் –முருகன்
ஆளும்படை வீடாம் ஆறு

அநுபல்லவி

ஆறுமுகன் தேரில்வரும்
ஆறுபடை வீடாம் ஆறு

சரணம்
திருப்பழனி சுவாமிமலை
செந்தில் பரங்குன்றாம்
திருத்தணிகை திருச்சோலை
எங்குமவை உண்டாம் ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரி மலையில் சமரசம்

*1995ம் ஆண்டு ஐயப்பன் மாத மஞ்சரியில் வெளியான பாடல்*

சபரி மலை நாடிச் சரணம் துதி பாடித்
தாவி நடந்தோடி வந்தோமே
குமரி முனைத் தாயின் தலைவன் சிவனாரின்
குமரன் தல வாசல் கண்டோமே சபரி

புனிதத் திருமாலை புனைந்து தினம் பூசை
புரிந்து நெடுநோன்பு இருந்தோமே
மனித அவதாரம் மண்ணில் எடுத் தாளும்
மன்னன் திருக்கோயில் அடைந்தோமே சபரி

வேங்கை தனிலேறி விளங்கும் மணிகண்டன்
வீர வரலாறு கூறிடுவோம்
தேங்கி வரும் பம்பைத் தீர்த்தமதில் ஆடித்
தேவன் படி யாவும் ஏறிடுவோம் சபரி

மங்கை வடிவான மாயன் திருமாலின்
மகனை வலம்வந்து கூடிடுவோம்
கங்கை முடிமீது கொண்ட பரமேசன்
கருணை மகனாரைப் பாடிடுவோம் சபரி

பாலும் சுவைத் தேனும் பன்னீர் இளனீரும்
பழங்களுடன் நெய்யும் அபிஷேகம்
மாலும் சிவனாரும் வானில் உறைவோரும்
மகிழும் மணிகண்டன் திருக்கோலம் சபரி

ஆளும் அருளையன் ஆனை முகன் தம்பி
ஆறு முகன் தம்பி ஆனவனாம்
நாளும் அவன் குன்றம் நான்கு மதத்தாரும்
நாடும் புகழாரும் நாயகனாம் சபரி

சரணம் ஐயப்பா சரணம் சாமியே
சரணம் என்று நாம் கும்பிடுவோம்
தருணம் தனில் வந்து தஞ்சம் அருள் செய்யும்
சாமி ஐயப்பனை நம்பிடுவோம் சபரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை வேளாங் கண்ணி – நமக்கு ஆதி பரா சக்தியாம்...!

*ஆதியில் அன்னை வேளாங்கண்ணியைச் சிவநெறி அடியார்கள் ஆதிபரா சக்தியின் அவதாரமெனக் கருதி ஏற்றிப் போற்றியமைக்கும், தெய்வீகமான அற்புதங் களைக் கண்டு ஆனந்தம் அடைந்தமைக்கும், இனிய வரங்களைப் பெற்று மேன்மை கொண்டமைக்கும், தீராத நோய்நொடிகள் தீர்ந்து நிவாரணம் ஆனமைக் கும் பக்தி நூல்கள் வாயிலாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளதையும் நாம் அறியலாம்*

பல்லவி

அன்னை வேளாங் கண்ணியாகி
அவதரித்தாள் ஆதிசக்தி
அழகு மேரித் தாயுமாகி
அருள் படைத்தாள் ஆதிசக்தி அன்னை

அநுபல்லவி

மன்னுமுலகை லூர்த்து மாதா
வடிவில் ஆண்டாள் ஆதிசக்தி
வளரு மியற்கை வளங்களாகி
வாழ்த்துகின்றாள் ஆதிசக்தி அன்னை

சரணங்கள்

நான்குவேதம் தோன்றினாலும்
நடுவில் நிற்பாள் ஆதிசக்தி
நாலிரண்டு திசையும் ஆளும்
நாயகியாம் ஆதிசக்தி

வான்குடைக் கீழ் உயிர்கள் தம்மை
வாழ வைப்பாள் ஆதிசக்தி
மாந்தர் ஒன்றாய் மருவக் கண்டே
மகிழ்ந்திருப்பாள் ஆதிசக்தி அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதங்கள் செய்யுங் கருணை
ஆரோக்கிய தாய் ரூபமாய்
அகில மெங்கும் புனித யோகம்
அருளுவாளே ஆதிசக்தி

நற்பதங்கள் தம்மை நாடும்
நம்மை நாளும் நாளுமாய்
நாடிவந்து கோடியின்பம்
நல்குவாளே ஆதிசக்தி அன்னை

சந்தனமா தாவின் உருவில்
தஞ்சம் அருள்வாள் ஆதிசக்தி
தயவு காட்டி நமையணைத்தே
தாங்கி நிற்பாள் ஆதிசக்தி

வந்தனைகள் செய்து நாளும்
மந்திரங்கள் பாடுவோம்
வாழ்த்தி வேளாங் கண்ணித் தாயை
வணங்கி அன்பாய்க் கூடுவோம் அன்னை

அன்னை வேளாங் கண்ணி நமக்கே
ஆதிசக்தித் தெய்வமாம்
அண்டமெல்லாம் ஒருகுடைக்கீழ்
ஆட்சி கொள்ளும் தெய்வமாம்

இன்னல் மாறுஞ் சமரசத்தால்
இன்பம் அருளும் சக்தியாம்
ஏகலோகத் தாயுமாகி
இலங்கும் ஆதி சக்தியாம் அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுபடை ஆனந்தம்

ஆறுபடை வீட்டினிலே கொண்டாட்டமாம்
ஆறுமுக வேலனிடம் மன்றாட்டமாம்
ஏறுமயில் நாதனுக்குத் தேரோட்டமாம்
ஏறும் மலை எங்கணுமே வேலாட்டமாம்

கொண்டாட்டமாம் – அங்கே – மன்றாட்டமாம்
தேரோட்டமாம் – தங்க – வேலாட்டமாம் ஆறுபடை

கனிகிடைக்க வில்லையென்று கோபங்கொண்டதால்
கந்தன் மயில் மீதிலேறி ஓடிவந்ததால்
தனிமையிலே நின்றமலை பழனி மலையாம்
சண்முகமா நதியின் தீர்த்தம் ஆடும் மலையாம் ஆறுபடை

திருவே ரகத்தினிலே உபதேசமாம்
சிவனுக்கே மகனுரைக்கும் மந்திரமாம்
அருள்வேலன் பரமனுக்கு அப்பன் சாமியாம்
மூலப்பொருள் ஞானக்கலை ஓதும் ஞானியாம் ஆறுபடை

செந்தூரில் அசுரர் குலம் சங்காரமாம்
தேவேந்திரன் திருமகளின் சுயம்வரமாம்
கந்தனுக்குத் தெய்வமகள் நன்கொடையாம்
கண்டமரர் தாம்மகிழும் ஆனந்தமாம் ஆறுபடை

திருப்பரங் குன்றத்திலே கல்யாணமாம்
திருமுருகன் தெய்வானை திருமணமாம்
திருத்தணியின் கோட்டத்திலும் கல்யாணமாம்
சீரழகன் வள்ளியம்மன் திருமணமாம் ஆறுபடை

பழமுதிருஞ் சோலைநாவற் கனியமுதாம்
பாட்டுத்தமிழ் ஔவை உண்ணச் சுடுபழமாம்
அழகனவன் முருகனிரு மனைவியராம்
ஆனந்தமாய் வாழுமொரு பேரின்பமாம்। ஆறுபடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகையன் காவடிப் பாடல்

**இந்தப் பாடல் இலங்கை வானொலியில்**
**ஈழத்துப் பாடல் நிகழ்ச்சியில்**
**பிரபல இசையமைப்பாளர் முத்துச்சாமி அவர்களால்**
**இசையமைக்கப்பட்டு,**
**இன்னிசைக்குரலோன் அண்ணாமலை அவர்களால்**
**அழகுறப் பாடப்பெற்று 1963ம் ஆண்டு தொடக்கம்**
**பலதடவை ஒலிபரப்பானது!**

வெள்ளிமலை மீதினிலே வேலோடு நீயிருக்க
வள்ளியுடன் தெய்வானை வலமிடமாய் வீற்றிருக்கத்
துள்ளியாடும் தோகை மயில் முருகையா.....।
புள்ளிமானுங் கூடி ஆடும் முருகையா। வெள்ளி

பன்னிருகை வேலவனே வேற்காவடி
பால்வடியும் பாலகனே பாற்காவடி
மன்னும்மயில் வாகனனே மயிற்காவடி – உன்னை
மன்றாடும் – நின்றாடும் – ஒன்றுகூடியே வெள்ளி

தென்பழனி ஆண்டவனே தீர்த்தக் காவடி
தேவர்குலம் ஆண்டவனே சேவற் காவடி
துன்பமெல்லாம் ஆண்டவனே சூலக்காவடி – உன்னைத்
தொழுதாடும் – அழுதாடும் – ஒன்றுகூடியே வெள்ளி

ஆறுபடை வீட்டினிலே ஆடுங் காவடி
அழகுதிருப் பதிகளிலே ஆடுங் காவடி
ஏறும்மலை எங்கணுமே ஆடுங் காவடி – உன்னை
என்னாளும் – மன்றாடி – ஆடுங் காவடி வெள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# வாணி வழிபாடு

## —பஜனைப் பாடல்கள்—

கவிஞர் ஞானமணியம்

கொழும்பில்

**குருகுல உயர்நிலைப் பாடசாலையில்**

ஆசிரியராகக் கடமை செய்துகொண்டிருந்த பொழுது

– 1963ம் ஆண்டு –

**நவராத்திரி விழாக் காலத்தில்**

கொழும்பு
Rainbow Printers
வானவில் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிட்டவை.

1978ம் ஆண்டு மட்டக்களப்பு மானிலத்தில் ஏற்பட்ட கொடிய சூறாவளியின் காரணமாக இந்த நூல் சிதைவுற்றமையாலும், விடயங்களும், பாடல்களும் சேதப்பட்டமையாலும் விடயங்களிலும், பாடல்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

## கே. எஸ். நடராஜா

(கவிஞர் நாவற்குழியூர் நடராஜன்)
தலைவர் – தமிழ்ச் சேவை
*இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு-7*

வாணி வழிபாடு என்ற வண்ணப் பெயருடன் இனியதோர் பஜனைப் பாடற் கைந்நூல் வெளிவருகின்றது. இசைநாதம் தொனிக்கும் இனிமையான சந்தங்களையும், எதுகை மோனைகளையும் கொண்ட பாடல்கள் இந்நூலில் அச்சிடப்பட்டுள்ளன.

இளம் வயதிலேயே கவிதை ஆற்றலும், இசைக்கலை நாட்டமும் கொண்டுள்ள இளங்கவிஞர் ஞானமணியம் அவர்கள் மிகவும் சுவையான பக்திப் பொருட் செறிவுகளுடன் இந்தப் பாடல்களை யாத்துள்ளார். சிறியவர் முதல் பெரியவர் வரையிலான பருவத்தினர் அனைவருமே பாடிப்பயின்று பயன்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளன இந்த இனிய பாடல்கள். நவராத்திரி வழிபாட்டின் பொழுது ஆலயங்களிலும், எல்லாருடைய இல்லங்களிலும் இப்பாடல்கள் தப்பாமல் ஒலிக்கும் என்பதில் ஐயமே இல்லை.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அனேகமான தமிழ் நிகழ்ச்சிகளில் இவருடைய பாடல்கள் இனிதாக ஒலிபரப்பாகி வருவதை நேயர்கள் அறிவார்கள்.

இளம் பருவத்திலேயே கவிதைக் கலையிலே தளராத ஆர்வமும், ஆற்றலும் உள்ள இந்த வாலிபக் கவிஞர் எதிர் காலத்தில் இதுபோன்று இன்னும் எத்தனையோ பக்திப்பாடல் நூல்களையும் பயனுள்ள இலக்கியக் கவிதை நூல்களையும் வெளியிட்டு நமக்கு நல்ல படைப்புக்களாய்த் தரவேண்டும் என்று மனமார வாழ்த்தி இவரை ஊக்குவிப்பது நமது கடனாகும்.

கல்விச் செல்வத்தை அள்ளிவழங்கும் அன்னை கலைவாணி கவிஞர் ஞானமணியம் அவர்களுக்கு என்றென்றும் குன்றாத அருள்புரியவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

20-09-1963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி வழிபாடு – பஜனைப் பாடல்கள்

## வெள்ளை மலர்த் தாய்

வெண்ணிறக் கலை உடுத்தாய் வெள்ளைமலர்த் தாயே
வேண்டிடும் வரங் கொடுப்பாய் வெள்ளைமலர்த் தாயே
பண்ணிசை வீணை கொண்டாய் வெள்ளைமலர்த் தாயே
பாடிநின் பதம் அடைந்தோம் வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

பூசைகள் பொலிந்த தம்மா வெள்ளைமலர்த் தாயே
பூரண நாயகியே வெள்ளைமலர்த் தாயே
மாசைநீ மறைத் தருள்வாய் வெள்ளைமலர்த் தாயே
மாபரா சக்தி யானாய் வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

வீடுகள் தோறும் உன்னை வெள்ளைமலர்த் தாயே
வேண்டியே பூசை செய்தோம் வெள்ளைமலர்த் தாயே
தேடுமெய்ஞ் ஞானமெல்லாம் வெள்ளைமலர்த் தாயே
தேங்கிட வேண்டும் அம்மா வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

பள்ளிகள் ஆலயமாம் வெள்ளைமலர்த் தாயே
பாங்குடன் நீயமர்ந்தாய் வெள்ளைமலர்த் தாயே
தெள்ளிய கல்வி இன்பம் வெள்ளைமலர்த் தாயே
தெய்வமே நீ தருவாய் வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

வித்தியம் நீ என்றால் வெள்ளைமலர்த் தாயே
வீரியம் துர்க்கை அம்மா வெள்ளைமலர்த் தாயே
நித்தியம் ஸ்ரீ தேவி வெள்ளைமலர்த் தாயே
நேரிய செல்வம் அம்மா வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

குங்கும சந்தனமாம் வெள்ளைமலர்த் தாயே
கோமள மஞ்சளுமாம் வெள்ளைமலர்த் தாயே
எங்குமே கமழ்ந்த தம்மா வெள்ளைமலர்த் தாயே
இன்பமே நிறைந்த தம்மா வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

ஆனந்த யோகம் அம்மா வெள்ளைமலர்த் தாயே
ஆனதே பாரிலெங்கும் வெள்ளைமலர்த் தாயே
மோனந்தனில் மலர்ந்தாய் வெள்ளைமலர்த் தாயே
மோகன சுந்தரியே வெள்ளைமலர்த் தாயே
– வெண்ணிறக் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் ஞானத் தெய்வம்

உன்னருள் வேண்டும் அம்மா கலைவாணி —எங்கள்
உள்ளத்தில் வந்திடம்மா கலைவாணி
பின்னிருள் ஆண்டதம்மா கலைவாணி —ஞானப்
பேரொளி காட்டிடம்மா கலைவாணி என்றும்
—உன்னருள்

நித்தமும் ஆண்டிடம்மா கலைவாணி —வந்தே
நெஞ்சில் நிறைந்திடம்மா கலைவாணி
முத்தமிழ் ஞானமம்மா கலைவாணி —நின்றன்
மோகன ரூபமம்மா கலைவாணி என்றும்
—உன்னருள்

எங்குமுன் லீலையம்மா கலைவாணி —வெள்ளை
எண்ணத்தில் ஊறிடம்மா கலைவாணி
திங்களும் ஞாயிறுமே கலைவாணி —வண்ணத்
தேவிநின் சோதியம்மா கலைவாணி என்றும்
—உன்னருள்

நாமகளாய் மலர்ந்தாய் கலைவாணி —அம்மா
நாவில் நடம் புரிவாய் கலைவாணி
பாமகளாய் ஒலிப்பாய் கலைவாணி —இன்பப்
பைந்தமிழாய் வருவாய் கலைவாணி என்றும்
—உன்னருள்

கல்வியின் தாயாரே கலைவாணி —தாயே
கருத்தில் அமர்ந்திடம்மா கலைவாணி
நல்வினை யாவையுமே கலைவாணி —மண்ணில்
நாடிட வேண்டுமம்மா கலைவாணி என்றும்
—உன்னருள்

செந்தமிழாய்த் திகழ்வாய் கலைவாணி —அம்மா
சிந்தையிலே புகுவாய் கலைவாணி
வந்தனைகள் செய்தோம் கலைவாணி —எம்மை
வாழவைப்பாய் அம்மா கலைவாணி என்றும்
—உன்னருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையில் வாழும் தேவி

பல்லவி
கமல வாணி தேவியே
கலையில் வாழும் தேவியே
அமல வீணை நாதமே
அருளும் எங்கள் தேவியே கமல

அநுபல்லவி
கருணை காண வேண்டுமே
காவல் புரிய வேண்டுமே
தருண மழையைப் போலவே
தஞ்சம் அருள வேண்டுமே கமல

சரணங்கள்
தூய கலைகள் தேடினோம்
தொழுது கீதம் பாடினோம்
ஆய கலைகள் யாவையும்
அடையும் இன்பம் நாடினோம்

மாலை கோத்துச் சூட்டினோம்
வாழை கொண்டு நாட்டினோம்
சாலை தோறும் தோரணம்
தன்னை யெங்கும் ஏற்றினோம் கமல

கும்மி ஆட்டம் ஆடினோம்
கோல் வசந்தம் ஆடினோம்
அம்மை உன்னைப் பாடினோம்
ஆனந்தமாய்க் கூடினோம்

சந்தம் மணக்குந் தாமரை
தன்னில் இருக்கும் அன்னையே
சிந்து பிறக்கும் செந்தமிழ்த்
தேனை அளிக்கும் தெய்வமே கமல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெருஞ் சக்திகள்

பல்லவி

மலைமகளாம் கடல் அலைமகளாம்
மனங்கவரும் இன்பக் கலைமகளாம் மலை

அநுபல்லவி

நிலைபெறும் ஆனந்தத் தெய்வங்களாம்
நிரந்தரம் வாழ்வுக்குத் தீபங்களாம் மலை

சரணங்கள்

வீரமுஞ் சுகமுந் தந்திடுவாள்
வீரியக் காளி துர்க்கையவள்
காரணம் அவளாய் நின்றிடுவாள்
காசினி மாயத்தை வென்றிடுவாள் மலை

செல்வங்கள் தருவாள் தேற்றிடுவாள்
திருமகளாம் ஸ்ரீ தேவியவள்
பல்வளமும் அவள் படைத்திடுவாள்
பாற்கடல் இறைவன் பாரியவள் மலை

கல்வியும் ஞானமுந் தந்திருப்பாள்
கமலத்தில் வீணை கொண்டிருப்பாள்
நல்வழி யாவையுங் காட்டிடுவாள்
நாடிடும் ஆனந்தம் ஈட்டிடுவாள் மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணியின் தோற்றம்...!

காலை இளங்காலை – ஒளியின்
கடவுள் அலையின் மீதெழுந்தான்
ஆலயம் முன்னாலே – சக்தியின்
அருளை இரந்து நானிருந்தேன் காலை

தாமரைக் கேணியிலே – மெல்லிசை
தவழும் மகர வீணையிலே
தேமதுரக் கானம் – பொழியும்
தென்றல் புகுந்தது காதினிலே காலை

தேடி அலைந்தேனே – மயக்கம்
தீண்டிடும் இதயப் போதையிலே
வாடி இளைத்தேனே – கலைத்தாய்
வானத்தில் மலரும் வடிவங்கண்டேன் காலை

காணப் பயந்தேனே – வலிந்தே
கண்களை மூடி மலைத்துவிட்டேன்
காணத் துணிந்தேனே – மெல்லவே
கண்ணை விழித்தேன் திகைத்துவிட்டேன்! காலை

வாணியவள் எனக்கே – அன்பினால்
வாழ்த்து வழங்கியே மறைந்தாளோ
தோணி அப்பன் சிவனார் – போலே
தோற்றி அருளையே புரிந்தாளோ! காலை

அன்னை சரஸ்வதியாள் – எங்களை
ஆளும் வடிவங்கள் ஆயிரமாம்
புன்னகை வாணியவள் – வரங்கள்
புரியும் மாண்புகள் ஆயிரமாம்! காலை

மண்ணில் இயற்கைவளம் – தருவாள்
வண்ண மலரிலே நிறைந்திருப்பாள்
பண்ணில் அருங்கவிஞர் – இசைக்கும்
பாட்டின் இசையிலே மகிழ்ந்திருப்பாள் காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விழா

### பல்லவி

மாநவராத்திரிக் கோலவிழா
மங்களராத்திரி வண்ணவிழா மாநவ

### சரணங்கள்

தென்னங் குருத்து மாவிலை வேப்பிலை
திருமலர்க் கொன்றைத் தோரணமாம்
மின்னிடும் ஒளியால் மங்கள மயமாம்
வீதிகள் தோறும் நிறைகுடமாம் மாநவ

ஆலயம் பள்ளிக் கூடங்கள் மனைகள்
ஆங்குறுமே தினம் பூசைகளாம்
வேலைகள் புரியும் ஆலைகள் தோறும்
மேவிடும் அன்னையின் ஓசைகளாம் மாநவ

பாலும் பழமுந் தேனும் பயறும்
பச்சைநல் அரிசி கன்னலுடன்
சாலும் பசுநெய் சர்க்கரை சீனி
சாரும் பொங்கல் பொங்கிடுமாம் மாநவ

வீரம் செல்வம் ஞானம் பாரில்
விளங்கிட வைப்பாள் சக்தியவள்
நேரம் முழுதும் நேசங் கொண்டே
நெஞ்சில் இருப்பாள் சக்தியவள் மாநவ

ஆதிபராசக்தி ஆனவள்தானே
ஆனந்த மெங்குந் தோற்றிடுவாள்
சோதிமகாசக்தி சுந்தர வடிவாய்த்
தூயவரங்களை ஆற்றிடுவாள் மாநவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணித் தாயை வாழ்த்துவோம்

வாழ்த்திப் பாடு வணங்கிப் பாடு
வாணி பாதம் மன்றாடு
போற்றிப் பாடு புகழ்ந்து பாடு
பூசை நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

கல்வி ஞானம் வேண்டிப் பாடு
காக்குந் தாயை மன்றாடு
தொல்லை தீரத் தொழுது பாடு
தூய நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

நல்ல நேசம் அருளப் பாடு
நாவின் தாயை மன்றாடு
வல்ல கலைகள் வளரப் பாடு
மங்கள நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

தெய்வம் யாவும் ஆளப் பாடு
தேவி கழலை மன்றாடு
எய்வதின்பம் என்றே பாடு
இனிய நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

ஏழு நாதம் இணையப் பாடு
இதயத் தாயை மன்றாடு
வாழும் வாழ்வு மலரப் பாடு
வணங்கும் நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

பகலும் இரவும் பணிந்து பாடு
பரிவுத் தாயை மன்றாடு
புகலும் இனிய தமிழிற் பாடு
புதிய நாளைக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

பங்கயத் தாயின் புகழைப் பாடு
பஜனை பாடி மன்றாடு
மங்கலத் தாயின் மகிமை பாடு
வாணி வீழாக் கொண்டாடு வாழ்த்திப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமித் தெய்வம்

பல்லவி
செல்வம் தரும் தெய்வம்
ஸ்ரீ தேவீத் தெய்வம்
இல்லந் தன்னில் விளங்கும்
இலக்குமித் தெய்வம் செல்வம்

சரணங்கள்
செந்நெல் வளங் கொழிக்கும்
திருமலர்த் தெய்வம்
பன்னலமுங் கொடுக்கும்
பாலாழித் தெய்வம் செல்வம்

தேடும் பொருள் குவிக்கும்
சீரழகுத் தெய்வம்
நாடும் இன்பம் அளிக்கும்
நாம் போற்றும் தெய்வம் செல்வம்

தீயவழித் தேட்டம்
தேற்றுங்களி ஆட்டம்
மாயவழித் திசையில்
மறைத்திடும் தெய்வம் செல்வம்

இன்று புகழ் ஈட்டும்
ஈனம் வளர் யோகம்
என்றும் நிலைக்காதே
என்றழிக்கும் தெய்வம் செல்வம்

பாவங்களின் பயனாய்ப்
பற்றும் புகழ் யாவும்
சாபங்களின் விளைவால்
சங்கரிக்கும் தெய்வம் செல்வம்

நீதி முறை உழைப்பால்
நேரும் பொருள் இன்பம்
மேதினியில் வளர்க்கும்
மேன்மையுள்ள தெய்வம் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிபராசக்தி அருட்காவியம்

ஆதிசிவ னருகிலிடம் பாதியென நின்றாய்
அகிலமதி லெங்கணு மியற்கையில் நிறைந்தாய்
சோதிமய மானவொரு சுந்தரியும் நீயே
சூழுமுல காளும் உமை ஆனவளே தாயே!

வேதநெறி வாணியென வந்தவளும் நீயே
வெற்றிதரும் துர்க்கையென நின்றவளும் நீயே
மாதவனின் தங்கையென வந்தவளும் நீயே
மானிடர் வணங்கும்மக மாரியெனுந் தாயே!

அன்னையபி ராமியென அவதரித்தாயே
அட்டதிசை யெங்கணுமி யங்குமொரு தாயே
மன்னும்மது ராபுரியில் வாழும்மொழியாளே
மாதரசி யானதமிழ் ஆனவளே தாயே!

அரியாசனம் ஏறி உலகாளுகின்றாய்
ஆனந்த மகமாரி திரிசூலி காளி
கரிவேட முகனோடு கந்தனையும் ஈன்றாய்
காவலாய் வந்தாளுங் கருமாரித் தாயே!

வலிதாங்க வொண்ணாத வாதைகள் மறைப்பாய்
வந்துடலை வாட்டுமோர் நிந்தனை தவிர்ப்பாய்
லலிதாம்பிகை நீயே நாடிவருவாயே
நல்லதிருக் காவியம் பாடினோம் தாயே

மதுரையிலுங் காசியிலுங் காஞ்சியிலும் ஆள்வாய்
மாபரா சக்திநீ மூவுலகும் ஆள்வாய்
மதுரமொழி நாதமாய்ச் செந்தமிழில் வாழ்வாய்
வானுலக வல்லியே சிவகாமித் தாயே!

ஒருநாளும் அழியாத சுகமருள்வாயே
உனைநாளும் மறவாத உள்ளமருள்வாயே
திருமாலின் தங்கையுங் கங்கையும் நீ
தெண்டனிட்டோம் எங்கள் தெய்வமே தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் கரகப் பாடல்

இலண்டன் மாநகரிலே பண்டைத்தமிழ்க் கிராமிய அரங்கத்தை ஸ்தாபித்து, அதன்மூலம் அனேகமான மேடைகளில் ஆயிரக்கணக்கான இரசிகர்களின் பாரா ட்டுக்களுடன் கொம்புமுறி நடனங்கள், குறவஞ்சியர் ஆட்டங்கள், மீனவர் நடனங்கள், கும்மி ஆட்டங்கள், வசந்த நடனங்கள் என்னும் கோலாட்டங்கள், உரல் ஒலி நிகழ்ச்சியாட்டம், குடும்பக் கோளாறு என்னும் நாட்டியல் நடனம் போன்ற பலதரப்பட்ட கிராமிய நடனங்களை நிகழ்த்தினேன். அவைகளிற் பக்தி பர வசத்தை ஊட்டும் மாரியம்மன் கரகநடனமும் ஒன்றா கும். மாரியம்மன் கரகநடனப் பாடலே இங்கு மரபு நாதத்தில் இடம்பெற்றுள்ளது!

பல்லவி

மாதாவே சங்கரியே மாரித் தாயே —நாட்டில்
மழை பொழிய வேண்டுமம்மா மாரித் தாயே —மாதாவே

அநுபல்லவி

பாதார விந்தங்களை மாரித் தாயே —சிவன்
பார்வதியே நாம் பணிந்தோம் மாரித் தாயே —மாதாவே

சரணங்கள்

ஆதிசிவன் தேவியடி எங்கள் மாரி
ஆனைமுகன் தாயாமடி முத்து மாரி
ஆறுமுகன் அன்னையடி எங்கள் மாரி
அகிலாண்ட தேவியடி முத்து மாரி

வெள்ளிக் கரகமம்மா மாரித் தாயே —வரம்
வேண்டிநின்று நாமெடுத்தோம் மாரித் தாயே
துள்ளி வந்து சுந்தரியே மாரித் தாயே —கொண்ட
துயரங் களைந்திடுவாய் மாரித்தாயே —மாதாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணன் தங்கையடி எங்கள் மாரி
நல்ல மனக் காரியடி முத்து மாரி
தேரோட்டிடும் தெய்வமடி எங்கள் மாரி
திரிசூலி காளியடி முத்து மாரி

வெண்கலக் கரகமம்மா மாரித் தாயே –நாளும்
வினை தீர நாமெடுத்தோம் மாரித் தாயே
பெண் குலத்து நாயகியே மாரித் தாயே –வரும்
பின்னங்களை நீ தவிர்ப்பாய் மாரித் தாயே –மாதாவே

மீனாட்ஷி அம்மையடி எங்கள் மாரி
வெற்றி தரும் துர்க்கையடி முத்து மாரி
காமாட்ஷி தேவியடி எங்கள் மாரி
கண்ணகியாய் வந்தவளாம் முத்து மாரி

செம்புக் கரகமம்மா மாரித் தாயே –நாளும்
சேர்ந்து நின்று நாமெடுத்தோம் மாரித் தாயே
நம்பிக் கரகமம்மா மாரித் தாயே –இங்கே
நாமெடுத்தோம் காரணியே மாரித் தாயே –மாதாவே

ஆதிபரா சக்தியடி எங்கள் மாரி
அண்டலோக சண்டியடி முத்து மாரி
சோதியான ரூபியடி எங்கள் மாரி
சூலமேந்தும் வீரியடி முத்து மாரி

கர்ப்பூரக் கரகமம்மா மாரித்தாயே –உந்தன்
கால்பிடித்து நாமெடுத்தோம் மாரித்தாயே
சர்ப்பமுடன் நீயமர்ந்தாய் மாரித்தாயே – வரும்
சஞ்சலங்கள் மாற்றிடுவாய் மாரித்தாயே –மாதாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைப் பெருமான்

*1970 ம் ஆண்டு மூத்தமகன்*
*தஞ்சன் பிறந்த பொழுது*
*பாடிய பாடல்*

முருகனை அனுதினம்
நினைபவர் மனதினில்
முருகன் இரவுபகல்
உறைவானே!

பெருமெழு கடலெனப்
பெருகிடும் அவனருள்
பெறுமுல கினை வலம்
பரிவாலே!

திருமனை வியரிரு
புறமும் உறவு கொள்ளத்
திகழும் மயிலின் மிசை
வருவானே!

மருவு செழுவயலும்
அழகு மலையும் நதி
வளரும் உறு கதிரைப்
பெருமானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுபடை நாதன்

*1972ம் ஆண்டு இளையமகன்*
*இன்பன் பிறந்த பொழுது*
*பாடிய பாடல்*

வள்ளிகுற மாதினை
மணந்த மணவாளா
வான்மகளையும் பரிசு
கொண்ட குணசீலா

துள்ளி விளையாடுமொரு
பிள்ளையென வந்தே
தூயதமிழ் ஔவையினை
வென்ற கலைவாணா

புள்ளிமயில் ஏறிவரும்
புண்ணிய விநோதா
பூவுலகில் ஆறுபடை
வீடுடைய நாதா

தெள்ளிய தமிழ் புகழுந்
தென்கதிரை வாசா
தீதகல வந்தருளும்
எங்கள் குமரேசா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழநி வேலன்

*1974ம் ஆண்டு மகள் கோகிலம்*
*பிறந்த பொழுது பாடிய பாடல்*

பல்லவி
பழநி மலையிலே – முருகன் – பவனி வருகிறான்
பாலும் பழமும் தேனுந் தினையும் பருகி வருகிறான் பழநி

சரணங்கள்
பழமிழந்து மனமுடைந்து பகை யெழுந்ததால்
பறந்துவந்து மலையில் நின்று தனிமை கொண்டதால்
பரமனாரும் பார்வதியும் பார்க்க வந்ததால்
பழநி வேலன் புகழை உலகம் பாடுகின்றதாம் பழநி

ஆறுமலரின் அழகுப் பொய்கை ஆங்கமைந்ததால்
அல்லும் பகலும் மாந்தர் கூட்டம் அஞ்சலிப்பதால்
ஏறுமலையில் ஆடிவேலன் இன்பம் எய்வதால்
இனிய பழநி மலையின் நாமம் புனிதமானதாம்। பழநி

காவடிகள் ஆட்டம் அங்கே காணுகின்றதால்
கந்தகோசம் எந்தநாளும் நின்றொலிப்பதால்
மாவடிவேல் ஏந்தும் இறைவன் மாண்பு கொண்டதால்
மன்னும் பழநி மலையின் நாமம் வளருகின்றதாம்। பழநி

பஞ்சாமிர்தம் தேவப்பானம் போலும் ஆவதால்
பருகுவதால் நோய்நொடிகள் பறந்து போவதால்
அஞ்சேலஞ்சேல் அஞ்சேலென்னும் அபயம் ஒலிப்பதால்
அழகுவேலன் கருணை வீடு இமயமானதாம்। பழநி

சண்முக நீர் ஆடும் தீர்த்தம் ஓடுகின்றதால்
தழிறைவன் ஆங்குவந்து தங்கி நின்றதால்
விண்ணும் மண்ணும் ஏற்றும் ஆறு படைகள்தன்னிலே
விளங்கும் ஆதி வீடு வேலன் பழிநியானதாம்। பழநி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு நவ கோட்டம்

*1980ம் ஆண்டு மட்டுநகர்*
*வைத்திய சாலையில்*
*கேர்ணியா நோய்க்கான*
*சத்திர சிகிச்சையினால்*
*நிவாரணம் பெற்று மனைவி*
*திருமதி ஞானம்மா ஞானமணியம்*
*"திருப்பதி" யாம் எங்கள்*
*வீடு திரும்பியபொழுது*
*பாடிய பாடல்*

ஆளும் வேலன் ஆசியால்
ஆவதெல்லாம் ஆனந்தம்!
கோளும் ஓடிப் போகுமாம்
கொண்ட நோய்கள் தீருமாம்! ஆளும்

மதுரை ஆளும் பார்வதி
மலரில் ஈன்ற பாலனாம்
கதிரை வேலன் வீதியில்
காவடிகொண் டாடுவேன் ஆளும்

நல்லையூரின் பதியிலே
யாழிலங்கை நகரிலே
முல்லை குறிஞ்சி நாயகன்
முருகன் அருளைப் பாடுவேன் ஆளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிதயந் துயரினால்
இருளடைந்த பொழுதிலே
சன்னிதியான் சரவணன்
தாளை நாடி ஓடுவேன் ஆளும்

பத்தாய் இருந்த போதிலும்
பாரில் எனக்குத் தொல்லைகள்
சித்தாண்டிகுடி வள்ளலைத்
தெண்டனிட்டுப் பாடுவேன் ஆளும்

மாவலி நதிக் கரையிலே
மன்னும் வெருகற் பதியிலே
சேவலின் கொடி வேலனார்
திவ்விய தீர்த்தம் ஆடுவேன் ஆளும்

தாந்தா மலையின் படிகளைத்
தாவித் தாவி ஏறுவேன்
மாந்தா வினையும் மாற்றுவேன்
வாழ்த்தி வேலைப் போற்றுவேன். ஆளும்

ஆழிக் கரையில் வேலனார்
அமர்ந்த திருக் கோலம் நான்
அழகு திருக் கோவிலாம்
ஆங்கு சென்று காணுவேன் ஆளும்

கருத்திருந் துறை காவலன்
கழல் பணிந்திடக் கவலைகள்
திருப் பெருந்துறைத் தலத்திலே
தீர்ந்து போகும் கணத்திலே. ஆளும்

கண்டூர் தோறும் சென்று நான்
கரங் குவித்தே நின்று நான்
மண்டூர் ஞானப் பழநியின்
வரமிரந்து வாழுவேன். ஆளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

# காவடிப் பாட்டுக்கள்

பாற்காவடி, பன்னீர்க்காவடி, வேற்காவடி, மயிற்காவடி, சேவற் காவடி, தீபக்காவடி, அன்னக்காவடி, வண்ணக்காவடி, முள்ளுக் காவடி, ஊஞ்சற்காவடி, உலாக்காவடி, துலாக்காவடி, அலகுக் காவடி, வேப்பிலைக்காவடி, கர்ப்பூரக்காவடி, ஆனந்தக்காவடி என்று காவடிவகை எத்தனையோ இருக்கின்றன.

அத்தனை காவடிக்கும் ஏற்றவாறு தனித்தனியே அமைந்துள்ள பாடல்களும் இருக்கின்றன.

முதுகிலே முள்ளைப் பாய்ச்சித் தோளிலே வண்ணக் காவடி எடுத்தாடும் காவடிப் பாட்டே இந்த நூலில் உள்ளது!

## வாவா தேவா! தாதா தேவா!
## வரங்கள் தாதா!

மாமாங்கப் பெருமானாரே!
மானிலம் ஆளுங் கணபதியாரே!
வையகம் எங்கும் புகழுடையாரே!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

வந்தேனே தஞ்சம் நாடி
வண்ணக்காவடி கொண்டே ஆடி
மங்கள கீதம் பாடிப் பாடி!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்கள் யாவும் போகும்
பக்குவமே வேண்டும் வேண்டும்
பாசத்துடனே தாங்கிட வேண்டும்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

சாபங்கள் ஓடிப்போகும்
தஞ்சம்வேண்டும் தந்திடவேண்டும்
தயவும் பரிவுங் காட்டிடவேண்டும்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள் செய்வாயே!

அமிர்தகளித் தீர்த்தம் ஆடும்
ஆனந்தத்தை நாடியடைந்தேன்
அச்சந் தீரும் யோகமிரந்தேன்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

தமிழரினம் வாழும் நகரம்
தானேகண்டாய் தலமுங்கொண்டாய்
தங்கியிருந்தாய் தஞ்சம் ஐயா!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள் செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றி நாதா ஈசா
தாரணியின் தலைவா நேசா
தாங்கிப் பாரை ஆளும் சிவனே
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஏன்தோன்றி நோயும் நொடியும்
என்னைத்தானே தாவினதையா
இரவும் பகலும் வாட்டினதையா!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள் செய்வாயே!

கொக்கொட்டிச் சோலைப் பரனே
குறைகள் தீர்க்கும் சங்கரனாரே!
திக்கெட்டும் புகழே கொண்டாய்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

இக்கட்டில் வாடுகிறேனே
ஏக்கம் நெஞ்சில் ஏந்துகிறேனே
ஈனத் துயரில் மாளுகிறேனே
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள் செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா கதிரைப் பதியின் வேலா!
கார்த்திகை நாதா காவல் இறைவா!
கருணைத் தெய்வம் நீயே ஆனாய்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

சிந்தா மொழியின் தங்கத் தலைவா
சேவற் கொடியாய் செல்வக் குமரா
தேசம் போற்றும் மாவடிவேலா
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

மண்டூரில் வாழும் முருகா
வடநகரின் நல்லூர் முருகா
வண்டுமலர் உகந்தை வாசா
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

கண்டோமே தாந்தாவினிலே
கடலின் ஓரம் திருக்கோவிலே
காவற்கோட்டம் சித்தாண்டியிலே
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவலி நதியின் பாங்கினிலாங்கே
மன்னிய வெருகல் தன்னிலமர்ந்தாய்
மானிலமெல்லாம் ஆளத்தானே!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

காவலனேநீ மாவேற்கடவைக்
கழனிப் பதியில் காட்சிபுரிந்தாய்
கண்டவர் உள்ளந் தன்னிலமர்ந்தாய்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

திருப்பெருந்துறை தேடியமர்ந்தாய்
திகழும்மட்டு மாநகர் வந்தாய்
திவ்விய காட்சி தந்தே நின்றாய்!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

திருவெண்ணீற்றுக் கேணியிலங்கே
வருமலை மோதும் மாகடலோரம்
வாழுந் தாழைச் சோலை முருகா
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தையிலே மகிழ்ந்திருந்தாய்
ஊரெங்குங் காட்சி மலர்ந்தாய்
இகந்தனிலே எங்குமிருந்தாய்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

புகழ்ந்துனையே வாழ்த்துகிறேனே
பூமியில் ஆறே படையுடையானே!
புண்ணிய நாதா வள்ளிமணாளா!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனேநீ அருள்செய்வாயே!

மன்னுஞ் செல்வச் சன்னிதியானே
மங்களமருத மாமலையானே!
அன்னை குஞ்சரி தன்னுயிரானே!
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

உன்னைத் தானே நம்பியிருந்தேன்
ஓடிக்காலடி தேடிவிரைந்தேன்
ஊன்றிய முள்ளுக் காவடி கொண்டேன்
வாவா தேவா! தாதா தேவா!
வரங்கள் தாதா!

ஐயனே – முள்ளைப் பாய்ச்சி – ஆடுகிறேனே.......!
ஆண்டருளும் நாயகனே நீ அருள்செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் "கலசம்" மஞ்சரியில் வெளியான பாடல்கள்

## வாழ்த்துப் பாடல்

*பாடல் 1*

மதுரை நகரில் இனியசங்கம்
வளருந் தமிழின் அமுதமோ!
வணங்குந் தாயின் வடிவமோ!
கதிரை மலையும் இமய மலையும்
காக்கும் மண்டலப் புனிதமோ!
கருணை இறைவன் கோலமோ! மதுரை

தில்லை அரங்கில் மகிழ்ந்து நடனம்
செய்யுஞ் சிவனின் சலங்கையோ!
திகழும் நுதலின் திலகமோ!
வில்லை வளைத்து வினைகள் அறுக்கும்
வீர சக்தியின் தோற்றமோ!
வேதம் பயிற்றும் நாட்டமோ! மதுரை

ஓதும் சைவ நீதி புகழும்
தோத்திரங்கள் அவையமோ!
சேத்திரங்கள் உதயமோ!
காதும் மனமுங் கனியும் இனிமை
காணும் குறளின் மகிமையோ!
கருதும் ஒருமைப் புலமையோ! மதுரை

ஆறுபத்து மூவர் அரிய
பெரிய சரிதை அம்சமோ!
அருளை ஊட்டுந் தஞ்சமோ!
வேறுமாறு வேடந் தாங்கும்
ஈசனின் விளை யாடலோ!
ஈஸ்வரி திருப் பாடலோ! மதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்கள் யாப்பிலங்கும்
காப்பியங்கள் எண்ணமோ!
கன்னித் தமிழின் வண்ணமோ!
ஓவியங்கள் தோனு மின்பம்
ஒன்று சேரும் மன்றமோ!
உள்ளங் கவரும் வதனமோ! மதுரை

விளையும் மதுரக் கவியின் மதுவைப்
பொழியும் தமிழின் இரசமோ!
மோனக் கலையின் நளினமோ!
அளையுங் குழந்தை அணையுந் தருணம்
அடையும் மழலை அமிர்தமோ!
அரும்பும் இளமைக் கதம்பமோ! மதுரை

சிலம்பு சிதறிக் களங்கம் அகற்றும்
சிலம்பின் சரிதை நீதியோ!
தேவி கண்ணகி சேதியோ!
நலங்கு நாடி வணங்கும் மாதர்
நாணம் வளரும் ஞானமோ!
நாட்டுப் பொறையின் தானமோ! மதுரை

இரகுராமன் காதை விளம்பும்
இணையில் லாத பாடமோ!
ஏற்றி மருவுஞ் சீலமோ!
அரவில் உறங்கும் அமல சுதனை
அரட்டும் பள்ளி எழுச்சியோ!
ஆனந்த மறைக் கீதையோ! மதுரை

தவழும் பஞ்சு முகிலின் அழகைத்
தாவி மகிழும் நிலவதோ!
தங்க இரதப் பவனியோ!
கமழும் காவில் மலரும் பூக்கள்
கலந்து குலவுங் கவிதையோ!
கன்னல் இனிக்கும் பனுவலோ! மதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் நாடுஞ் சேயின் நாடும்
தமிழும் சைவ மறையுமாய்ச்!
சார்ந்து புரியுந் தருமமோ!
பாயுந் தீர்த்தம் யாவும் மோட்சம்
பாரில் ஈட்டும் பாக்கியமோ!
பாவந் தீர்க்கும் மார்க்கமோ! மதுரை

அண்டம் முழுதும் கண்டு மகிழும்
அனந்த வேதக் கிரணமாம்!
அரங்கி லேறும் "கலசமாம்"!
லண்டன் நகரில் நமக்கு மலர்ந்து
நாடி உலவுங் கலசமாம்!
நமசிவாயக் கலசமாம்! மதுரை

**கலசம் மஞ்சரியின் இரண்டாவது**
**வெளியீட்டின்பொழுது கலசத்தின்**
**இனிய நோக்கத்தை வரவேற்று**
**வருணித்துப் பாடிய**
**பாடல் இது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார் சேவைகள் நாம் தொடர்ந்தோம்

KOHA
JPL

*பாடல் 2*

சிறுதுளிகள் பெருகிவரும் வெள்ளமாகும்
திரளுமலை புரளுமொரு கடலுமாகும்
உறுதுளிகள் சிறுமையெனல் மடமையாகும்
உலகுநிதம் உணருமிதை உண்மையாகும் சிறு

தருணமிது தன்னிலூறும் இனியநெஞ்சம்
தானது கனிந்துதவும் அரியதஞ்சம்
கருணைமிகு காசுநிதி கடுகென்றாலும்
கைதொழுது கருதுமுயர் கடமைசெய்வோம் சிறு

திருவழியில் அரியபணி செய்யவந்தோம்
சிவநெறியுஞ் செந்தமிழும் உய்யவந்தோம்
தெருவழிகள் தினமணுகித் தேடிவந்தோம்
சிவநேசர் இல்லமது நாடிவந்தோம் சிறு

யாசித்து நமதிறைவன் நாமஞ் சொல்லி
ஞாலத்தில் இந்துமறை நாயன்மார்கள்
நேசித்து நீடுமருள் வரமிரந்தார்
நீடித்து அவர்சேவை நாம் தொடர்ந்தோம் சிறு

**நேசக் கரம் நீட்டி நிதி உதவி நாடிவரும் லண்டன்**
**சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் சேவைகளைப்**
**பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் – லண்டன்**
**பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கத்தின்**
**சார்பில், 1993ம் ஆண்டு சித்திரை**
**வைகாசி – ஆனி மாதங்களுக்கான**
**"கலசம்" மஞ்சரியில் வெளியீடு**
**செய்த எண்ணெய்ச் சிந்து**
**வடிவிலான பாடல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் முருகன்

*பாடல் 3*

கண்டவரின் உள்ளந் தன்னைக்
காந்தமெனக் கவரும் கந்தன்
கதிரை மலை இறைவன் நாமம் கூறாய் நெஞ்சே!

லண்டனருள் முருகன் வேலன்
நாடிவரும் பிணிகள் யாவும்
நன்று பொடி செய்வான் நின்றே நீறாய் நெஞ்சே!

விண்டலமா அமரர் தம்மை
விடுவித்த செந்தூர் வீரன்
வென்றெமது பகையுங் காப்பான் வீறாய் நெஞ்சே!

அண்டமெலாம் தமிழாய் வாழும்
ஆறுமுகன் அழகன் சீமை
ஆங்கில மண் ஈங்கும் ஆள்வான் பேறாய் நெஞ்சே!

குண்டுமலை ஏறிக் குமரன்
கோடியடி யார்கள் நாளும்
கூறுபடை அன்றே கொண்டான் ஆறாய் நெஞ்சே!

வண்டுமலர் சூடுங் கொன்றை
வள்ளி தெய்வ யானை பங்கன்
வையகத்திற் கோயில் கொண்டான் நூறாய் நெஞ்சே!

தெண்டனிடும் திரு விழாக்கள்
தேரோடும் பெரு விழாக்கள்
திகழும் "கிழக்காம்" ஊரில் வேறாய் நெஞ்சே!

கொண்டவினை தீர்க்கும் வள்ளல்
கொடுத்தாளும் அருளின் வெள்ளம்
குறையாது பாயுங் கங்கை வாறாய் நெஞ்சே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரன் கும்மி

*பாடல் 4*

கும்மியடி பெண்ணே கும்மியடி – லண்டன்
குமரன் கோவிலிற் கும்மியடி
நம்மை வருத்திடுந் தொல்லைகள் மறையும்
நாட்டியப் பெண்ணே நீ கும்மியடி கும்மி

ஆடியில் முருகன் வேலாடும் – இந்த
ஆங்கில மண்ணிலே தேரோடும்
கூடி வலம்வந்து மன்றாடும் அன்பர்
கூட்டம் மகிழ்ந்திங்கு கொண்டாடும் கும்மி

மன்னுங் கிழக்கு நகரினிலே –மயில்
வாகனன் மங்களக் காட்சியிலே
தென்னகத் தாறு திருப்படையும் –எங்கள்
திருக் கதிரையும் தோணுதடி கும்மி

அண்ணன் வினாயகர் விம்பிள்டனிற் –புகழ்
ஆலயங் கொண்டு விளங்குவதால்
வண்ணத் தமிழ்வடி வேலவன் –கருணை
வாழ்த்திடும் எங்களைக் கும்மியடி கும்மி

குன்றி லுயர்மணி வாசலிலே –தலம்
கொண்டவ னெங்கள் குமரேசன்
முன்றிலில் வந்து வளைந்தாடி – நின்று
மோகனக் கும்மிகள் கொட்டிடடி கும்மி

தந்தை சிவன்திருக் காட்சிகளும் –இங்கே
தந்து விளங்கும் தலங்க ளுண்டாம்
சிந்தை மகிழுந் திருமுருகன் அன்புச்
செல்வத்திற் கென்னே குறைகளுண்டாம் கும்மி

அன்னை பராசக்தி ஆனந்தி – சங்கரி
ஆலயம் எங்கும் அமைந்ததடி
தன்னை விரும்பிடும் தாயவள் ஆசியிற்
சண்முகன் ஆள்வது திண்ணமடி கும்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாயகன் பார்த்திபன் –சாரதி
பாற்கடல் வாசன் திருப்பதியான்
நேரதி லெங்கும் நிறைந்து மருகனை
நேசிக்கிறானடி சீமையிலே கும்மி

ஓதிடும் உபன்னி யாசங்கள் –பஜனை
ஒலிக்கும் மண்டபக் கோவிலடி
வீதியில் ஆண்டுகள் தோறுந் திருவிழா
விளங்கும் பவனிக் கோட்டமடி கும்மி

*பிரித்தானிய நாட்டில், இலண்டன் மாநகரின் கிழக்கு பாங்கான ஈஸ்ற்ஹாமில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின், ஆடிவேற் திருவிழாவும் தேரோட்டமும் 1994ம் ஆண்டு வழமை போல் நிகழும் பொழுது கலசத்தின் விசேடமலரில் வெளியான பாடலே குமரன் கும்மி !*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரியார் பாரிவள்ளல்

*பாடல் 5*
*திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்*
*சிவபதம் அடைந்தபொழுது வெளியிட்ட*
*நினைவஞ்சலிப் பாடல்*

வாரியார் என்னும் பேரை வாயாரச் சொல்லிச் சொல்லி
நேரிலாத் துயரில் ஆழ்த்தும் நிலையீது நேர்ந்த தேனோ

பாரிபோல் வள்ள லாகிப் பைந்தமிழ் அமுத ஞானம்
மாரிபோல் அள்ளி அள்ளி வழங்கிடும் மானி எங்கே

சிவனடி தொழுவதாலே சித்தியுண் டாகும் மார்க்கம்
திடமெனச் சொல்லிச் சொல்லித் தேற்றிடும் சீலர் எங்கே

திருமுரு காற்றுப் படையின் சீரிய பொருளும் பயனும்
அருளுரைப் பணியினாலே ஆற்றிடும் ஆசான் எங்கே

முக்கனிச் சுவை இனிக்கும் முருகனின் திருப்புகழ்ப் பா
பக்குவப் பண்ணால் ஓதிப் பாடிடும் ஞானி எங்கே

அறுபடை வீடுகண்டால் அறுமுகன் கருணையுண்டாம்
மறுமையும் இனிதாம் என்றே வழிசொலும் முனிவன் எங்கே

சிவநெறி போற்றும் அன்பர் சிந்தையிற் குருவாய் நின்று
தவநிலை உபதேசங்கள் சாற்றிடும் பாரி எங்கே

ஆலயப் பணிக ளெங்கும் அனுதினம் வளரத் தானே
சாலநற் பொருளும் நிதியும் தந்திடும் பாரி எங்கே

சரவணன் அடியே தஞ்சம் என்றுயர் தவமிருந்து
தருணம்வந் துறவே சொர்க்கம் தழுவியே கினரோ தானோ।

அமரராய் ஆனபோதும் அண்ணலாம் வாரியார் நம்
கமழுசீர் நெஞ்சமெல்லாம் காட்சிகள் தோற்றினாரே।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் திருநாள் மணி ஓசை

*பாடல் 6*

ஏழிசை பாடும் கோபுரம் மீதில்
இறைவன் கோயில் மணி ஓசை
நாழிகை தோறும் ஆசி வழங்கும்
நாதம் ஒலிக்கும் மணி ஓசை —ஏழிசை

ஐங்கரன் ஐங்கரன் ஐங்கர னென்றே
ஆடி ஒலிக்கும் மணி ஓசை
சங்கர சங்கர சங்கர னென்றே
சரணம் பாடும் மணி ஓசை —ஏழிசை

கண்ணன் கண்ணன் கண்ணன் என்றே
கானம் பாடும் மணி ஓசை
விண்ணும் மண்ணும் ஓதுங் கீதை
வேதம் பாடும் மணி ஓசை —ஏழிசை

மாமணி கண்டன் மன்னன் சபரி
மலையைப் பாடும் மணி ஓசை
பூமணி அழகன் அரிஹர சுதனைப்
போற்றிப் பாடும் மணி ஓசை —ஏழிசை

சூரிய நாதன் சோதியில் ஞாலம்
தொடரப் பாடும் மணி ஓசை
ஏரியல் இன்பம் வேண்டும் வேண்டும்
என்றே பாடும் மணி ஓசை —ஏழிசை

மங்கள மெங்கணும் பொங்கிடு மென்றே
வாழ்த்திப் பாடும் மணி ஓசை
தங்கிடு மெங்கள் நிரந்தரி சக்தி
தாயருள் பாடும் மணி ஓசை —ஏழிசை

வெல்லும் வேலின் வீரம் என்றே
வெற்றி முழங்கும் மணி ஓசை
சொல்லும் சரவண மந்திர கோசம்
சூழப் பாடும் மணி ஓசை —ஏழிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரண வடிவன்

## பல்லவி

வாரண வடிவனே பிள்ளையாரே – உன்னை
வணங்கிடுவோம் ஐயா பிள்ளையாரே வாரண

## அநுபல்லவி

காரணக் கடவுளே பிள்ளையாரே – எம்மைக்
காத்தருள வேண்டுமையா பிள்ளையாரே வாரண

## சரணங்கள்

திருச்சி மலையின் உச்சிப் பிள்ளையாரே – தமிழ்த்
தேசம் புகழ் பாடுமெங்கள் பிள்ளையாரே
திருச்சங்கமான் கண்டிப் பிள்ளையாரே – வந்து
தெண்டனிட்டுப் பொங்கலிட்டோம் பிள்ளையாரே வாரண

மட்டுநகர் மாமாங்கனே பிள்ளையாரே – திரு
மாவேற்குடா ஞானமணிப் பிள்ளையாரே
பட்டுவரும் தொல்லைகளைப் பிள்ளையாரே – விட்டுப்
பறந்திடச் செய்யுமையா பிள்ளையாரே வாரண

மானிப்பாயின் மருதடிப் பிள்ளையாரே – அருள்
வழங்கிடும் முருகண்டிப் பிள்ளையாரே
தேனிச்சுவைப் பொங்கலுண்ணும் பிள்ளையாரே – வருந்
தீமைகளைத் தீருமையா பிள்ளையாரே வாரண

தாந்தாமலை மேலிருக்கும் பிள்ளையாரே – களு
தாவளையின் நாயகனே பிள்ளையாரே
அம்பாறையின் ஆண்டவனே பிள்ளையாரே – வரம்
அத்தனையும் தாருமையா பிள்ளையாரே வாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியும் விரக்தியும்

**ஆதுங்கம் 1**

## விக்னேஸ்வரனே!

சிக்கெனப் பிடிக்கும் போது
சீக்கிரம் அருள் கொடுப்பாய்
எக்கணம் எண்ணினாலும்
என்னைவந் தரவணைப்பாய்
எக்கதி தானும் இன்றி
ஏங்கி நான் இங்கிருந்தேன்
விக்கினேஸ் வரனே இந்த
வேளையிற் காணேன் ஏனோ!

**ஆதுங்கம் 2**

## வாணித் தாயே!

பாடநீ வைத்தாய் அம்மா
பாடிநான் புகழடைந்தேன்
நீடருள் தந்தாய் வெள்ளை
நிறமலர் வாணித் தாயே
வாடவும் வைத்தாய் ஏனோ
வாய்மைக்கு வரமீதாமோ
ஏடெலாம் எழுதும் பக்தர்
ஏனம்மா துயர்தல் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுபந்தம் 3**

## ஸ்ரீதேவி அம்மா!

செல்வங்கள் ஈட்டுந் தாயே
ஸ்ரீ தேவீ அம்மா நின்றன்
சேவடி இணையடைந்தேன்
சிந்தையில் உன்னை வைத்தேன்
செல்வந்தர் நிலையோ வேண்டாம்
சீராசி அருளே போதும்
தேற்றிவந் தாள வேனோ
தெய்வமே தாமதித்தாய்!

**அநுபந்தம் 4**

## துர்க்கை அம்மா!

காரியம் எதுவானாலும்
கையுடற் பலங் கொடுப்பாய்
கருத்தினில் உரங் கொடுப்பாய்
கலங்கிடத் துணை கொடுப்பாய்
வீரியம் அளிக்கும் தாயே
வீரமா துர்க்கை அம்மா
வேதனைப் பட்டேன் ஏனோ
வீறல் கொடுத் தாண்டாயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதுங்கம் 5**

## சங்கரா! சிவனே!!

தாண்டவம் ஆடும் பரனே
சங்கரா சிவனே நின்றன்
தாளிணை நீழல் தானே
தாரணி ஆளுமையா
தாண்டவம் ஆடுங் கோளின்
தாக்கத்தில் நானுழன்றேன்
தாமதிக்கின்றாய் ஏனோ
தாங்கிட வென்னைத் தானே!

**ஆதுங்கம் 6**

## அழகு மீனாட்சித் தாயே!

அன்னையே மதுரைத் தாயே
அழகுமீ னாட்சி நீயே
உன்னை நான் அல்லும் பகலும்
ஓதிமன் றாடுகின்றேன்
என்னை நீ இதுவரைக்கும்
ஏங்கிடச் செய்ததில்லை
பின்னையேன் அம்மா வந்து
பின்னங்கள் தீர்த்தாய் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதுங்கம் 7**

## கண்ணா!

அன்றுபாஞ்சாலி கூப்பி
அலறிடத் துயில் கொடுத்தாய்
வென்று நீ பாண்டவர்க்கு
வெற்றியே பெற்றெடுத்தாய்
இன்று வெங் கோளின் படைகள்
ஈங்குறப் பொருதுகின்றேன்
நின்றெனை ஆளக் கண்ணா!
நீவரக் காணேன் ஏனோ!

**ஆதுங்கம் 8**

## காளித் தாயே!

சிங்காசனத்தில் ஏறிச்
சீற்றமாய்க் கொடுவா ளேந்திப்
பங்கமாய் நேரும் பழியைப்
பாங்குடன் அறுப்பாய் அம்மா
எங்குமாய் நிறையுந் தாயே
ஈஸ்வரி காளித் தாயே!
இங்குநான் அச்சப் பட்டேன்
ஏன்வந் தணைத்தாய் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருங்கம் 8**

## ஐயனாரே!

ஊரெல்லை தோறும் நின்றே
உத்தமக் காவல் செய்வாய்
ஓம் ஐயனாரே! என்றால்
ஓடிவந் தபயந் தருவாய்!
நேருமோர் அவலம் என்றால்
நிமிடத்தில் வந்தணைப்பாய்!
நிலை தடுமாறினேனே!
நீவரவில்லை ஏனோ!

**அருங்கம் 9**

## செந்நாக தம்பிரானே!

வீடமது கொண்ட போது
வென்றுயிர் நீ கொடுப்பாய்
படமெடுத் தாங்கே படையும்
பயமுறத் திகில் கொடுப்பாய்
திடமது கொள்ளும் பக்தன்
செந்நாக தம்பிரானே!
தடமது புரளக் கண்டும்
தாமதிக்கின்றாய் ஏனோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதுங்கம் 10**

## வயிரவனாரே!

அல்லொடு பகலாய்க் காவல்
ஆற்றிடும் வயிரவன் நீ
வல்லசூ லாயுதத்தால்
வையகம் ஆளுவாய் நீ
கல்லருங் களவு நெஞ்சக்
கபடமுங் கண்டு வெல்வாய்
தொல்லையால் வாடினேனே
துணைதரச் சுணக்கம் ஏனோ।

**ஆதுங்கம் 11**

## மாரித் தாயே!

மழைதரும் மாரித் தாயே
மானிலம் வளர்ப்பாய் நீயே
பிழைசெயும் பிள்ளை என்னைப்
பிரியமாய் மன்னிப்பாயே
குழையுமென் நெஞ்சக் கவலை
குமுறிடத் திணறுகின்றேன்
விழைவுடன் அரவணைக்கும்
மென்கரம் எங்கே தாயே।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதங்கம் 12**

## நவக்கிரகத் தெய்வங்களே!

கோளெனுங் கிரகதோஷம்
சூற்றமாய் நேரும் போது
கொடியதீ வினைகள் தம்மைக்
குன்றிட மாள வைப்பீர்
நாளெலாம் நொந்து நொந்து
நானிளைத்தேனே வீணே
நவமான தெய்வம் நீவீர்
நாடாது மறையலாமோ!

**ஆதங்கம் 13**

## ஆஞ்சநேயா!

இரகு ராகவனாய்த் தோன்றி
ஏந்தலாய்ப் புருஷோத்தமனாய்
ஈங்குற்ற கண்ணன் பாதம்
ஏற்றினாய் துணையுமானாய்
திரமுடன் என்னைத் தாங்கும்
தெய்வமே ஆஞ்சநேயா!
திசையெலாம் இருளும் நேரம்
தெரியுமுன் ஒளிதான் எங்கே!

**ஆதங்கம் 14**

## கந்தா! முருகா!!

ஆற்றொணாப் பிணி தாங்காமல்
ஆயுளை அண்ணா மலையில்
மாற்றிடச் சென்றான் அருணன்
மாளாது மீட்டாய் அப்பா
தோற்று நான் விதியின் போரிற்
சோர்ந்திடும் பொழுதில் அன்பாய்
ஏற்றெனைக் கந்தா! முருகா!!
ஏனினும் காத்தாய் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதுங்கம் 15**

# பேராசை பிறக்கவில்லை!

## பல்லவி

ஆசைகளும் பாரில் வீணே
பிறக்கவில்லை – நெஞ்சில்
ஆளுமொரு செல்வப் போகம்
நினைக்கவில்லை – முருகா.....! ஆசைகளும்

## அநுபல்லவி

பூணுகின்ற பொன்னும் பொருளும்
இரக்கவில்லை – ஆனால்
போற்றி உனைப் பாடும் நேசம்
மறக்கவில்லை – முருகா.....! ஆசைகளும்

## சரணங்கள்

மாடிமனை வேண்டும் வேண்டும்
மாளிகை வேண்டும் – என்றே
மாந்தரிவர் வாஞ்சை கொண்டார்
வணங்குகின்றார்
கோடி வளம் தேடித் தேடிக்
கும்பிடுகின்றார் – ஆனால்
நாடியுனைத் தானே நானே
நம்பி யிருந்தேன்! – முருகா.....! ஆசைகளும்

அண்டமெலாம் எங்குங் காணி
பூமியளந்தார் – யோகம்
அத்தனையும் சொந்தம் என்றும்
ஆவ லடைந்தார்
கண்டமெலாம் ஓடிச் செல்வம்
காண முயன்றார் – காக்கும்
கந்தவடி வேலைத் தானே
கண்டு மகிழ்ந்தேன்!.....முருகா! ஆசைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதங்கம் 16**

# சங்கரா பரனே!

பல்லவி
சொல்லச் சொல்ல இனிக்குது
உந்தன் நாமம் –பெருந்
துயரத்தைக் கொடுக்குது
கொண்ட கோலம் சொல்ல

அநுபல்லவி
கொள்ளக் கொள்ள வளருது
உந்தன் பாசம் –எந்தன்
கூடநின்று தொடருது
பந்த பாசம் –சொந்த
பந்த பாசம் சொல்ல

சரணங்கள்
சங்கரனே தாளிணைகள்
தஞ்சம் அளிக்கும் –வந்து
சஞ்சலமுந் துன்பங்களும்
தடை விதிக்கும் –மோதித்
தடை விதிக்கும்
மங்கை உமை தன் கரங்கள்
வாரி அணைக்கும் –துட்ட
மாயங்களுந் தோஷங்களும்
வாழ்வை அலைக்கும் –எந்தன்
வாழ்வை அலைக்கும் சொல்ல

ஆடுந்திருப் பாதங்களின்
நிழல் பரவும் –வெப்பம்
ஆகுமுடல் நோய்களென்னை
ஆட்டி வதைக்கும் –என்னை
ஆட்டி வதைக்கும்
ஆடுமுன்றன் கோயில் மணி
அன்பை ஒலிக்கும் –மண்ணை
ஆளும் பஞ்ச பாவங்களின்
கோசம் ஒலிக்கும் – எங்கும்
கோசம் ஒலிக்கும் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் பிறப்பு

சித்திரை பிறந்ததடி தங்கமே – இன்று
சித்திரை பிறந்ததடி எங்குமே சித்திரை

சித்தமெல்லாம் பொங்குதடி
தெய்வீகம் ஆனதடி
சித்திரை பிறந்ததடி தங்கமே – பாடும்
செந்தமிழின் நாதமடி எங்குமே சித்திரை

அத்தனையும் இன்பமடி
ஆனந்தமே தோணுதடி
சித்திரை பிறந்ததடி தங்கமே –யோகச்
செல்வமே குவிந்ததடி எங்குமே சித்திரை

கொத்துமலர் வாசமடி
கோமளமே வீசுமடி
சித்திரை பிறந்ததடி தங்கமே –நம்மைத்
தெய்வபலம் ஆண்டதடி எங்குமே சித்திரை

புத்துடையும் பொன்னகையும்
பூண்டு மனம் பூரிக்கலாம்
சித்திரை பிறந்ததடி தங்கமே –அருள்
தேங்கி நலம் காக்குமடி எங்குமே சித்திரை

முத்துநெல்லும் தானியமும்
முற்றத்தில் நிறைந்ததடி
சித்திரை பிறந்ததடி தங்கமே – பாரில்
மூன்று தமிழ் ஓங்குமடி எங்குமே சித்திரை

புத்தாண்டின் போகமடி
பூத்துவரும் யோகமடி
சித்திரை பிறந்ததடி தங்கமே – வண்ணம்
சீராடும் நாளிதடி எங்குமே சித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாடல்கள்

## *பாடல் 1*

பல்லவி
நவராத்திரி கொண்டாடு
நாயகி மூவரை மன்றாடு நவராத்திரி

அநுபல்லவி
சுபராத்திரி ஒன்பதிலும்
சுந்தரி மூவரை மன்றாடு நவராத்திரி

சரணங்கள்
அழகு மங்களம் பொலியுங் கொலுவில்
ஆனந்தம் அடையும் பேரின்பத்தாலே நவராத்திரி

பஜனைப் பாட்டின் இனிமைக் கீதம்
பயக்கும் இசையின் சுகத்தினாலே நவராத்திரி

வளரும் வீரம் வழங்கும் துர்க்கை
வரங்கள் விளங்கும் யோகத்தாலே நவராத்திரி

திருவும் புகழும் சேர்ந்து நிலைக்கும்
ஸ்ரீதேவி செல்வத்தினாலே நவராத்திரி

கலைகள் நிறையும் கல்வி ஓங்கும்
கமலவதனி கருணையாலே நவராத்திரி

பள்ளியும் இல்லமுங் கோவிலுஞ் சாலையும்
பக்தியில் மலரும் அற்புதத்தாலே நவராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 2

ஒளிமயமாகும் இரவுகளாம்
நவ – ராத்திரியாம்
உள்ளம் மலர்ந்திடும் இரவுகளாம்
நவ – ராத்திரியாம்
ஒளி

தேவியர் மூவரின் பூசைகளாம்
நவ – ராத்திரியாம்
தேசத்தில் எங்கணும் ஆனந்தமாம்
நவ – ராத்திரியாம்
ஒளி

வீரியத் துர்க்கையின் காவலுண்டாம்
நவ – ராத்திரியாம்
வீரமும் சுகமும் நாடிடுமாம்
நவ – ராத்திரியாம்
ஒளி

யோகமும் செல்வமுங் கூடிடுமாம்
நவ – ராத்திரியாம்
தேவி இலக்குமி தருவாளாம்
நவ – ராத்திரியாம்
ஒளி

கல்வியும் ஞானமும் ஓங்கிடுமாம்
நவ – ராத்திரியாம்
கலைவாணி அருள் புரிவாளாம்
நவ – ராத்திரியாம்
ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

**பல்லவி**

வந்ததே வந்ததே தீபாவளி
மங்களம் விளங்கும் ஒளித் தீபாவளி
தந்ததே தந்ததே தீபாவளி
தங்குமருள் எங்கும் ஒளித் தீபாவளி வந்ததே

**சரணங்கள்**

ஒன்றாகும் இன்பமே தீபாவளி
ஓரினத்தை நாடும் அன்புத் தீபாவளி
மன்றாடும் யோகமே தீபாவளி
வாஞ்சையுடன் நாம் மகிழும் தீபாவளி வந்ததே

வந்தனை செய்திடுந் தீபாவளி
வண்ணமாய் மலர்ந்துவருந் தீபாவளி
சிந்தனை மேவிடுந் தீபாவளி
சிந்துபாடிக் கொண்டாடுந் தீபாவளி வந்ததே

ஆண்டவன் ஆட்சியே தீபாவளி
அன்புடன் வணங்கும் ஒளித் தீபாவளி
வேண்டிடும் மாட்சியே தீபாவளி
வேதங்களின் காட்சிளே தீபாவளி வந்ததே

வானிலும் பாரிலுந் தீபாவளி
வாணம்விளை யாடும் ஒளித் தீபாவளி
தேனிலும் ஆனந்தம் தீபாவளி
திக்கெலாம் பிறக்கும் ஒளித் தீபாவளி வந்ததே

சுந்தரம் சோபனம் தீபாவளி
தோரணங்கள் தொங்கும் ஒளித் தீபாவளி
மந்திரம் ஓதிடுந் தீபாவளி
வாசமலர்த் தேன்மணக்குந் தீபாவளி வந்ததே

ஆடிடும் பாடிடுந் தீபாவளி
ஆரமுதம் நாமருந்துந் தீபாவளி
நாடிடுங் கூடிடுந் தீபாவளி
நாட்டினிலும் வீட்டினிலுந் தீபாவளி வந்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைத் தீபம்

பல்லவி
கந்தன் அருட்கோலம் காணும் ஒளித் தீபம்
கார்த்திகைத் தீபம் ஏற்றிடுவோம்
கார்த்திகை வேலைப் போற்றிடுவோம் கந்தன்

அநுபல்லவி
அந்தம் அணுகாமல் இன்பம் நிலையாகும்
ஆனந்தத் தீபம் ஏற்றிடுவோம்
ஆறுமுகன் பாதம் போற்றிடுவோம் கந்தன்

சரணங்கள்
பாலும் கனியாவுந் தேனுந் திணைமாவும்
பாகும் அருங்கூழும் படைத்திடுவோம்
பலகாரம் யாவும் படைத்திடுவோம்
வேலன் புகழ்பாடி வேண்டி மன்றாடி
மேவீடும் இன்பம் அடைந்திடுவோம்
விரும்பி மனமுண்டு களித்திடுவோம் கந்தன்

ஊரின் தலந்தோறும் ஒளியின் மயமாகும்
ஓங்கும் பிரகாசம் அதனாலே
ஓடி இருள்நீங்கும் பகல்போலே
பாரின் திசையெங்கும் பரவும் அருளின்பம்
பாடி மகிழ்ந்தாடும் விளக்கீடாம்
பாசம் மிகுந்தாடும் ஆனந்தமாம் கந்தன்

பொங்குந் தமிழோசை பொலியும் அருளோசை
பூசை மணியோசை எங்கணுமாம்
பூரிக்கும் ஆசைகள் ஆயிரமாம்
தங்கும் உறவாலே சாரும் அன்பாலே
சங்கமமாம் நாம் சமரசமாம்
சந்தோஷம் பாடும் சங்கீதமாம் கந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல்

ஏரின் போகச் செல்வங் கண்டு
எங்கும் பொங்குந் தைப்பொங்கல்
ஏற்றும் பொங்கல் தைப்பொங்கல்
பாரின் பண்ணைத் தலைவன் சீரைப்
பாடும் பொங்கல் தைப்பொங்கல்
பஞ்சந் தீருந் தைப்பொங்கல் ஏரின்

பொங்குஞ் செந்நெல் விளையும் போகம்
பொலியும் பொங்கல் தைப்பொங்கல்
பூரிப் படையுந் தைப்பொங்கல்
தங்குந் தானந் தர்மம் யாவுந்
தாமே சாருந் தைப்பொங்கல்
தாரணி யோகம் தைப்பொங்கல் ஏரின்

முன்னாற் கோலம் வாசல் தோறும்
முன்னே போடுந் தைப்பொங்கல்
மோகனப் பொங்கல் தைப்பொங்கல்
தென்னங் குருத்து மாவின் இலைகள்
திகழும் பொங்கல் தைப்பொங்கல்
செந்தமிழ் நாளாம் தைப்பொங்கல் ஏரின்

சோலைப் பூவுங் கேணிப் பூவும்
சூட்டி வணங்குந் தைப்பொங்கல்
தோரணம் ஆடும் தைப்பொங்கல்
காலைக் கதிராம் இறைவன் தன்னைக்
கண்டே போற்றுந் தைப்பொங்கல்
காலம் மலருந் தைப்பொங்கல் ஏரின்

பாட்டால் உழவன் காட்டும் பாதை
பாரை நடத்தும் தைப்பொங்கல்
பானைப் புதிராம் தைப்பொங்கல்
மாட்டால் உலகம் வாழும் புகழை
வாழ்த்தும் பொங்கல் தைப்பொங்கல்
வையகம் உய்யுந் தைப்பொங்கல் ஏரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

## பல்லவி

பக்தியின் பலன் கண்ட நள்ளிரவே —இது
பாவமெல்லாம் தீரும் திருப்பரன் சிவனிரவே பக்தி

## அநுபல்லவி

நித்திரை விழித்திருந்து நிலையான தவமிருந்தான்
முத்திபெற்றான் ஒருத்தன் வனவேடன் —அவன்
முத்தி நமக்கே ஒரு பாடம் பக்தி

## சரணங்கள்

வாழும் விலங்கினத்தை மாண்டிட வதைத்தாலும்
வாழ்க்கையில் மாமிசத்தை வலிந்து புசித்தாலும்
நித்திரை விழித்திருந்து நிலையான தவமிருந்தான்
முத்திபெற்றான் ஒருத்தன் வனவேடன் —அவன்
முத்தி நமக்கே ஒரு பாடம் பக்தி

ஆயுதம் தாங்கியவன் பாதகம் புரிந்தாலும்
ஆற்றிடும் பாவங்களால் ஆனந்தம் அடைந்தாலும்
நித்திரை விழித்திருந்து நிலையான தவமிருந்தான்
முத்திபெற்றான் ஒருத்தன் வனவேடன் —அவன்
முத்தி நமக்கே ஒரு பாடம் பக்தி

கூண்டிலே வனவிலங்கை வீழ்ந்திடச் செய்தாலும்
கொல்லுங் கொடுந்தொழிலைக் கொண்டவன் வாழ்ந்தாலும்
நித்திரை விழித்திருந்து நிலையான தவமிருந்தான்
முத்திபெற்றான் ஒருத்தன் வனவேடன் —அவன்
முத்தி நமக்கே ஒரு பாடம் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி வசந்தன் பாடல்

கோலாட்டம் ஆடுவோம் கூடிப்பாடி ஆடுவோம்
சீராட்டம் ஆடுவோம் சிவனாட்டம் ஆடுவோம்
நித்திரைவிட் டாடுவோம் நிரையாட்டம் ஆடுவோம்
சித்திரமாய் ஆடுவோம் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

சுற்றிநாங்கள் ஆடுவோம் தோகைநடம் ஆடுவோம்
சிற்றம்பலம் நாடுவோம் சிவனாட்டம் ஆடுவோம்
செல்லநடம் ஆடுவோம் சிந்துநடம் ஆடுவோம்
தில்லைநடம் ஆடுவோம் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

மானாட்டம் ஆடுவோம் வண்ணநடம் ஆடுவோம்
தேராட்டம் ஆடுவோம் சிவனாட்டம் ஆடுவோம்
குந்தியெழுந் தாடுவோம் கோல்வசந்தம் ஆடுவோம்
கோணமலை ஈசனாம் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

தான்தோன்றி ஈசனார் தாள்பணிந்து ஆடுவோம்
தாண்டவம் புரிந்திடும் சிவனாட்டம் ஆடுவோம்
உன்னியெழுந் தாடுவோம் துள்ளியெழுந் தாடுவோம்
முன்னீஸ்வரன் பரன் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

ஓதியரன் தோத்திரம் ஒன்றுகூடி ஆடுவோம்
கேதீஸ்வரன் பரன் சிவனாட்டம் ஆடுவோம்
நர்தனங்கள் ஆடுவோம் நாங்கள் நடம் ஆடுவோம்
நகுலேசன் ஈஸ்வரன் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

பாவேந்தர் பாடிடும் பரமேசன் இரவிலே
தேவந்துறையின் நாயகன் சிவனாட்டம் ஆடுவோம்
நாவேந்தர் போற்றிடும் தில்லை நடராஜனாம்
நாம்வணங்கும் ஆண்டவன் சிவனாட்டம் ஆடுவோம் கோலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

# ஆயிரத்தெட்டுச் சிவநாமங்களும் 1008 போற்றிகளும்

திருச்சிற்றம்பலம்

அரனே போற்றி
அயனே போற்றி
அழகனே போற்றி
அபயனே போற்றி
அனந்தனே போற்றி
அம்பலவாணனே போற்றி
அம்பிகைபாகனே போற்றி
அம்பலநாதனே போற்றி
அக்கிரணியே போற்றி
அகற்பனே போற்றி
அம்பிகைநாதனே போற்றி
அகண்டிதனே போற்றி
அகசைமணாளனே போற்றி
அங்கணாளனே போற்றி
அருளனே போற்றி
அருளீஸ்வரனே போற்றி
அசலைபாகனே போற்றி
அத்தனே போற்றி
அசுதாரணனே போற்றி
அகண்டனே போற்றி
அஞ்சுவனனே போற்றி
அகநிலையானே போற்றி
அட்டகாசியே போற்றி
அட்சயனே போற்றி
அகத்தனே போற்றி
அட்டமூர்த்தியே போற்றி
அகதங்காரத்தையனே போற்றி
அட்டனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அமுதனே | போற்றி |
| அகளங்கநாதனே | போற்றி |
| அதிபனே | போற்றி |
| அதிசோபனைபாகனே | போற்றி |
| அன்பனே | போற்றி |
| அகிலாண்டவனே | போற்றி |
| அகலனே | போற்றி |
| அகிலேஸ்வரனே | போற்றி |
| அதலனே | போற்றி |
| அமரேஸ்வரனே | போற்றி |
| அச்சயனே | போற்றி |
| அகிலநாதனே | போற்றி |
| அகவுசெய்வோனே | போற்றி |
| அசனே | போற்றி |
| அக்கிரேசரனே | போற்றி |
| அண்டாதனே | போற்றி |
| அருணாசலனே | போற்றி |
| அச்சுதனாரே | போற்றி |
| அக்கினிக்கண்ணனே | போற்றி |
| அரூபனே | போற்றி |
| அசலகன்னிகைநாதனே | போற்றி |
| அதீச்சுரனே | போற்றி |
| அக்கினித்தம்பனே | போற்றி |
| அத்தரே | போற்றி |
| அங்கசாரியே | போற்றி |
| அசலபதியானே | போற்றி |
| அதுலனே | போற்றி |
| அங்கயற்கண்ணிநாதனே | போற்றி |
| அஞ்சானனனே | போற்றி |
| அத்தியூடனே | போற்றி |
| அந்தநாதனே | போற்றி |
| அனந்தஞானியே | போற்றி |
| அனந்தநாயகனே | போற்றி |
| அங்கணனே | போற்றி |
| அச்சனே | போற்றி |
| அதரிசனனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அச்சனாரே | போற்றி |
| அந்தனாரீசனே | போற்றி |
| அசலனே | போற்றி |
| அங்கதாரியே | போற்றி |
| அநகனே | போற்றி |
| அண்ணாமலையானே | போற்றி |
| அநங்கனே | போற்றி |
| அநந்ததிட்டியே | போற்றி |
| அமரர்தலைவனே | போற்றி |
| அனந்தரூபனே | போற்றி |
| அருகனே | போற்றி |
| அருட்குறியானே | போற்றி |
| அநாதியனே | போற்றி |
| அழலாடியானே | போற்றி |
| அனலங்கிரியானே | போற்றி |
| அருட்செல்வனே | போற்றி |
| அனாதரட்சகனே | போற்றி |
| அர்த்தனாரீசனே | போற்றி |
| அனாதிசடிலனே | போற்றி |
| அவ்வியத்தனே | போற்றி |
| அனாதிமுத்தனே | போற்றி |
| அபரமூர்த்தியனே | போற்றி |
| அழிவிலானே | போற்றி |
| அனாமயனே | போற்றி |
| அழற்கண்ணனே | போற்றி |
| அமலனே | போற்றி |
| அந்தகசயனே | போற்றி |
| அறவாணனே | போற்றி |
| அனலாடியே | போற்றி |
| அளகைமஞ்சகனே | போற்றி |
| அந்தகாரியே | போற்றி |
| அழற்கரத்தோனே | போற்றி |
| அபினாசியானே | போற்றி |
| அருத்தனாரீசனே | போற்றி |
| அனேகனே | போற்றி |
| அழலேந்தியனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவத்திருமேனியனே போற்றி
அனாதியமரனே போற்றி
அம்பலக்கூத்தனே போற்றி
அறவாழியந்தணனே போற்றி
அந்தகாந்தகனே போற்றி
அரவக்கரையனே போற்றி
அம்மையப்பரே போற்றி
அரிசரனே போற்றி
அமுதவேணியனே போற்றி
அரவணிந்தோனே போற்றி
அழிவிலூரானே போற்றி
அம்புசிரனே போற்றி
அனுப்பிரவேசிநாதனே போற்றி
அருக்கந்தனே போற்றி
அனாதிசைவனே போற்றி
அரஹரநாதனே போற்றி
அம்பரீசனே போற்றி
அறக்கொடிபாகனே போற்றி
அம்பலவனே போற்றி
அனாதிபோதனே போற்றி
அற்பமூர்த்தியே போற்றி
அரிவைபங்காளனே போற்றி
அரியூர்தியே போற்றி
அனுக்கிரகனே போற்றி
அமூர்த்தனே போற்றி
அரிணனே போற்றி
அரவாபரணனே போற்றி
அகிலநாயகிபாகனே போற்றி
அந்தகரிபுவே போற்றி
அந்தகாசுகிருதனே போற்றி
அம்பரீடனே போற்றி
அரவங்கணத்தோனே போற்றி
அபராசிதனே போற்றி
அந்திவண்ணனே போற்றி
அனாதியானவனே போற்றி
அனாதிசடிலனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அகிலாண்டவல்லிநாதனே | போற்றி |
| அகிலாண்டேஸ்வரிநாதனே | போற்றி |
| ஆதியந்தமில்லாதானே | போற்றி |
| ஆத்துமபூவே | போற்றி |
| ஆனந்தனே | போற்றி |
| ஆனந்தநடேசனே | போற்றி |
| ஆனந்ததீர்த்தனே | போற்றி |
| ஆரணனே | போற்றி |
| ஆதிவீராகனே | போற்றி |
| ஆதிரையானே | போற்றி |
| ஆதிமூர்த்தியே | போற்றி |
| ஆதிமலையானே | போற்றி |
| ஆட்டுக்கோனே | போற்றி |
| ஆசாம்பரனே | போற்றி |
| ஆதிதேவனே | போற்றி |
| ஆண்டவனே | போற்றி |
| ஆவடுதுறையானே | போற்றி |
| ஆலகண்டனே | போற்றி |
| ஆலதரனே | போற்றி |
| ஆனையுரித்தோனே | போற்றி |
| ஆலமர்கடவுளே | போற்றி |
| ஆனனே | போற்றி |
| ஆறுசூடியானே | போற்றி |
| இடபக்கொடியோனே | போற்றி |
| இருஷபத்துவசனே | போற்றி |
| இந்துசேகரனே | போற்றி |
| இராசநாயகனே | போற்றி |
| இறைவியின்துணைவனே | போற்றி |
| இராமேஸ்வரத்தானே | போற்றி |
| இலங்குமீஸ்வரனே | போற்றி |
| இலங்கேஸ்வரன்கதியே | போற்றி |
| இறையானே | போற்றி |
| இலயசிவனே | போற்றி |
| இமயமலையானே | போற்றி |
| இமயவில்லியே | போற்றி |
| இலயனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசிகாமணியே போற்றி
இடபவாகனனே போற்றி
இறையவனே போற்றி
இடபாரூடனே போற்றி
இமாசலைபாகனே போற்றி
இறையோனே போற்றி
ஈசனே போற்றி
ஈஸ்வரிபங்கனே போற்றி
ஈசானனே போற்றி
ஈச்சுரபேதத்தானே போற்றி
ஈசுரலீலையானே போற்றி
ஈஸ்வரனே போற்றி
ஈஸ்வரிநாதனே போற்றி
ஈசாநியே போற்றி
ஈமனே போற்றி
ஈச்சுரனே போற்றி
ஈஸ்வரிபாகனே போற்றி
உதனே போற்றி
உத்தரனே போற்றி
உருத்திரகிரியானே போற்றி
உலகநாயகனே போற்றி
உமேசனே போற்றி
உகாந்தநாதனே போற்றி
உமாசகிதனே போற்றி
உள்ளத்துறைவோனே போற்றி
உலகேசனே போற்றி
உலகவீரட்சனே போற்றி
உருத்திராவாசனே போற்றி
உலகேஸ்வரனே போற்றி
உருத்திரேஸ்வரனே போற்றி
உரூபாரூபனே போற்றி
உலகேஸ்வரிநாதனே போற்றி
உலகவீரட்சகிபாகனே போற்றி
உமையவள்பங்கனே போற்றி
ஊனுயிரானே போற்றி
ஊழிதொறுமுள்ளவனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஊருலகமாள்வானே | போற்றி |
| எம்பிரானே | போற்றி |
| எண்குணத்தானே | போற்றி |
| எம்பாபரனே | போற்றி |
| எட்டுமூர்த்தியே | போற்றி |
| எரியாடியே | போற்றி |
| எண்டோளனே | போற்றி |
| ஏகதேவனே | போற்றி |
| ஏறூர்ந்தோனே | போற்றி |
| ஏகனே | போற்றி |
| ஏற்றுவாகனனே | போற்றி |
| ஏகபாதனே | போற்றி |
| ஏகம்பரே | போற்றி |
| ஏகநாயகிபாகனே | போற்றி |
| ஏகதேவிநாதனே | போற்றி |
| ஐமுகனே | போற்றி |
| ஐந்தொழிலானே | போற்றி |
| ஐமுகியே | போற்றி |
| ஐமவதிபாகனே | போற்றி |
| ஐம்முகனே | போற்றி |
| ஒற்றியூரானே | போற்றி |
| ஒப்பிலாதானே | போற்றி |
| ஓங்காரரூபனே | போற்றி |
| ஔடதனே | போற்றி |
| கல்யாணசுந்தரனே | போற்றி |
| கருணாகரனே | போற்றி |
| கபாலியே | போற்றி |
| கருந்தலனே | போற்றி |
| கலியாணனே | போற்றி |
| கருணாநிதியே | போற்றி |
| கங்காளமாலியே | போற்றி |
| கயிலாயனே | போற்றி |
| கருத்தனே | போற்றி |
| காபாலனனே | போற்றி |
| கட்டங்கனே | போற்றி |
| கங்காளனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாலயனே போற்றி
கபாலனே போற்றி
கணாதிபனே போற்றி
கவாலியே போற்றி
கடம்பவனசுந்தரனே போற்றி
கருணோதயனே போற்றி
கருத்தாவே போற்றி
கயிலையாளியே போற்றி
கபர்த்தியே போற்றி
கடம்பவனேஸ்வரனே போற்றி
கங்கடகனே போற்றி
கங்காளமூர்த்தியே போற்றி
கங்காதரனே போற்றி
கல்யாணிபாகனே போற்றி
காலகண்டனே போற்றி
காரணனே போற்றி
காபாலியே போற்றி
காலக்கடவுளே போற்றி
காமதகனனே போற்றி
காலகாலனே போற்றி
காரணிநாதனே போற்றி
கிரீசனே போற்றி
கிருஷாந்தரேதாவே போற்றி
கிருத்திவாசனே போற்றி
கிருசாநுரேதனே போற்றி
கிருத்திவாசனே போற்றி
கீதமயநர்த்தனே போற்றி
குணாலயனே போற்றி
குழக்கனே போற்றி
குன்றவில்லியே போற்றி
கூத்தனே போற்றி
கூடநாயகிபாகனே போற்றி
கூத்தாடியே போற்றி
கூடலரசிபங்கனே போற்றி
கெங்காதரனே போற்றி
கேதாரனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதாரேஸ்ரிபாகனே போற்றி
கேதீஸ்வரத்தானே போற்றி
கேதீஸ்வரநாதனே போற்றி
கேதீஸ்வரப்பரனே போற்றி
கேதீஸ்வரத்தரசே போற்றி
கைலாசநாதனே போற்றி
கைலைவாசனே போற்றி
கைலாசபதியே போற்றி
கொன்றைவேந்தனே போற்றி
கொன்றைசூடியே போற்றி
கொக்கொட்டிச்சோலையரனே போற்றி
கொக்கொட்டியூரீஸ்வரனே போற்றி
கொக்கொட்டிச்சோலையப்பனே போற்றி
கோரட்சனே போற்றி
கோணமலையானே போற்றி
கோணகிரிநாயகனே போற்றி
கோணமாமலையரசே போற்றி
கோகந்தனே போற்றி
கோரனே போற்றி
கோபாலகனே போற்றி
கோரனே போற்றி
கோவணனே போற்றி
கோரட்சகனே போற்றி
சடையப்பனே போற்றி
சகதீசனே போற்றி
சருவாணிதலைவனே போற்றி
சங்கரிதுணைவனே போற்றி
சத்தியவல்லிபங்கனே போற்றி
சர்வநாயகிதலைவனே போற்றி
சசீதரனே போற்றி
சடாங்கனே போற்றி
சகநாதனே போற்றி
சடையோனே போற்றி
சங்கமரூபனே போற்றி
சருவாணிபாகனே போற்றி
சசீதரியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருவகருத்தாவே போற்றி
சபாபதியே போற்றி
சத்தனே போற்றி
சங்கரனே போற்றி
சடாதாரியே போற்றி
சத்தியனே போற்றி
சண்டிலனே போற்றி
சபாநாதனே போற்றி
சம்புகேஸ்வரனே போற்றி
சடாமகுடனே போற்றி
சந்திராபீடனே போற்றி
சதாசிவனே போற்றி
சதுர்ப்புயனே போற்றி
சபாநாயகனே போற்றி
சசிசேகரனே போற்றி
சருப்பகுண்டலனே போற்றி
சருவேசனே போற்றி
சம்பவைநாதனே போற்றி
சந்திரசேகரனே போற்றி
சயம்புவே போற்றி
சதிபதியே போற்றி
சந்திரமெளலியே போற்றி
சம்புவே போற்றி
சலதாரியே போற்றி
சர்வசீவதயாபரனே போற்றி
சந்திரசூடனே போற்றி
சர்வேசுரனே போற்றி
சவரனே போற்றி
சனாதனனே போற்றி
சண்பகசுந்தரனே போற்றி
சலதரனே போற்றி
சருப்பாபரணனே போற்றி
சர்வனே போற்றி
சங்கரிநாதனே போற்றி
சதாசிவமூர்த்தியே போற்றி
சாம்பமூர்த்தியே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சாம்பசிவனே | போற்றி |
| சாமகானனே | போற்றி |
| சாம்பவீநாதனே | போற்றி |
| சாந்தமூர்த்தியே | போற்றி |
| சாந்தநாயகிபாகனே | போற்றி |
| சிவனே | போற்றி |
| சித்தம்பலவனே | போற்றி |
| சிவசங்கரீநாதனே | போற்றி |
| சிவானிபாகனே | போற்றி |
| சித்தனே | போற்றி |
| சித்தேசனே | போற்றி |
| சிவங்கரனே | போற்றி |
| சிவங்கரிபாகனே | போற்றி |
| சிதம்பரநாதனே | போற்றி |
| சிவைமணாளனே | போற்றி |
| சிவைபாகனே | போற்றி |
| சிவசக்திநாதனே | போற்றி |
| சிறீகண்டனே | போற்றி |
| சிற்பரனே | போற்றி |
| சிற்பரைநாதனே | போற்றி |
| சிவகாமசுந்தரிபாகனே | போற்றி |
| சிவதேவிதுணைவனே | போற்றி |
| சீக்கிரியனே | போற்றி |
| சீர்காழிப்பதியனே | போற்றி |
| சீர்பதியே | போற்றி |
| சீர்காழியப்பனே | போற்றி |
| சீரடியரசே | போற்றி |
| சுடரானே | போற்றி |
| சுடலையாடியே | போற்றி |
| சுராட்டுவே | போற்றி |
| சுந்தரேசனே | போற்றி |
| சுயம்புவே | போற்றி |
| சுராட்புருடனே | போற்றி |
| சுந்தரேஸ்வரிபாகனே | போற்றி |
| சுந்தரவல்லிபங்கனே | போற்றி |
| சுகமருளும்பதியே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலினிபாகனே போற்றி
சூலதரனே போற்றி
சூலக்காளைவாகனனே போற்றி
செகற்பிதாவே போற்றி
செம்மலே போற்றி
செகச்சோதியனே போற்றி
செய்யனே போற்றி
செஞ்சடையோனே போற்றி
செந்தீவண்ணனே போற்றி
செட்டியப்பனே போற்றி
செல்வனே போற்றி
செப்பரியபொருளே போற்றி
சைலப்பதியனே போற்றி
சொல்லொணாப்புகழனே போற்றி
சொரூபனே போற்றி
சொக்கநாதனே போற்றி
சொக்கநாயகனே போற்றி
சோதிக்குட்சோதியே போற்றி
சோணகிரியானே போற்றி
சோதிநாயகனே போற்றி
சோணகிரிவள்ளலே போற்றி
சோதியே போற்றி
சோதிநாதனே போற்றி
சோமேஸ்வரனே போற்றி
சோமநாதனே போற்றி
சோமலிங்கனே போற்றி
சோதிலிங்கனே போற்றி
சோதிப்பிழம்பே போற்றி
சோதிப்பிறையனே போற்றி
சோதியின்சுடரே போற்றி
சோதிமயமானவனே போற்றி
சோதிநாயகிபாகனே போற்றி
சோதீஸ்வரிபங்கனே போற்றி
சௌந்தரனே போற்றி
சௌமியனே போற்றி
சௌந்தரநாயகனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சௌந்தரிநாயகனே | போற்றி |
| ஞானபூரணிபாகனே | போற்றி |
| ஞானநாயகனே | போற்றி |
| ஞானமூர்த்தியே | போற்றி |
| ஞானாம்பிகைபாகனே | போற்றி |
| ஞானப்பிரகாசனே | போற்றி |
| தக்கசங்காரனே | போற்றி |
| தத்துவாதீதனே | போற்றி |
| தந்தவத்திரனே | போற்றி |
| தட்சனே | போற்றி |
| தக்கணனே | போற்றி |
| தட்சசங்கரனே | போற்றி |
| தந்தவக்கிரனே | போற்றி |
| தட்சணாமூர்த்தியே | போற்றி |
| தந்தியுரியோனே | போற்றி |
| தரணீஸ்வரனே | போற்றி |
| தழலடியே | போற்றி |
| தற்பரனே | போற்றி |
| தந்திவீமுரியானே | போற்றி |
| தருமவாகனனே | போற்றி |
| தான்தோன்றீஸ்வரனே | போற்றி |
| தான்தோன்றியப்பனே | போற்றி |
| தாட்சணியனே | போற்றி |
| தாவரனே | போற்றி |
| தாண்டவப்பிரியனே | போற்றி |
| திகம்பரனே | போற்றி |
| தியாகனே | போற்றி |
| திரியேகனே | போற்றி |
| திரிலோசனனே | போற்றி |
| திருப்பாசூரானே | போற்றி |
| தியம்பகனே | போற்றி |
| திரியம்பகக்கரனே | போற்றி |
| திரிசூலனே | போற்றி |
| திரியம்பகதாரியே | போற்றி |
| திரிநயனனே | போற்றி |
| திரிபுரதகனனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரிபுராந்தகனே | போற்றி |
| திரிபுரமெரித்தானே | போற்றி |
| திருச்சிற்றம்பலத்தானே | போற்ற |
| திருக்கோயிலானே | போற்றி |
| திருப்பொன்னம்பலத்தானே | போற்றி |
| திருத்தில்லையானே | போற்றி |
| திருச்சிதம்பரத்தானே | போற்றி |
| திருக்கூத்தரங்கனே | போற்றி |
| திருத்தாண்டவப்பதியானே | போற்றி |
| திருச்சிதம்பரனே | போற்றி |
| திருச்சீர்காழியனே | போற்றி |
| திருப்புன்கூரனே | போற்றி |
| திருத்தென்காசியனே | போற்றி |
| திருவஞ்சைக்களத்தனே | போற்றி |
| திருவலிதாயத்தானே | போற்றி |
| திருவீயலூரானே | போற்றி |
| திருவண்ணாமலையனே | போற்றி |
| திருவழுவூரானே | போற்றி |
| திருவலிவலத்தானே | போற்றி |
| திருவடுகூரானே | போற்றி |
| திருவீளநகரானே | போற்றி |
| திருவைக்காவூரானே | போற்றி |
| திருப்பழுவூரானே | போற்றி |
| திருப்பழையாறையானே | போற்றி |
| திருப்பனங்காட்டூரானே | போற்றி |
| திருப்பெரும்புலியூரானே | போற்றி |
| திருமுதுகுன்றத்தானே | போற்றி |
| திருப்புத்தூரானே | போற்றி |
| திருநல்லூரானே | போற்றி |
| திருநெய்த்தாளத்தானே | போற்றி |
| திருநெடுங்கள்ளத்தானே | போற்றி |
| திருத்தேவன்குடியானே | போற்றி |
| திருநெல்வெண்ணையூரானே | போற்றி |
| திருப்பேரூரானே | போற்றி |
| திருமுண்டீச்சுரனே | போற்றி |
| திருமறைக்காடனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமருகலானே போற்றி
திருப்பருத்திநியமனே போற்றி
திருப்பாம்புரத்தானே போற்றி
திருப்பனையூரனே போற்றி
திருப்பராய்த்துறையானே போற்றி
திருப்பெருவேளூரனே போற்றி
திருவீழிமிழலையானே போற்றி
திருவின்னம்பரானே போற்றி
திருவேட்களத்தானே போற்றி
திருவேதிசூடியானே போற்றி
திருவெயனனூரானே போற்றி
திருவொற்றியூரானே போற்றி
திருவானிலையானே போற்றி
திருவக்கரையானே போற்றி
திருமூலட்டானத்தானே போற்றி
திருமூலட்டாமையனே போற்றி
திருநனிப்பள்ளியனே போற்றி
திருநள்ளாற்றானே போற்றி
திருப்பழனத்தானே போற்றி
திருநாகேச்சுரனே போற்றி
திருவரத்துறையானே போற்றி
திருநல்லத்தானே போற்றி
திருத்தலையூரானே போற்றி
திருப்பாவநாசத்தானே போற்றி
திருப்புறம்பயனே போற்றி
திருப்புள்ளமங்கையனே போற்றி
திருநெல்வாயிலனே போற்றி
திருத்தேவூரானே போற்றி
திருமூலநகரானே போற்றி
திருவலஞ்சுழியனே போற்றி
திருவாஞ்சியத்தானே போற்றி
திருவன்னியூரானே போற்றி
திருவாள்கொள்ளிபுத்தூரானே போற்றி
திருப்பாலத்துறையனே போற்றி
திருவீசைமங்கையானே போற்றி
திருமூச்சுரனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவலூரனே போற்றி
திருவள்ளியூரனே போற்றி
திருப்படீச்சரனே போற்றி
திருப்பாற்றுறையானே போற்றி
திருதெங்கூரனே போற்றி
திருநெல்வேலியனே போற்றி
திருத்துறையூரானே போற்றி
திருப்பெருந்துறையானே போற்றி
திருமணஞ்சேரியனே போற்றி
திருப்பைஞ்ஞீலியனே போற்றி
திருத்தருமபுரத்தானே போற்றி
திருப்புவனவாயிலானே போற்றி
திருப்பனந்தாளனே போற்றி
திருமயேந்திரப்பள்ளியனே போற்றி
திருப்பூவனூரனே போற்றி
திருமழப்பாடியனே போற்றி
திருமுருகன்பூண்டியனே போற்றி
திருமாற்பேறனே போற்றி
திருப்பயற்றூரானே போற்றி
திருநீலக்குடியனே போற்றி
திருநருலிங்கபுரத்தானே போற்றி
திருநணாவனே போற்றி
திருத்தெளிச்சேரியனே போற்றி
திருத்தனைநகரானே போற்றி
திருநாரையூரானே போற்றி
திருத்துங்கானைமாடத்தானே போற்றி
திருக்கரைவீரத்தானே போற்றி
திருக்காரோணத்தானே போற்றி
திருக்குடவாயிலானே போற்றி
திருக்கானூரானே போற்றி
திருக்கோட்டூரானே போற்றி
திருவேதாரணியனே போற்றி
திருக்கடையூரனே போற்றி
திருக்கருவல்லியனே போற்றி
திருக்கண்டியூரானே போற்றி
திருவருட்கங்கையானே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருவிரும்பூனையூரானே | போற்றி |
| திருவிளையான்குடியானே | போற்றி |
| திருக்கடிக்குளத்தனே | போற்றி |
| திருக்கோடிக்காவனே | போற்றி |
| திருக்காராயிலானே | போற்றி |
| திருவரசிலியானே | போற்றி |
| திருராமேஸ்வரனே | போற்றி |
| திருவாலம்பொழிலனே | போற்றி |
| திருக்கடையூரானே | போற்றி |
| திருவோமாம்புலியூரானே | போற்றி |
| திருக்கோடிக்குழகரூரானே | போற்றி |
| திருச்சிக்லூரானே | போற்றி |
| திருக்கோடீச்சரத்தானே | போற்றி |
| திருக்களரானே | போற்றி |
| திருக்கோழம்பத்தானே | போற்றி |
| திருக்குற்றாலத்தானே | போற்றி |
| திருவழுத்தூரானே | போற்றி |
| திருக்கொடும்பாளூரானே | போற்றி |
| திருக்கோட்டாறனே | போற்றி |
| திருச்சேறையனே | போற்றி |
| திருச்சோற்றுத்துறையனே | போற்றி |
| திருச்செப்பறையனே | போற்றி |
| திருக்கைலாசபுரத்தானே | போற்றி |
| திருக்கரம்பிலியானே | போற்றி |
| திருச்சுழியலானே | போற்றி |
| திருக்கருவூரானே | போற்றி |
| திருமங்கைபுரத்தானே | போற்றி |
| திருச்செம்பொன்பள்ளியனே | போற்றி |
| திருச்சிற்றேமத்தானே | போற்றி |
| திருவேகம்பனே | போற்றி |
| திருமுறைப்பாநாட்டானே | போற்றி |
| திருவாலவாயானே | போற்றி |
| திருக்காரைப்பேரானே | போற்றி |
| திருக்காளக்காடனே | போற்றி |
| திருக்கலிக்காமூரனே | போற்றி |
| திருவெண்ணைநல்லூரானே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கஞ்சனூரனே போற்றி
திருக்கருக்குடியனே போற்றி
திருமங்கலக்குடியானே போற்றி
திருச்சிறுகுடியானே போற்றி
திருக்குரகுக்காவனே போற்றி
திருச்சக்கரப்பள்ளியானே போற்றி
திருமீயச்சூரானே போற்றி
திருப்பேரெயிலானே போற்றி
திருமூச்சுரத்தானே போற்றி
திருப்பரமேஸ்வரத்தானே போற்றி
திருக்காளத்தியானே போற்றி
திருமதுரையானே போற்றி
திருவாவடுதுறையானே போற்றி
திருவெண்காடனே போற்றி
திருவானைக்காவனே போற்றி
திருக்காட்சியனே போற்றி
திருக்கைலாசனே போற்றி
திருச்சிராப்பள்ளியனே போற்றி
திருவாரூரனே போற்றி
திருத்தஞ்சாவூரனே போற்றி
திரிகோணக்குன்றனே போற்றி
திருமலைச்சிவனே போற்றி
திருக்கோணமலையரசே போற்றி
திருமலைவாசனே போற்றி
தீவண்ணனே போற்றி
தீயாடியே போற்றி
தீமேனியானே போற்றி
தீப்பொறிநேத்திரனே போற்றி
தீச்சுடர்மெய்யனே போற்றி
தீபமானவனே போற்றி
தீமயத்தானே போற்றி
துர்க்கைநாதனே போற்றி
துர்க்கைபாகனே போற்றி
துர்க்கைமணாளனே போற்றி
துர்க்கையாள்துணைவனே போற்றி
தென்னாடுடையசிவனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தேவாதிதேவனே | போற்றி |
| தேவரகண்டனே | போற்றி |
| தேவதாவே | போற்றி |
| தேவந்துறையானே | போற்றி |
| தேவந்துறைஈசனே | போற்றி |
| தேவந்துறையப்பனே | போற்றி |
| தையல்பாகலே | போற்றி |
| தோணிபுரத்தானே | போற்றி |
| நகாதிபன்வாசியே | போற்றி |
| நகாதிபனதிபனே | போற்றி |
| நக்கனே | போற்றி |
| நயனத்திரயனே | போற்றி |
| நஞ்சுண்டானே | போற்றி |
| நந்தீஸ்வரனே | போற்றி |
| நடமாடியே | போற்றி |
| நடேசனே | போற்றி |
| நந்திநண்பனே | போற்றி |
| நடேச்சுரனே | போற்றி |
| நகுலகிரிநாயகனே | போற்றி |
| நகுலேஸ்வரனே | போற்றி |
| நகுலமலைச்சிவனே | போற்றி |
| நாயகனே | போற்றி |
| நாரணியவனே | போற்றி |
| நாகநாதனே | போற்றி |
| நாதியனே | போற்றி |
| நாகபூசணனே | போற்றி |
| நாகநாயகனே | போற்றி |
| நாதாந்தனே | போற்றி |
| நாகாபரணனே | போற்றி |
| நாகேசுவரனே | போற்றி |
| நாதாந்தசோதியே | போற்றி |
| நாசமிலியே | போற்றி |
| நாதாந்தகனே | போற்றி |
| நாசரகிதனே | போற்றி |
| நாதகேதனே | போற்றி |
| நாதருபதரைபாகனே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனே போற்றி
நாதரூபனே போற்றி
நாத்திரனே போற்றி
நாகபூஷணிநாதனே போற்றி
நிகமாச்சுவனே போற்றி
நித்தியானந்தனே போற்றி
நிடலாச்சனே போற்றி
நித்தியனே போற்றி
நிட்கண்டகனே போற்றி
நியாமனே போற்றி
நிட்களரே போற்றி
நின்மலனே போற்றி
நிரஞ்சனே போற்றி
நிற்குணனே போற்றி
நிரஞ்சனிபாகனே போற்றி
நிர்விகாரியே போற்றி
நிரந்தரிபாகனே போற்றி
நிரம்பரனே போற்றி
நிரவயவனே போற்றி
நிரவயனே போற்றி
நிருவாணியே போற்றி
நிராகாரனே போற்றி
நிராமயனே போற்றி
நிருமலனே போற்றி
நிருநாமனே போற்றி
நிராலம்பனே போற்றி
நிரிணாமனே போற்றி
நீறணிந்தோனே போற்றி
நீள்நடையானே போற்றி
நீலலோகிதனே போற்றி
நீறாடியே போற்றி
நீலமேனியாள்பாகனே போற்றி
நீண்டசடையோனே போற்றி
நுதல்விழியானே போற்றி
நுதற்பொறிநயனனே போற்றி
நுதனாட்டானே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நுதற்கண்ணனே | போற்றி |
| நுண்ணறிவிலுள்ளானே | போற்றி |
| நூதனப்பொருளானே | போற்றி |
| நேமிநாதனே | போற்றி |
| நேசிப்பார்நேயனே | போற்றி |
| நேரில்லாநாயகனே | போற்றி |
| பகவானே | போற்றி |
| பஞ்சானனே | போற்றி |
| பகாப்பொருளே | போற்றி |
| பஞ்சபாணிநாதனே | போற்றி |
| பஞ்சமுகனே | போற்றி |
| பத்திரனே | போற்றி |
| பண்ணவனே | போற்றி |
| பரசிவனே | போற்றி |
| பரசுபாணியே | போற்றி |
| பரஞ்சோதியனே | போற்றி |
| பரசூதனனே | போற்றி |
| பரமசிவனே | போற்றி |
| பரதெய்வமே | போற்றி |
| பரமேசனே | போற்றி |
| பரமேட்டியே | போற்றி |
| பரமனே | போற்றி |
| பரம்பரனே | போற்றி |
| பரனே | போற்றி |
| பரப்பிரமனே | போற்றி |
| பரமாத்துமாவே | போற்றி |
| பரமேசுரனே | போற்றி |
| பரஞ்சேயனே | போற்றி |
| பராசக்திபாகனே | போற்றி |
| பராபரனே | போற்றி |
| பரிபூரணனே | போற்றி |
| பராசியனே | போற்றி |
| பருவதிபங்கனே | போற்றி |
| பவதிநாதனே | போற்றி |
| பராசிதனே | போற்றி |
| பலிகொள்ளியே | போற்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவபூதியே போற்றி
பவானிபாகனே போற்றி
பவநாசனே போற்றி
பர்க்கனே போற்றி
பவனே போற்றி
பற்கனே போற்றி
பனிமலையானே போற்றி
பற்றிலானே போற்றி
பகவதிபங்கனே போற்றி
பரமேஸ்வரனே போற்றி
பார்வதிகணவனே போற்றி
பாசபாணியே போற்றி
பார்க்கவனே போற்றி
பாசரகிதனே போற்றி
பாலாட்சனே போற்றி
பாலாங்கனே போற்றி
பார்வதிநாதனே போற்றி
பாலவனே போற்றி
பாலாவிக்கேணியனே போற்றி
பாலாவித்தீர்த்தனே போற்றி
பாலாவியப்பனே போற்றி
பாலாவீசனே போற்றி
பிள்ளையார்பிதாவே போற்றி
பிஞ்ஞகனே போற்றி
பிரசன்னனே போற்றி
பிச்சனே போற்றி
பிங்கலைநாதனே போற்றி
பிஞ்சகனே போற்றி
பிறைசூடியே போற்றி
பினாகபாணியே போற்றி
பிச்சாடனனே போற்றி
பிங்கசடனே போற்றி
பிங்கலனே போற்றி
புனிதனே போற்றி
புருடமோகினிநாதனே போற்றி
புரகரனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியூரானே போற்றி
புராணைபங்கனே போற்றி
புனர்வசுவே போற்றி
புவனேஸ்வரிபாகனே போற்றி
புண்ணியனே போற்றி
புகழருங்கிரியானே போற்றி
புவனநாயகனே போற்றி
புவியாளுமரசே போற்றி
புகழ்ச்சுடரொளியே போற்றி
பூலோகநாயகனே போற்றி
பூதாத்துமாவே போற்றி
பூதேசனே போற்றி
பூரணனே போற்றி
பூலோகநாயகிபங்கனே போற்றி
பெண்பாகனே போற்றி
பெருமானே போற்றி
பெரியநாயகிபாகனே போற்றி
பெருமலைத்தலைவனே போற்றி
பெருகுமருட்கடலே போற்றி
பேரம்பலத்தானே போற்றி
பேசலனே போற்றி
பேதமில்லானே போற்றி
பேரானதலைவனே போற்றி
பேரானந்தக்கூத்தனே போற்றி
பேரின்பநாயகனே போற்றி
பேரருட்கடலே போற்றி
பேரானந்தச்சுடரே போற்றி
பொற்பிரகாசனே போற்றி
பொறுமைப்பிதாவே போற்றி
மகாதேவனே போற்றி
மாநாடனே போற்றி
மகாரூபனே போற்றி
மகாபவனே போற்றி
மகாமிருத்துவே போற்றி
பொற்பிரகாசனே போற்றி
பொதுநிலைநாதனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குநதிச்சடையானே போற்றி
பொறுமைப்பிதாவே போற்றி
பொன்னம்பலவாணனே போற்றி
மகாவேகனே போற்றி
மகாநந்தனே போற்றி
மகிதமுடையோனே போற்றி
மகேசனே போற்றி
மதங்கிநாதனே போற்றி
மணிகண்டனே போற்றி
மகேஸ்வரனே போற்றி
மகேஸ்வரிபாகனே போற்றி
மதிவேணியனே போற்றி
மத்துவனே போற்றி
மயிலாபுரியானே போற்றி
மயேசனே போற்றி
மயிலாடுதுறையானே போற்றி
மரதனே போற்றி
மழுக்கரனே போற்றி
மறலிமறலியே போற்றி
மறிக்கரனே போற்றி
மன்றுளாடியே போற்றி
மறைக்காடனே போற்றி
மன்றவாணனே போற்றி
மன்றாடியே போற்றி
மாசிலியே போற்றி
மன்னுமானே போற்றி
மரகதவல்லிமணாளனே போற்றி
மாதுபங்கனே போற்றி
மானிடனே போற்றி
மாநடனே போற்றி
மாரதனே போற்றி
மாதோட்டநாதனே போற்றி
மாதோட்டநகரனே போற்றி
மாதோட்டப்பரமனே போற்றி
மாலினிபாகனே போற்றி
மானிடத்தனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடவனே போற்றி
மிருகாங்கனே போற்றி
மிருககரனே போற்றி
முதற்பொருளே போற்றி
முழுமுதற்பொருளே போற்றி
முன்னவனே போற்றி
முழுமுதலே போற்றி
முத்துச்சுடரே போற்றி
முன்னீஸ்வரனே போற்றி
முன்னீஸ்வரத்தானே போற்றி
முன்னீஸ்வரநாதனே போற்றி
முன்னீஸ்வரக்கடவுளே போற்றி
முன்னீஸ்வரப்பதியனே போற்றி
முப்புரமெரித்தானே போற்றி
முன்னோனே போற்றி
மூன்றுலகநாயகனே போற்றி
மூரியூரிதியே போற்றி
மூலச்சோதியே போற்றி
மூலப்பொருளே போற்றி
மூவாமுதலே போற்றி
மேனாதவத்தானே போற்றி
மேலானதலைவனே போற்றி
மேன்மைநெறியானே போற்றி
மேருவில்லியே போற்றி
மேனாதவக்கடவுளே போற்றி
யமவிரோதியே போற்றி
யமவைரியே போற்றி
யோகேசனே போற்றி
யோகமருள்வோனே போற்றி
லாசகனே போற்றி
வரனே போற்றி
வாமனே போற்றி
வாமதேவனே போற்றி
வாமிநாதனே போற்றி
வாலறிவனே போற்றி
விசுவநாதனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடதரனே போற்றி
விடமுண்டகண்டனே போற்றி
விடையேறியே போற்றி
வித்தைநாதனே போற்றி
வேதநாயகனே போற்றி
வேதாந்தமூர்த்தியே போற்றி
அன்புலிங்கனே போற்றி
அழகுலிங்கனே போற்றி
அருமைலிங்கனே போற்றி
அருள்லிங்கனே போற்றி
அமிர்தலிங்கனே போற்றி
அற்புதலிங்கனே போற்றி
அனந்தலிங்கனே போற்றி
அநித்தியலிங்கனே போற்றி
ஆதாரலிங்கனே போற்றி
ஆனந்தலிங்கனே போற்றி
ஆத்துமலிங்கனே போற்றி
ஆரிடலிங்கனே போற்றி
இமயலிங்கனே போற்றி
இதயலிங்கனே போற்றி
இனியலிங்கனே போற்றி
இன்பலிங்கனே போற்றி
இராசலிங்கனே போற்றி
ஈஸ்வரலிங்கனே போற்றி
உத்தமலிங்கனே போற்றி
உள்ளலிங்கனே போற்றி
உணர்வுலிங்கனே போற்றி
ஓமலிங்கனே போற்றி
ஔடதலிங்கனே போற்றி
கருணைலிங்கனே போற்றி
கயிலைலிங்கனே போற்றி
கருத்துலிங்கனே போற்றி
கணேஷலிங்கனே போற்றி
கங்கைலிங்கனே பொற்றி
காசிலிங்கனே போற்றி
காந்தலிங்கனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல்லிங்கனே போற்றி
காளத்திலிங்கனே போற்றி
காப்புலிங்கனே போற்றி
காஞ்சிலிங்கனே போற்றி
காவேரிலிங்கனே போற்றி
கிருபைலிங்கனே போற்றி
கீர்த்திலிங்கனே போற்றி
குணாலிங்கனே போற்றி
கூத்துலிங்கனே போற்றி
சக்திலிங்கனே போற்றி
சங்கரலிங்கனே போற்றி
சத்தியலிங்கனே போற்றி
சயிலிங்கனே போற்றி
சாந்தலிங்கனே போற்றி
சிவலிங்கனே போற்றி
சித்திலிங்கனே போற்றி
சிங்காரலிங்கனே போற்றி
சுகுணலிங்கனே போற்றி
சுந்தரலிங்கனே போற்றி
சூக்குமலிங்கனே போற்றி
சேமலிங்கனே போற்றி
சேதுலிங்கனே போற்றி
சொக்கலிங்கனே போற்றி
சொரூபலிங்கனே போற்றி
சோதிலிங்கனே போற்றி
சோமலிங்கனே போற்றி
சௌந்தரலிங்கனே போற்றி
தருமலிங்கனே போற்றி
தஞ்சைலிங்கனே போற்றி
தங்கலிங்கனே போற்றி
தயவுலிங்கனே போற்றி
தரணிலிங்கனே போற்றி
தவலிங்கனே போற்றி
தத்துவலிங்கனே போற்றி
தான்தோன்றிலிங்கனே போற்றி
தில்லைலிங்கனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்வியலிங்கனே போற்றி
திருவருள்லிங்கனே போற்றி
திருப்பரலிங்கனே போற்றி
துணைலிங்கனே போற்றி
தூயலிங்கனே போற்றி
தேசுலிங்கனே போற்றி
நடனலிங்கனே போற்றி
நல்லலிங்கனே போற்றி
நாகலிங்கனே போற்றி
நாதலிங்கனே போற்றி
பரிவுலிங்கனே போற்றி
பஞ்சலிங்கனே போற்றி
பரமலிங்கனே போற்றி
படிகலிங்கனே போற்றி
பாடிகலிங்கனே போற்றி
பாசலிங்கனே போற்றி
புகழ்லிங்கனே போற்றி
புவனலிங்கனே போற்றி
புண்ணியலிங்கனே போற்றி
பூரணலிங்கனே போற்றி
பொன்மயலிங்கனே போற்றி
மங்களலிங்கனே போற்றி
மகாலிங்கனே போற்றி
மதுரைலிங்கனே போற்றி
மகிமைலிங்கனே போற்றி
மன்னுலிங்கனே போற்றி
மாலிங்கனே போற்றி
மாதவலிங்கனே போற்றி
வண்ணலிங்கனே போற்றி
வரலிங்கனே போற்றி
வடிவுலிங்கனே போற்றி
வைகைலிங்கனே போற்றி
வைத்தியலிங்கனே போற்றி
ஐங்கரன்தந்தையே போற்றி
சரவணன்பிதாவே போற்றி
ஐயப்பனத்தனே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலவன்மைத்துனரே போற்றி
கங்கையாளன்பனே போற்றி
இலங்கேசனிறைவனே போற்றி
இலங்குமீசனே போற்றி
இந்துமாமறையானே போற்றி
ஈழச்சிதப்பரத்தானே போற்றி
ஈழத்தீஸ்வரனே போற்றி
ஈழப்பஞ்சேஸ்வரத்தானே போற்றி
திருச்சிற்றம்பலம்

## வினைமீட்சி

பல்லவி

ஆதிசங்கரனார் நாம்
ஆயிரத்தெட்டும் சொன்னோம்।
ஆயிரத் தெட்டுப் போற்றி
அஞ்சலித்தினிதே சொன்னோம்। ஆதிசங்

அநுபல்லவி

சோதியாய்த் தோன்றுஞ் சிவனார்
தூயநற் புகழைச் சொன்னோம்।
சுந்தரப் பரமேசன் தாள்
துணையென்று பாடிச்சோன்னோம்। ஆதிசங்

சரணம்

பாருக்குள் உள்ள நாதன்
பதிகளைப் பாட்டிற் சொன்னால்
ஆருக்கும் அருளே சாரும்
அவலங்கள் ஆணுகாதன்றோ।

மாருக்கு நேராய் மோதும்
வல்லகோள் நேரும்போதும்
நேருக்கு நேராய் ஈசன்
நின்றெம்மை வீடுவீப்பானே। ஆதிசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி வெங்கடேசன்

ஏறி வாரும் சின்னையா
ஏறி வாரும் பொன்னையா ஏறிவாரும்

ஏழுமலை ஏறித் தாண்டி
ஏழுமலை வெங்கடேசன்
வாழுமிடம் சேர்ந்தவர்க்கு
வாழ்வீலேது சோகமையா ஏறிவாரும்

இருக்குந் துயர் மாறுமையா
இன்னல் யாவுந் தீருமையா
திருப்பதிக்கு வாருமையா
தெண்டனிட்டுப் பாடுமையா ஏறிவாரும்

காக்குமெங்கள் கடவுளைநீ
கண்டுநின்று கும்பிடையா
தாக்குமெந்தப் பாவங்களும்
தாவித் தாவி ஓடுமையா ஏறிவாரும்

அபயமென்று நாம் அழைத்தால்
அரவணைக்குந் திருப்பதியான்
சமயந் தன்னில் வந்திடுவான்
தாங்கி வரம் தந்திடுவான். ஏறிவாரும்

கோடி மக்கள் கூடிவரும்
கோவிந்தனார் கோட்டையிலே
தேடி வரும் மாந்தருக்குத்
தெய்வலோகம் தோன்றுமையா ஏறிவாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிவா வேலவா...!

## பல்லவி

வேலவா வேலவா வெற்றிவடி வேலவா
காலமெல்லாம் உன்னைக் கைதொழுதேன் வாவா
— வேலவா

## சரணங்கள்

தென்கதிரை ஆண்டவனே தெண்டனிட்டேன் வாவா
உன்புகழைப் பாடுகிறேன் ஓடியாடி வாவா
சுந்தரனே தோகைமயில் மீதிலேறி வாவா
துன்பநிலை மாறவேண்டும் அன்புடனே வாவா
— வேலவா

ஏழமுதம் பாயுமிசை நாதமுடன் வாவா
எங்கள் மனம் தன்னிலே புகுந்தவனே வாவா
வேழமுகன் தம்பியரே வேலுடனே வாவா
வேதனையுஞ் சோதனையும் மீறுதையா வாவா
— வேலவா

ஆறுபடை வீட்டில் வாழும் ஆனந்தனே வாவா
ஆலயங்கள் நாடியுன்னை அஞ்சலித்தோம் வாவா
நூறுபடை நாடுதோறுங் கொண்டவனே வாவா
நோய்நொடிகள் தீரவேண்டும் காவலனே வாவா
— வேலவா

மருதமலை மன்னவனே மன்றாடினோம் வாவா
வானவரை மீட்டவனே வல்லவனே வாவா
கருணைமழை பொழியும் ஞானக் கந்தனேநீ வாவா
காத்தருளுங் கதிரைமலை வாசனேநீ வாவா
— வேலவா

வள்ளிதெய்வ யானையுடன் மங்களமாய் வாவா
வண்ணமணி கண்டனாசை அண்ணலே நீ வாவா
அள்ளியருள் இன்பமதைத் தந்திடவே வாவா
ஆனந்தங்கள் யாவுந்தரும் பேரின்பனே வாவா
— வேலவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# சபரிமலை யாத்திரைக் கும்மி

ஆண்டவன் சபரி ஐயப்பனாம் – மறை
அத்தனைக்கும் பொது மெய்யப்பனாம்
ஆண்டருளும் எங்கள் வீரமணி – கண்டன்
அரிஹரன் திருப் பாலகனாம் ஆண்டவன்

பம்பைநதியிலே தீர்த்தமுண்டாம் – அங்கே
பாவங்கள் யாவும் பறப்பதுண்டாம்
நம்பும் அடியவர் யாவருக்கும் – எந்த
நாளுந் திருவருள் நாட்டமுண்டாம்! ஆண்டவன்

உண்மைகள் தம்மை வளர்ப்பவனாம் – பகை
ஊட்டிடும் பொய்களை மாய்ப்பவனாம்
எண்ணக் கவலைகள் சூழுமென்றால் – மனம்
இரங்கி விரட்டும் இறைவனாம் ஆண்டவன்

தாண்டவன் சங்கரன் தன்மகனாம் – வண்ணத்
தாமரைக் கண்ணனின் புத்திரனாம்
வேண்டும் உலகத்து வேதங்கள் – கூடிடும்
வெண்குடை மண்டல் மன்னவனாம் ஆண்டவன்

ஐயப்பன் சபரி மாமலை – யாத்திரை
அன்பர்கள் ஒன்றிடச் சென்றிடுவோம்
மெய்யப்பன் ஆலயம் முன்றிலிலே – வரம்
வேண்டிமன் றாடியே நின்றிடுவோம் ஆண்டவன்

கல்லையும் முள்ளையும் காலுக்குப் –பூவென்று
காட்டையும் மேட்டையும் நாம் கடப்போம்
தொல்லையும் துன்பமும் நாம் மறப்போம் – ஐயன்
தோத்திர மாலைகள் தான் படிப்போம் ஆண்டவன்

தோரண வாயிலிற் சுற்றிடுவோம் – நின்று
சுந்தரன் ஐயனைப் பாடிடுவோம்
பூரண ஜோதியின் பேரொளியைக் – கண்டு
போற்றி மகிழ்ந்துகொண் டாடிடுவோம் ஆண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த யோகம்

பொங்கி வரும் கதிர் உதயத்திலே
போயிருந் தாழியின் ஓ..ரத்திலே
அங்கம் மறந்துமெய்ஞ் ஞா..னத்திலே
அமர்ந் திருப்பாய் தியானத்திலே
அமைதி நிலவும் – அருளும் நிறையும்
ஆனந்த யோகம் – பேரின்பம் ஆகும் பொங்கி

தாமரைக் கேணியின் கரையினிலே
தண்ணீர் அலைதருங் குளுமையிலே
தேன்மதுர வண்டின் இசையினிலே
திளைத் திருப்பாய் தியானத்திலே
அமைதி நிலவும் – அருளும் நிறையும்
ஆனந்த யோகம் – பேரின்பம் ஆகும் பொங்கி

சோலை அருவியின் மருங்கினிலே
சுந்தரம் விளங்கும் அரங்கினிலே
காலையும் மாலையும் தொழுகையிலே
களித் திருப்பாய் தியானத்திலே
அமைதி நிலவும் – அருளும் நிறையும்
ஆனந்த யோகம் – பேரின்பம் ஆகும் பொங்கி

ஓடும் நதிக்கரை மணலினிலே
உலவுந் தென்றலின் நிலையத்திலே
நீடுங் கருணையின் நிம்மதியிலே
நித்த மிருப்பாய் தியானத்திலே
அமைதி நிலவும் – அருளும் நிறையும்
ஆனந்த யோகம் – பேரின்பம் ஆகும் பொங்கி

செல்வங் கொழித்திடும் கழனியிலே
சிந்தை கவர்ந்திடும் இயற்கையிலே
நெல்லுக்கு நீருயர் வரம்பினிலே
நிம்மதி கொள்வாய் தியானத்திலே
அமைதி நிலவும் – அருளும் நிறையும்
ஆனந்த யோகம் – பேரின்பம் ஆகும் பொங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தா நின் கருணை வாழியவே!

செந்தமிழ் இசைதான் நாடுகிறேன்
தேனரும் பாடல் பாடுகிறேன்
பந்தம் மிகுந்தாய் வரந் தந்தாய்
பாவலர் இறைவா வாழியவே! செந்தமிழ்

யாத்திடும் பதிக்கொரு பாடல் நூல்
நானிங்கு படைத்தேன் ஏற்றிடுவாய்
கூத்திடும் ஈசன் குமரையா!
குஞ்சரி நாதா வாழியவே! செந்தமிழ்

சுந்தர வடிவேல் ஆண்டவனே
தோகையில் ஏறும் சண்முகனே
வந்தென்னை ஆளுங் காவலனே
வள்ளி மணாளா வாழியவே! செந்தமிழ்

பாரினில் மேவுந் தலங்களை நான்
பாடி மகிழ்ந்தேன் பாட்டணியால்
சீரிய பயன்நீ தோற்றிடுவாய்
சிங்கார வேலா வாழியவே! செந்தமிழ்

திருமுறை ஓதிய சீரடியார்
திவ்விய செய்யுள் நெறியாலே
திருமயில் முருகா நான்பாடும்
திறமை கொடுத்தாய் வாழியவே செந்தமிழ்

ஆனை முகத்தான் தம்பியனே!
அரிஹர புதல்வன் மூத்தவனே!
தானை விளங்கும் வீரியனே
தமிழின் தலைவா வாழியவே! செந்தமிழ்

வந்தாளு கதிரைப் பதியானே
முந்தாமல் வினைகள் ஒழிப்பானே
எந்தாயுந் தந்தையும் நீயல்லவோ
கந்தா நின் கருணை வாழியவே! செந்தமிழ்

– திருச்சிற்றம்பலம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலவிளக்கம் தந்தவர்க்கு நன்றி

பதிக்கொரு பாடல் நூலைச் செவ்வனே அச்சிட்டு வெளியிடுவதற்காக வேண்டிய தல வரலாற்று விபரங்களையும், விளக்கங் களையும் பெற்றுக்கொள்ள நான் எடுத்து க்கொண்ட விடாமுயற்சிகளிற் பூரணமான வெற்றி கிட்டவில்லை.

எனினும், அவ்வப்பொழுது கடிதமூலமாக வும், தொலைபேசி மூலமாகவும், நேர்முக மாகவும் தலங்களைப்பற்றிய விபரங்களும், விளக்கங்களும் கொடுத்துதவிய அன்புடை யோர்கள் எல்லோருக்கும் என் இனிய நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புரை கொடுத்தவர்க்கு நன்றி

முத்தமிழ் வித்தகர், தத்துவப் போதகர்,

உத்தம ஞானியர், இன்னிசை வள்ளலார்

தவத்திரு விபுலானந்த அடிகளாரின்

புகழ்த்திருநாமம் விளங்கும் மட்டுமாநகர்

விபுலானந்த இசை நடனக் கல்லூரியிற்

கடமையாற்றும் இசை ஆசான் ஒருத்தரே

பதிக்கொரு பாடல் நூலுக்குச் சிறப்புரை

வழங்கவேண்டுமென்று நான் விரும்பினேன்.

என் ஆவல் வீணாகவில்லை।

இசை நடனக் கல்லூரியின் உப அதிபர்

திருமதி கமலா ஞானதாஸ் அவர்களே

நூலுக்கான சிறப்புரையை வழங்கி நூலை

நன்னூலாகச் சிறப்பித்துள்ளார்கள்।

அவர்களுக்கு என் அன்பான நன்றிகள்

என்றென்றும் உரித்தாகும்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

KOHA JPL

## வெளியீட்டு விழாக் குழுவினருக்கு நன்றி

"பதிக்கொரு பாடல்", "மரபு நாதம்" ஆகிய என் இரு நூல்களையும் என் தாய் மானிலத்தின் தலை நகரான மட்டுமாநகரிலேயே விழாவெடுத்து வெளி யீடு செய்யவேண்டும் என்று விரும்பினேன்.

தளராத தமிழார்வமும், தணியாத கலையார்வமும், அயராத சுதேசியப் பற்றுங் கொண்ட அரும்பணி யாளர்கள் என் விருப்பத்தை இனிதே பூர்த்தி செய் தனர்.

உரிய தருணத்தில் உள்ளப் பரிவுடன் சேவைகள் ஆற்றியதன் மூலம் என் இரு நூல்களையும் உதய மணித் தாயின் மருதவள நகரிலே அரங்கேற்றி வெளியீடு செய்துவைத்த அன்பர்கள் அனைவருக் கும் என் அன்புசால் இனிய நன்றிகள் என்றென் றும் உரித்தாகும்।

முத்தமிழப் பாவலர் – கவிஞர் ஞானமணியம் அவர் களின் பதிக்கொரு பாடலும், மரபு நாதமும் நிலை த்திருக்குங் காலந்தோறும் இந்நூல்களை அரங் கேற்றிய கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் பொதுநலத் தொண்டர்கள் ஆகிய தமிழன்பர்கள் அனைவரது நாமங்களும் கூடவே விளங்கிநிற்கும் என்று மக்கள் கூறும் வாழ்த்துக்கள் மறையாது மறவாது நின்று நிலைத்திருக்கும் என்பது வெள் ளிடை மலையான உண்மை।

**வாழ்க தமிழ்!**

123510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4762
123510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org